E-ISSN: 2583-0481

செங்காந்தள்

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

(தன்னாட்சி) பசுமலை, மதுரை.

தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)

தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை

நாள் : 05.08.2026 – புதன்கிழமை

தொகுதி 5, சிறப்பிதழ் 1 – ஆடி 2057

பாண்டியன் கல்வி அறக்கட்டளை
PANDIAN EDUCATIONAL TRUST

Register Number: TN32D0026797

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (Ijtlls)
International Journal of Tamil Language and Literary Studies (Ijtlls), E-ISSN: 2581-7140
Website: https://ijtlls.com/
Indexed in UGC CARE (dis), MLA, DOAJ, EBSCO, ERICPLUS, MIAR Google Scholar, Mir@bel, SUDOC, ROAD, Internet Archive etc

Literary Druid, E-ISSN: 2582-4155
Website: http://literarydruid.com/
Indexed in MLA, EBSCO, ERICPLUS, MIAR Google Scholar, Mir@bel, SUDOC, ROAD, Internet Archive etc

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
Pandian Tamil Journal of Temple Studies, E-ISSN - 2583-0880
Website: https://tinyurl.com/yc3sm4wn
Indexed in MLA, DOAJ, Google Scholar, Mir@bel, ROAD, Internet Archive etc

செங்காந்தள்-Chenkaantal, E-ISSN - 2583-0481
Website: https://pandianeducationaltrust.com/-chenkaantal.html
Indexed in MLA, DOAJ, Google Scholar, Mir@bel, ROAD, Internet Archive etc

Pandian Journal of Women's Studies E-ISSN - 2583-715X
Website: https://tinyurl.com/2p86v3yw
Indexed in MLA, DOAJ, Google Scholar, Mir@bel, ROAD, Internet Archive etc

Pandian Journal of Mathematical Sciences (PJMS) E-ISSN: 2583-8822
Website: http://pandianeducationaltrust.com/pjms.html
Indexed in Google Scholar, Mir@bel, ROAD, Internet Archive etc

Tamil Journal of Artificial Intelligence (TJAI) E-ISSN: 3139-5996
Website: https://pandianeducationaltrust.com/tamil-journal-of-artificial-intelligence.html **Indexed in Google Scholar, Internet Archive etc**

செங்காந்தள் மதிப்பீட்டு தளங்கள்

Print for Academic Purposes Only

E-ISSN: 2583-0481

செங்காந்தள்

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

(தன்னாட்சி) பசுமலை, மதுரை.

தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)

தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை

நாள் : 05.08.2026 – புதன்கிழமை

மலர் 5, சிறப்பிதழ் 1 – ஆடி 2057

Title Verso

Journal title : Chenkaantal
Editor Name : Dr. J. Kavitha
Publication frequency : May and November
Volume/Issue : Volume 5, SPL Issue 1, July 2026
Place of Publication : Virudhunagar
Date of Publication : July 2026
Paper Size : Digital A4 Size
Medium of Publication: E-version
Access Type (URL or DOI): Diamond OA, Online, Indexed long time in Internet Archive
Subscription Type : Non-APC
Publisher : **Pandian Educational Trust**(Maheswari Publishers)
Publisher Website : https://pandianeducationaltrust.com/
Journal Site : http://pandianeducationaltrust.com/-chenkaantal.html
Indexing Status : MLA, DOAJ, ROAD, MIR@BEL, OPF, HAL, EBSCO, Internet Archive
MLA : https://miar.ub.edu/indizadaen/2583-0481/mla
DOAJ : https://doaj.org/toc/2583-0481
ISSN Portal/ROAD : https://portal.issn.org/resource/issn/2583-0481
Mir@bel : https://reseau-mirabel.info/revue/12396/Chenkaantal-cenkantal
OPF/Sherpa Romeo : https://openpolicyfinder.jisc.ac.uk/id/publication/42829
MIAR : https://miar.ub.edu/issn/2583-0481
HAL : https://hal.science/search/index/q/*/journalId_i/1076398
SUDOC : https://www.sudoc.abes.fr/cbs/DB=2.1//SRCH?IKT=12&TRM=260670820

Note: For other indexing status see webpage.

Pandian Educational Trust supports SDG Goals and is a member of UN SDG Publisher compact.

வெளியீட்டாளர் செய்தி

குறிக்கோள்

செங்காந்தள் **(E-ISSN: 2583-0481)** அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ் ஆகும். இவ்விதழ் வருடத்திற்கு இரண்டு முறை கார்த்திகை (நவம்பர்) மற்றும் வைகாசி (மே) மாதங்களில் மகேஸ்வரி பதிப்பகத்தால் (பாண்டியன் கல்வி அறக்கட்டளை) வெளியிடப்படுகிறது. மேலும், ஆராய்ச்சியை வளர்ப்பதற்காக ஆங்கில ஆய்வுகள் மற்றும் கோவில் ஆய்வுகளுக்கான இதழ்களை வெளியிடும் பணியைச் செய்து வருகிறது. இவ்விதழ் கல்வியாளர்கள் மற்றும் அறிஞர்கள் ஆராய்ச்சியை மின் வெளியீடு மூலம் ஊக்குவித்து வருகிறது. உலகமயமாக்கப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வது, அறிஞர் சமூகத்திற்கு ஆய்வு வெளியீடுகளின் மூலம் ஆராய்ச்சியில் அறிவார்ந்த நிலையை வளர்க்க உதவுகிறது. இணையத்தில் கல்வி ஆராய்ச்சியில், திறந்த நிலை அணுகல், உலகின் மேம்பாட்டிற்கு சாதகமான விளைவுகளை உருவாக்கும் என ஊக்குவித்தும் வருகிறது.

பொறுப்புத்துறப்பு அறிக்கை

செங்காந்தள் ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றி ஆராய்ச்சி செய்வதில் உறுதியாக உள்ளது. கருத்துத் திருட்டை ஒரு குற்றமாகக் கருதுகிறது. ஆய்வாளர்கள் மற்ற படைப்புகளிலிருந்து மேற்கோள்களை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பாக சிறந்த கல்வி நெறிமுறைகளைக் கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். தங்கள் படைப்பில் கருத்துத் திருட்டு தொடர்பான எந்தவித பிழைகளுக்கும் வெளியீட்டாளர் மற்றும் பதிப்பாசிரியர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள். உங்கள் ஆய்வுக்கட்டுரையை ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றி முறையான படைப்பாகச் சமர்பிக்கும் பொழுது ஒப்புக்கொள்ளும் படிவம் இணைந்து இருக்க வேண்டும். மேலும், வேறு எந்த ஆராய்ச்சி நோக்கத்துக்காகவும் வெளியிடப்படவில்லை என்று உறுதி அளிக்க வேண்டும். எந்தவொரு சட்ட சிக்கல்கள் மற்றும் குறைபாடுகளுக்குக் கட்டுரையாளர் மட்டுமே பொறுப்பு. சமர்ப்பிப்பு மற்றும் பிற தகவல்களுக்கு chenkaantal@pandianeducationaltrust.com ஐ தொடர்பு கொள்ளவும். வழிகாட்டுதல்களுக்கு http://pandianeducationaltrust.com/journals.html ஐப் பார்க்கவும்.

பதிப்பகத்தார்

தலைமையாசிரியர் செய்தி

செங்காந்தள் என்பது தமிழ் சார்ந்த ஆராய்ச்சிகளை மேம்படுத்த உருவாக்கப்பட்ட மின்ஆய்விதழாகும். உலகெங்கிலும் உள்ள அறிஞர்கள் மற்றும் மாணவர்களிடம் இருந்து அவர்களின் அறிவார்ந்த கருத்துக்களால் கல்வி நிலை மற்றும் சமுதாயத்தின் நிலையை முன்னேற்ற நல்ல ஆய்வுப்படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. கல்வி உலகில் ஒரு பெரிய களத்தை உருவாக்க ஆராய்ச்சி தீவிரமாக இருக்க வேண்டும். ஆராய்ச்சி என்பது உண்மைகளை நிலைநிறுத்துவது, ஆதாரங்களை உறுதிப்படுத்துவது, முந்தைய படைப்புகளை மறுசீரமைப்பது மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பது ஆகும். கல்வி ஆராய்ச்சி மூலம் கல்விச் சீர்திருத்தங்களுக்கான நெறிமுறைகளை ஏற்படுத்தி வழங்குவதும் முறையான அணுகுமுறையை ஏற்படுத்துவதும் இவ்விதழின் மைய நோக்கமாக மாறியுள்ளது. இந்த இதழில் பதினைந்து படைப்புகளை ஆராய்ச்சி ஆய்வுலகிற்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

முனைவர் ஜே. கவிதா

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

முதன்மை ஆசிரியர்

முனைவர் ஜெ. கவிதா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பிஎஸ்ஜி ஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641004, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: jkavitha@psgrkcw.ac.in
பணியிட முகப்புப் பக்கம்: https://psgrkcw.irins.org/profile/135958

துணை ஆசிரியர்கள்

முனைவர் செ. சாந்தி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி,
சிவகாசி - 626123, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: shanthi_sf607@anjaconline.org
பணியிட முகப்புப் பக்கம்:
https://anjaconline.org/Departments/Page/BATamil

முனைவர் அ. பரணிராணி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நா. ம. ச. ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,
மதுரை- 625019, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: mahesparani@gmail.com
பணியிட முகப்புப் பக்கம்: https://nmssvnc.edu.in/academics/departments/department-of-tamilaided/

ஆசிரியர் குழு

முனைவர் எஸ். கேசவன்
பேராசிரியர் (ஓய்வு), இந்து நாகரிகத் துறை,
கலை கலாசாரப் பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
மின்னஞ்சல்: kesavans@esn.ac.lk
பணியிட முகப்புப் பக்கம்:
https://www.fac.esn.ac.lk/hindu-civilization/academic-staff/s-kesavan

முனைவர் பொன்னையா விவேகானந்தன்
தமிழ் விரிவுரையாளர், மொழியியல் துறை,
டொராண்டோ ஸ்கார்பரோ பல்கலைக்கழகம்,
கினா வியா எனடாங் கட்டிடம், டொராண்டோ.
மின்னஞ்சல்: ponniah.vivekanandan@utoronto.ca
பணியிட முகப்புப் பக்கம்:
https://utsc.utoronto.ca/dls/ponniah-vivekanandan

கலாநிதி பே. சச்சிதானந்தம்
சிரேஷ்ட விரிவுரையாளர், ஒப்பீட்டுச் சமய சமூக நல்லுறவுத் துறை, கலை கலாசாரப் பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
மின்னஞ்சல்: sachithananthamp@esn.ac.lk
பணியிட முகப்புப் பக்கம்: ht
https://www.fac.esn.ac.lk/comparative-religion-social-harmony/academic-staff

முனைவர் த. ஆதித்தன்
இணைப் பேராசிரியர்,
அரிய கையெழுத்துச் சுவடித் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: kumaritathithan@gmail.com
பணியிட முகப்புப் பக்கம்: https://tinyurl.com/bdd6pf5r

முனைவர் மம்தா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டெல்லி பல்கலைக்கழகம்,
டெல்லி - 110007, இந்தியா.
மின்னஞ்சல்: jnu.mamta@gmail.com
பணியிட முகப்புப் பக்கம்:
http://www.du.ac.in/uploads/du/Faculty%20CV/Linguistics/Linguistics_Mamta.pdf

முனைவர் பா. ஜெய்கணேஷ்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அறிவியல் மற்றும் கலையியல் புலம்,
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர் - 603203,
தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: jaiganeb@srmist.edu.in
பணியிட முகப்புப் பக்கம்:
https://www.srmist.edu.in/faculty/b-jaiganesh/

முனைவர் த. மகேஸ்வரி
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர் - 626001, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: president@pandianeducationaltrust.com
பணியிட முகப்புப் பக்கம்:
http://pandianeducationaltrust.com/trustees.html

பதிப்பகத்தார்:
மகேஸ்வரி பப்ளிசர்ஸ்,
பாண்டியன் கல்வி அறக்கட்டளை (பாண்டியன் கல்வி அறக்கட்டளையின் வெளியீட்டுப் பிரிவு - TN32D0026797, UDYAM-TN-32-0003213)
3-350, கால்நடை மருத்துவமனை பின்புறம்,
விருதுநகர் - 626001, தமிழ்நாடு, இந்தியா.
Mobile: +91 8526769556
E-mail id: chenkaantal@pandianeducationaltrust.com

காப்புரிமை © 2026 - கட்டுரையாளருக்கே

செங்காந்தள் சிசி பிஓய் கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0 இன்டர்நேசனல் உரிம http://Creativecommons.org//license/by/4.0/. பயன் கொண்டுள்ளது. இது உண்மையான படைப்புக்களை தகுந்த முறைகளுடன் பயன்படுத்த, விநியோகிக்க மற்றும் மீட்டு உருவாக்கம் செய்ய அனுமதிக்கிறது.

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

(தன்னாட்சி) பசுமலை, மதுரை.

மற்றும்

செங்காந்தள், E-ISSN: 2583-0481

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்

(PTJTS) E-ISSN: 2583-0880

Academic Research News

(ARN) E-ISSN: 2584-167X

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்

(PJWS) E-ISSN: 2583-715X

தமிழ் செயற்கை நுண்ணறிவு ஆய்விதழ்

(TJAI) E-ISSN: 3139-5996

இணைந்து நடத்தும்

தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை

நாள் : 05.08.2026 – புதன்கிழமை

சிறப்பிதழ் ஆசிரியர்கள் / Guest Editors

முனைவர் நா. இரஞ்சித்குமார்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

முனைவர் அ. தேன்மொழி

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

பதிப்பாசிரியர் குழு பணி விவரம்/ Editorial Work Flow Details

இச்சிறப்பிதழ் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

This special issue committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It csontains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

வாழ்த்துரை

பொறியாளர் சு. இரா. ஸ்ரீதர்,
செயலாளர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி) ,
பசுமலை, மதுரை.

தமிழ்மொழி உலகின் தொன்மை வாய்ந்த செம்மொழியாக மட்டுமல்லாமல், காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வளர்ந்து வரும் அறிவியல் மொழியாகவும் விளங்குகிறது. சங்க இலக்கியங்கள் மனிதநேயம், பண்பாடு, அறநெறி, இயற்கைச் சிந்தனை, சமூகப் பொறுப்பு போன்ற உயரிய வாழ்வியல் விழுமியங்களை உலகிற்கு எடுத்துரைத்துள்ளன. அந்தச் சங்க இலக்கியப் பாரம்பரியத்திலிருந்து இன்று செயற்கை நுண்ணறிவு எனும் நவீன தொழில்நுட்ப உலகம் வரை தமிழின் பயணம் பெருமைக்குரிய ஒன்றாகும். **"தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை"** என்ற தலைப்பில் வெளிவரும் இச்சிறப்பிதழ், தமிழரின் பண்பாட்டு மரபையும் நவீன அறிவியல் முன்னேற்றங்களையும் ஒருங்கிணைக்கும் சிறந்த அறிவுப் படைப்பாக அமையும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. மரபும் புதுமையும் இணையும் இவ்வாய்வுத் தளம், தமிழ் ஆய்வுலகிற்கு புதிய சிந்தனைகளையும் பரந்த ஆராய்ச்சி வாய்ப்புகளையும் வழங்கும்.

இன்றைய டிஜிட்டல் யுகத்தில் செயற்கை நுண்ணறிவு கல்வி, ஆய்வு, மொழியியல், இலக்கியம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இத்தகைய சூழலில் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் மற்றும் தமிழர் பண்பாட்டு மரபுகளை நவீன தொழில்நுட்ப அணுகுமுறைகளுடன் இணைத்து ஆராய்வது காலத்தின் தேவையாகும். அந்த உயரிய நோக்கத்தை முன்னிறுத்தி இச்சிறப்பிதழ் உருவாக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்க முயற்சியாகும். இச்சிறப்பிதழின் உருவாக்கத்திற்காக அயராது உழைத்த கருத்தரங்க அமைப்பாளர் முனைவர் தி. பரிமளா அவர்களுக்கும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் நா. இரஞ்சித் குமார் மற்றும் முனைவர் அ. தேன்மொழி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத்தெரிவித்துக் கொள்கிறேன். தரமான ஆய்வுக் கட்டுரைகளின் மூலம் இச்சிறப்பிதழின் அறிவுசார் மதிப்பை உயர்த்திய பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சிறப்பிதழ் தமிழ் ஆய்வுலகில் நிலையான இடத்தைப் பெற்று, மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தமிழார்வலர்கள் அனைவருக்கும் சிறந்த ஆய்வு வழிகாட்டியாகவும் அறிவுக் களஞ்சியமாகவும் விளங்கிட எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

பாராட்டுரை

முனைவர் அ. ராமசுப்பையா,
முதல்வர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை.

தமிழ்மொழி ஆயிரமாண்டு காலப் பண்பாட்டு மரபையும் அறிவியல் சிந்தனையையும் தன்னகத்தே தாங்கி நிற்கும் உலகின் தலைசிறந்த செம்மொழிகளில் ஒன்றாகும். சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியல், அறநெறி, சமூக ஒற்றுமை, இயற்கை உணர்வு மற்றும் மனிதநேயப் பண்புகளைப் பதிவு செய்த அரிய அறிவுக் களஞ்சியங்களாக விளங்குகின்றன. அந்தப் பாரம்பரியச் செல்வத்தை இன்றைய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உலகத்துடன் தொடர்புபடுத்தி ஆராயும் முயற்சி காலத்திற்கேற்ற சிறந்த கல்விசார் முன்னெடுப்பாகும். **“தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை”** என்ற தலைப்பில் வெளிவரும் இச்சிறப்பிதழ், தமிழின் தொன்மையையும் தொழில்நுட்பத்தின் புதுமையையும் ஒருங்கிணைக்கும் அறிவியல் நோக்கமிக்க ஆய்வுப் பதிவாக அமைகிறது. மரபு, இலக்கியம், மொழியியல், கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய பல்துறைப் பார்வைகளை இணைக்கும் இச்சிறப்பிதழ், தமிழ் ஆய்வுலகிற்கு புதிய பரிமாணங்களை வழங்கும் என்பதில் ஐயமில்லை. ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் தங்களது ஆழமான சிந்தனைகளையும் ஆராய்ச்சி முடிவுகளையும் இச்சிறப்பிதழின் வாயிலாகப் பகிர்ந்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அறிவுப் பரிமாற்றங்கள் உயர்கல்வி மற்றும் ஆய்வுத் துறையின் வளர்ச்சிக்கு வலுசேர்ப்பதோடு, இளம் ஆய்வாளர்களுக்கு புதிய ஆய்வுத் திசைகளையும் உருவாக்கும். இச்சிறப்பிதழை சிறப்பாகத் திட்டமிட்டு வெளியிடும் கருத்தரங்க அமைப்பாளர் முனைவர் தி. பரிமளா அவர்களுக்கும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் நா. இரஞ்சித் குமார் மற்றும் முனைவர் அ. தேன்மொழி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கருத்தரங்கம் மற்றும் சிறப்பிதழில் பங்களிப்புச் செய்த அனைத்து ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் மதிப்பாய்வாளர்களுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சிறப்பிதழ் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க மேற்கோள் இதழாகத் திகழ்ந்து, மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தமிழறிஞர்கள் அனைவருக்கும் பயனுள்ள அறிவுச் செல்வமாக விளங்க என் மனமார்ந்த பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

வாழ்த்துரை

திரு. ச. பிரபு,
இயக்குநர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை.

தமிழ்மொழி உலகின் தொன்மை வாய்ந்த செம்மொழியாக மட்டுமல்லாமல், அறிவியல் சிந்தனை, பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் மனிதநேயக் கோட்பாடுகளைத் தலைமுறைகள் தழுவப் பரப்பி வரும் உயரிய மொழியாகவும் திகழ்கிறது. சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியல் நெறி, சமூக அமைப்பு, இயற்கை உணர்வு, அறவாழ்வு மற்றும் பண்பாட்டு மேன்மையை வெளிப்படுத்தும் அழியாப் பொக்கிஷங்களாக விளங்குகின்றன. இத்தகைய செழுமையான மரபை நவீன தொழில்நுட்ப உலகின் முக்கிய முன்னேற்றமான செயற்கை நுண்ணறிவோடு இணைத்துப் பார்ப்பது காலத்தின் தேவையாகும். **"தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை"** என்ற தலைப்பில் வெளிவரும் இச்சிறப்பிதழ், தமிழின் பாரம்பரியச் செல்வத்தையும் அறிவியல் வளர்ச்சியையும் ஒருங்கிணைக்கும் அரிய அறிவியல் முயற்சியாக அமைந்துள்ளது. தமிழ் இலக்கியம், மொழியியல், வரலாறு, பண்பாடு, கல்வி மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய பல்வேறு துறைகளை ஒரே ஆய்வுக் களத்தில் இணைக்கும் இம்முயற்சி, தமிழ் ஆய்வுலகிற்கு புதிய பரிமாணங்களை வழங்கும். இன்றைய அறிவுசார் உலகில் பல்துறை ஆய்வுகளின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தமிழின் தொன்மையையும் தொழில்நுட்பத்தின் புதுமையையும் இணைக்கும் இச்சிறப்பிதழ், எதிர்கால ஆய்வுகளுக்கான வலுவான அடித்தளமாக அமையும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. இச்சிறப்பிதழின் வெளியீட்டிற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த கருத்தரங்க அமைப்பாளர் முனைவர் தி. பரிமளா அவர்களுக்கும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் நா. இரஞ்சித் குமார் மற்றும் முனைவர் அ. தேன்மொழி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தரமான ஆய்வுக் கட்டுரைகளால் இதன் அறிவியல் மதிப்பை உயர்த்திய பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சிறப்பிதழ் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஆய்வுகளில் புதிய சிந்தனைகளை உருவாக்கி, மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழார்வலர்கள் அனைவருக்கும் பயனளிக்கும் சிறந்த அறிவுக் களஞ்சியமாகத் திகழ எனது நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

அணிந்துரை

முனைவர் தி. பரிமளா,
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி),
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை.

தமிழ்மொழி ஆயிரமாண்டு காலமாகத் தனது இலக்கிய வளம், சிந்தனை ஆழம், பண்பாட்டு மேன்மை மற்றும் அறிவுசார் மரபின் மூலம் உலக அரங்கில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வியல் நெறி, சமூக அமைப்பு, இயற்கை அறிவு, அறவியல் சிந்தனை மற்றும் பண்பாட்டு அடையாளத்தைப் பிரதிபலிக்கும் முதன்மையான அறிவுக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. இவ்வகையான செழுமையான இலக்கிய மரபை, இன்றைய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைத்து ஆராய்வது தமிழ் ஆய்வுலகில் புதிய சிந்தனைப் பரப்பை உருவாக்கும் முயற்சியாகும். **“தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை”** என்ற தலைப்பில் வெளிவரும் இச்சிறப்பிதழ், மரபும் நவீனமும் சந்திக்கும் அறிவியல் மேடையாக அமைந்துள்ளது. சங்க இலக்கியம், இலக்கணம், மொழியியல், நாட்டுப்புறவியல், வரலாறு, கல்வியியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய பல்துறை ஆய்வுகளை ஒருங்கிணைத்து வழங்கும் இச்சிறப்பிதழ், தமிழ் ஆய்வின் பரிணாம வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. இன்றைய ஆய்வுலகம் பல்துறை அணுகுமுறையை வலியுறுத்துகின்ற நிலையில், தமிழின் தொன்மையான அறிவையும் நவீன அறிவியல் கருவிகளையும் இணைக்கும் இத்தகைய முயற்சிகள் எதிர்கால ஆய்வுகளுக்கு உறுதியான அடித்தளமாக அமையும்.

செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டுச் செல்வங்களைப் பாதுகாத்து, உலகளாவிய ஆய்வுப் பயன்பாட்டிற்கு கொண்டு செல்லும் வாய்ப்புகளை இச்சிறப்பிதழ் சுட்டிக்காட்டுகிறது. இச்சிறப்பிதழில் பங்களித்துள்ள பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்களின் அறிவார்ந்த ஆய்வுக் கட்டுரைகள், தமிழ் ஆய்வுலகின் தரத்தையும் திசையையும் மேலும், உயர்த்தும் என்பதில் உறுதியான நம்பிக்கை உள்ளது. இச்சிறப்பிதழை சிறப்பாக ஒருங்கிணைத்து வெளியிடும் முனைவர் நா. இரஞ்சித் குமார் மற்றும் முனைவர் அ. தேன்மொழி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்டுரைகளை வழங்கிய அனைத்து அறிஞர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சிறப்பிதழ் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஆய்வுகளில் புதிய சிந்தனைகளுக்கு வழிகாட்டியாகவும், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழறிஞர்களுக்கு பயனுள்ள ஆய்வுக் கருவூலமாகவும் விளங்கிட எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

பொருளடக்கம் / Contents

வ.எண் S.No	தலைப்பு / பெயர் Title / Author Name	பக்க எண் Page No.
1.	சங்க இலக்கியத்தில் பறவைகள் Birds in Sangam Literature இர. அருள்அரசி / R. Arularasi	1 - 6
2.	வேளாண்சார் உற்பத்தி முறைகள் Agro – Based Production Methods முனைவர் மு. அஜீத் குமார் / Dr. M. Ajith Kumar	7 - 16
3.	தமிழர் பண்பாட்டில் கல்வி, அறம் மற்றும் சமூக நீதி சிந்தனைகள் Thoughts on Education, Morality and Social Justice in Tamil Culture முனைவர் ரா. ஆனந்தி / Dr. R. Anandhi	17 - 27
4.	முல்லைநில மக்களின் பழக்க வழக்கங்களும் பண்பாடும் Customs and Culture of the People of Mullainilam மு. உஷா / M. Usha முனைவர் அ. த. பரந்தாமன் / Dr. A. T. Paranthaman	28 - 37
5.	தமிழ் மொழியின் தகுதி நிலைப் பண்புகள் Antiquity of Tamil Language முனைவர் மு. கனிச்செல்வி / Dr. M. Kanichelvi	38 - 43
6.	இலக்கியங்களில் காலந்தோறும் கிடை வாழ்வியல் Pastoral Life in Literature across the Ages ச. காளிராஜ்(எ)சிவசக்திவேல் / S. Kaliraj@Sivasakthivel முனைவர் பெ. சுமதி / Dr. P. Sumathi	44 - 50
7.	முந்நீர் சொல் கட்டமைப்பின் புலப்பாடு Explanation of the Structure of the Word Munneer முனைவர் க.குமரகுருபரன் / Dr. K. Kumarakurubaran	51 - 58
8.	நெய்தல் நில இனக்குழுக்களின் உணவுப் பண்பாடு Food Culture of the Neithal Land Ethnic Groups அ. சகாய சுசி / A. Sahaya Susi முனைவர் சு. இளமாறன் / Dr. S. Elamaran	59 - 64
9.	ஒப்பியல் நோக்கில் பெரியபுராணமும் நாலடியாரும் காட்டும் அன்பின் விழுமியங்கள் Values of Love Shown in the Periyapuranam and the Naladiyar from a Comparative Perspective திருமதி மா. நாகலட்சுமி / Mrs. M. Nagalakshmi	65 - 73

வ.எண் S.No	தலைப்பு / பெயர் Title / Author Name	பக்க எண் Page No.
	முனைவர் கோ. தேவி பூமா / Dr. K. Devi Bhuma	
10.	திருமுறைகளில் பிஞ்ஞகன் Pinnakan in the Tirumurais ச. பால மணிகண்டன் / Mr. S. Balamanikandan	74 - 80
11.	சங்க இலக்கியத்தில் வாயில் நேர்தல் – பண்பாட்டு அரசியல் Vayil Nerthal in Sangam Literature – Cultural Politics முனைவர் ஆ. முத்துலட்சுமி / Dr. A. Muthulakshmi	81 - 87
12.	சோ. தர்மனின் புதினங்களில் சிறுதெய்வ வழிபாடுகள் Folk Deity Worship in the Novels of Cho. Dharman கி. முருகலட்சுமி / K. Murugalakshmi முனைவர் சு. பரணி / Dr. S. Bharani	88 - 92
13.	குறுந்தொகை ஓர் அற நூல் Kurunthogai as a Didactic Treatise இரா. விக்னேஷ் / R. Vignesh	93 - 98
14.	20 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண சமூக ஒடுக்குமுறைகளும் விளிம்பு நிலை மக்களும் - ஓர் சமூகவியல் ஆய்வு Social Oppression and the Vigilante Population in Jaffna in the 20th Century - A Sociological Study செ .வேவோகா / S. Vevoka பேரா .கலாநிதி, S.கேசவன் / Dr. (Mrs) S. Kesavan	99 - 109
15.	*மறுபக்கம்* நாவலில் பண்பாட்டுக் கூறுகள் Cultural Elements in the Novel *Marupakkam* த. ஷைனி / T. Shini முனைவர் க. அஜி / Dr. K. Aji	110 - 118

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Birds in Sangam Literature

R. Arularasi, PhD Research Scholar, Centre for Advanced Studies in Tamil, Fatima College (Affiliated to Madurai Kamaraj University), Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0005-3683-9136
DOI: 10.5281/zenodo.21790254

Abstract

The life of the ancient Tamils was closely connected with nature. Sangam literature presents nature as an essential part of human life rather than a simple background. The five eco-zones (Tinai) describe different landscapes, each with its own plants, animals, birds, occupations, and emotions. Among these natural elements, birds occupy an important place. They are not included only for beauty but also to reflect the lifestyle, feelings, and surroundings of the people. Different birds appear in different tinai landscapes according to their natural habitat. The poets carefully observe their movements, calls, feeding habits, nesting patterns, and seasonal appearance. These features help create vivid descriptions of the landscape and strengthen the emotional meaning of the poems. Birds also function as symbols of love, separation, waiting, hope, joy, and longing. In some poems, they even act as silent companions or messengers that mirror the feelings of the hero and heroine. This study examines the different types of birds found in Sangam literature, their behaviour, their association with the five tinai landscapes, and their symbolic meanings. It highlights how the poets combined close observation of nature with human experience, revealing the ecological knowledge and literary richness of ancient Tamil society.

Keywords: Sangam Literature, Nature, Thinai Landscape, Birds, Avian Life, Symbolism

References

[1] Ilampuranar. *Tolkappiyam Porulatikaram*. Mullai Nilaiyam, Chennai.
[2] Gna. Manikkavasagan. *Pattuppattu (Moolamum Uraiyum)*. Uma Pathippagam, Chennai.
[3] Balasubramaniyam. *Natrinai (Moolamum Uraiyum)*. New Century Book House, Chennai.
[4] U. Ve. Saminathaiyar. *Kurunthogai (Moolamum Uraiyum)*. Kabir Achchukoodam, Chennai.
[5] Gna. Manikkavasagan. *Purananuru (Moolamum Uraiyum)*. Uma Pathippagam, Chennai.
[6] A. Dakshanamoorthy. *Ainkurunuru (Thoguppu 1)*. New Century Book House, Chennai.
[7] Ira. Jeyapal. *Agananuru (Moolamum Uraiyum)*. New Century Book House, Chennai.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் 5, சிறப்பிதழ் 1 - ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

சங்க இலக்கியத்தில் பறவைகள்

இர. அருள்அரசி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றது, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0005-3683-9136
DOI: 10.5281/zenodo.21790254

ஆய்வுச் சுருக்கம்

பண்டையத் தமிழர்களின் வாழ்க்கை இயற்கையுடன் நெருங்கிய தொடர்புடையதாக அமைந்திருந்தது. சங்க இலக்கியங்கள் நிலம், காலம், மரம், விலங்கு, பறவை ஆகிய இயற்கைக் கூறுகளை மனித வாழ்க்கையுடன் இணைத்துக் காட்டுகின்றன. அவை வெறும் பின்னணியாக இல்லாமல், மனித உணர்வுகளையும் வாழ்வியல் முறைகளையும் வெளிப்படுத்தும் கருவிகளாக விளங்குகின்றன. குறிப்பாக, ஐந்திணை அமைப்பில் பறவைகள் முக்கிய இடம் பெறுகின்றன. ஒவ்வொரு திணைக்கும் உரிய பறவைகள் அவற்றின் இயற்கை வாழிடங்களின் அடிப்படையில் இடம்பெறுகின்றன. பறவைகளின் குரல், பறக்கும் விதம், உணவு தேடும் முறை, கூடு கட்டும் இயல்பு, பருவநிலையுடன் அவற்றின் தொடர்பு போன்றவை சங்கப் புலவர்களால் நுட்பமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வியல்புகள் இயற்கைச் சூழலை உயிரோட்டத்துடன் சித்தரிப்பதோடு மட்டுமல்லாமல், தலைவன்–தலைவியின் மனநிலைகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. காதல், பிரிவு, காத்திருத்தல், மகிழ்ச்சி, ஏக்கம் போன்ற உணர்வுகளுக்குப் பறவைகள் குறியீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. சில பாடல்களில் அவை தூது செல்பவையாகவும், மனித உணர்வுகளை பிரதிபலிக்கும் இயற்கைச் சான்றுகளாகவும் அமைகின்றன. சங்க இலக்கியங்களில் இடம்பெறும் பறவைகளின் வகைகள், அவற்றின் இயல்புகள், திணை சார்ந்த பங்களிப்புகள் மற்றும் குறியீட்டுப் பொருள்கள் ஆகியவற்றை இவ்வாய்வுச் சுருக்கம் ஆராய்கிறது. இதன் மூலம் பண்டையத் தமிழர்களின் இயற்கை அறிவும் சுற்றுச்சூழல் உணர்வும் இலக்கிய நயமும் வெளிப்படுகின்றன..

குறிப்புச் சொற்கள்: சங்க இலக்கியம், இயற்கை, திணை நிலப்பரப்பு, பறவைகள், பறவை வாழ்க்கை, குறியீட்டுத்தன்மை.

முன்னுரை

பண்டைத் தமிழரின் வாழ்வியல் கூறுகளை எடுத்துரைப்பதாக அமைவது சங்க இலக்கியங்கள். அதுபோலவே இலக்கியங்கள் அக்கால சூழ்நிலைகள் நாகரிகம் பண்பாடு போன்றவற்றை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. சங்க இலக்கிய கதைமாந்தர்களின் இன்பம் துன்பம் என்று எல்லா நிலைகளிலும் பறவைகள் பின்னி பிணைந்துள்ளன. பண்டைத் தமிழர்கள் பல வகையான பறவைகளை இனம்கண்டனர். பறவைகளை ஆண் பெண் என்று இனம் பிரித்து அவற்றின் இயல்புகளை தங்களின் உணர்வுகளோடு இணைத்துப் பாடல்களை எழுதினார். அவ்வகையில் சங்க இலக்கியத்தில் பறவைகள் பெரும் பங்கினை இக்கட்டுரையில் காணலாம்.

பறவைகள்

சங்க இலக்கிய நூல்களில் இயற்கை, உயிரினங்கள் பற்றிய சூழலியல் செய்திகள் செறிந்திருக்கிறது. குறிப்பாக பறவைகளைப் பற்றிய குறிப்புகள் அதிகளவில் காணக் கிடைக்கின்றன. தொல்காப்பிய மரபியலில் “மாவும் புள்ளும் ஐயரி விளவே” என்று ஐந்தறிவு உயிராகப் பறவையினம் பகுக்கப்பட்டுள்ளது. இலக்கியங்களில் பறவைகள் ‘புள்’ என்ற

சொல்லால் குறிப்பிடப்படுகிறது. பார்ப்பு, பிள்ளை, பறழ், குட்டி ஆகியவை பறவைகளின் இளமைப் பெயர்களாக அறியப்படுகின்றன. இதில் பெண் பறவைகள் பெடை, பேடை, பெட்டை, அளகு என்னும் பெயர்களாலும் ஆண் பறவைகள் சேவல், ஏற்றை என்னும் பெயர்களாலும் வழங்கப்படுவதைத் தொல்காப்பிய மரபியல் வழியாக அறிய முடிகிறது. பறவைகள் வாழும் சூழ்நிலை, உண்ணும் உணவு, வாழும் முறை, முட்டையிட்டுக் குஞ்சை வளர்த்தல், இனப்பெருக்கம் எனப் பலவற்றையும் சங்கப் புலவர்கள் தங்கள் பாடலில் பதிவு செய்துள்ளனர். பறவைகளின் பறக்கும் திசையினைக் கண்டும் அதன் குரல் ஓசையை கேட்டும் பழந்தமிழர்கள் இயற்கை சூழலைக் கணித்தனர். இதற்கு "புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்" என்ற மலைபடுகடாம் பாடல்வரி சான்றாகிறது. சங்க இலக்கியத்தில் சுமார் 58 பறவைகள் பற்றிய பதிவுகள் கிடைக்கின்றன. வாழுமிடத்தை ஐவகை நிலமாக பகுத்த தமிழர்கள் ஒவ்வொரு நிலத்திற்கும் நிலம் சார்ந்த பறவைகளைப் பகுத்து பதிவு செய்துள்ளனர். மயில், கிளி, மலையுறை குருவி போன்றவை குறிஞ்சி நிலப்பறவைகளாகும். கானக்கோழி, குயில், புறா, முல்லை நிலப்பறவைகளாகும். நாரை, நீர்க்கோழி, குருகு, அன்றில் போன்றவை மருத நிலப்பறவைகளாகும். கடற்காகம், அன்னம், குருகு, நாரை போன்றவை நெய்தல் நிலப்பறவைகளாகும். பருந்து, ஆந்தை, கூகை, எருவை, குறும்பூழ் பாலை நிலப்பறவைகளாகும்.

மயில்

மயிலைக் கேகயம், கேதாரம், மஞ்ஞை, கலாபம், மயூரம் போன்ற பல்வேறு பெயர்களில் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவற்றுள், 'மயில்' என்ற பெயர் மட்டுமே நிலைத்து நிற்கிறது. மற்ற பெயர்களெல்லாம் இலக்கியங்களில் மட்டுமே காணப்படுகின்றன.

கலிமயில் கலாவத்து அன்ன, இவள்
ஒலிமென் கூந்தல் நம்வயினானே (நற்., பா. 265:8)

என்ற பாடலடிகள் மயிலின் தோகையைப் போல மெல்லிய கூந்தலை உடையவள் தலைவி என்று கூறுகிறது. இதனுள் மயில் தோகையானது தலைவியின் கூந்தலுக்கு ஒப்புமையாக கூறப்படுகிறது. தலைவன் தலைவியின் அழகை மயிலோடு ஒப்புமைப்படுத்திக் கூறுவதை,

காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயில் இயல் (குறுந்., பா. 2-3)

என்ற பாடலடிகள் வழி அறியமுடிகிறது. செந்நெல்லை உணவாகக் கொண்ட பசிய தோகையை உடைய மயிலை மகளிர் விரட்டுகின்றனர். அங்கிருந்து பறந்து சென்ற மயில் அங்குள்ள மருத மரத்தில் தங்கிருந்த காட்சியை,

செந்நெல் உண்டனபைந் தோட்டுமஞ்ஞு
செறிவளை மகளிர் ஒப்பலின் பறந்து எழுந்து
துறை நணிமரத்து (புறம்., பா. 34)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கிறது.

காக்கை

காக்கை இருவகையுண்டு. அவை ஊர்க்காக்கை, அண்டங்காக்கை ஆகும். ஊர்க்காக்கை, உடல் கரியதாகவும் கழுத்து சாம்பல் நிறமாகவும் இருக்கும். அண்டங்காக்கைக்கு உடல் முழுவதும் கருமையாகக் காணப்படும். இதனை மாணிக்கண் காக்கை, கருங்காக்கை, காட்டுக்காக்கை என்று கூறுவர். இக்காக்கை இறந்த விலங்கின் உடலை உண்ணும். கருங்கண் காக்கையொடு கழுகும் வட்டமிட்டு இறந்த சிறிய கண்களையுடைய காட்டு யானைகளை உண்ணுகின்ற காட்சியை,

கருங்கட் காக்கையொடு கழுகு விசும்பு அகவ
சிறு கண் யானை ஆள் விழ்த்துத் திரிதரும் (ஐங்குறு., பா. 314)

இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

இப்பாடலடிகள் பதிவு செய்கின்றன. காக்கை கரைந்தால் வீட்டிற்கு விருந்தினர் வருவார்கள் என்பது நம்பிக்கை. இந்நிகழ்வு ஐங்குறுநூற்றில் தலைவனுடன் உடன்போக்கை மேற்கொண்ட தலைவி மீண்டும் வருமாறு நற்றாய் காக்கையிடம் வேண்டிக் கேட்டுக் கொள்கிறாள். அவ்வாறு தலைவி வருமாறு கரைந்தால் குற்றமற்ற சிறகுடைய காக்கைக்கும் அதன் உறவினருக்கும் ஊன்கலந்த உணவை உண்ணத் தருவதாகக் கூறுகிறாள். இதை,

பச்சூன் பெய்த பைந் நிண வல்சி
பொலம் புனை கலத்தின் தருகு வெண்மாதோ (ஐங்குறு., பா. 391)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கிறது.

கிளி

பேசும் திறனும், அழகும், சிவந்த வளைந்த அலகும், கழுத்தில் கரியவளையமும் உடைய கிளியை வீட்டில் வளர்க்கப்படும் பறவையாகும். பச்சை நிறக்கிளி தவிர பஞ்சவர்ணம், வெள்ளை, மஞ்சள், நீலம் போன்ற வண்ணங்களில் காணப்படுகிறது. சங்க இலக்கியத்தில் கிள்ளை, தத்தை, பிள்ளை போன்ற பெயர்களாலும் அறியப்படுகிறது. தூது செல்லும் உயிரினங்களில் கிளியும் ஒன்று. அகநானூற்றுப் பாடலில்,

செம்தார்ப் பைம்கிளி முன்கை ஏந்தி
இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்துஎன
இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாண்உடை அரிவை மாண்நலம் பெறவே (அகம்., பா. 34)

சொல்லுவதை திருப்பிச் சொல்லக் கூடிய கிளிப்பிள்ளை ஒன்றை கையில் ஏந்தி, அதனை தனது முகத்தருகே கொண்டுவந்து மெல்லிய குரலில், என்னைப் பிரிந்து சென்ற என் தலைவர் “இன்று வருவார் எனச் சொல்வாயாக” என்று கூறுகிறாள். தான் கூறுவது தனது இல்லத்தில் இருக்கும் யார் காதிலும் விழுந்துவிடுமோ என்று அஞ்சி தாழ்ந்த குரலில் கிளியிடம் தனது தலைவன் பற்றிப் பேசுகிறாள். ஐங்குறுநூற்றில் சிறுக்கிளி, பைங்கிளி, கிளிக்கிளை என்ற சொற்களில் கிள்ளைப்பத்து முழுவதும் கிளி பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

சிறு திணை கொய்த இருவி வெண்கால்
காய்த்த அவரைப் படு கிளி கடியும் (ஐங்குறு., பா. 286)

என்ற பாடலின் வழி கிளிகள் கதிர்களை அறுவடை செய்த பின் நிற்கும் தட்டைகளின் மேல் படர்ந்து காணப்படும் அவரைக் கொடி மேல் தங்கும் என்பதை அறிய முடிகிறது.

கொக்கு

நாரை போன்ற தோற்றம் கொண்ட பறவை கொக்கு. இதன் இறகு வெண்மை நிறமுடையது. புறநானூற்றில் போர்க்களத்தில் இறந்த செய்தி அறிந்த தாயின் நிலையை கூறுமிடத்தில்,

மீனுண் கொக்கின் தூவியன்ன
வால் நரைக் கூந்தல் முதியோர் (புறம்., பா. 277)

என்று முதுமகளின் கூந்தல் கொக்கின் இறகு போன்று வெண்மையாக உள்ளது என அவளின் முதுமையை கூறும் உவமையாக அமைகிறது. ஆரல்மீன் ஈன்ற வெண்கடுகு போன்ற முட்டையையும் கூர்மையான இறால் மீன்களையும் உணவாக உண்ணும் என்பதை,

ஆரல் ஈன்ற ஐயவி முட்டை
கூர்தல் இறலின் பிள்ளையொடு பெறூஉம் (புறம்., பா. 342)

என்பதை பாடலடிகள் எடுத்துரைக்கிறது.

அன்னம்

தூய்மையான வெண்ணிறத்திற்கு உவமையாக அமைவது அன்னப்பறவை. கார்க்காலத்தில் மகிழ்ச்சியாக பறக்கக்கூடியவை. மணல் பரந்த நீர்நிலையிடத்தில் வரிசையாக

பறக்கும் தன்மையுடைய அன்னப்பறவையை, பிடரி மயிரை உடைய செருக்குடன் குதிரைகள் மணல்பரப்பில் செல்லும் காட்சியுடன் ஒப்புமையாக்கியதை,

கார்பயம் பொழிந்த நீர்திகழ் காலை
நுண்அயிர் பரந்த தண்அயம் மருங்கில்
நுரைபரை அன்னத்து அன்ன விரைபரிப்
புல்உளைக் கலிமா மெல்லிதின் (அகம்., பா. 234)

என்ற பாடலடிகள் மூலமாக அறியமுடிகிறது. மற்றொரு பாடலில் நெய்தல் நிலத்தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி,

மின்னுச் செய் கருவியை பெயன் மழை தூங்க
விசும்பா டன்னம் பறை நிவந் தாங்கு (குறுந்., பா. 205)

என்று மின்னலோடு கூடிய பெருமழை பெய்ய வானத்தில் பறக்கின்ற அன்னப்பறவை போல வெண்மையான தேரில் ஏறி தலைவன் தன்னைப் பிரிந்து சென்றான் என்று தோழியிடம் கூறுவதாக அமைகிறது.

அன்றில்

அன்றில் பறவை பனைமரத்தில் வாழ்பவை. இப்பறவையில் ஆண் பெண் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே வாழும். இதில் ஒன்று பிரிந்தாலும் மற்றொன்று உயிர் வாழாது. தலைவனுடன் சேர்ந்து வாழாத நிலையைத் தாங்கிக்கொள்ள முடியாத தலைவி,

ஒன்றில் காலை அன்றில் போலப்
புலம்புகொண்டு உறையும் புன்கண் வாழ்க்கை (நற்., பா. 124)

எனத் தன் மனக்கவலையில் புலம்புவதாக அமைகிறது. தலைவன் பரத்தையுடன் இருப்பதும் தலைவி தனிமையில் தலைவனை நினைத்துக் கொண்டு உறங்காமல் தவிப்பதை,

… எல்லி
மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்
துணையொன்று பிரியினுற் துஞ்சா காணென (அகம்., பா. 50)

இப்பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

குயில்

குயில்கள் பல வகை உண்டு. அவற்றில் ஒன்று கருங்குயில் ஆகும். குயிலில் ஆண் குயில் கருமையாகவும் பெண் குயில் கரும் பழுப்பு நிறத்துடனும் காணப்படும். இதன் குரல் மிகவும் இனிமையானதாகும் கேட்பவருக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியது என்பதை, **“குயிற் பெடை இன் குரல் அகவ” (ஐங்குறு., பா. 41)** என்ற இப்பாடலடிகள் எடுத்துரைக்கிறது.

கூகை

கூகை இடிந்த கட்டடத்திலும் பாழடைந்த இடங்களிலும் காணப்படும். ஆந்தை வகைகளில் ஒன்று. இது மஞ்சளும் வெண்மையும் கலந்த நிறத்தோடு காணப்படும். கூகை நள்ளிரவில் வேட்டையாடும் பொந்தில் வாழும் எலியை உணவாக உண்ணும் என்பதை,

திங்கள் கல் சேர்பு கனையிருள் மடியின்
இல்எலி வல்சி வல்வாய்க் கூகை (அகம்., பா. 122)

இப்பாடலடிகள் விளக்குகிறது. நள்ளிரவில் தலைவன் தன்னைக் காணவரும் போது உன் குரலால் மற்றவரின் தூக்கத்தைக் கலைத்து விடாமல் இருந்தால் உனக்கு எலிக்கறியை சுட்டு உண்ணத் தருவதாக கூகையிடம் தலைவி வேண்டிக்கொள்வதாக,

எம்மூர் வாயில் ஒண்டுறைத் தடைஇய
கடவுள் முதுமரத்து உடனுறை பழகிய
தேயா வளைவாய்த் தெண்கண் கூறுகிர்
வாய்ப்பாறை அசாஅம் வலிமுந்து கூகை
மையூன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்

எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும் (நற்., பா. 83)

இப்பாடலடிகள் அமைகின்றன.

குடிஞை

குடிஞை என்பதற்கு பேராந்தை எனப் பொருள் கூறுவார் உவேசா. இது ஆந்தையினத்தில் பெரியதாக இருக்கும் பறவையாகும். பொன் நகை செய்கின்ற கொல்லன் ஊதுகுழல் கொண்டு அனலை ஊதும்போது ‘பூம்பூம்’என்ற ஓசை எழுப்புவது போலப் பேராந்தையின் குரல் இருப்பதை,

மரந்தரை மணந்த நனந்தலக் கானத்து
அலந்தலை ஞெமையத்து இருந்த குடிஞை
பொன்செய் கொல்லின் இனிய தெளர்ப்ப (நற்., பா. 394)

இப்பாடலடிகள் சான்றளிக்கின்றன.

முடிவுரை

பழந்தமிழர்கள் பறவைகளை வைத்து நிமித்தம் பார்த்துச் செயல்பட்டதை அறிய முடிகிறது. சங்ககால மக்களின் வாழ்வியல் சார்ந்த நம்பிக்கைகள் வெளிப்படுகின்றன. ஒவ்வொரு பறவைகளையும் அதன் தனித்தன்மைப் பற்றியும் சங்கப்புலவர் பதிவுசெய்துள்ளனர். சங்க இலக்கியங்களில் 58 பறவைகளைப் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. இன்றும் பலவகையான புதிய பறவைகள் இனம் காணப்படுகின்றன.

குறிப்புகள்

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* முல்லைநிலையம், சென்னை.
[2] ஞா. மாணிக்கவாசகன். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்).* உமா பதிப்பகம், சென்னை.
[3] பாலசுப்ரமணியம். *நற்றிணை (மூலமும் உரையும்).* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[4] உ. வே. சாமிநாதய்யர். *குறுந்தொகை (மூலமும் உரையும்).* கபீர் அச்சுக்கூடம், சென்னை.
[5] ஞா. மாணிக்கவாசகன். *புறநானூறு (மூலமும் உரையும்).* உமா பதிப்பகம், சென்னை.
[6] அ. தட்சணாமூர்த்தி. *ஐங்குறுநூறு (தொகுப்பு -1).* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[7] முனைவர் இரா. செயபால். *அகநானூறு (மூலமும் உரையும்).* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Agro – Based Production Methods

Dr. M. Ajith Kumar, Assistant Professor, Department of Languages,
CMS College of Science and Commerce, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0006-3549-4532
DOI: 10.5281/zenodo.21790571

Abstract

Literature reflects the life, culture, and environment of the people who create it. It records their customs, beliefs, occupations, and relationship with the natural world. It also preserves information about the landscapes they inhabited, the resources they used, and the methods they adopted for production and survival. Literary scholars often believe that the growth and development of a civilization can be understood through its literary works. An ecological reading of literature offers a deeper understanding of the interaction between humans and nature. However, ecology should not be studied only through natural resources. Literary texts that describe human life, environment, and social practices provide a broader ecological perspective when examined together with anthropological evidence. Such an approach helps explain both environmental knowledge and cultural practices. This study examines ecology from two major perspectives. The first explores the relationship between humans and nature, focusing on coexistence, agricultural practices, and the sustainable use of natural resources. The second examines the ways in which human activities contribute to environmental degradation and ecological imbalance. Using Sangam literary texts and selected novels as primary sources, this study analyses agricultural production methods and environmental practices. It highlights the continuity and transformation of ecological knowledge across different historical periods and demonstrates the close connection between literature, culture, agriculture, and the environment.

Keywords: Sangam literature, Novels, Agriculture, Production, Environment, Pollution

References

[1] Joe. D. Cruz. *Aazhisoozh Ulagu*. Tamizhini Pathippagam, Chennai, 2020.
[2] *Sanga Ilakkiyam Ettuthogai Matrum Pattuppattu Noolgal (Thoguppu).* New Century Book House, Chennai, 2017.
[3] Sathya Jothi, K. "Naali Puthinathil Iral Pannaiyin Iyarkai Valam Maasupaadugal." *Tamizhmozhi Matrum Ilakkiya Pannattu Aayvithazh*, vol. 6, Special Issue 1, Oct. 2023, E-ISSN: 2581-7140.
[4] Subrabharathimaniyan. *Saayathirai*. Ethir Veliyidu, Pollachi, 2013.
[5] Subrabharathimaniyan. *Sutruchoozhal Katturaigal*. New Century Book House, Chennai, 2022.
[6] Subrabharathimaniyan. *Tharinaada*. New Century Book House, Chennai, 2013.
[7] Subrabharathimaniyan. *Puthuman*. New Century Book House, Chennai, 2019.
[8] Selvaraj, D. *Thol*. New Century Book House, Chennai, 2021.
[9] Tamizhselvi, Su. *Geethari*. New Century Book House, Chennai, 2020.
[10] Nandakumar, Aa. "Iral Pannaiyum... Iyarkai Seeralivum." *Vikatan*, 24 June 2015, https://www.vikatan.com/agriculture/48489.
[11] Bhakthavatsala Bharathi. *Ilakkiya Maanidaviyal*. Adayalam, Puthanatham, 2014.
[12] Maarku. *Aimperiyarkai*. Tamizhini Pathippagam, Chennai, 2018.

[13] Muthunagu, Ira. *Sulundhi*. Aadhi Pathippagam, Tiruvannamalai, 2018.
[14] Murugavel, Ira. *Mugilini*. Aimpozhil Pathippagam, Coimbatore, 2019.
[15] Mohan, C., trans. *Onai Kulachinnam*. Athirvu Pathippagam, Chennai, 2012.
[16] Raja, G. *Sutruchoozhal Kalvi*. New Age International Publishers, New Delhi, 2005.
[17] Vaaimainathan. *Naali*. Seethai Pathippagam, Chennai, 2008.
[18] Venkatesan, Su. *Veerayuga Nayagan Velpari*. Vol. 1, Vikatan Pathippagam, Chennai, 2019.
[19] Venkatesan, Su. *Veerayuga Nayagan Velpari*. Vol. 2, Vikatan Pathippagam, Chennai, 2019.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057
இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

வேளாண்சார் உற்பத்தி முறைகள்

முனைவர் மு. அஜீத் குமார், உதவிப் பேராசிரியர், மொழித்துறை,
சி.எம்.எஸ். அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி, கோயம்புத்தூர் தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0006-3549-4532
DOI: 10.5281/zenodo.21790571

ஆய்வுச்சுருக்கம்

ஒரு குறிப்பிட்ட நிலவியல் சூழலில் வாழ்ந்த மக்களின் பண்பாடு, வாழ்வியல், சமூக நெறிமுறைகள், நில அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றைப் பதிவு செய்வதில் இலக்கியங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவை மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவையும், மக்களின் உற்பத்தி முறைகள், வாழ்வாதாரத் தேவைகள் மற்றும் இயற்கை வளங்களைப் பயன்படுத்திய விதங்களையும் விளக்குகின்றன. ஒரு நாகரிகச் சமூகத்தின் வளர்ச்சியையும் அதன் பண்பாட்டு முன்னேற்றத்தையும் அறிய, அச்சமூகத்தில் உருவான இலக்கியங்களை ஆராய்வதே போதுமானது என்ற கருத்து இலக்கிய ஆய்வாளர்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. இலக்கியத்தைச் சூழலியல் நோக்கில் அணுகும்போது, இயற்கை வளங்களை மட்டுமே மையப்படுத்துவது முழுமையான பார்வையை வழங்காது. மாறாக, மக்களின் வாழ்க்கை முறைகள், சுற்றுச்சூழல், சமூகப் பழக்கவழக்கங்கள் மற்றும் மானிடவியல் கூறுகளுடன் இணைத்து இலக்கியங்களை ஆய்வு செய்வது விரிவான சூழலியல் புரிதலை உருவாக்குகிறது. இவ்வாய்வு சூழலியலை இரண்டு அடிப்படை நிலைகளில் ஆராய்கிறது. முதலாவது, மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான பரஸ்பர உறவையும், இயற்கையுடன் இணைந்த வேளாண்மை முறைகளையும், வளங்களின் நிலைத்த பயன்பாட்டையும் விளக்குகிறது. இரண்டாவது, மனித நடவடிக்கைகளால் இயற்கைக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளையும் ஆராய்கிறது. சங்க இலக்கியங்களும் நாவல் இலக்கியங்களும் முதன்மைத் தரவுகளாகக் கொண்டு, வேளாண் உற்பத்தி முறைகள், சூழலியல் அறிவு மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த வாழ்வியல் மரபுகள் இவ்வாய்வில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இதன் மூலம் இலக்கியம், வேளாண்மை, பண்பாடு மற்றும் சூழலியல் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்ச்சியான உறவு விளக்கப்படுகிறது.

குறிப்புச் சொற்கள்: சங்க இலக்கியம், புதினங்கள், வேளாண், சுற்றுச்சூழல், மாசுப்பாடு.

முன்னுரை

தமிழ்நாட்டின் முதன்மை உற்பத்தித் தொழிலாக வேளாண் உற்பத்தி திகழ்கின்றது. வேளாண்மையை நிர்ணயிக்கும் இயற்கைக் காரணிகளாக நில அமைப்புச் சூழலும் காலச் சூழலும் அமைகின்றன. தமிழக வேளாண் உற்பத்தி முறை என்பது விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு முதலிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும். இவை சார்ந்த பல தரவுகள் சங்க இலக்கியங்களிலும் புதின இலக்கியத்திலும் இடம்பெற்றுள்ளன. அத்தரவுகளின் தன்மையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

சங்க இலக்கியமும் நானில மக்களின் உற்பத்திச் சூழலமைவுகள்

சங்க இலக்கியப் பாடல்கள் சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலைப் புலப்படுத்துவதாக அமைகின்றன; சங்ககால மக்களின் இனக்குழு சமூக வாழ்க்கை முறை, நகரக் கட்டமைப்பு ஆகியவற்றை அறிய துணை நிற்கின்றன. இவ்வகையில் சங்க இலக்கியம் உற்பத்தி முறைகளில் மனித சமூகம் கடந்து வந்த படிமலர்ச்சி நிலைகளான வேட்டையாடி உணவைச் சேகரித்து வாழ்தல் தொடங்கி முல்லை நில ஆயர் வாழ்வு, வன்புல வேளாண்மை,

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

காட்டெரிப்பு வேளாண்மை, மருத நில நீர்ப்பாசன வேளாண்மை, வணிகமுறை, அலைகுடிகளின் வாழ்க்கை முறை, நெய்தல் நில மீனவச் சமூக வாழ்க்கை முறையென அனைத்தையும் வெளிக்கொணர்வதாய் அமைகிறது. இதன் வழி அறியப்படும் சங்ககால மக்களின் உற்பத்தி முறைகளை நான்காகப் பகுக்கலாம். அவை

1. **வேட்டையும் வேளாணும்**
2. **வேளாணும் மேய்ச்சலும்**
3. **மேய்ச்சலும் வேளாணும்**
4. **மீன்பிடித்தலும் உப்பு விளைவித்தாலும்**

ஆகியன.

வேட்டையும் வேளாணும்

சங்க இலக்கியங்களில் கிடைக்கப்பெறும் தரவுகளின் அடிப்படையில் வேட்டையாடி உணவு சேகரிக்கும் இனக்குழு சமூகம் பற்றி அறிய முடிகிறது. குறிஞ்சி நில மக்கள் தொடக்க காலத்தில் வேட்டைத் தொழிலை முதன்மை ஆதாரமாகக் கொண்டிருந்தனர். சங்ககால வேடர் சமூகங்களின் நிலப்பகுதியாக மலையும் மலை சார்ந்த நிலப்பகுதிகளும் திகழ்ந்துள்ளன.

> **வேடர்கள் சமூகத்தைவிட பண்பட்ட சமூகங்களான கானக்குறவர், குன்றக்குறவர், புனக்குறவர், பல்கிளைக்குறவர், மலைஉறைகுறவர், குடிக்குறவர், கானவன், சிறுகுடிக்கானவன், புனவன், நாடன், குன்றுவர் முதலியனவர்கள் பண்டமாற்று நிகழ்த்துவதில் சிறந்து விளங்கியுள்ளனர். (இலக்கிய மானிடவியல், ப. 57)**

மேற்குறிப்பிட்ட இனக்குழுவினரே புல்லின உயிர்களின் வழி, வேளாண் முறை தோன்ற முனைந்தவர்களாவர். அவர்களுள் கானக்குறவர்கள் தலையானவர்களாவர். கானக்குறவர்கள் மலைச்சரிவுப் பகுதியை வாழ்விடமாகப் பெற்றிருந்துள்ளனர். இவர்கள் மேற்கொண்ட விவசாய முறையானது இயற்கைச் சூழலை மையமாகக் கொண்ட புன்செய் வேளாண் முறையாகும். இனக்குழுச் சமூகங்கள் தங்களின் உற்பத்தி முறைகளான வேட்டை மற்றும் வேளாண் வழி பெறும் ஆதாரங்களைச் சமமாகப் பங்கிட்டு பலனடைந்துள்ளனர். அவற்றை நற்றிணைப் பாடல் 85 மற்றும் 336 வழி அறிய முடிகின்றது. குறிஞ்சி நில ஆடவர்கள் வேட்டைக்குச் சென்று காட்டு விலங்குகளை வேட்டையாடித் திரும்புவர். அவர்கள் வேட்டையாடி கொண்டு வந்த இறைச்சியினைக் குறிஞ்சி நிலப் பெண்கள் தங்கள் குடிமக்களுக்குப் பகிர்ந்து அளிப்பர் எனும் செய்தியினை மேல் சுட்டப்பட்ட பாடல்களின் வரிகள் புலப்படுத்துவதாய் அமைகின்றன. வேடர் சமூகத்தில் பகுத்துண்ணுதல் கூட்டுவாழ்வின் விழுமியமாக இருந்துள்ளது. இது ஓர் உலகளாவிய பண்பாகும்.

வேளாணும் மேய்ச்சலும்

வேட்டையாடுதல், கிழங்கு தோண்டுதல் முதலியவை குறிஞ்சி நில மக்களின் பசியைப் போக்கும் முதன்மைத் தொழில்களாக இருந்துள்ளன. அவற்றின் போதாமை காரணத்தினால் புன்செய் வேளாண்மை செய்யப்பட்டது. இதன் அடுத்தப் படிநிலையே காட்டெரிப்பு வேளாண்மை உற்பத்தி முறை எனலாம். இதனைக் குறித்த தகவல்களும் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. காட்டெரிப்பு வேளாண்மை என்பது மரங்களையும் செடிகொடிகளையும் தீயிட்டு அழித்து அவற்றை முற்றிலுமாக நீக்கிவிட்டு, அவ்விடத்தில் வேளாண்மை மேற்கொள்வதாகும். இதனைத் தொடக்ககால வன்புலப் புன்செய் வேளாண்மையின் பரிணாமம் எனவும் கொள்ளலாம். இது மக்களின் உற்பத்தித் தேவை அதிகரிப்புச் சூழலை உணர்த்தும் தன்மையுடையதாய் அமைகின்றது. இம்முறை வேளாண்மை குறித்த செய்தியைப் புறநானூற்றுப் பாடல் 120 மற்றும் 231 வழி அறியலாம். இப்பாடல்கள், காட்டெரிப்பு வேளாண் நில அமைப்பையும் தொடக்ககாலக் காட்டெரிப்பு வேளாண்மை முறையினையும் அறிந்துக்கொள்ளத் துணைப் புரிவதாய் அமைகின்றன.

சங்க இலக்கியங்களின் பாடல்களில் பல, ஆயர் குல மக்களின் வாழ்வினைப் புலப்படுத்துவதாய் அமைகின்றன. சங்ககால ஆயர்குல சமூகத்தின் படிமலர்ச்சியானது நாடோடி முறையிலிருந்து நிலையான குடியிருப்புகளைக் கொண்ட சமூகமாகத் திகழ்கின்றது. இதனை அரை நாடோடியம் வாழ்க்கை முறையெனப் பக்தவத்சல பாரதி குறிப்பிடுகிறார். (இலக்கிய மானிடவியல், ப. 96)

அதாவது ஆயர்கள் தாங்கள் வாழும் இடத்திற்கு அருகில் உள்ள மேய்ச்சல் நிலங்களைப் பருவ காலங்களுக்கு ஏற்ற வண்ணம் பிரித்துக்கொள்வர். அவற்றில் குறிப்பிட்ட பருவ காலத்தில் குறிப்பிட்ட மேய்ச்சல் நிலத்தில் குடில்கள் அமைத்து வாழும் முறையாகும். முல்லை நில மக்களும் வேளாண் நிலத்தைக் கட்டமைக்க, குறிஞ்சி நில மக்களைப் போலக் காட்டெரிப்பு வேளாண் முறையைப் பின்பற்றியுள்ளனர். அதனைப் பின்வரும் முல்லைத்திணைப் பாடலின் வழி அறிய முடிகின்றது.

விதையர் கொன்ற முதையல் பூழி
இடு முறை நிரப்பிய ஈர் இலை வரகின் (நற்றிணை, பா. 121)

வரகானது முதையல் நிலத்தில் இரட்டை இலைகளுக்கு இடையே கதிர் தோன்ற விளைந்திருக்கிறது. இதில் முதையல் என்பது காட்டு மரங்களை வெட்டி எரித்து உருவாக்கிய பழமையான நிலத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

மேய்ச்சலும் வேளாணும்

சங்ககால மருத நில மக்களின் முதன்மைத் தொழிலாக வேளாண்மை அமைந்திருந்தது என்பதைச் சங்க இலக்கியப் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. அதிலும் குறிப்பாக புறநானூற்றுப் பாடல் 35 வேளாண்மை செய்வோரின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துவத்தாய் அமைந்துள்ளன. அப்பாடலில் சோழ மன்னன் கிள்ளிவளவனை நோக்கி மழையில்லாமல் நட்டப்பட்டுக் கிடக்கும் உழவர்கள் சார்பாக, அவர்களின் நில வரியை நீக்கும் பொருட்டு வெள்ளைக்குடி நாகனரால் பாடப்பெற்றவையாகும். அவ்வரிகளில் மன்னன் கிள்ளிவளவனின் வலிமை அவனது படைபலத்தைப் பொருத்து அமையவில்லை. அவன் வலிமையும் அவன் பெற்ற வெற்றியும் உழவர்களால் பெறப்பட்டது. மழையில்லாமல் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ உழவர்களால், அவர்கள் தொழிலை மேற்கொள்ள முடியாவிட்டால், அதனால் ஏற்படும் பொருளாதார இழப்பிற்கும் பஞ்சத்திற்கும் அரசனே காரணமாவான். அதனைப் புரிந்து கொண்டு வேளாண் தொழிலை மேற்கொள்ளும் உழவர்கள் மற்றும் அவர்களது காளைகளின் துன்பத்தை நீக்கி அவர்களைப் பாதுகாத்தல் வேண்டும். அதனால் கிடைக்கும் வெற்றியானது, பகைவர்களை அடிபணியச் செய்யும் என்பதாகும்.

மீன் பிடித்தலும் உப்பு விளைவித்தலும்

குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூன்று நிலவமைப்பிற்கும் சூழலிற்கும் முற்றிலும் மாறுபட்ட தன்மை உடையதாக நெய்தல் நிலம் விளங்குகின்றது. சங்ககால நெய்தல் நில மக்கள் மீன் பிடித்தலையும் உப்பு விளைவித்தலையும் முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்துள்ளனர். அதைத் தவிர மற்ற மூன்று நிலங்களின் கலப்புப் பொருளாதாரம்(தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், கைவினைப் பொருட்களை விற்றல், பால் மற்றும் பால்சார்ந்த பொருட்களை விற்றல் முதலியன) போலவே, நெய்தல் நிலத்தவர்கள் வலை பின்னுதல், சங்கு குளித்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்களையும் மேற்கொண்டிருந்துள்ளனர். இவைமட்டுமின்றி நானிலத்தின் கலப்புப் பொருளாதாரத்தை ஒன்றிணைக்கும் படியான வணிக முறையானது நெய்தல் நிலத் துறைமுகங்களில் சங்ககாலம் தொட்டு நடந்துவந்துள்ளது. அதனை மதுரைக்காஞ்சி பாடல் வரிகளின் வழி அறிய முடிகிறது. வேட்டுவர்கள் கட்டுமரங்களில் கடல் புகுந்து சுறாக்களுக்கு மத்தியில் மீன்களைப் பிடித்துக் கரைக்குத் திரும்புவர். மீன்களைப் பிடித்த மகிழ்ச்சியில், கரையோரம் இருக்கும் தாழை மரத்தடியே

நெருங்கும் பொழுது முழவை முழக்கிப் பாடுவர். அதோடு உப்பு விற்போர் கூவும் ஓசையும் சேர்ந்து முதுவெள்ளில் எனும் பாண்டிய நாட்டுத் துறைமுகப் பகுதியில் அரசனின் புகழை வாழ்த்தும் ஓசையும் கேட்டுக்கொண்டே இருக்கும். (மதுரைக்காஞ்சி, பா. 112-119) இதுமட்டுமல்லாமல் சங்ககால நெய்தல் நிலத்தவர்கள் சங்கு குளித்தல், முத்துக்குளித்தல் முதலிய தொழில்களை மேற்கொண்டிருந்ததாக அறிய முடிகிறது. அதனைப் பின்வரும் அகநானூறு பாடல் வரிகளில் காணலாம்.

வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளை களைந்து ஒழிந்த கொழுந்தின் அன்ன (அகநானூறு, பா. 24)

வேளாப் பார்ப்பான் என்பவர்கள் சங்குகளை அறுத்துத் தயாரித்த வளையல்களை வியாபாரம் செய்து தங்கள் வாழ்வாதாரத்தைப் பெற்றனர் எனும் செய்தியை மேற்கண்ட அகநானூற்றுப் பாடலின் வரிகள் புலப்படுத்துகின்றன.

ஐந்தாண்டு கொள்கையும் பசுமைப் புரட்சியும்

இந்தியா சுதந்திரம் பெற்றப்பின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண இரஷ்யாவின் ஐந்தாண்டு திட்ட முறையினைப் பின்பற்றியது. இதுவரை பதிரெண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவுப்பெற்றுள்ளன. இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மை நோக்கமாக வேளாண் துறையின் முன்னேற்றம் இடம்பெற்றிருந்தது. வேளாண் துறையின் வளர்ச்சி என்பது மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து தொடங்குகின்றது. இதனைப் பசுமைப் புரட்சி என சுட்டுவர். வீரிய ஒட்டு விதைகள், மேம்பட்ட உரவகைகள், மேம்பட்ட வேளாண்மை செயல்முறைகள் மற்றும் நீர்ப்பாசன வளர்ச்சித் திட்டங்களின் ஒருங்கிணைந்த பயன்பாட்டால் வேளாண்மை மேம்படுத்தப்பட்டு உணவுத் தன்னிறைவு பெற்றது பசுமைப் புரட்சி ஆகும். எண்ணெய் வித்துக்களுக்காக மஞ்சள் புரட்சியும் மீன்களுக்காக நீலப் புரட்சியும்; தோல் முதலியவற்றின் வளர்ச்சிக்காகப் பழுப்புப் புரட்சியும்; சணலுக்காகத் தங்க நூலிழைப் புரட்சியும்; பழங்கள், தேன் மற்றும் தோட்டக் கலைப் பயிர்களுக்காகப் பொன் புரட்சியும்; உரங்களுக்காகச் சாம்பல் புரட்சியும்; வெங்காயம், மருத்துவப் பொருள்கள், இறால் போன்ற உற்பத்திக்காக இளஞ்சிவப்புப் புரட்சியும்; முட்டை மற்றும் கோழிகளுக்காக வெள்ளிப் புரட்சியும்; பருத்திக்காக வெள்ளி இழைப் புரட்சியும்; இறைச்சி மற்றும் தக்காளிக்காகச் சிவப்புப் புரட்சியும்; உருளைக்கிழங்கிற்காக வட்டப் புரட்சியும்; பால் உற்பத்திக்காக வெண்மைப் புரட்சியும் என பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து இந்தியாவில் வேளாண் துறையின் வளர்ச்சிக்காகப் பல புரட்சிகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இப்புரட்சிகளின் இன்றியமையாமை குறித்தும் பின்விளைவுகள் குறித்தும் ஐம்பேரியற்கை, முகிலினி, புத்துமண் போன்ற புதினங்கள் தெளிவுபடுத்துகின்றன.

பசுமைப்புரட்சி தோன்றுவதற்கு முந்தைய காலகட்டத்தில் உணவுப்பஞ்சமானது இந்தியாவில் சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலம் நிலவியுள்ளது. குறிப்பாக முதலாம் உலகப் போர்(1918) நிகழ்ந்த காலத்தில் உலகம் முழுவதும் உணவுப்பஞ்சம் மிகுந்து காணப்பட்டது. அதன் தாக்கம் இந்தியாவில் 1980-ஆம் ஆண்டு வரை நீடித்துள்ளதைக் காண முடிகின்றது. கடந்த 40 வருடங்களில் மனிதர்களிடையே ஏற்பட்ட பரிணாம வளர்ச்சி கவலையூட்டும் தன்மையுடையதாகவுள்ளது. மனிதன் உற்பத்தி செய்யும் பல பொருட்கள் காற்று, நிலம், நீர் ஆகியவற்றை மாசுபடுத்துவதாக அமைகின்றன. அவற்றில் பெரும்பகுதி மீட்டெடுக்க முடியாத அளவு மாசுபட்டுள்ளது. அதில் பூச்சி மருந்துகளின் பங்கு மிகுதியாய் உள்ளது. குளம், கிணறு, ஆறு போன்ற நீர்த்தேக்கங்களிலும் பூமிக்கடியிலும் பூச்சி மருந்துகளின் பாதிப்பு உள்ளது. இதுவரை ஒரு முறை கூட பூச்சி மருந்துகள் உபயோகிக்கப்படாத பகுதிகளிலும் அதற்கான அறிகுறி கிடைத்துள்ளது. பறவைகளின் முட்டைகள், மீன் குஞ்சுகள், மண்புழுக்கள், ஏன் மனித உடலிலும் கூட பூச்சி மருந்துகளின் தாக்கம் காணப்படுகின்றது.

பூச்சிக்கொல்லி மருந்துகளும் அதனால் ஏற்படும் பாதிப்பும்

தொழிற்புரட்சி காலகட்டத்தில் ஏற்பட்ட தொழில்துறை வளர்ச்சியானது பல்வேறு வேதிப்பொருட்களைக் கண்டுபிடிக்க துணை நின்றது. அவற்றில் பல மனிதனுக்கு பயனளிப்பதாகவும் உள்ளன. அதே சமயம் அவற்றில் தீங்கு விளைவிக்கும் தன்மை மிகுதியாகவும் காணப்படுகிறது. மனித உடலமைப்பு முறையில் இவை பெரும் மாறுதல்களைக் கொண்டு வருகின்றன. உயிரைப் பாதுகாக்கத் தேவையான பல நொதிகளை இவை அழிக்கின்றன. இதனால் உயிரணுக்களுக்கு ஆக்சிஜன் எடுத்துச் செல்லும் திறன் குறைந்து விடுகின்றது. மனித உடம்பிலுள்ள சில உறுப்புகளின் சாதாரண அசைவுகளைக் கூட இவை தடை செய்கின்றன. சமயங்களில் புற்று நோய்களை உருவாக்கவும் செய்யலாம். முதலில் பூச்சிக்கொல்லிகளாக கரிமம் இல்லாத பொருட்கள் உபயோகிக்கப்பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கரிமப் பொருட்களின் உபயோகம் அதிகரித்தது. எவ்வாறாக இருப்பினும் பூச்சி கொல்லிகளின் நச்சுத்தன்மை மட்டும் குறையவில்லை. இதனை, **“பசுமைப்புரட்சிங்கிற பெயருல விஷம் ஏறுன உணவுப் பொருள்களை உற்பத்தி செய்றதத்தான சொல்லிக் கொடுக்குது…” (ஐம்பேரியற்கை, ப. 106)** என்கிறது ஐம்பேரியற்கை புதினம். முகிலினி புதினம், **“விவசாயமே மண்ணை மாசுபடுத்துவதாகிவிட்டது. உரங்களும், பூச்சி மருந்துகளும் கொட்டப்பட்டு மண்ணே நஞ்சாகிவிட்டது.” (முகிலினி, ப. 280)** என்று எதிரொலிக்கிறது.

கால்நடை வளர்ப்பு

கால்நடை வளர்ப்பு குறித்தத் தகவல்கள் இடம்பெறுகின்ற புதினங்கள் தமிழில் எழுதப்பட்டும் மொழிபெயர்க்கப்பட்டும் வெளிவந்துள்ளன. அவற்றுள் கீதாரி, ஓநாய் குலச்சின்னம் முதலிய புதினங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். மனிதர்கள் தங்களுக்குத் தேவையான பால், இறைச்சி, தோல் முதலிய பொருட்களைப் பெறுவதற்காகப் பிற உயிரினங்களைப் பராமரித்து வளர்க்கின்றனர். இத்தகைய செயல்முறையைக் கால்நடை வளர்ப்பு என வழங்குவர். கால்நடைகளை வனப்பகுதியில் மேயவிடுவதால் வனங்களில் உள்ள மரக்கன்றுகள், செடிகள், கொடிகள் ஆகியன அழிக்கப்படுகின்றன. கால்நடைகள் தொடர்ந்து வனப்பகுதிகளில் மிதிப்பதனால் மண் இறுக்கமடைந்து தாவரங்கள் வளரும் தன்மையற்றதாகிவிடுகின்றன. இதுபோன்ற கால்நடைகளது மேய்ச்சலால் வனங்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்த செய்திகளை ஐம்பேரியற்கை, கீதாரி, சுளுந்தீ, ஓநாய் குலச்சின்னம், புத்துமண் போன்ற புதினங்களில் காண முடிகின்றன.

மீன் வளர்ப்பு

சுமார் ஆயிரத்து எழுபத்தாறு கிலோ மீட்டர் நீண்ட கடற்கரையைக் கொண்டது தமிழ்நாடு. தமிழ்நாட்டில் பதினான்கு கடற்கரையோர மாவட்டங்களும் அவற்றுள் ஐநூற்று தொண்ணூற்றொரு மீன்பிடி கிராமங்களும் அமைந்துள்ளன. தமிழ்நாட்டின் முதன்மை மீன்பிடித் துறைமுகம் தூத்துக்குடியில் உள்ளது. இவைத் தவிர கண்மாய்களிலும், குளங்களிலும், ஏரிகளிலும், ஆறுகளிலும் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. இதன் உற்பத்தி முறையை நன்னீர் மீன்பிடிப்பு எனவும் வழங்குவதுண்டு.

மீன்பிடி தொழில் உற்பத்தி சார்ந்த செய்திகளை உள்ளடக்கிய தமிழ்ப் புதினங்களில் ஜோ. டி. குரூஸின் ஆழி சூழ் உலகு மற்றும் கொற்கை ஆகிய புதினங்கள் தவிர்க்க முடியாதவையாகும். அவற்றுள் ஆழி சூழ் உலகு புதினத்தில் இடம்பெறும் செய்தி பின்வருமாறு:

> **இறால் மீன்களுக்கான மதிப்பு உயர்ந்தது கொண்டே போகிறது. காலப்போக்கில் இந்த இறால் சீசன் காலமே இதர மாதங்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதமாக மாறிப் போனது. இறால் மீன்களின் ஏற்றுமதியால் ஆமந்துறையில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. ஓரளவு பணம் படைத்தவர்கள் இறால் ஏஜெண்டாக மாறிப் போனார்கள். கடற்கரையில் பணம் புரள ஆரம்பித்தது. (ஆழி சூழ் உலகு, ப. 486)**

ஒரு வகையில் வணிக ஏற்றுமதிகள் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தினாலும் மால்தஸியன் கோட்பாட்டுடன் ஒப்பிடுகையில் அளவிற்கு மீறிய உற்பத்தி நாட்டின் இயற்கை வளங்களைச் சுரண்டுவதாக அமைகிறது. அதனை வீரயுக நாயகன் வேள்பாரி புதினம் பின்வரும் வாக்கியங்கள் வழி எதிரொலிக்கின்றது.

> **“வணிகமே வரலாற்றின் போக்கைத் தீர்மானிக்கிறது… கடல் கடந்து நடக்கும் இந்த பெரும் வணிகம்தான் பேரரசுகளை விடாமல் இயக்குகிறது.” (வீரயுக நாயகன் வேள்பாரி தொகுதி 1, ப. 59),**
>
> **“வணிகம், இயற்கைக்கு எதிரானதே!,**
> **பரிமாற்றம் என்பது தேவை சார்ந்தது. வணிகம் என்பது ஆதாயம் சார்ந்தது. ஆதாயம் மனிதத் தன்மையற்றது; மாண்புகளைச் சிதைப்பது…” (வீரயுக நாயகன் வேள்பாரி தொகுதி 1, ப. 114)**
>
> **“இயற்கையை ஆள்வதற்காகத்தான் வெல்ல முயல்கிறோம். வெல்வதற்காகத் தான் அழிக்க முயல்கிறோம்.” (வீரயுக நாயகன் வேள்பாரி தொகுதி 1, ப. 290)**

என்பனவாகும். இங்கு மக்கள்தொகைப் பற்றிய மால்தஸியன் கோட்பாடு குறிப்பிடத்தக்கதாகும். இங்கிலாந்தைச் சேர்ந்த தோமஸ் ராபர்ட் மால்தஸ் மால்தஸியன் கோட்பாட்டை 1798-ஆம் ஆண்டு நிறுவுகிறார். இக்கோட்பாடு மக்கள்தொகைப் பெருக்கத்திற்கும் உணவு உற்பத்திப் பற்றாகுறைக்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்துகிறது. இவற்றால் ஏற்படும் பலவிதமான குழப்பங்கள், வறுமை, போர், நோய்கள் போன்ற பின்விளைவுகளை முன்மொழிவதாக இக்கோட்பாடு திகழ்கிறது.

மனிதனின் உற்பத்தித் தேவை அதிகரிக்க அதிகரிக்க இயற்கைக்கு முரணாண நவீன உற்பத்தி முறையை பின்பற்ற தொடங்குகிறான். அவை இயற்கைச் சூழலின் இன்றியமையாக் காரணிகளை மாசுப்படுத்துவதாக அமைகின்றன. அதனை நாலி புதினம்,

> **“இறால் பண்ணையிலே உப்புத் தண்ணியைத் தேக்கிப் பக்கத்து நெலத்துலே வடியவிடுறாங்க. அந்தச் சாகுபடி வயலெல்லாம் களரா மாறிடுது.” (நாலி, ப. 87)**
>
> **“இறால் பண்ணை போட்ட நிலம், தண்ணி வடியுற தரை மட்டுமா? சவ்வூடு பரவல் மாதிரி இன்னும். 100 மீட்டர் தூரத்துக்கு ரெண்டு பக்கமும் பூமி கடும்களராவுது…” (நாலி, 152)**

என காட்சிப்படுத்துகிறது. இவ்வரிகள் வேளாண் நிலத்தில் இறால் வளர்ப்பு குட்டைகளிலிருந்து வெளியேற்றும் கழிவுநீர் வழி ஏற்படும் பாதிப்பைப் புலப்படுத்துகின்றன. வெளியேற்றப்படும் கழிவுநீர் விளைநிலங்கள் மட்டுமல்லாமல், இறால் வளர்ப்பு குட்டைக்கு அருகில் 100 மீட்டர் தூரத்திற்கு மேற்பட்ட நிலப்பகுதியும் பாதிப்படைகிறது என்பதை மேற்கண்ட வரிகள் வழி அறிய முடிகிறது.

கட்டுப்பாடில்லாத மீன்பிடித்தல் முறைகள்

கட்டுப்பாடில்லாத மீன்பிடித்தல் முறைகளால் பல வகையான மீனினங்கள் அழிக்கப்பட்டுவருகின்றன. வணிக நோக்குடன் பிடிக்கப்படும் மீன் வகைகளில் பல வகையான மீன் இனங்களைக் காண்பது இப்போது அரிதாகிவிட்டது. இதேநிலை நீடித்தால் அடுத்து ஓரிரு நூற்றாண்டளவில் கடல் வாழ் உயிரினங்களில் ஆழ் கடல் உயிரினங்கள் மட்டுமே எஞ்சும் நிலைக்குத் தள்ளப்படும். தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ன்கீழ் தமிழகத்தின் கிழக்கு கடல் பகுதியில் மீன் இனப்பெருக்க காலத்தைக் கருத்தில் கொண்டு 2000-ஆம் ஆண்டு முதல் கோடைகாலத்தில் 45 நாட்கள் மீன்பிடி தடைக்காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இம்மீன் பிடி தடைக்காலம் 2018-ஆம் ஆண்டு முதல் 61 நாட்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தடை காலத்தில் சுருக்குமடி வலையை சுமந்து செல்லும் இயந்திரப் படகுகளுக்குக் கடலில் மீன் பிடிக்க

அனுமதிக்கப்படுவதில்லை. கரைப்பகுதியில் கட்டுமரம், நாட்டுப் படகுகள் பயன்படுத்தும் மீனவர்களுக்கு மீன் பிடிக்க அனுமதி உண்டு.

கட்டுப்பாடில்லாத மீன்பிடித்தல் முறைகளை ஜோ. டி. குரூஸ் ஆழி சூழ் உலகு புதினத்தில்,

> **போட்டுகாரன்வ மடியும் பை போல இருக்கும். சூச, அந்த வலயில கண்ணி சைசும் ரெம்பச் சின்னதா இருக்கும். நம்ம நெத்தலி மீன்கூட உள்ள போனா வெளிய வரமுடியாது, அவன் இந்த மடி அடிக்கிம்போது மடி கீழ உள்ள சகதிக்குள்ள போயிருது. அதுல வேற அந்த முனையில கெட்டியிருக்க பலவய அடிக்கிறதுல அங்க உள்ள மத்த மீனுவளுடைய முட்ட, பிறந்த குஞ்சுவ எல்லாம் நசங்கிச் செத்துப் போவுது… (ஆழி சூழ் உலகு, ப. 486)**

போன்ற வாக்கியங்கள் வழி காட்சிபடுத்துகிறார். சுருக்குமடி வலை இது நாற்பது வேலையாட்களால் கையாளக்கூடிய மிகப் பெரிய வலையாகும். சுமார் 10,000 கிலோகிராம் வரை இதன் எடை இருக்கும். இவ்வலையை சாதாரணமான மரப்படகுகளில் எடுத்துச் செல்ல இயலாது. ஃபைபர் படகு போன்ற அதிதொழில்நுட்பம் நிறைந்த விலையுயர்ந்த படகுகளின் வழிதான் இதனை கடலுக்குள் எடுத்துச் செல்ல இயலும். இவ்வலை ஐநூறு மீட்டர் ஆழம் வரை செல்லக்கூடியது. இது சுருக்குப் பை போல செயல்பட்டு அனைத்து மீன்களையும் அள்ளி வந்துவிடும். சுருக்குமடி வலையைக் கொண்டு மீனவர்கள் மீன்பிடிப்பதால் பவளப்பாறைகள், மீனின் முட்டைகள் மற்றும் மீன் குஞ்சுகள் ஆகியன அழிக்கப்படுகின்றன. இதனால் கட்டுமரங்களிலும் மரப்படகுகளிலும் மீன் பிடிக்கும் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

கழிவுகளும் நீர் நிலைகளும்

தொழிற்சாலைகளிலிருந்து நீர் நிலைகளில் கொண்டு வந்து விடப்படும் கழிவுகள் நீர் மாசுபாட்டிற்கு முக்கிய காரணமாக அமைகிறது. பல்வேறு இரசாயனப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள், உலோகத் தொழிற்சாலைகள், உணவுப்பொருட்களைப் பதப்படுத்தும் தொழிற்கூடங்கள், காகிதத் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள், சாயப்பட்டறைகள், இரப்பர் மற்றும் பிளாஸ்டிக் தொழிற்சாலைகள், எரிப்பொருட்களைச் சுத்திகரிக்கும் நிலையங்கள், தோல் பதனிடும் தொழிற்கூடங்கள் போன்ற எண்ணற்ற தொழில் நிறுவனங்கள் நீர் நிலைகளில் கழிவுகளைக் கலக்கின்றன. நீரில் இதுபோன்ற கழிவுகள் கலக்கப்படுவதால் நீரானது குடிப்பதற்கும் பிற பயன்பாட்டிற்கும் தகுதியற்றதாகவும், நீர் வாழ் உயிரினங்கள் வாழத் தகுதியற்றதாகவும் மாறிவிடுகிறது. இதனை முகிலினி புதினம்

> **நாற்றமெடுக்கும் ஒரு மாபெரும் சாக்கடையாக, மீன்களுக்கும் மற்ற விலங்குக்கும் விஷமாக… புதைகுழியாக… தண்ணீர் எடுக்க அலைவதை விட ஆற்றின் இந்த பரிதாமான தோற்றத்தைப் பார்க்கத்தான் வேதனையாக இருந்தது. (முகிலினி, ப. 235)**

என விவரிக்கிறது. ஆறுகளில் கலக்கப்படும் கழிவுநீர் மண்ணையும் நீரையும் உயிர்கள் வாழ தகுதியற்றதாக மாற்றுகிறது. அத்துடன் காற்றையும் மாசுபடுத்துகின்றது. தொழிற்சாலை கழிவுகளால் நிலம், நீர், காற்று ஆகிய முதன்மை சூழலியல் காரணிகள் நஞ்சாக்கப்படுகின்றன. அதனால் இரண்டாம் நிலை சூழலியல் காரணிகளான பல்வேறுபட்ட உயிரினங்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளைத் தறிநாடா, சாயத்திரை, புத்துமண், முகிலினி, தோல் ஆகிய புதினங்கள் பதிவு செய்கின்றன. அதில் சாயத்திரை புதினம், “இந்த சாயத் தண்ணியிலே மனுசனெ மூச்சுவிட முடியாது. இதிலெ மீனுக எங்க இருக்கப் போகுது…” (சாயத்திரை, ப. 75) என இதனை சித்தரிக்கிறது.

முடிவுரை

இலக்கியங்கள் இயற்கை சுற்றுச்சூழலை மையமாகக் கொண்டு பாடுபொருளுக்கேற்ப படைக்கப்படுகின்றன. இலக்கியங்கள் உருப்பெறும் சுற்றுப்புறச் சூழலை வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ உணர்த்திவிடுகின்றன. இது சங்க இலக்கியங்கள்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

முதல் நவீன இலக்கியங்கள் வரை மாறாத நியதியாகத் திகழ்கின்றது. சங்ககால மக்கள் நானிலங்களின் சுற்றுச்சூழலை அறிந்தவர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். அவர்கள் உணவு உற்பத்தித் தேவையைப் பூர்த்தி செய்வதன் பொருட்டும், பொருளாதாரத்தை உயர்த்துவதன் பொருட்டும் பல்வேறு விதமான உற்பத்தி முறைகளைக் கையாண்டுள்ளனர். அவற்றுள் வேளாண்மை செய்தல், கால்நடை வளர்த்தல், மீன் பிடித்தல் முதலிய வேளாண்சார் உற்பத்தி முறைகள் முதன்மையானவையாக திகழ்ந்துள்ளன. இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பின் இந்திய அரசு இயற்கை வளங்களைப் பேணுவதிலும், உற்பத்தி திறன்களை மிகைப்படுத்துவதிலும் கவனம் செலுத்தியது. உற்பத்தித் திறனை மிகைப்படுத்த மேற்கொண்ட முயற்சியில் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பது குறித்துப் பெரிதும் கவனம் செலுத்தப்படவில்லை. அதனைப் புதின இலக்கியம் பிரதிபலிப்பதாய் அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக புதின இலக்கிய பதிவுகள் நிலவளம், நீர்வளம் மற்றும் உணவு வளம் ஆகியவை பயன்படுத்த தகாததாக மாற்றம் அடைவதைச் சுட்டிகாட்டுகின்றன.

குறிப்புகள்

[1] குருஸ் ஜோ.டி. *ஆழிசூழ் உலகு*. தமிழினி பதிப்பகம், சென்னை, 2020.
[2] *சங்க இலக்கியம் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்கள் (தொகுப்பு)*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017.
[3] க. சத்ய ஜோதி. "நாலி புதினத்தில் இறால் பண்ணையின் இயற்கைவள மாசுபாடுகள்.", *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, E-ISSN: 2581-7140, தொகுதி – 6, சிறப்பு வெளியீடு – 1, அக்டோபர் 2023.
[4] சுப்ரபாரதிமணியன். *சாயத்திரை*. எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, 2013.
[5] சுப்ரபாரதிமணியன். *சுற்றுச்சூழல் கட்டுரைகள்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2022.
[6] சுப்ரபாரதிமணியன். *தறிநாடா*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2013.
[7] சுப்ரபாரதிமணியன். *புத்துமண்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2019.
[8] டி. செல்வராஜ். *தோல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2021.
[9] சு. தமிழ்ச்செல்வி. *கீதாரி*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2020.
[10] ஆ. நந்தகுமார். "இறால் பண்ணையும்...இயற்கை சீரழிவும்" விகடன், 24.06.2015, https://www.vikatan.com/agriculture/48489
[11] பக்தவத்சல பாரதி. *இலக்கிய மானிடவியல்*. அடையாளம், புத்தாநத்தம், 2014.
[12] மாற்கு. *ஐம்பேரியற்கை*. தமிழினி பதிப்பகம், சென்னை, 2018.
[13] முத்துநாகு, இரா. *சுளுந்தீ*. ஆதி பதிப்பகம், திருவண்ணாமலை, 2018.
[14] முருகவேள், இரா. *முகிலினி*. ஐம்பொழில் பதிப்பகம், கோவை, 2019.
[15] மோகன் சி.(மொ.ஆ.), *ஓநாய் குலச்சின்னம்*. அதிர்வு பதிப்பகம், சென்னை, 2012.
[16] ராஜா, ஜி. *சுற்றுச்சூழல் கல்வி*. நியூ ஏஜ் இண்டர்நேஷனல் பப்ளிஷர்ஸ், புது டில்லி, 2005.
[17] வாய்மைநாதன். *நாலி*. சீதை பதிப்பகம், சென்னை, 2008.
[18] வெங்கடேசன், சு. *வீரயுக நாயகன் வேள்பாரி தொகுதி 1*. விகடன் பதிப்பகம், சென்னை, 2019.
[19] வெங்கடேசன், சு. *வீரயுக நாயகன் வேள்பாரி தொகுதி 2*. விகடன் பதிப்பகம், சென்னை, 2019.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026

E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Thoughts on Education, Morality and Social Justice in Tamil Culture

Dr. R. Anandhi, Assistant Professor of Tamil, Dhanalakshmi Srinivasan Institute of Research and Technology (Deemed to be University), Perambalur, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0008-1187-0809
DOI: 10.5281/zenodo.21790946

Abstract

In Tamil culture, education, virtue, and social justice have long been regarded as the fundamental pillars of social progress. Sangam literature, the Thirukkural, and the Tamil epics emphasize the highest moral values of human life while highlighting the importance of education and ethical conduct. Education is considered not merely a means of acquiring knowledge but also a process of nurturing moral values, humanism, and a sense of responsibility. Likewise, virtue (Aram) represents a way of life founded on personal ethics, equality, compassion, and justice. The concept of social justice advocates equal rights, equal opportunities, and human dignity for all, transcending barriers of caste, gender, and economic inequality. This paper examines how education, virtue, and social justice are interconnected in Tamil culture to create a humane and harmonious society. It also explores the relevance of these ideals in contemporary social development, drawing upon evidence from classical Tamil literary works.

Keywords: Tamil Culture, Education, Morality, Social Justice, Ideas.

References

[1] Ilangovadigal. *Silappathikaram, Madurai Kandam*. Thamizh Palkalaikazhaga Veliyitu.
[2] Ilampooranar. *Tholkappiyam Porulathikaram*. Mullai Nilaiyam.
[3] Saminathaiyar, U.Ve. *Purananooru (Mulamum Uraiyum)*. New Century Book House.
[4] Saminathaiyar, U.Ve. *Kurunthogai (Mulamum Uraiyum)*. New Century Book House.
[5] Ouvai.Su.Thuraisami Pillai. *Narrinai*. New Century Book House, 2018.
[6] Ouvaiyar. *Athichudi, 'Aram Seya Virumbu'*. Thamizhnadu Padanool Mattrum Kalviyiyal Paniagal Kazhaga Veliyitu.
[7] Samana Munivargal. *Naladiyar*. Thi.Su. Balasundaram Pillai, editor, Saratha Pathippagam, 2017.
[8] Seethalai Sathanar. *Manimekalai*. Thamizh Palkalaikazhaga Veliyitu.
[9] Thamizhannal. *Sangga Ilakkiya Oppitu*. Meenatchi Puthaka Nilaiyam.
[10] Thaninayagam Adigal, Vana.Pitha. *Thamizar Panpadum Athan Sirappu Iyalpugalum*. New Century Book House, 2010.
[11] Thiruvalluvar. *Thirukkural*. Saratha Pathippagam, 2019.
[12] Nallathanar. *Thirikadugam*. New Century Book House, 2018.
[13] Manickavasagan, Gna. *Paththuppattu (Mulamum Uraiyum)*. Uma Pathippagam.
[14] Varatharanar, Mu. *Thamizar Panpadu*. Pari Nilaiyam.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

தமிழர் பண்பாட்டில் கல்வி, அறம் மற்றும் சமூக நீதி சிந்தனைகள்

முனைவர் ரா. ஆனந்தி, தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், தனலட்சுமி சீனிவாசன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ரிசர்ச் அண்ட் டெக்னாலஜி (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்), பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0008-1187-0809
DOI: 10.5281/zenodo.21790946

ஆய்வுச் சுருக்கம்

தமிழர் பண்பாட்டில் கல்வி, அறம் மற்றும் சமூக நீதி ஆகியவை சமூக முன்னேற்றத்தின் அடிப்படைக் கூறுகளாக விளங்குகின்றன. சங்க இலக்கியங்கள், திருக்குறள் மற்றும் தமிழ்க் காப்பியங்கள் மனித வாழ்க்கையின் உயர்ந்த நெறிமுறைகளை எடுத்துரைத்து, கல்வியின் அவசியத்தையும் அறநெறியின் மேன்மையையும் வலியுறுத்துகின்றன. கல்வி என்பது அறிவைப் பெறுவதற்கான கருவி மட்டுமல்லாமல், நல்லொழுக்கம், மனிதநேயம் மற்றும் பொறுப்புணர்வை வளர்க்கும் வழிமுறையாகக் கருதப்படுகிறது. அதேபோல், அறம் என்பது தனிமனித ஒழுக்கம், சமத்துவம், கருணை மற்றும் நீதியை அடிப்படையாகக் கொண்ட வாழ்வியல் நெறியாக விளங்குகிறது. சமூக நீதி சிந்தனைகள், சாதி, பாலினம், பொருளாதார வேறுபாடுகளைத் தாண்டி அனைவருக்கும் சம உரிமை, சம வாய்ப்பு மற்றும் மனித மரியாதை கிடைக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையை முன்வைக்கின்றன. இக்கட்டுரை தமிழர் பண்பாட்டில் கல்வி, அறம் மற்றும் சமூக நீதி ஆகியவை எவ்வாறு ஒன்றோடொன்று இணைந்து மனிதநேயச் சமூகத்தை உருவாக்குகின்றன என்பதையும், அவற்றின் சிந்தனைகள் இன்றைய சமுதாய வளர்ச்சியில் எவ்வாறு பொருத்தமுடையதாக உள்ளன என்பதையும் இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்கிறது.

குறிப்புச் சொற்கள்: தமிழர் பண்பாடு, கல்வி, அறம், சமூக நீதி சிந்தனைகள்.

முன்னுரை

மக்கள் தாங்கள் செய்யும் செயல்களில் முக்கியத்துவம் வழங்ககூடிய சிறப்பு தன்மையும் அதன் குறியீட்டு அமைப்பையும் பண்பாடு என வரையறை செய்கின்றனர். பண்பாடு என்பது சமூகத்தின் நம்பிக்கைகள், கலைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் விழுமியங்கள் ஆகியவற்றை அடக்கிய ஒரு முழுமையான வாழ்க்கை முறையைக் குறிக்கின்றது. இப்பண்பாடு அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சமூகத்தின் அடையாளமாக விளங்குகின்றது. சங்க இலக்கியங்கள் வழி நம் தமிழர்கள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே பண்பாட்டில் சிறந்தனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. புலவர்கள் தாங்கள் இயற்றிய நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற இலக்கியங்களில் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையைக் கையாண்டு வாழ்ந்தனர் என பாடல்களில் வழி எடுத்துரைக்கின்றனர். கல்வி, அறக்கோட்பாடு, சமூக அமைப்பு, அரசியல், கலை போன்ற பல்வேறு கூறுகளைத் தெளிவுபடுத்தியுள்ளனர். அவ்வகையில் அமைந்த தமிழர்களின் தொன்மையான பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளனர் என்பது இக்கட்டுரை வழி நோக்கப்படுகின்றது.

பண்பாடு

பண்பாடு என்பது மனிதனின் திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை என்பனவற்றைக் குறிக்கின்றது. ஒழுக்கம் என்பது அகக்கூறு, நாகரிகம் என்பது புறக்கூறு எனக் கூறுவர். நாகரிகம் சார்ந்த பண்பாடும் உண்டு, நாகரிகம் அல்லாத பண்பாடும் உண்டு. தமிழர்களின் பண்பாடு இவ்விரண்டிலும் சிறந்திருந்தது. தமிழர்கள் தங்கள் வாழ்க்கை முறையை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாகப் பிரித்து இலக்கணம் வகுத்தனர். சங்க கால

மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை போன்றவற்றில் சிகரத்தைத் தொட்டனர். மேலும், அரசாட்சிமுறை, கல்வி, வீரம், போர் போன்றவற்றை தமிழர் போற்றி வளர்த்தனர். பல காலங்களாகத் தமிழர்களின் பண்பாடு மேம்படுத்தப்பட்டு இருந்தாலும் பல அம்சங்களைக் குறித்து நின்றாலும் அது, தொடர்ந்து மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கின்றது. ஆமைப்பொழுங்கில் இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது. ஓன்ற அதனளவில் சார்புடையது, மற்றொன்று உலகளாவிய அமைப்புகளோடு பொருந்தக்கூடியது.

பண்பாடு எனும் சொல்லிற்கு மக்களியல் வல்லுநர்களின் (Anthropologists) கருத்தின்படி பழைய மக்களின் வாழ்க்கையை விளக்கும் எல்லாத் துறைகளும் பண்பாட்டில் அடங்கும். சென்ற நூற்றாண்டில் மத்தியு ஆர்ணல்ட் (Mathew Amold) எனும் நூலாசிரியர் தாம் எழுதிய ஒரு நூலில் இக்காலத்திற்கு ஏற்றவாறு பண்பாட்டுத் துறையை விளக்குகின்றார். இந்த நூற்றாண்டில் டி.எஸ்.எலியட் (T.S.Eliot) எனும் ஆங்கிலப் புலவர் ‘பண்பாட்டின் வரையறை பற்றிய குறிப்புகள்’ எனும் நூலில் பண்பாட்டை இன்னும் விரிவாகப், பண்பாடு என்பது இனிமையின் ஒளி என்றும், சிந்தனையின் தொழில் என்றும், அழகிலும் மனித உணர்ச்சியிலும் ஈடுபாடுடன் செயல்படுவது என்றும் விளக்குகின்றார். நம் தமிழ் இலக்கியத்தில் பண்பாடு என்னும் சொல் இந்நூற்றாண்டில் ஆங்கிலம் அறிவு நிறைந்த தமிழறிஞரால் உண்டாக்கப்படுகின்றது. இன்று நாம் பண்பாடு எனும் சொல்லால் குறிப்பிடும் துறைகளை நம் முன்னோர் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை போன்ற சொற்களால் குறித்துள்ளனர். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் பண்பாட்டுடன் தொடர்புள்ள வேறு சில பொருள்களைக் குறித்தாலும் பல இடங்களில் பண்பாட்டைக் குறிக்கின்றன. கலித்தொகையில் பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவது என்றும், வள்ளுவத்தில் பண்புடையார் பட்டுண்டு உலகம் என்றும் கூறப்படுகின்றன.

பண்பாடு உடையவரைச் சான்றோரென்றும், ஒழுக்கமுடையவர் என்றும், ஒளியோரென்றும், மாசற்ற காட்சியுடையோர் என்றும் அழைத்தனர். ஆங்கிலத்தில் ஊரடவரசந எனப்படும் சொல்லிற்குத் தமிழில் பண்பாடு என்று குறிக்கின்றனர். ஆங்கிலச் சொல் எவ்வாறு இலத்தீன் சொல்லாகிய நிலத்தைப் பண்படுத்துவதில் இருந்து (Cultura Agri) பிறந்ததோ அதுபோல தமிழ்ச் சொல்லாகிய பண்பும் நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். உழவுத்தொழில் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பு இச்சொல்லைத்தான் பண்பாடு என்னும் பொருளில் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

பண்பாடு எதைக் குறிக்கிறது?

ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், சமூகச் சட்டங்கள், சமயங்கள், வழிபாட்டு முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை, புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியல் அமைப்புகள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு, பொழுதுபோக்கு விளையாட்டுகள் ஆகியவற்றையெல்லாம் குறிப்பதாக பண்பாடு அமைகின்றது. ஒவ்வொரு இனத்தாரின் பண்பாட்டை நாம் அறிந்து கொள்வதற்கு உயர்ந்த இலக்கியம் பயன்படுவதுபோல நாடோடி இலக்கியமும் பயன்படுகின்றது. அதனை நாட்டுப்புறப் பாடல்களிலும், நாடோடி இலக்கியங்களிலும், பழமொழிகள், முதுமொழிகளிலும், இசையிலும், நாடகத்திலும், நாட்டியத் திலும், செந்தமிழ் கொடுந்தமிழ் அமைப்பிலும், வளர்ச்சி யிலும் காணலாம். மேலும் ஒவியம், சிற்பம், கட்டிடக்கலை போன்ற கலைகளில் வெளிப்படுவதால் பண்பாடு தோன்றுகிறது.

தமிழர்கள் இலக்கியங்களையும் கவின்கலைகளையும் தமிழ் மக்கள் ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக வளர்த்துவந்து தங்களது பண்பாட்டை நிலைநாட்டியுள்ளனர். அவ்வகையில், தமிழர் பண்பாட்டின் களஞ்சியங்களாக ஐந்து நூல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அவை,

- **தொல்காப்பியப் பொருளதிகாரம்**
- **குறுந்தொகை**
- **புறநானூறு**
- **திருக்குறள்**
- **சிலப்பதிகாரம்**

போன்ற நூல்களில், தமிழர் பண்பாடுகள் கால அளவில் சிறிது மாறி வந்துள்ளன.

சமயக் கோட்பாடு பரவல்

ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்தில் தங்களது சமய - சமூகக் கொள்கைகளைப் பரப்பினர். ஐரோப்பியர் தமிழ்நாட்டுடன் கொண்ட தொடர்பால் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தமிழர்கள் பிறநாட்டுச் சமயங்களும் மக்களும் தமிழ்நாட்டில் புகுந்த காலத்தில் தமிழ்மரபைக் காத்துவரப் பயின்றனர். இளங்கோவடிகள் இயற்றிய தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம் சமணச் சமயத்தையும் தமிழ் ஒழுக்கத்தின் களஞ்சியமான வள்ளுவர் சமணச் சமயத்தைச் சார்ந்தவர் என்றும் தொல்காப்பியரும் சமணர் என்பது பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் கருத்தாகக் கூறப்படுகின்றன. இவற்றிற்கு எல்லாம் போதிய சான்றாதாரம் இல்லை. வீரமாமுனிவர் போன்ற மேனாட்டவரும் தமிழ் மரபைத் தழுவி வாழ்ந்தும் பாடல்கள் இயற்றவும் கற்றுக்கொண்டனர். புலவர்கள் தமிழர்களது பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பாடல்களை இயற்றியுள்ளனர். பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டில் தமிழின் மறுமலர்ச்சிக்கு எழுத்தாளர் பலர் ஆங்கில அறிவில் சிறப்புப் பெற்றிருந்தாலும் மேலை நாட்டு இலக்கிய வரலாற்றை நன்கு பயின்றிருந்தாலும் அவர்கள் தமிழர்களின் பண்பாட்டை மறக்கவில்லை. சுந்தரம்பிள்ளை, பரிதிமாற் கலைஞர், வையாபுரிப்பிள்ளை, திரு.வி.க, ரா.பி.சேதுபிள்ளை, மு.வ போன்றோர் ஆங்கிலப் பயிற்சியில் சிறந்தவர்களாக இருந்தாலும் தமிழ்ப் பண்பாட்டை மாற்றவில்லை.

நகர வாழ்க்கையின் அமைப்பையும் பயனையும் குறிக்கும் விதமாக திருக்குறள் மற்றும் நற்றிணையில் முதன்முதலாக நாகரிகம் பண்பாடு என்னும் சொல் பண்பாடு என்னும் பொருளில் கையாளப்பட்டு வருகின்றது. “சில வேளைகளில் பண்பாடு எது, நாகரிகம் எது என்று பிரித்துக் கூறுவது எளிதாக இராது. ரேணர் (turner) என்பவர் The Great Culture Traditions என்ற நூலில் உலகின் பெரிய நாகரிகங்களையும், பண்பாடுகளையும் விளக்கியுள்ளார். ஆர்ணல்ட் ரொயின்பி Arnald Toynbee vd;gtu; The Great Cilvilizations எனும் நூலில் பண்பாட்டையும் நாகரிகத்தையும் சேர்த்து விளக்கியுள்ளார்.” (தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும், ப. 25) இவ்வகையில் தமிழர் பண்பாடும் நாகரிகமும் என்று கூறுவது இயல்பாயிற்று.

தமிழர் பண்பாட்டில் கல்விச் சிந்தனைகள்

கல்வி என்பது மனிதன் வெறும் எழுத்தறிவைப் பெறுவதற்காக மட்டும் தனது கருவியாக தமிழர் பயன்படுத்தவில்லை. மக்கள் கல்வியைத் தங்களது ஒழுக்கம், அறிவு, பண்பு, அறம் போன்றவற்றில் சிறந்தவர்களாக உருவாக்கும் உயர்ந்த செல்வமாக போற்றி வளர்த்தனர். கல்வி என்பது அழியாச் செல்வம் என்பதை உணர்ந்த தமிழர்கள் சங்க காலம் முதல் இன்று வரை பேணிக்காத்துவருகின்றனர்.

தமிழர்களின் அடிப்படைத்தேவை கல்வி

ஒரு மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, தங்குவதற்கான இடம் என்னும் அடிப்படைத் தேவைகள் இல்லாமல் வாழ முடியாது. ஆவ்வடைப்படைத் தேவைகளுள் ஒன்றாக கல்வியின் சிறப்பை உணர்ந்திருந்தனர். நாட்டை ஆட்சி செய்யும் அரசர் முதல் மக்கள் வரை அனைவரும் அக்கல்வியின் பெருமையைக் காத்து வந்தனர். கல்வியில் சிறந்த புலவர்களுக்குச் சமூகத்தில் மரியாதையும் மதிப்பும் வழங்கப்பட்டன. ஒரு மனிதனுக்கு தான் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் உத்வேகத்தால் அனைவரும் கல்வி கற்க வேண்டும்

என்ற எண்ணம் வேரூன்றிருந்தது. மாணவர்கள் ஆசிரியர்களிடம் நேரடியாகக் கல்வி கற்றனர். சங்க தமிழர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இலக்கியம், இலக்கணம், போர்க்கலை, கணிதம், மருத்துவம், வானியல், கூத்து போன்ற பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கினர். தங்களது அறிவுடன் சேர்த்து ஒழுக்கம், பணிவு, நேர்மை போன்ற நற்பண்புகளை வளர்த்து தமிழர் பண்பாட்டைப் பேணிக்காத்து நின்றனர். திருக்குறளில் திருவள்ளுவர் கல்வியின் சிறப்புகளாகப் பின்வரும் குறள் வழி எடுத்துரைக்கின்றார்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (குறள் - 391)

இக்குறட்பாவில், ஒருவன் குற்றம் இல்லாத கல்வியைக் கற்று, அதன் படி வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.(குறள் - 392)

என்னும் குறளில், மனித வாழ்க்கைக்கு எண் மற்றும் எழுத்து என்பது இரு கண்கள் போன்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.(குறள் - 400)

என்னும் குறளில், கல்வி அழியாத உயர்ந்த செல்வம், என்றும் பிற செல்வங்கள் யாவும் நிலையானவை அல்ல என்றும் திருவள்ளுவர் குறட்பாக்களின் வழி எடுத்துரைக்கின்றார்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே. (புறநானூறு, பா. 183)

என்னும் புறநானூற்றுப் பாடல் அடிகளில், கல்வி கற்பதற்காக ஆசிரியருக்குத் தேவையான உதவிகளைச் செய்து, பொருள் கொடுத்தும், சிரமங்களைப் பொருட்படுத்தாமலும் கல்வி கற்பது சிறந்த கற்றல் என்று கூறுகின்றது. நாலடியாரில்,

கல்வி கரையில் கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல் தெளளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. (நாலடியார், பா. 235)

கல்விக்கு எல்லை இல்லை ஆனால் மனித வாழ்க்கை குறுகியது. அக்குறுகிய வாழ்நாட்களில் நாம் கற்க வேண்டிய நூல்களுக்கு எல்லையில்லை. எனவே, அன்னப்பறவை நீரிலிருந்து பாலை மட்டும் பிரித்தெடுப்பதுபோல், நாம் ஆராய்ந்து பார்த்து பயனுள்ள கல்வியைத் தேர்ந்தெடுத்து கற்க வேண்டும் என இப்பாடலடி கல்வியைக் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. அவ்வையார் அவர்கள் கல்வியின் பெருமையாக, நாம் கற்ற அறிவு மிகச் சிறியது கற்க வேண்டிய அறிவு உலகம் அளவிற்கு பரந்துவிரிந்தது என்பதை உணர்ந்து கல்வியின் பயன் குறித்து கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என்று எடுத்தியம்புகின்றார். இவ்வாறாக மேற்கூறிய பாடல்கள் வழி புலவர்கள், அளவில்லாத கல்வியைக் கற்பதால் மனிதனின் அறிவும் சிந்திக்கும் ஆற்றலும் விரிவடைகின்றது என்கின்றனர். அவர்களிடத்தில் சிறந்த நல்லொழுக்கம், மனிதநேயம், தன்னம்பிக்கை, பொறுப்புணர்வு ஆகியவற்றை உருவாக்குகிறது என்றும் தனிமனித முன்னேற்றத்திற்கு மட்டும் அல்லாமல் குடும்ப வளர்ச்சிக்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் அடித்தளமாகத் தான் கற்ற கல்வியால் அமைத்து சிறப்புப் பெறுகின்றான்.

கல்வியின் முக்கியவத்துவத்தை உணர்ந்து அக்கல்வியை இன்று தொழில் நுட்பஅறிவியல் உலகில் இணையவழிக் கல்வி, செயற்கை நுண்ணறிவு, மின்னணுக் கற்றல் போன்ற புதிய முறைகள் அனைவருக்கும் எளிதில் கிடைக்கச் செய்தனர். தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படை மதிப்புகளான ஒழுக்கம், மனிதநேயம், பண்பாடு ஆகியவற்றுடன் கல்வியை

இணைத்துக் கற்பது மிகவும் அவசியம் என்பதை உணர்ந்தனர். ஒரு மனிதனின் அழியாச் செல்வமாகக் கல்வி அவனது வாழ்க்கையை உயர்த்துவதும் அறிவையம் அறத்தையும் இணைத்து முழுமையான நற்பண்புள்ள குடிமகனாக சமுதாயத்தில் தன்னை பதிய வைப்பதில் முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என இக்கட்டுரை வழி பெறப்படுகின்றது.

இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்

தமிழர் பண்பாட்டின் சிறந்ததொரு அடித்தளமாக அறச் சிந்தனைகள் விளங்குகின்றது. தனிமனித வாழ்வை விட சமூக நலனுக்கு அதிகளவில் பங்காற்றினர். அவர்கள் வாழ்க்கையின் நெறிகளாக மனிதநேயம், அன்பு, ஈகை, ஒற்றுமை, விருந்தோம்பல், சமத்துவம், நீதி, ஒழுக்கம் போன்ற பண்புகளைக் கடைப்பிடித்தனர். சங்க இலக்கியங்களா எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள் போன்ற பிற தமிழ் இலக்கியங்களும் அறச்சிந்தனைகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. ஒரு மனிதன் நல்வழியில் வாழ உதவும் ஒழுக்க நெறியாக அறம் அமைந்துள்ளது. ஒருவர் பிறருக்கு கீழ்க்காணும் செயல்களால் பண்புகளுடன் வாழ்வது தான் சிறந்து அறம். அப்பண்புகள், **தீங்கு செய்யாமல் இருத்தல், உண்மையாக இருத்தல், நேர்மையாக இருத்தல், கருணையுள்;ளம் கொண்டிருத்தல், அன்பு காட்டுதல், ஈகையுடன் செயல்படுதல்** போன்ற நற்குணங்களுடன் செயல்பட வேண்டும். பின்வரும் திருக்குறளில்,

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.(குறள் - 39)

அறநெறியில் வாழ்வதால் கிடைக்கும் இன்பமே உண்மையான இன்பம், மற்றவை நிலையானவை இல்லை என்று திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். தமிழர் பண்பாட்டில் அன்பும் மனிதநேயமும் சிறந்ததொரு பண்பாடாம். வாழ்க்கையின் அடிப்படையாக அமைவது எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்ற உயரிய சிந்தனை என்பதை வெளிப்படுத்தும் குறள்,

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (குறள் - 80)

அன்பினால்தான் உயிர் வாழ்வு சிறப்பாக அமைகிறது. அன்பு இல்லாதவர்களின் உடல், உயிரற்ற எலும்பின் மீது தோலைப் போர்த்தியதற்கு சமம் என்பதை உணர்ந்து, மனித வாழ்க்கையின் அடிப்படை அன்பு என்றும் அன்பு உள்ளவர்களே உண்மையான மனிதர்கள் என்றும் அன்பில்லாத வாழ்க்கை பயனற்றது என்னும் உயரிய சிந்தனை கொண்டு மனிதன் அன்பே மனித வாழ்வின் உயிர்நாடி எனத் தன் பயணத்தைத் தொடங்க வேண்டும்.

விருந்தோம்பும் பண்பு

தமிழர்களின் உயர்ந்த பண்பாக விருந்தினரை இன்முகத்துடன் சென்று வரவேற்று உபசரிப்பதாம். சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல் சிறந்த அறமாகப் போற்றப்படுகிறது.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு.(குறள் - 86)

என்னும் குறட்பாவில், மனிதனில் உயர்ந்தவன் என்னும் பண்பு தம்முடன் உள்ள விருந்தினரையும், இனி அவனை நாடி வருவோரையும் இன்முகம் கொண்டு மகிழ்ச்சியுடன் உபசரிப்பவன் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.(குறள் - 81)

இல்லறம் நடத்துவதன் முக்கிய நோக்கம், வீட்டிற்கு வரும் விருந்தினரை அன்புடன் உபசரிப்பதே ஆகும். மேலும், விருந்தோம்பலை வலியுறுத்தும் மற்றொரு குறள்:

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.(குறள் - 90)

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

அனிச்ச மலர் முகர்ந்தாலே வாடிவிடும், அதுபோல, விருந்தினரை முகம் சுளித்து பார்த்தாலே அவர்கள் மனம் வருத்தம்கொள்வர் என திருவள்ளுவர் கூறுகின்றார். இவ்வாறு இரண்டு குறள்கள் வழி, திருவள்ளுவர் விருந்தோம்பும் பண்பை எடுத்துரைக்கின்றார்.

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை நூல்களுள் புறநூல்வகையைச் சார்ந்த புறநானூற்றில், உலக மக்களை உறவினர்களாகக் கருதி அன்புடனும் விருந்தோம்பலுடனும் நடத்த வேண்டும் என்று உயரிய சிந்தனையைக் கணியன் பூங்குன்றனார்,

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; …(கணியன் பூங்குன்றனார், புறநானூறு, பா. 192)

உலகச் சகோதரத்துவம், சமத்துவம், மனிதநேயம் மற்றும் நிலையாமை ஆகிய உயரிய சிந்தனைகளை எடுத்துரைக்கும் விதமாக, எல்லா ஊர்களும் நம் ஊரே, எல்லா மனிதர்களும் நம் உறவினர்களே. நாம் செய்யும் செயல்களின் விளைவாக நன்மையும் தீமையும் பிறரால் வருவதில்லை, இயற்கையாக அமையும் நம் பிறப்பு இறப்பின் வாழ்க்கையில் இன்பம் வந்தாலும் அளவுக்கு மீறி மகிழ வேண்டாம், துன்பம் வந்தாலும் வருந்த வேண்டாம். உயிரின் பயணம் இயற்கை நியதிப்படியே நடைபெறுகிறது. ஆகவே, பெரியோர்களை அதிகளவு போற்றவும் வேண்டாம். சிறியவர்களை இகழவும் வேண்டாம் என்று மனித குலத்தின் பண்பாட்டின் தலைசிறந்த மகத்துவத்தை இப்பாடல் உணர்த்துகின்றது. மேலும், நற்றிணையில், இரவு நேரத்தில் விருந்தினர் வருகை தந்தால் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் இல்லறப் பெண்ணின் பண்பாக நற்றிணைப் பாடலில்,

அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல். (நற்றிணை, முல்லைத்திணை, பா. 142)

சுட்டுகின்றது. பொருநராற்றுப்படையில், விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று, உணவளித்து, பரிசளித்து அனுப்பும் தமிழரின் உயர்ந்த பண்பை விரிவாகப் புகழ்கிறது.

கணவனைப் பிரிந்ததால் விருந்தினரை உபசரிக்கும் இல்லறக் கடமையை இழந்தேன் விருந்து புறந்தருதலும் இழந்த என்னை என்று சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவி கண்ணகி வருந்துகிறாள்.

முறுவல் இனிதுரை கால்நீர் மணைபாய்
கிடக்கையோடு இவ்வைந்தும் என்ப தலைச்சென்றார்க்கு
ஊணொடு செய்யும் சிறப்பு. (திரிகடுகம், பா. 64)

விருந்தினரை வரவேற்பதுடன் தமிழரின் செயல்பாடு நிற்கவில்லை, விருந்தினருக்கு உணவு அளிப்பதோடு மட்டுமல்லாமல், கீழ்க்காணும் ஐந்து சிறப்புகளையும் செய்ய வேண்டும். அவை,

- **முறுவல் – புன்னகையுடன் வரவேற்பது.**
- **இனிதுரை – இனிமையாகப் பேசுவது.**
- **கால்நீர் – கால்களைக் கழுவ நீர் வழங்குவது.**
- **மணை – அமர இடம் கொடுப்பது.**
- **பாய் கிடக்கை – ஓய்வெடுக்கப் பாய் அல்லது படுக்கை வழங்குவது.**

ஆகியவற்றை அளிப்பது சிறந்த விருந்தோம்பல் என்று திரிகடுகம் இப்பாடல் வழி எடுத்துரைக்கின்றது. ஈகை என்னும் நற்பண்பில் தமிழர் தலைசிறந்து விளங்கினர். பிறருக்குத் தேவையான உதவிகளைச் செய்வது குறித்து திருவள்ளுவர்,

ஈதல் இசைபட வாழ்தல்; அதுவலல்து
ஊதியம் இல்லை உயிர்க்கு.(குறள் - 231)

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

ஒருவர் பிறருக்குக் கொடுத்து வாழும் வாழ்க்கை தான் புகழுக்குரிய வாழ்க்கை என்று கூறுகின்றார். இவ்வாறு இலக்கியங்களில் அறச்சிந்தனைகளில் தமிழர்கள் சிறந்திருந்தனர் என்பது பெறப்படுகின்றன.

தமிழர் பண்பாட்டில் சமூக நீதி சிந்தனைகள்

சமூக நீதி என்பது ஒவ்வொரு மனிதனும் சம உரிமை, சம வாய்ப்பு மற்றும் சமமான மதிப்பைப் பெற வேண்டும் என்ற உயரிய கொள்கையைக் குறிக்கின்றது. சமூக நீதியின் அடிப்படை நோக்கம் சாதி, மதம், பாலினம், பொருளாதார நிலை அல்லது பிற வேறுபாடுகளின் அடிப்படையில் மனிதர்கள் பாகுபடுத்தப்படாமல் வாழ்வதாம். இக்கருத்து நவீன ஜனநாயகச் சிந்தனையின் விளைவாக மட்டுமல்ல சங்க காலத்திலேயே தமிழர் பண்பாட்டில் ஆழமாக வேரூன்றியிருந்த வாழ்க்கை நெறியைக் கொண்டுள்ளது. சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங்கள் சமத்துவம், மனிதநேயம், நீதிநெறி மற்றும் நல்லாட்சியை வலியுறுத்துவதன் மூலம் தமிழர் சமூகத்தின் உயர்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.

சங்க இலக்கியங்களில் சமூக நீதி

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் சமூக வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வரலாற்றுக் கருவூலமாகக் கருதப்படுகின்றன. அவற்றில் மனித சமத்துவம், விருந்தோம்பல், ஈகை, அன்பு மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவை சமூக நீதியின் அடிப்படை கூறுகளாகக் காணப்படுகின்றன. உலக மனிதநேயத்தின் தலைசிறந்த அறிவிப்பாகப் புறநானூற்றுப் பாடலான **'யாதும் ஊரே யாவரும் கேளிர்**' என்னும் பாடல்கள் வழி, எல்லா ஊர்களும் நமதுடையவை எல்லா மனிதர்களும் நமது உறவினர்கள் என்னும் சிந்தனையானது, இனம், மொழி, நாடு ஆகிய எல்லைகளைத் தாண்டிய உலக சகோதரத்துவத்தை வலியுறுத்துகிறது. இக்கருத்து இன்றைய உலக மனித உரிமைகள், சமூக ஒற்றுமை மற்றும் உலகக் குடியுரிமை என்ற கொள்கைகளுக்கு முன்னோடியாக விளங்குகிறது. சங்கப் புலவர்கள் மன்னர்களின் பெருமையை அவர்களின் செல்வத்தால் அல்ல, மக்களின் நலனைப் பாதுகாத்த நல்லாட்சியால் அளவிட்டனர். மக்கள் நலன், ஈகை, நீதிமுறை ஆகியவை ஒரு சிறந்த அரசின் அடையாளங்களாகக் கருதப்பட்டன.

திருக்குறளில் சமூக நீதி

திருவள்ளுவர் சமூக நீதியை அறத்தின் அடிப்படையில் விளக்குகிறார். மனிதர்களிடையே சமத்துவம் நிலவ வேண்டும்; ஆட்சி நீதியின் வழியில் நடைபெற வேண்டும்; அதிகாரம் அறநெறியுடன் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். அனைத்து மனிதர்களின் சமத்துவத்தை எடுத்துரைக்கும் புகழ்பெற்ற குறள்:

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (திருக்குறள் - 972)

அனைத்து மனிதர்களும் பிறப்பால் சமமானவர்கள்; அவர்களின் செயல்களே அவர்களின் உயர்வு, தாழ்வை நிர்ணயிக்கின்றன என்பதை இக்குறள் வழி திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். இக்கருத்து சமூக நீதியின் மையக் கொள்கையாக விளங்குகிறது. அதுபோல், நீதியுள்ள ஆட்சியைப் பற்றி திருவள்ளுவர் பல அதிகாரங்களில் எடுத்துரைக்கிறார். நீதியுடன் ஆட்சி செய்யும் அரசனே மக்களின் நம்பிக்கையைப் பெறுவான் என்று வலியுறுத்துகிறார். அதிகாரம் என்பது மக்களுக்கு சேவை செய்வதற்கான பொறுப்பு என்பதே திருவள்ளுவரின் அரசியல் சிந்தனையின் அடிப்படையாகும்.

சிலப்பதிகாரத்தில் நீதிக்கான போராட்டம்

தமிழ் இலக்கியங்களில் சமூக நீதியை மிக வலிமையாக எடுத்துரைக்கும் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். இளங்கோவடிகள் படைத்த இக்காப்பியத்தின் மையக் கருத்தாக 'அறம் வெல்லும்' என்பதைக் குறிக்கின்றது. இளங்கோவடிகள் படைத்த இக்காப்பியத்தின் மையக்

கருத்தாக, **அறம் வெல்லும்** என்பதைக் குறிக்கின்றது. இதனை, 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவது' என்பதனைத் தெளிவாக எடுத்துரைக்கிறது. மேலும்,

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவது,
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம். (சிலப்பதிகாரம், பாடல்அடி, 55-57)

என்ற பாடலடிகள், நீதியற்ற ஆட்சி அழிவைச் சந்திக்கும் என்பதையும், அறமே இறுதியில் வெற்றி பெறும் என்பதையும் வலியுறுத்துகின்றன. கோவலன் குற்றமின்றி கொல்லப்படுவது ஆட்சியின் தவறான தீர்ப்பைக் காட்டுகிறது. ஆனால் கண்ணகி, தனது கணவனின் நிரபராதத்தன்மையை நிரூபித்து, அரசனின் அநீதியை வெளிப்படுத்துகிறாள். அதிகாரத்தில் இருப்பவர்களும் தவறு செய்யலாம்; உண்மை மற்றும் அறம் இறுதியில் வெல்லும் என்பதை இக்காப்பியம் வலியுறுத்துகிறது.

கோவலன் குற்றமின்றி கொல்லப்படுவது ஆட்சியின் தவறான தீர்ப்பைக் காட்டுகிறது. ஆனால் கண்ணகி தனது கணவனின் நிரபராதத்தன்மையை,

என் காற்சிலம்பு மணியுடை அரியே
நின் காற்சிலம்பு முத்துடை அரியே. (சிலப். மதுரை. வழக்குரை காதை, 150-155)

என்ற அடிகள் மூலம் நிரூபிக்கிறாள். இதனை உணர்ந்த பாண்டிய மன்னன்,

யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள். (சிலப். மதுரை. வழக்குரை காதை, 185-187)

என்று தனது தவறை ஒப்புக்கொள்கிறான். இதன் மூலம் அதிகாரத்தில் இருப்பவர்களும் தவறு செய்யலாம். ஆனால் உண்மை, நீதி மற்றும் அறம் இறுதியில் வெல்லும் என்ற உயரிய சமூக நீதி சிந்தனையை சிலப்பதிகாரம் வலியுறுத்துகிறது. கண்ணகி ஒரு பெண்ணாக மட்டுமல்லாமல், நீதிக்காகக் குரல் கொடுக்கும் சமூகத்தின் பிரதிநிதியாகக் கருதப்படுகிறாள். இன்றைய நீதித்துறை, மனித உரிமைகள் மற்றும் பெண்களின் உரிமைகள் பற்றிய சிந்தனைகளுடன் இக்கருத்து நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்துகின்றன.

மணிமேகலையில் மனிதநேயமும் சமூக நலனும்

சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலை சமூக நீதி, கருணை மற்றும் மனிதநேயத்தை மையமாகக் கொண்ட காப்பியமாகத் திகழ்கிறது. பசியால் வாடும் மக்களுக்கு உணவளிப்பது உயர்ந்த அறமாகக் கருதப்படுகிறது. மணிமேகலை பெற்ற 'அமுதசுரபி பாத்திரம்', பசியை ஒழிக்கும் சமூகப் பொறுப்பின் அடையாளமாக விளங்குகிறது. இக்காப்பியம் தனிமனித நலனை விட சமூக நலனே உயர்ந்தது என்பதை எடுத்துரைக்கிறது. வறுமை, பசி, துன்பம் ஆகியவற்றை நீக்குவதில் அரசும் சமூகமும் இணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்து இதில் வலியுறுத்தப்படுகிறது. அதனை,

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க்கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும். (பாடல்அடி, 228-230)

என்ற பாடல் அடி தெளிவுபடுத்துகிறது. மேலும்,

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே." (பாடல்அடி, 94-95)

என்ற அடிகளில், பசியைப் போக்குவது உயிரைக் காப்பதற்கு இணையான அறச்செயல் என்பதை எடுத்துரைக்கின்றன. மணிமேகலைக்கு கிடைக்கும் அமுதசுரபி என்பது வெறும் அதிசயப் பாத்திரம் மட்டுமல்ல அது பசியற்ற சமுதாயம் என்ற உயரிய இலட்சியத்தின் அடையாளம். இதன் மூலம் சமூகத்தில் ஏழை, எளியோர், ஆதரவற்றோர் யாரும் பசியால் வாடக் கூடாது என்ற கருத்தினை வலியுறுத்துகின்றது. மேலும், குற்றவாளிகளைத்

தண்டிப்பதைவிட அவர்களைத் திருத்தி நல்லவர்களாக மாற்ற வேண்டும் என்ற மனிதாபிமான சிந்தனையையும் காப்பியம் எடுத்துரைக்கிறது. இதனால், சமூகநீதி என்பது பழிவாங்கும் நீதியல்ல மறுவாழ்வு வழங்கும் நீதியாக இருக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையை வெளிப்படுத்துகின்றது. எனவே, மணிமேகலை மனிதநேயம், சமத்துவம், கருணை, பசியொழிப்பு, சமூக நீதி, அகிம்சை ஆகிய உயரிய பண்புகளை வலியுறுத்தும் காலத்தால் அழியாத தமிழ் இலக்கியமாகத் திகழ்கிறது. இன்றைய நலஅரசு (Welfare State), மனித உரிமைகள், சமூகப் பாதுகாப்பு போன்ற சிந்தனைகளுக்கான முன்னோடி இலக்கியமாகவும் இது கருதப்படுகிறது.

பெண்களும் சமூக நீதியும்

சங்க காலத்தில் பெண்களுக்கு அதிக அளவில் மதிப்பும் மரியாதையும் அளிக்கப்பட்டுது. அக்காலப் பெண்கள் கல்வி, இலக்கியம், கலை, அரசியல் போன்ற பல்துறைகளில் தலை சிறந்து விளங்கினர். அவர்களுள் அவ்வையார், காக்கைப்பாடினியார், நச்செள்ளையார் போன்ற பெண்பாற் புலவர்கள் தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் உயர்ந்த நிலையை எடுத்துக்காட்டுகின்றனர். தமிழர் பண்பாட்டில் பெண்கள் சமூக முன்னேற்றத்தின் முக்கிய அங்கமாகக் கருதப்பட்டனர். சங்க இலக்கியங்களில் பல பெண்பாற் புலவர்கள் தங்கள் புலமையால் சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தனர். ஔவையார், கண்ணகி, மணிமேகலை போன்ற பெண்கள் அறிவு, அறம், துணிவு மற்றும் சமூகப் பொறுப்பின் சின்னங்களாக விளங்குகின்றனர். இன்றைய சமூக நீதியில் பாலின சமத்துவம் முக்கிய இடம் பெறுகிறது. பெண்களுக்கு சமமான கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை, தலைமைத்துவ வாய்ப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கப்படுவது சமூக நீதி நிலைநிறுத்தப்படுவதற்கான அடிப்படை அம்சமாகும்.

இன்றைய சூழலில் சமூக நீதி

இன்றைய இந்திய அரசியலமைப்பும் சமூக நீதியை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வி உரிமை, சம வாய்ப்பு, பெண்கள் முன்னேற்றம், சமூக பாதுகாப்புத் திட்டங்கள், மாற்றுத்திறனாளிகள் நலன், குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் ஆகியவை சமூக நீதியின் நவீன வடிவங்களாகும். தமிழர் பண்பாடு வலியுறுத்திய சமத்துவம், அறம், மனிதநேயம், விருந்தோம்பல் மற்றும் பொதுநலம் ஆகிய பண்புகள் இன்றைய சமூக வளர்ச்சிக்கும் வழிகாட்டுகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சி அதிகரித்து வரும் சூழலில் மனிதநேயம் குறையாமல் பாதுகாக்கப்பட வேண்டியது மிக அவசியம் என்பது இக்கட்டுரை வழி பெறப்படுகின்றது.

முடிவுரை

தமிழர் பண்பாட்டில் அறமும் சமூகச் சிந்தனைகளும் மனித வாழ்க்கையை உயர்த்தும் உயரிய நெறிகளாக விளங்குகின்றன. அன்பு, அறம், விருந்தோம்பல், ஈகை, கல்வி, உலக சகோதரத்துவம், பெண்மைக்கு மரியாதை, நல்லாட்சி போன்ற விழுமியங்கள் தமிழர் நாகரிகத்தின் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றன. இவ்விழுமியங்கள் இன்றைய சமுதாயத்திற்கும் பொருந்தக்கூடியவை. இவற்றைப் பின்பற்றுவதன் மூலம் ஒற்றுமை, சமத்துவம் மற்றும் மனிதநேயம் நிறைந்த சமூகத்தை உருவாக்க முடியும். சமூக நீதி என்பது ஒரு சட்டக்கொள்கை மட்டுமல்ல மனித வாழ்வின் அறநெறியாகும். சங்க இலக்கியங்கள் உலக சகோதரத்துவத்தை எடுத்துரைக்கின்றன் திருக்குறள் சமத்துவம் மற்றும் நீதியை வலியுறுத்துகிறது; சிலப்பதிகாரம் அநீதிக்கு எதிரான போராட்டத்தை எடுத்துக்காட்டுகிறது; மணிமேகலை மனிதநேயத்தையும் சமூக நலனையும் உயர்த்திப் பேசுகிறது. இந்நூல்கள் அனைத்தும் இணைந்து தமிழர் பண்பாட்டில் சமூக நீதி என்பது மனிதனை மையமாகக் கொண்ட உயரிய வாழ்வியல் தத்துவம் என்பதை வெளிப்படுத்துகின்றன. எனவே, இவ்விழுமியங்களை இன்றைய கல்வி, நிர்வாகம் மற்றும் சமூக வாழ்க்கையில்

நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமத்துவம், மனிதநேயம் மற்றும் நீதிநெறி நிறைந்த சமூகத்தை உருவாக்க முடியும்.

குறிப்புகள்

[1] இளங்கோ அடிகள். *சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம்.* தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை.
[2] இளம்பூரணர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* முல்லைநிலையம், சென்னை.
[3] உ. வே. சாமிநாதையர். *புறநானூறு (மூலமும் உரையும்).* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[4] உ. வே. சாமிநாதையர். *குறுந்தொகை (மூலமும் உரையும்).* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[5] ஔவை.சு.துரைசாமிபிள்ளை. *நற்றிணை.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018.
[6] ஔவையார். *ஆத்திசூடி, 'அறம் செய விரும்பு'.* தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக வெளியீடு.
[7] சமணமுனிவர்கள். *நாலடியார்.* தி.சு.பாலசுந்தரம் பிள்ளை (உ.ஆ)., சாரதா பதிப்பகம், சென்னை, 2017.
[8] சீத்தலைச் சாத்தனார். *மணிமேகலை.* தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை.
[9] தமிழண்ணல். *சங்க இலக்கிய ஒப்பீடு.* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
[10] வண.பிதா.தனிநாயகம் அடிகள். *தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.
[11] திருவள்ளுவர். *திருக்குறள்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2019.
[12] நல்லாதனார். *திரிகடுகம்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018.
[13] ஞா. மாணிக்கவாசகன். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்).* உமா பதிப்பகம், சென்னை.
[14] மு. வரதராசனார். *தமிழர் பண்பாடு.* பாரி நிலையம், சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Customs and Culture of the People of Mullainilam

M. Usha, PhD Tamil Research scholar, Yadav College,
Affiliated to Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-8561-2965
Dr. A. T. Paranthaman, Head & Assistant Professor, Department of Tamil, Yadav College,
Affiliated to Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India.
DOI: 10.5281/zenodo.21791036

Abstract

In ancient Tamil Nadu, the forests and forested regions were considered mullai land. Sangam literature is the best source to understand the lifestyles of ancient Tamils. These literatures describe in detail the life patterns, customs, and cultures of the people of Mullai land. Just as men were known for their bravery during the Sangam period, women were known for their learning, love, manners, and greatness. Only the Mullai shepherds used to prove their valor and then marry women, a practice described extensively in Mullai kalippa songs. This article aims to explore the importance of the Mullai land people's food habits, customs, pastoral professions, and household dignity.

Keywords: Sangam Period, Mullai Land, Customs, Culture.

References

[1] Ilangkumaran. *Purananooru*. Varthamanan Pathippagam.
[2] Ilampooranar. *Tholkappiyam Porulathikaram*. Mullai Nilaiyam.
[3] Saminathaiyar, U.Ve. *Kurunthogai (Mulamum Uraiyum)*. Kabir Achchukkoodam.
[4] Subramaniyan, Sa.Ve. *Mullaipattu*. Meiyappan Pathippagam.
[5] Jeyapal, Ira., Munaivar. *Agananooru (Mulamum Uraiyum)*. New Century Book House.
[6] Thakshanamoorthi, A. *Aingurunooru (Thoguppu -1)*. New Century Book House.
[7] Balasubramaniyam. *Narrinai (Mulamum Uraiyum)*. New Century Book House.
[8] Manickavasagan, Gna. *Paththuppattu (Mulamum Uraiyum)*. Uma Pathippagam.
[9] Manickavasagan, Gna. *Purananooru (Mulamum Uraiyum)*. Uma Pathippagam.
[10] Muthuchami, A. *Sangga Ilakkiyathil Ayar*. Dec. 1993.
[11] Venkatasami Nattar, Na.Mu. *Agananooru*. Kazhaga Veliyitu.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

முல்லைநில மக்களின் பழக்க வழக்கங்களும் பண்பாடும்

மு .உஷா, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி,
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றது, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-8561-2965
முனைவர் அ. த. பரந்தாமன், துறைத் தலைவர், தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி,
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றது, தமிழ்நாடு, இந்தியா.
DOI: 10.5281/zenodo.21791036

ஆய்வுச் சுருக்கம்

தொல் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட காடும் காடு சார்ந்த பகுதி முல்லை நிலமாகும். பண்டைத் தமிழர்களின் வாழ்க்கைமுறைகளை அறியச் சிறந்த சான்று சங்க இலக்கியங்களாகும். அவ்இலக்கியங்களில் முல்லை நில மக்களின் வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் ஆகியன பற்றிச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.சங்க காலத்தில் தமிழ் மக்களுள் ஆண்கள் வீரத்திற்குப் பெயர் பெற்றது போல், பெண்களும் கற்பிற்கும், அன்பிற்கும், பண்பிற்கும், பெருந்தன்மைக்கும் பெயர் பெற்றவர்களாக இருந்தனர். முல்லை நில ஆயர்கள் மட்டுமே ஏறுதழுவி வீரத்தை நிரூபித்துப் பெண்களை மணம் முடிக்கும் வழக்கம் முல்லைக்கலிப் பாடல்களில் மிக அதிகமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. முல்லை நில மக்களின் உணவு முறைகள், பழக்கவழக்கங்கள், மேய்த்தல் தொழில், மனையின் மாண்பு முதலிய வாழ்க்கை முறைகளின் முக்கியத்துவத்தை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

குறிப்புச் சொற்கள்: சங்க காலம், முல்லை நிலம், பழக்கவழக்கங்கள், பண்பாடு.

முன்னுரை

சங்க காலச் சமுதாயத்தில் மக்கள் பல குடிகளாகவும், பல பிரிவுகளாகவும், பல தொழில் செய்பவர்களாகவும் எவ்வித வேறுபாடுமின்றி ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். பசிப்பிணியும், பகையும் நீங்கி மக்கள் வளமாக வாழ்ந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலப்பகுப்பும், இந்நிலத்தின் தொழில் அடிப்படையில் குடிமுறைகளையும் அமைத்துக்கொண்டனர். பிறநாட்டினர் தமிழகம் வந்து வாணிபம் செய்யும் அளவிற்கு மக்கள் ஏற்றம் பெற்று விளங்கினர்.அம்மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்து நின்றது கடவுள் நம்பிக்கை. முருகன், திருமால், இந்திரன், வருணன் என நானிலத் தெய்வங்கள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன. மக்களிடம் சமயப் பூசலும், மத வேறுபாடும் இல்லாத காலம் சங்க காலம் ஆகும். சங்க காலத் தமிழகம் மூவேந்தர் ஆட்சியிலும், குறுநில மன்னர்களின் ஆளுகையிலும் இருந்தது. இவர்கள் ஒற்றுமையாக இருந்தது சில காலமே. அவ்வாறு ஒற்றுமையாக இருந்த காட்சியை உளமகிழப் புலவர்கள் பாராட்டியுள்ளனர். மன்னர்கள் ஆட்சியில் மக்கள் கவலையின்றித் தனித்து வாழ்ந்தனர். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் மக்கள் வாழ்வில் மலர்ந்தன.இக்காலத்தில் தமிழ் மொழியானது புலவர்களாலும், வேந்தர்களாலும், வள்ளல்களாலும் போற்றப்பெற்றது. இவர்களின் புலமைக்கு மதிப்பும், பிற மொழிச் செல்வாக்கும் இல்லாத காலம் சங்க காலம். இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் தான் சங்க இலக்கியங்கள் ஆகும். இவ்விலக்கியப் பாடல்கள் போன்று உலகில் வேறு மொழியில் தோன்றவில்லை எனலாம்.

சங்க இலக்கியங்களில் முல்லைத் திணைப் பாட்டுகள்

சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையில் காணலாகும் முல்லைத் திணைப் பாடல்கள் மொத்தம் 230 ஆகும். அவை நற்றிணை - 28 பாடல்கள், குறுந்தொகை - 45 பாடல்கள்,

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

ஐங்குறுநூறு - 100 பாடல்கள், கலித்தொகை - 17 பாடல்கள், அகநானூறு - 40 பாடல்கள். பத்துப்பாட்டு நூல்களில் முல்லைப்பாட்டு – 103 அடிகள் ஆகும்.

முல்லைத்திணையும் மக்களும்

இந்தியாவில் தமிழகம் தொன்மையும் பெருமையும் வாய்ந்தது. அத்தமிழகத்தில் மக்கள் இனக்குழுக்களாக திணைகளின் அடிப்படையில் பகுக்கப்பட்டிருந்தனர். அவற்றுள் காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை நிலமாகும். இங்கு வாழும் மக்கள் ஆயர், ஆய்ச்சியர் ஆவர். "ஆயர் என்பார் நிறை மேய்ப்போர் எனவும், காடு பற்றி வாழ்தலின் அந்நிலத்து மக்களாயினர் எனவும்" தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணர் உரை (ப. 20) கூறுகிறது. மேலும், பொதுவன், ஆயன் என்பன குலம் பற்றி வரும் எனவும் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் இளம்பூரணர் குறிப்பிடுகிறார். 'ஆயர்' என்னும் பெயர் ஆவினம் என்று பொருள்படும் 'ஆ' என்ற திராவிடச் சொல்லிலிருந்து தோன்றியது. 'ஆயன்' என்ற சொல் பசு என்ற பொருளையுடைய 'ஆ' என்பதிலிருந்து வந்தது என எளங்குளம் குஞ்ஞன் பிள்ளை குறிப்பிடுகிறார். இம்முல்லை நில மக்களை இடையர், இடைச்சியர், கோவலர், கோவிந்தர் எனப் பல பெயர்களிலும் அழைப்பர்.

'இடையர்' என்பதற்குச் செல்வம், வாழ்க்கை நிலை ஆகியவற்றில் தலையாயவராய் உள்ளவர்களுக்கும், நாள்தோறும் உழைத்து வயிறு வளர்க்கும் கடையோருக்கும் இடைப்பட்டவரே இடையர் என்றும்,குறிஞ்சி நிலத்திற்கும் மருத நிலத்திற்கும் இடைப்பட்ட முல்லை நிலத்தில் வாழ்ந்தவர்கள் இடையர் ஆவர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே (தொல். பொருள். அகத்திணையியல், நூ. 21)

என்று ஆயர்களைப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகின்றது. மனித வாழ்க்கை முறைகளை எடுத்துக் கூறும் தொல்காப்பியம், சங்க இலக்கியத்தால் எடுத்தியம்பப் பெற்றவர்கள் ஆயர் இனத்தவர் என்பது இதன் மூலம் தெரியவருகின்றது. ஆயம் என்றசொல்லுக்குப் 'பசுத்திரள்' என்று பொருள் கூறுகிறது செந்தமிழ் அகராதி (ப. 53). 'ஆயர்' என்றால் 'ஆயம்' என்றும், 'ஆயம்' என்ற சொல்லுக்குத் 'தாய்' என்பது பொருள். தாய்போல் பால் கொடுத்துக் காப்போர் என்று நந்தமண்டல சதகம் 1894 (ப. 69) விளக்கம் தருகின்றது.

காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலம் மேய்ச்சல் நிலம் என்பதால் அங்கு ஆடு மாடுகளே மிகுதியாக இருந்தன. எனவே, ஆவினை மேய்த்துக் காப்பவர் ஆயர் எனப்பட்டனர். இவர்கள் ஆநிரைகளை உயரிய பொருளாகப் போற்றினர். எனவே, தான் மன்னராட்சிக் காலத்தில் பகைநாட்டின் மீது போர் தொடுத்துச் சென்றதும் முதலாவதாகச் செல்வமாகக் கருதப்படும் ஆநிரைகளைக் கவர்ந்து வந்துள்ளனர். அவர்களின் பெருஞ்செல்வமான ஆநிரைகளை மேய்ப்பதும், அவற்றைக் காப்பதும், அவற்றிலிருந்து கிடைக்கும் பொருட்களை விற்று வாழ்வதும் ஆயர்களின் வாழ்க்கை முறையாகும். இதனை,

புனத்துளான் எந்தைக்குப் புகா உய்த்துக்கொடுப்பதோ?
இனத்துளான் என்னைக்குக் கலத்தொடு செல்வதோ?
திணைக்காலுள் யாய்விட்ட கன்று மேய்க்கிற்பதோ? (முல்லைக்கலி, பா. 8: 31-33),

என்ற முல்லைத் திணை பாடலின் தலைவியின் கூற்று மூலம் அறியலாம். இடையர் என்பதற்கு, இடை மடி என்பது மடி என்று பொருள் விளக்கம் தருகின்றது நந்தமண்டல சதகம் (ப. 68). "மடியில் உண்டான பாலால் ஜீவிப்பவர்" என்று விளக்கம் தருகின்றது. எனவே, மேற்காணும் சான்றுகளின் மூலம் அவர்கள் வாழ்ந்த இடத்தாலும், பசுவினாலும் பெற்ற பெயராகும் என்பதை உணர முடிகிறது.

முல்லை நில மக்கள் 'கோவலர்' எனவும் அழைக்கப்பட்டனர். கோவலர் என்பதற்கு "கோவர் - கோவலர் - பசுவையுடையவர்" (ப. 70) என்று நந்தமண்டல சதகம் கூறுகிறது. இவர்கள் ஆடுமாடுகளை ஓட்டிச் செல்லும்போது கையில் கோல் வைத்திருப்பர். இக்கோல்கள்

மேய்ச்சல் பகுதியை நோக்கி ஆடுமாடுகளை ஓட்டிச் செல்வதற்கும், அவை ஒன்றோடு ஒன்று முட்டிக்கொள்ளும்போது விலக்குவதற்கும் பயன்படும். இதனை,

ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பி (நெடுநல்வாடை, பா. 3-4)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மேலும், ஆடுமாடுகளுக்கு வேண்டிய இலைத்தழைகளைப் பெறக் கிளைகளை வளைத்து ஒடிப்பதற்குக் கோல் உதவும் என்கிறார் டாக்டர் அ. முத்துசாமி. (சங்க இலக்கியத்தில் ஆயர், ப. 21) மேற்கூறிய சான்றுகளின் மூலம் கோவலர் என்னும் பெயர் முல்லைநில மக்கள் தங்களின் ஆநிரைகளைக் காக்கப் பயன்படும் கோலால் பெற்ற பெயராகும் என்பதை உணரமுடிகிறது. ஆயர்கள் தொன்மையானவர்கள். இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள். அவர்கள் வாழ்ந்து வரும் இடத்திற்கு ஏற்பவும், வளர்ந்துவந்த கால்நடைகளுக்கு ஏற்பவும் பெயர் பெறுகின்றனர். இவர்கள் பழமையான தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்ற நூல்களில் இடம்பெற்றுள்ள சிறப்பினைப் பெற்றவர்கள் என்பதை அறிய முடிகிறது.

முல்லை நிலத்து அறிஞர்களும், ஆட்சியாளர்களும்

சங்க கால ஆயர்குல அறிஞர்கள் நுண்மான் நுழைபுலம் மிக்கவர்களாகத் திகழ்ந்தனர் என்பதை அவர்தம் பாடல்களைக் கொண்டும், ஏனைய அறிஞர்கள் அவர்களைப் புகழ்ந்து பாடியுள்ள பாடல்களைக் கொண்டும் துணிந்து கூற முடிகிறது. அண்டர் மகன் குறுவழுதியார், இடைக்காடனார், இடையன் சேந்தன் கொற்றனார், இடையன் நெடுங்கீரனார், இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார், மிளைவேள் தித்தன், பாரி மகளிர் முதலியோர் ஆயர்குல அறிஞர் பெருமக்களாவர். இவர்களுள் சிலர் அகத்துறைப் பாடல்களையும், புறத்துறைப் பாடல்களையும் பாடியுள்ளனர். சிலர் அகத்துறைப் பாடல்களை மட்டுமே பாடியுள்ளனர். அ.முத்துசாமி என்பவர் ஆயிரத்து தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் (ப. 12) என்ற நூலில் கூறிய செய்திகளைப் பதிவு செய்துள்ளனர். எனவே, ஆயர்கள் ஆடு மாடுகளை ஓம்பி வாழ்ந்தவர்கள் மட்டுமல்லாமல், அவர்கள் இயற்றிய பாடல்கள் மூலம் இலக்கியப் புலமை பெற்றவர்களாகவும் திகழ்ந்தனர்.

சங்க காலத்தில் தமிழகத்தில் செங்கோலோச்சிய பெருமைக்குரியவர்களுள் ஆயர்குலத்தவரும் அடங்குவர். அழுந்தூர் வேள், ஆய் அண்டிரன், ஆய் எயினன், இருங்கோவேள், எருமையூரன், எவ்வி, எழினி, கழுவுள்திதியன், நன்னன் ஆய், நன்னன் வேண்மான், நாங்கூர் வேள், நெடுவேளாவி, பாரி, பொருநன், வாட்டாற்று எழினியாதன், வையாவிக் கோப்பெரும்பேகன் முதலியோர் ஆயர்குல ஆட்சியாளர்களாவர். இவர்களுள் பலர் அரசர்களாகவும், ஊர்த் தலைவர்களாகவும் விளங்கினர் என்பதை டாக்டர். அ. முத்துச்சாமி (ஆயிரத்து தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், ப. 49) என்ற நூல் செய்தியைப் பதிவு செய்திருக்கிறார். மேற்கூறிய சான்றுகளின் மூலம் ஆயர்களில் பெரும்பாலோர் ஆட்சியாளர்கள் தோன்றியிருப்பதிலிருந்துஅவர்களின் அறிவுச் சான்றாண்மையும் புலப்படுகிறது.

முல்லை நில மக்களின் உணவு, உடை, இருப்பிடம்

முல்லை நில மக்களின்ஆடு, மாடுகளைக் கொண்டு செல்வம் படைத்தவர்களாக வாழ்ந்தனர். ஆயினும் அவர்கள் எளிமையான உணவையே உட்கொண்டனர். நண்டினது மிகச்சிறிய குஞ்சுகளைப் போன்ற தினையரிசியைக் கொண்டு ஆக்கிய சோற்றைப் பாலுடன் உண்டு, விருந்தினருக்கும் அளித்தனர்.இதனை,

மடிவாய்க் கோவலர் குடிவயின் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பன்ன
பசுந்தினை மூரல் பாலோடும் பெறுகுவீர் (பெரும்பாணாற்றுப்படை, பா. 166-168)

என்ற பாடலால் அறியலாம். "ஆயர்நன்கு விளைந்த முற்றிய நெல்லை அரிசியாக்கி ஆம்பற் பூவோடு சேர்த்துச் சமைத்து உண்டனர்" என அகநானூறு (பா 78:6 -18) கூறிகிறது. மேலும்,

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

முல்லை நில மக்கள் செம்மறியாட்டின் பழுப்பு நிறம் வாய்ந்த முதிர்ந்த தயிரில் வரகரிசியையும் ஈயலையும் பெய்து சமைத்த புளிச்சுவைமிக்க சோற்றில் வெண்ணெயை இட்டு உண்டனர் என்று அகநானூறு (பா. 394: 2-6) கூறுகிறது. ஆயர்கள் பாலில் அரிசியைப் பெய்து பாற்சோறு ஆக்கி உண்டனர் என மலைபடுகடாம் (பா. 417) கூறுகிறது. முல்லை நில மக்களின் இருப்பிடத்தை அடைந்தவர்களுக்கு சங்கு போன்ற வெண்மையான பசுக்களின் பாலைத் விருந்தினர்களை ஆயமகளிர்தந்து உபசரிப்பர். அதனை அருந்தி வழிநடையின் வருத்தம் தீர்ந்து புதிய பலத்தைப் பெறுவீர்கள் என்று ஆயர்கள் உபசரித்தை,

வளைஆன் தீம்பால் மிளைசூழ் கோவலர்
வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலின்
பலம்பெறு நசையொடு பதிவயின் தீர்ந்தநும்
புலம்புசேண் அகலப் புதுவீர் ஆகுவீர் (மலைபடுகடாம், பா. 408-412)

என்ற பாடலால் முல்லை நில மக்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்கள் என்பதைத் தெளிய முடிகிறது. இதன் மூலம் முல்லை நில மக்களின் வாழ்க்கை முறை சீரும் சிறப்புமாக இருந்ததை அவர்களின் உணவுமுறைகளை வைத்தும், அவர்கள் விருந்தினர்களின் பசியைப் போக்கியதோடு மட்டுமில்லாமல் உடல் ஆரோக்கியத்திற்கரிய உணவைக் கொடுத்து உபசரித்த அவர்களின் உயர்ந்த மாண்பினையும் உணர முடிகிறது.

முல்லை நிலக் கடவுள்

முல்லை நிலக் கடவுள் மாயோன் ஆவார். மாயோன் என்றழைக்கப்படக்கூடிய திருமாலை முல்லை நில ஆயர்கள் வழிபட்டனர். மாயோனைக் குறிக்க வழங்கும் திருப்பெயர்களுள் ஒன்றாகிய 'நெடியோன்' என்னும் பெயர் குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகனுக்கும் வழங்கப்பெற்றுள்ளது என்று அகநானூறு (பா. 149: 16) கூறுகிறது. 'மாயோன்' என்னும் சொல்லுக்குக் கருநிறமுடையவன் என்பது பொருள் (ஆ.சிங்கார வேலு முதலியார் அபிதான சிந்தாமணி, ப. 3168). முல்லை நில ஆயர்கள் செழிப்பு மிக்க மரஞ்செடிகொடிகள் நிறைந்த காட்டின் செறிவான கருமையை மாயோன் என நினைத்துப் போற்றி வணங்கினர் என டாக்டர் ஆ.முத்துசாமி (மு.கூ.நூ) கூறியுள்ளார். ஆயர்கள் காமனை வழிபட்டதாகக் கலித்தொகைப் பாடல் (109: 19-20) புலப்படுத்துகின்றது. மேலும், எருமைக் கொம்பை நட்டு அதைத் தெய்வமாகக் கருதி வழிபட்டதாகவும் கலித்தொகை (பா. 114: 13) குறிப்பிடுகிறது. ஆயர்குடியில் பிறந்த முதுமகளாகிய மாதரி, இயக்கி என்னும் பெண் தெய்வத்திற்குப் பாற்சோறு படைத்து வணங்கியதாகச் சிலப்பதிகாரம் (பா. 15: 115-118) கூறுகிறது. சிலம்பில் மாதிரி என்ற பெண் தான் வளர்க்கும் கால்நடைகளைப் பாதுகாக்கவும், தீங்கு வராமல் இருக்கவும் மதுரைக்காணடத்தில் கண்ணபிரானின் புகழை ஆய்ச்சியர் குரவையாடி வழிபாடு செய்ததைக் காணமுடிகிறது.

முல்லைநில மக்கள் தெய்வமான திருமாலை வழிபாடு செய்வதையும், குரவைக் கூத்தாடித் திருமாலுக்கு வணக்கம் செலுத்துவதையும் கலித்தொகை சுட்டிக்காட்டுகிறது. இதனை,

"தொல்கதிர்த்திரிகியாற்பரவுவதும்" (கலி., பா. 104-78)
"பாடுஇமிழ் பரப்பகத்து அரவணை அசைஇய
ஆடுகோள் நேமியற் பரவுதும்" (கலி., பா. 105: 71-72)

என்ற பாடல் வரி விளக்குகிறது. மேலும், முல்லை நிலப் பெண்கள் தலைவன் வருவான் என்று ஆற்றியிருக்கும் கற்புத் தன்மை கடவுள் தன்மை வாய்ந்தது என்று கிடங்கிற் குலபதி நக்கண்ணன் என்ற புலவர்,

கடவுட் கற்பின் அவன் எதிர் பேணி
மடவை மன்ற நீ எனக் கடவுபு
துனியல் வாழி தோழி சான்றோர்
புகழு முன்னர் நாணுப

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

பழி யாங்கு ஏல்பவோ காணுங் காலே"

என்ற குறுந்தொகைப் பாடலில் (252) கூறியுள்ளார். இங்குத் தலைவியின் கற்பு கடவுள் தன்மையுடையது என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. எனவே முல்லைநில மக்கள் கற்பிலும், பக்தியிலும் அவர்கள் குலதெய்வ வழிபாட்டிலும் மிகுந்தஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது.

முல்லைநில மக்களின் தொழில்கள்

தொழில் என்பது ஒருவனுடைய வாழ்க்கைக்கும், வாழ்வாதாரத்திற்கும், மனநிறைவையும் தரக்கூடிய ஒரு செயல் ஆகும். மனித முன்னேற்றத்திற்கு இன்றியமையாத காரணிகளுள் ஒன்று தொழில் ஆகும். அத்தொழில் மனிதனுக்கு மனித சமுதாய முன்னேற்றத்திற்கும் ஊன்று கோலாக அமைகிறது. ஒருவன் செய்யும் தொழிலைவைத்துதான் அவனையும் அவன் சமுகத்தையும் உறுதி செய்யப்படுகிறது. அவ்வகையில் முல்லைநில மக்களின் முதன்மைத் தொழில் கால்நடைகளை மேய்த்துக் காப்பது ஆகும். சங்க இலக்கியத்தில் காடும் காடு சார்ந்த பகுதி முல்லை நிலமாகும். தலைவன், தலைவி காத்திருத்தலை உரிப்பொருளாகக் கொண்ட இம்மக்களின் முதன்மைத் தொழில் மேய்ச்சல் ஆகும். கால்நடை வளர்ப்பில் கைதேர்ந்த முல்லைநில மக்கள் அதில் கிடைக்கும் பொருட்களை வைத்துத் தன் வாழ்க்கையை நடத்தினர். மேய்ச்சல் நிலங்களையும் தன் இருப்பிடத்திற்கு ஏற்றாற் போல் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அவ்வாறு தேர்ந்தெடுத்த வாழ்க்கை முறையினை,

சிலுகாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
வறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
இன்னே வருகுவர் தாயர் என்போள்

என்றமுல்லைப்பாட்டு (12-16) பாடல் வரிகள் கோவலர் ஆநிரைகளை மேய்த்து வீடு திரும்பும் காட்சிகளைக் குறிப்பிடுகிறது. ஆநிரைகளை மேய்த்தலின் போது, இளங் கன்றுகளைத் தாயிடமிருந்து பிரித்துத் தனியே வீட்டில் கட்டிவிட்டு, அதனை மேய ஓட்டுவர் என்பதை அகநானூறு (293) பாடல் மூலம் அறியலாம். ஆயர்கள் கையிலுள்ள நீண்டகோல், கோடாரியால் இலைத்தழைகளை ஒடித்து ஆடுகளுக்கு உண்ணக்கொடுப்பர் ஆடுமாடுகள் நீர் அருந்த குந்தாலியால் நீர் ஊற்றுகளைத் தோண்டுதலும் உண்டு. இதனை,

வியன் சுரைப்படுமணி இனநிரை உன்னிய
கோவலர் விடுநிலம் உழைத்த கலுழ்கண்கூவல்

என்ற அகநானூற்றுப் பாடல் கூறுவது (321: 6-8) சிறந்த சான்றாகும். மேய்த்தலின் போது காலையில் சென்று மாலையில் வீடுதிரும்பும் ஆயர்கள் ஆநிரைகள் மேயும் இடத்திற்கு பால்கறக்கும் கலத்தினை எடுத்துச்சென்றார்கள் என்பதை, "கலத்தொடுயாஞ்அக் செல்வும் நாடிப் புலந்தும்" என்ற கலித்தொகைப் பாடலில் (116: 14-15) பதிவு செய்துள்ளது. ஆயர்கள் தன் வீட்டிலிருந்து விடியற்காலையில் பல்வகை இடத்திற்கு ஆநிரைகளைக் கன்றுடன் ஓட்டிச் சென்று மேய்த்தலை, ஈடுபடுத்தியதை,

பாங்கரும் பாட்டம்கால் கன்றோடு
செல்வேம் யாம் (கலித்தொகை, பா. 116:1)

எனக் கலித்தொகை பாடலடி சுட்டிக்காட்டுகிறது. ஆயமகள், பசுவிலிருந்து கிடைத்தபாலில் தயிர் கடைந்து வெண்ணெய் எடுத்த செய்தியை, "பல் ஊழ் தயிர் கடையத் தா அயவுள்ளி மேல்'' என்ற முல்லைக்கலி (106: 31) பாடல் உரைக்கிறது. ஆயமகள் மோர் எடுத்து, அதை அருகிலுள்ளஊர்களுக்கு விற்ற செய்தியை,\

அளைமாறி வரும்
செல்வம் எம்கேள்வன் தருமோ?

என்ற கலித்தொகைப்பாடல் (108: 4-5) விளக்குகிறது. "அளைமாறிப் பெயர்தருவாய்அறிதியோ" என்ற கலித்தொகைப் பாடல் (108 : 26) சுட்டுகிறது. முல்லை நில மக்கள் கால்நடைகளை

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

வளர்த்து அதிலிருந்து கிடைக்கும் பொருள்களை வைத்து மிகவும் பொன்பொருள் சேர்க்காமல் பசுங்கன்றுகளை வாங்கி வளர்த்தனர். இவர்களின் வாழ்க்கை சிறப்பாக இருந்த முறையினை,

ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடு இல்லை (அடைக்கலக் காதை வரி, 130-131)

என்று சிலப்பதிகாரப் பாயிர வரியில் உணர்த்துகிறது. முல்லை நில மக்கள் சிறுதானியங்களையும் பயிரிட்டனர். இவர்களின் நிலம் வான்நோக்கும் விளை நிலமாகும். கார்காலத்தில் மழை பெய்தவுடன் உழுது வரகு, தினை, எள், அவரை முதலிய பயிர்களை அவர்கள் பயிரிட்டனர். இவர்கள் தம் மனைக்கு அருகிலேயேபிறர் செல்வதற்கு அரிய இடத்திலேயே பயிர் செய்ததை முன்பு கூறிய கலித்தொகைப் பாடல் (116:1) தெளிவுபடுத்துகிறது. மேற்கூறிய சான்றுகள் வழி முல்லை நில மக்கள் மேய்ச்சல் தொழிலே மட்டுமில்லாமல் தன் இருப்பிடத்திற்கு ஏற்றாற்போல் உழவுத்தொழிலிலும் ஈடுபட்டதை அறிய முடிகிறது.

பழக்கவழக்கங்களும் பண்பாடும்

ஆயர்கள் தான் வாழும் வாழ்க்கை முறைக்கு ஏற்ப பழக்கவழக்கங்களைக் கடைபிடித்தனர். முல்லைநில மக்கள் அணிந்துள்ள ஆடை ஒற்றை ஆடையே என்று பெரும்பாணாற்றுப்படை(175) கூறுகிறது. இந்த ஆடை அழுக்கு அடைந்து காணப்படுமாம். கரிய உடம்பையுடையவர்கள் செந்நிறம் ஊட்டப்பெற்ற துவர் ஆடை அணிந்திருப்பர். இதனை, "காயாம்பூஞ் சண்ணிக் கருந்துவர் ஆடையை" எனக் கலித்தொகைப்பாடல் (108:4-5) சுட்டுகிறது. ஆயர்கள் நிலத்தைப் பண்படுத்த கலப்பை பயன்படுத்தியதைப் பெரும்பாணாற்றுப்படை (188) பாடல் வரி சுட்டுகிறது. மேலும், பொருட்களை வண்டியில் பூட்டிச் செல்வதும், தானியங்களைக் குதிர்களில் போட்டுப் பாதுகாத்தாகப் பெரும்பாணாற்றுப்படை (176) விளக்குகிறது. முல்லைநில மக்கள் தானியங்களையும், மலர்களையும், வேறு பிற பொருட்களையும் எடுத்துச் செல்வதற்குப் பனை ஓலையைக் கொண்டும் பனை மட்டையிலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட மட்டையைக் கொண்டும் செய்யப்பட்ட பெட்டிகளையும் வரகைத் திரிப்பதற்குத் திரிகையையும் பயன்படுத்தினர். முல்லை நிலத்தில் வாழும் ஆய்ச்சியர்கள் ஒவ்வொருக்கும் இருள்புலந்த வைகறைப் பொழுதில் தயிர் கடைதல் நடைமுறையில் இருந்துள்ளது. தன் பழமை மாறாமல் வைகறைப் பொழுதில் ஆய்ச்சியர் கயிரும், மோர் மத்தும் கொண்டு தயிர் கடைவர். அவர்கள் தயிர் கடையும் சிறப்பினை, "பால் கடை நுரையின் பரூஉ மதிப்பு" அகநானூறுப் பாடல் (224) கூறுகிறது. ஆயர்கள் வாழும் பகுதியில் தீய நிமித்தங்கள் தோன்றினால் அத்துன்பங்களைப் போக்க ஆய மகளிர்கள் தம் குலதெய்வமாகிய கண்ணனை வேண்டிக் குரவைக் கூத்துஆடுகின்ற செய்தியைச் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைப்பாடல் வரி சுட்டுகிறது. மேலும், ஆய்ச்சியர் குரவையில் பங்குபெறும் ஏழுவகையான பெண்கள் ஏறுதழுவலின் போது தமக்கென ஒவ்வொரு ஏற்றினைக் குறிப்பிட்டு, அந்தஏழு ஏறுகளைத் தன் மணவினைப் போட்டிக்குவார்த்தனர் என்றும் ஆய்ச்சியர் குரவைப் பாடல், "தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார் எழுவர் இளங்கோதை யார்" சிலம்பு – ஆய்ச்சியர் குரவை விளக்கம் கூறுகிறது. வெற்றி பெற்ற வீரனைத் தான் மணக்க வேண்டும் எனவும், தனக்கு ஏற்ற துணைவனாக இருக்க வேண்டும் என்றும், அவளது வீரம் நிறைந்த இளைஞர்களையே திருமணம் செய்வோம் என்றும் உறுதியாக இருந்தனர். வீரம் இல்லாத இளைஞனை ஆயர்குலப் பெண்கள் மறுமையுலும் கூட விரும்பமாட்டாள் என்பதை, "கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள்" என கலித்தொகை (பா. 63-64) பாடலில் அறிய முடிகிறது.

முல்லை நில மக்கள் ஆநிரைகளை மேய்ப்பதற்காகக் காலையில் புறப்பட்டுச் செல்வதும், மாலையில் வீடு திரும்புவதும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். மேய்த்தலின் போது தங்களின் களைப்பு அறியாமல் இருக்க, அழகிய இசைக் கருவியாகிய புல்லாங்குழலில்

இசைப்பதைத் "கொன்றை அம் தீம் குழல் மன்று தோறு இயம்ப" என்று நற்றிணைப் பாடல் (364) கூறுகிறது. மேலும், முல்லை நிலத் தலைவன், ஆயர்கள் வளர்க்கும் ஆநிரைகளை கொடிய விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள பெரிய மரங்களுக்கும் நெருப்பிட்டு இரவு முழுவதும் எரியச் செய்து ஆநிரைகளைக் காப்பாற்றியதையும், கார்காலத்தில் காட்டில் தங்கியதையும்,

கொல்லைக் கோவலர் எல்லிய மாட்டிய
பெருமர ஒடியல் போல...
நனி கடல் முகந்து செறிதக இருளிக்
கனைபெயல் பொழிந்து கடுங்குரல் பயிற்றிக் கார் செய்து (நற்றிணை, பா. 289)

எனும் நற்றிணைப் பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. மேற்கூறிய செய்திகள் மூலம் ஏறுதழுவல் என்பது சங்க காலம் முதல் இக்காலம் வரை இன்று வரை ஆயர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றாகத் தெரிகிறது. மேலும் ஆநிரைகளைக் காப்பதும், மேய்த்தலின் போது இசையின் பயனை அனுபவிப்பவர்களாகவும் விளங்கினர் என்பதை அறிய முடிகிறது. முல்லை நில மக்கள் தன்னிடமுள்ள பால் பொருட்களை மற்ற நில மக்களுக்கு விற்று அவர்களிடமிருந்து பண்ட மாற்று முறையில் அரிசியைப் பெற்று, அவ்வரிசியை மரத்திரிகையில் சுழற்றவதை அகநானூற்றுப் பாடல் எடுத்துக் கூறுகிறது. மேலும், அவர்களின் காவல் தெய்வமான மாயோனைப் பெண்கள் நெல்லையும் முல்லை மலரையும் தூவி கைகளைக் கூப்பி வழிபட்டனர். ஆய்ச்சியர்களின் கணவன்மார்கள் போர் அல்லது பொருள் காரணமாகப் பிரிந்து சென்றபோது அவர்கள் வரவை எதிர்பார்த்து நன்நிமித்தம் (விரிச்சி) கேட்கும் வழக்கமும் இருந்தது. நன்நிமித்தம் கேட்டலின் மூலம் தலைவியின் வருத்தத்தைத் தோழிகள் போக்கினர் என்பதை,

இன்னே வருகுவர்தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் (முல்லைப்பாட்டு, பா. 10 - 16)

என்ற முல்லைப்பாட்டு உணர்த்துகிறது. இவ்வாறு முல்லை நிலத்தில் 'விரிச்சி கேட்டல்' என்ற நம்பிக்கையும் தலைவியின் காத்திருப்பு கலந்த மக்களின் பண்பாட்டு வழக்கத்தையும் காண முடிகிறது. ஆயர்குலம் கைகளில் இளஞ்சூட்டிகளைஏந்தியவாறு மதிய உணவாகக் கூழையும் எடுத்துமேய்ச்சல் நிலத்திற்குச் சென்று திரும்பப் பாலுடன்ஊர் திரும்புவதையும் ஆடு மேய்க்கின்ற ஆயன் தலையில்சூடிய பசுமையான முகைகள் மாலையில் மலராகப்பூத்துவிடுகின்ற செய்தியையும்,

அலரே வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் பசு முகையே (குறுந்தொகை, பா. 221)

என்று குறுந்தொகை விளக்கம் கூறுகிறது. இதன் மூலம் முல்லை நில மக்கள் கூழ் உணவினை உண்ணும்போது குடலில் கலந்துள்ள கொழுப்பினைத் குறைக்கவும், உடல் எடையைச் சீராக வைத்துக்கொள்ளவும், உடலை ஆரோக்கியமாகவும் வைத்துக்கொள்ள முடியும் என்று உணர்ந்த மக்கள் அன்றே பசிக்காக மட்டும் உணவினை உண்ணாமல் அவரவர் நிலையை அறிந்து அதற்கு ஏற்றாற்போல் உண்டு ஆரோக்கியமாக வாழ்ந்த வழக்கத்தை அறிய முடிகிறது. முல்லைநிலப் பெண்கள் அனைவரும் முல்லைப் பூக்கள் மலர்ந்து விளங்கும் சோலையில் விளையாடிப் புகுந்தனர் என்ற செய்தியை,

நாறிரும் கூந்தல் பொதுமகளிர் எல்லாரும்
முல்லையம் தண்பொழில் புக்கார் பொதுவரோடு (கலித்தொகை, பா. 101)

என்று கலித்தொகைப் பாடல் தெளிவுபடுத்துகிறது. இதன் மூலம் முல்லை நிலப் பெண்கள் தன் பொழுது போக்கிற்காக, முல்லை மலர்கள் நிறைந்த சோலைகளைப் பயன்படுத்தினர் என்பதை உணர முடிகிறது. எனவே, காடும் காடு சார்ந்த முல்லை நில மக்கள் ஆடு மாடுகளை மேய்த்தும் பால், மோர், உணவுகளை உண்டு வாழ்ந்ததும் இவர்களின் வழக்கமாக இருந்ததை அறிய முடிகிறது. மேலும் திருமாலை வழிபடுவதும் மேய்ச்சலில் யாழ் இசைப்பதும் வழக்கமாக இருந்த இவர்களின் வாழ்க்கை முறை சிறப்பாக இருந்ததை அறியலாம்.

முல்லை நில மக்களின் மனை மாண்பு

முல்லை நில மக்கள் இல்லறச் சிறப்பானது காடும் காடு சார்ந்த செம்புல நிலத்தில் அன்பு, ஒழுக்கம், காத்திருத்தல், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் சிறந்தவர்களாக விளங்குகின்றனர். ஆயர்கள் ஏறுதழுவுதல் மூலம் வீரத்தை நிரூபித்து பெண்களை மணமுடித்ததையும், தலைவன் போர் அல்லது பொருள் தேடலினால் பிரிவின் போது தலைவி காத்திருத்தல் உணர்த்தும் கற்பு மனத்தை முதன்மையாகக் கொண்டிருந்தனர். வினை முடிந்து மீண்ட தலைவனை, தலைவி எதிர்பார்த்து அவனை வரவேற்றதையும், மகிழ்வித்த செய்தியும் மீண்டும் தலைவன் பாகனிடம் உவக்கிறான். இச்செய்தி,

மறத்தற்கு அரிதால் பாக! ...
அறத்தொடு பொருந்திய வையத்துத் தொழில் கொளீஇய
மடமா அரிவை மகிழ்ந்து அயர் நிலையே (நற்றிணை, பா. 42)

என்று நற்றிணைப் பாடல் உணர்த்துகிறது. இப்பாடலில் தலைவன் பாகனிடம், பல நாள்கள் நீர் இன்மையால் வறண்டுள்ள நிலத்தில் மழை பெய்ததால் பள்ளங்களில் நீர் நிறைந்ததும் உயிரினங்கள் மகிழ்ச்சியடைவதைப் போல் தலைவியும் என்னையும் வரவேற்றாள் என்கிறான். இதிலிருந்து தலைவியின் மகிழ்ச்சி நிறைந்த உள்ளம் வெளிப்படுகிறது. மேலும், தலைவன் வினைமுடித்து வருவதாகக் கூறிய கார்காலம் வந்துவிட்டது, தலைவன் வராததால் தலைவி வருந்துகிறாள். தனிமைத் துயரில் வருந்தும் தலைவி, தலைவன் ஆற்றியிரு என கற்பித்துச் சென்ற சொல்லைக் கடப்பது கற்பிற்கு இழுக்காகும் என நினைத்து ஆற்றியிருக்கிறாள்.

இன்துயில் வதியுநற் காணாள், துயர் உழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் (முல்லைப்பாட்டு, பா. 80-82)

என்ற முல்லைப்பாட்டு அடிகள் தலைவிகள் நெஞ்சை ஆற்றிவித்து இருந்தமையைப் புலப்படுத்துகின்றன.

தலைவனைப் பிரிந்த தலைவி வருந்தும்போது அவளைத் தோழி ஆறுதல் படுத்துகிறாள். இயற்கை பருவ காலத்தை மறந்து மழைபொழிவதால் கொன்றை காந்தள் முதலான பல மலர்கள் அறிவுற்று மலர்ந்தன. ஆதலால் இவற்றை கார்காலம் என நினைத்து வருந்தாதே என்று இயற்கையைப் பழித்துத் தலைவியைத் தேற்றுவிக்கும் பண்பு கூறப்படுகிறது. பொருள் தேடிப் பிரிந்து மீண்டு வந்த தலைவன் தோழியிடம் ஏன் தலைவியைப் பலமுறையும் கவனித்துக் கொண்டதாக தோழியிடம் கூறியதற்கு அதற்குத் தோழி வள்ளல் நள்ளியின் காட்டில் உள்ள பசு நெய் வெண்ணைய் சோறு ஏழு கலங்களில் கொடுத்தாலும் தலைவியின் அன்பிற்கு ஈடாகாது எனத் தலைவன் மீது தலைவி கொண்ட அன்பு உயர்வானது என விவரிக்கிறாள் இதனை "திண்தேர் நள்ளி கானத்து அண்டர்" என்ற குறுந்தொகைப் பாடல் (210) விளக்குகிறது. முதையல் நிலத்தில் போர் முடிந்த பின் தலைவியைக் காணும் ஆவலுடன் இருக்கும் தலைவனிடம் தலைவியின் ஊரில் ஆண்மானும், பெண்மானும் மகிழ்ச்சியாக உள்ளது என்றும் தலைவி உனக்கு வருந்தி வாடித் உன்னை மகிழ்விப்பாள் என்று பாகன்கூற தலைவன் மகிழ்ந்த காட்சியை "விதையர் கொன்ற முதையல் பூழி" என்று நற்றிணைப்பாடல் (121) அடி எடுத்துக் காட்டுகிறது. தலைவனை எதிர்பார்த்து தலைவி காத்திருப்பதும், தலைவியின் காதலும் ஆசையுடன் விரைவாக தலைவன் வருவதுமாகிய காட்சியிகள்

இருவரின் உள்ளன்பை வெளிப்படுத்துகிறது. தலைவன், அன்பிற்குரிய தலைவியைத் தழுவி பாணர்களின் இசையின் பயனோடு கூடி காதல் இன்பத்தில் வாழ்வதைக் ஐங்குறுநூறு செவிலிப்பத்து பாடலில் செவிலி வாயிலாகக் கூறப்படுகிறது. தலைவன், தலைவி, புதல்வன் மூவரும் படுத்திருந்த காட்சி இனிமையாகவும் அவ்வன்பு பெரிய இடத்தினை உடைய உலகம் முழுதும் ஒப்பாகும் என்று தலைவியின் இல்லற வாழ்வைப் பார்த்து செவிலி மகிழ்ந்ததை பல ஐங்குறுநூறு பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. மேற்கண்ட செய்திகள் வழி தலைவன் தலைவியின் இல்லற மாண்பு சிறப்புடன் இருந்தது என்பதை அறியமுடிகிறது.

முடிவுரை

சங்க இலக்கியத்தில் முல்லை நில மக்கள் அனைவரும் வாழும் இடத்திற்கேற்ப சிறந்து விளங்குகின்றனர். அவர்கள் வளர்த்துவரும் ஆநிரைகளுக்கு ஏற்ப பெயர் பெற்றும் விளக்குகின்றனர். மேலும், இயற்கையோடு இணைந்து வாழ்கின்றனர். கார்காலமும் அவர்களுக்கு ஏற்புடையதாக அமைகிறது. அவர்களின் வாழ்க்கையில் ஏறுதழுவல் முக்கிய இடம் வகிக்கிறது. ஏறுதழுவுதல் மூலம் வெற்றி பெற்று மணம் முடித்து இனிய வாழ்க்கை வாழ்ந்ததையும் காணமுடிகிறது. முல்லை நிலத்தில் காணப்படும் பிரிவுத்துயரம் தலைவனுக்காகத் தலைவி ஆற்றியிருக்கும் உயர்ந்த பண்பையும், வருத்தம் போக்க தோழி விரிச்சி கேட்கும் முறையும் அவர்களின் பழக்கத்தில் இருந்ததை அறிய முடிகிறது. ஆநிரைகளை மேய்த்து, அவற்றின் கிடைக்கும் பொருளாதாரத்தை வைத்து வளமாக வாழ்ந்ததை அவர்களின் பழக்கவழக்கங்கள் மூலம் புலனாகிறது. இவற்றின் மூலம் முல்லை நில மக்கள் அவர்களின் நெறியிலிருந்து மாறாமல் வாழ்ந்து காட்டுவதும், அவர்களின் பழக்கவழக்கங்களின் மூலம் மற்ற நிலத்தில் காணப்படாத அளவுக்கு உயர்வாக வாழ்ந்தார்கள் என்பதையும் இக்கட்டுரை நமக்கு உணர்த்துகிறது.

குறிப்புகள்

[1] இளங்குமரன். *புறநானூறு*.வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
[2] இளம்பூரணர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. முல்லைநிலையம், சென்னை.
[3] உ. வே. சாமிநாதய்யர். *குறுந்தொகை (மூலமும் உரையும்)*. கபீர் அச்சுக்கூடம், சென்னை.
[4] ச.வே .சுப்பிரமணியன் .*முல்லைப்பாட்டு*. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
[5] முனைவர் இரா. செயபால். *அகநானூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[6] அ. தட்சணாமூர்த்தி. *ஐங்குறுநூறு (தொகுப்பு -1)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[7] பாலசுப்ரமணியம். *நற்றிணை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[8] ஞா. மாணிக்கவாசகன். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)*. உமா பதிப்பகம், சென்னை.
[9] ஞா. மாணிக்கவாசகன். *புறநானூறு (மூலமும் உரையும்)*. உமா பதிப்பகம், சென்னை.
[10] அ. முத்துச்சாமி. *சங்க இலக்கியத்தில் ஆயர்*. சென்னை, திசம்பர்.1993 -
[11] ந.மு .வேங்கடசாமி நாட்டார். *அகநானூறு*. கழக வெளியீடு, சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Antiquity of Tamil Language

Dr. M. Kanichelvi, Assistant Professor, Tamil Department (Self-funded),
Arul Ananda College (Autonomous), Karumathur. 625514
ORCiD: https://orcid.org/0000-0003-2904-7518
DOI: 10.5281/zenodo.21791309

Abstract

Literature serves as a faithful reflection of human life, portraying the experiences, values, emotions, and social realities of people in their true form. Classical Tamil literature, in particular, functions as a cultural mirror that reveals the distinctive way of life, ethical principles, and social institutions of the ancient Tamils. It provides valuable insights into the customs, traditions, interpersonal relationships, and moral values that shaped Tamil society during different historical periods. Among the ancient Tamil literary corpus, the Sangam texts occupy a significant place for their realistic representation of individual and collective life. They emphasize that a life guided by virtue, honour, and steadfast adherence to ethical principles constitutes the ideal way of living. In this regard, the Akam poems of the Ettuthokai offer rich literary evidence for understanding the emotional, cultural, and social dimensions of Sangam society. Therefore, these Akam texts constitute the primary source material for the present study, providing an authentic foundation for examining the selected theme.

Keywords: Tamil Language, Antiquity, Linguistic Heritage.

References

[1] Puliyur Kesigan. *Ettuthogai Noolgal Mulamum Uraigal*. Saratha Pathippagam, 1996.
[2] Sarathambal, Se. *Sangach Sevvial*. New Century Book House, 2015.
[3] Ilampooranar, editor. *Thol. Agathinaiyiyal*. Saratha Pathippagam, 2005.
[4] Malaiyaman. *Sevvial Mozhi*. New Century Book House, 2010.
[5] Kathiraiverpillai, Na. *Thamizh Mozhiyagarathi*. New Century Book House, 2008.
[6] Perasiriyar Urai. *Tholkappiyam, Porulathikaram*. Saratha Pathippagam, 2010.
[7] Kannadhasan, Kavignar. *Thirai Isaip Padalgal*. 1977.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481

எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

தமிழ் மொழியின் தகுதி நிலைப் பண்புகள்

முனைவர் மு. கனிச்செல்வி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதி), அருள் ஆனந்தர் கல்லூரி (தன்னாட்சி), கருமாத்தூர்- 625514.

ORCiD: https://orcid.org/0000-0003-2904-7518

DOI: 10.5281/zenodo.21791309

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை, உணர்வுகள், விழுமியங்கள், சமூக அமைப்பு மற்றும் பண்பாட்டு மரபுகளை உள்ளதை உள்ளவாறே பிரதிபலிக்கும் அரிய ஆவணங்களாக விளங்குகின்றன. குறிப்பாகத் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் பண்டைய தமிழர்களின் வாழ்வியல் நெறிகள், அறச்சிந்தனைகள், குடும்ப அமைப்பு, சமூக உறவுகள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களைத் தெளிவாக வெளிப்படுத்தும் கண்ணாடியாகக் கருதப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு மற்றும் உளவியல் நிலைகளை அறிந்து கொள்ள இலக்கியங்கள் முதன்மையான ஆதாரங்களாக அமைகின்றன. சங்க இலக்கியங்கள் அறநெறி, ஒழுக்கம், அன்பு, பொறுப்பு, கொள்கைப்பிடிப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையே சிறந்த வாழ்வியல் பண்பாகும் என்பதை வலியுறுத்துகின்றன. சங்க இலக்கியத் தொகுப்புகளில் இடம் பெறும் எட்டுத்தொகை நூல்கள், குறிப்பாக அகப்பாடல்கள், தனிமனித உணர்வுகள் மற்றும் சமூக வாழ்வியலை நுட்பமாகச் சித்தரிக்கின்றன. எனவே, இவ்வாய்வின் பொருண்மையை ஆராய்வதற்குத் தேவையான முதன்மை இலக்கியத் தரவுகளாக எட்டுத்தொகையில் இடம்பெறும் அக இலக்கியங்கள் அமைகின்றன.

குறிப்புச்சொற்கள்: தமிழ் மொழி, தொன்மை, மொழி மரபு..

முன்னுரை

மக்களின் வாழ்க்கையில் உள்ளதை உள்ளவாறு படைத்துக் காட்டுபவை இலக்கியங்கள் ஆகும். தமிழர்களின் வாழ்க்கைப் பண்புகளை உணர்த்தும் மிகச் சிறந்த கண்ணாடி இலக்கியம் என்று கூறலாம். அவ்வக்காலச் சமூகத்தின் நிலையினை எளிதாக அறியத் துணை செய்பவை இலக்கியங்களே. கொள்கைப் பிடிப்புள்ள வாழ்க்கையே வாழ்க்கைப் பண்பு என சங்க இலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன. அவ்வகையில் தோன்றிய எட்டுத் தொகை நூல்களில் உள்ள அக இலக்கியங்களே கட்டுரைப் பொருண்மைக்கு உரிய தரவாக அமைகின்றது.

அகப் பண்புகள்

அகப் பண்பு என்பது ஆண், பெண் இருவரும் சேர்ந்து மனத்தால் சுவைத்து மகிழ்ச்சி அடையும் இன்பத்தைப் பற்றிச் சொல்லுவதே அகப்பண்பாகும். சங்கத் தொகை நூல்களாகிய எட்டுத்தொகை நூல்களில் அக நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்களில் மொழியியல் அறிஞர்கள் வரையறை செய்துள்ள பொதுமைப் பண்பு, மரபுடைமைப் பண்பு, நடுவுநிலைமைப் பண்பு, நிலைபேறு பண்பு, உயர்சிந்தனைப் பண்பு, சமயசார்பற்ற தன்மை, வாய்மொழி இலக்கியம் ஆகிய பண்புகளின் அடிப்படையில் எட்டுத் தொகை நூல்களில் உள்ள அக இலக்கியங்களில் தமிழ் மொழியின் தகுதி நிலைப் பண்புகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பொதுமைப் பண்பு

பொதுமைப் பண்புகள் என்பது உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவானதாக

இருக்க வேண்டும். பொதுவாகப் 'பண்பு' என்னும் சொல்லுக்குக் 'குணம்' என்பது பொருள் பலவகையான குணங்களையும் 'பண்பு' என்னும் சொல் குறிக்கும் எனினும் பண்பு என்னும் சொல்லுக்குத் தனிப்பட்ட ஒரு பொருளையும், உலகின் எல்லா மனிதருக்கும் பொருந்தும் பொதுப் பண்புகளைக் கொண்டதாகக் கலித்தொகைத் திகழ்கிறது என்பதை,

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறைவு எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் (கலி.133)

என்ற பாடல் அடியில் ஆற்றுதல் என்பது வறுமையுற்றவர்க்கு ஏதாவது ஒரு பொருளைக் கொடுத்து உதவுதல், போற்றுதல் என்பது தன்னுடன் சேர்ந்தவரைப் பிரியாமல் இருப்பது, பண்பு என்பது உலக நடையை அறிந்து அதற்கேற்ப நடத்தல், அன்பு என்பது தன் சுற்றத்தாரைத் துன்புறுத்தாமல் பாதுகாத்தல், அறிவு என்பது அறிவிலார் தன்னைப் பழித்துப் பேசியவற்றைப் பொருத்துக் கொள்ளுதல், செறிவு என்பது கூறிய ஒன்றை மறுத்துக் கூறாமல் இருத்தல், நிறை என்பது ஒரு செயலைப் பிறர் அறியாதாவாறு மறைத்து செய்தல், முறை என்பது வேண்டியவா, வேண்டாதவர் என்னும் கண்ணோட்டம் இல்லாமல் அவர் செய்த தவறுக்கேற்ற தண்டணை வழங்குதல், பொறை என்பது பகைவரை வீழ்த்துவதற்கு உரிய காலம் வரும் வரையில் பொறுத்திருத்தல் போன்றவை உலக மக்கள் அனைவரும் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய பொது நெறி முறைகளாகும். இப்பாடல் ஒன்று மட்டும் போதும் செவ்வியல் தன்மைக்கு. இவ்வாறு கூறுவதால் இப்பாடல் உலக பொதுமைப் பண்பு கொண்டு விளங்குவதை அறிய முடிகின்றது.

மரபுடைமைப் பண்பு

மரபு என்பது பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குத் தொடரக் கூடியது மரபுடைமையாகும். சங்க இலக்கியங்களில் திருமணம் நடைபெறும் முறை பற்றி பல பாடல்கள் காணப்பட்டாலும் இப்போது உள்ள முறைப்படியே இருக்கும் திருமண முறைகள் கலித்தொகையில் காணப்படுகிறது. இதனை,

மாதர்கொள் மான்நோக்கின் மடந்தைதன் துணையாக
ஒதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல் (கலி.69)

என்ற பாடல் அடியில் மணமக்கள் தீயினை வலம் வந்தனர் என்பது இன்றும் மணமக்கள் தீயினை வலம் வரும் மரபு காணப்படுகின்றது. ஆகவே இப்பாடல் மரபுடைய பண்பாக விளங்குகின்றது. திருமணம் முடிந்ததும் விருந்தளித்து உபசரிப்பது சங்கச் சான்றோர்களின் வழக்கமாக இருந்தது. என்பதை,

உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ் சோற்றுஅமலை நிற்ப நிரைகால் (அக.86)

என்ற பாடல் அடியில் உழுந்தம் பருப்புடன் சமைத்த பொங்கலோடு பெரிய சோற்றுத் திரளையை உண்டல் நிகழ்ச்சி நடைபெற்றது என்பதை உணரமுடிகிறது. இவை இக்காலத்தும் திருமணம் முடிந்தவுடன் சுற்றத்தார்க்கு விருந்திடல் மரபு பழக்கமாக இன்றும் உள்ளதை எண்ண முடிகின்றது.

நடுவுநிலமைப் பண்பு

அக இலக்கியங்கள் தற்சார்பு நிலையின்றி பொதுச்சார்பு நிலையுடையனவாக

நடுவுநிலையுடன் காணப்படுகின்றது. ஒரு படைப்பாளன் தன் எண்ணத்தைத் தன்னுடையது என்று நேரடியாக காட்டிக் கொள்வது தற்சார்பு. ஆனால் பாத்திரங்கள் வழியாகக் காட்டி நிற்பது, பொதுச்சார்பு நிலையாகும்.

பொருளீட்டக் கருதிய தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். இடையில் தலைவியை நினைத்து வருந்தித் தவிக்கின்றான். இவ்வாறு தலைவன் முதலில் பொருளை நினைத்துப் போவதை விரும்புவதும், பின்பு தலைவியின் நலத்தை விரும்பிப் போவதை நினைப்பதுமாக இருக்கின்றான். தலைவன் மனதில் இவ்வாறான நடுவுநிலைப் பண்பினை,

கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை
இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கடல் ஒதல் போல
ஒன்றில் கொள்ளாய், சென்றுதரு பொருட்கே (அகம். 123)

என்ற பாடல் அடியில் தலைவன் பொருளா? தலைவியா? என்று நடுவுநிலைப் பண்போடு நின்று புலம்புவதை அறிந்துக் கொள்ள முடிகிறது. இத்தகைய புலம்பல் இன்றும் தலைவன், தலைவி கைப்பேசியில் தொடர்புக் கொண்டு புலம்புவதைக் காண முடிகின்றது.

நிலைபேறு பண்பு

நிலைபேறு என்பது நாம் செய்யும் ஒரு செயல் எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும் தன்மை உடையது. அச்செயல் காலம் கடந்தும், நாடு கடந்தும், மொழி கடந்தும் வாழ வேண்டும். தலைவன், தலைவியின் பெற்றோர்கள் இருவரும் ஒரு சமயத்தினர் அல்லர். எத்தகைய உறவினரும் அல்லர். தலைவன், தலைவி இருவரும் அதற்குமுன் ஒருவரையொருவர் அறிந்துக்கொண்டவர்களும் அல்லர். அப்படியிருந்தும் தலைவனுக்கும் தலைவிக்குமிடையே எதிர்பாராத சந்திப்பினால் காதல் மலர்ந்தது. இப்படி முன்பின் தெரியாத ஒருவர் மீது காதல் ஏற்பட்டதால் தலைவிக்குத் தலைவன் மேல் ஒரு ஐயம் ஏற்படுகிறது. தலைவன் நம்மை விட்டுப் பிரிந்துவிடுவானோ என்று தலைவியின் முகத்தில் கவலை தோன்றியது. அதை அறிந்துக் கொண்ட தலைவன், எப்படிச் சொல்லித் தலைவியின் அச்சத்தை போக்குவது என்று நினைத்தத் தலைவன் கண் முன்னே மழை நீர் செம்மண்ணோடு கலந்து ஓடுகிறது. ஆதை பார்த்த தலைவன் இந்த நிலத்தோடு பிரிக்க முடியாதவாறு மழைநீர் சேர்ந்து விட்டதல்லவா? ஆதைப் போன்றது தான் நம் அன்பும் என்கிறான் தலைவன். இவ்வாறு தலைவனின் அன்பு மொழிக்கு முன் தலைவியின் அச்சம் காணாமல் போனது என்பதை,

யாயும் ஞாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே (குறுந்.40)

என்ற பாடல் அடியால் அறியலாம். இப்பாடல் கருத்தை இக்காலச் சமூகத்தினர் கலப்புத் திருமணமாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இப்பாடலை கவிஞர் கண்ணதாசன் மிக நேர்த்தியாக திரையிசைப் பாடலாக “நேற்று வரை நீ யாரோ நான் யாரோ” என்று எழுதியுள்ளார் ஆகவே இப்பாடல் எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கும் நிலைபேறுடைய பாடலாகும்.

உயர்சிந்தனைப் பண்பு

உயர்சிந்தனை என்பது ஓர் உயர்ந்த நற்செயல், அறச்செயல், கொடைச்செயல் போன்றவை தான் உயர்சிந்தனைப் பண்புகளாகின்றன. ஒரு தலைவன் தேரின்மேல் ஏறிக்கொண்டு வருகிறான் அத்தேர் கடற்கரையின் வழியே வந்துக்கொண்டு இருக்கிறது. கடற்கரையிலே நண்டுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. தேரோட்டி வரும் பாகன் தேர்ச்

சக்கரத்திலே அந்த நண்டுகள் அகப்பட்டு நசுங்காதபடி ஒதுக்கி ஓட்டிக்கொண்டு வருகின்றான். என்பதை,

புணரி பொருத பூமணல் அடைகள்,
ஆழி மருங்கின் அலவன் ஓம்பி,
வலவன் வள்பு ஆய்ந்து ஊர (நற்.11)

என்ற பாடல் அடியால் அறிய முடிகிறது. ஆகவே தமிழர்கள் உயிர்க்கருணையைக் கொண்டு இருந்தனர் என்று இப்பாடல் வழி உயரிய சிந்தனையைப் பெற முடிகின்றது.

வாய்மொழி இலக்கியம்

வாய்மொழி இலக்கியம் என்பது தலைமுறை தலைமுறையாக வாய்வழியாக அல்லது செவிவழியாக பகிரப்பட்டு வந்த பழமொழிகள், கதைகள், கூத்து என இந்த இலக்கியங்கள் பல வகையாகக் காணப்படுகின்றது. மக்களைப் பெற்றெடுத்த நல்லோர்கள் மட்டுமே இவ்வுலகத்தில் புகழுடன் வாழ்வாங்கு வாழ்வார்கள். எந்த ஒரு குற்றமும் இல்லாமல் மறுவுலக இன்பத்தையும் அடைவார்கள், என்றும் சங்க காலத் தமிழர்கள் இக்கொள்கையிலே நம்பிக்கை வைத்திருந்தனர், என்பதை,

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி,
மறுமை உலகமும் மறு இன்று எய்துப,
செறுநரும் விழையும் செயர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம் (அகம். 66)

என்ற பாடல் அடியால் அறிய முடிகிறது. ஆகவே “பிள்ளையில்லார்க்குப் புண்ணியலோகம் இல்லை” என்ற பழமொழியை நினைவூட்டுவது போல வாய்மொழி இலக்கியமாகத் திகழ்வதை அறிந்து கொள்ள முடிகின்றது.

முடிவுரை

உலக மக்கள் அனைவரும் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய பொது நெறி முறைகளோடு பொதுப் பண்புகளுடன் வாழ்ந்ததை அறிய முடிகின்றது. திருமணம் முடிந்தவுடன் சுற்றத்தார்க்கு விருந்திடல் என்னும் மரபு பழக்கமாக இன்றும் உள்ளதை காண முடிகின்றது. பொருளீட்ட கருதிய தலைவன் பொருளா? தலைவியா? என்று நடுவுநிலைப் பண்போடு நின்று புலம்புவதை அறிந்துக் கொள்ள முடிகிறது. தலைவன் நம்மை விட்டுப் பிரிந்துவிடுவானோ என்று எண்ணிய தலைவியின் முகத்தில் கவலை தோன்றியதால் நிலைபேறு தன்மைக் கொண்டு விளங்கியதை அறியலாம். தமிழர்கள் உயிர்களின் மேல் கருணை கொண்டவர்களாக விளங்கினார்கள் என்பதை உயரிய சிந்தனையின் மூலம் காண முடிகின்றது. மக்களைப் பெற்றெடுத்த நல்லோர்கள் மட்டுமே இவ்வுலகத்தில் புகழுடன் வாழ்வாங்கு வாழ்வார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. மொழியியல் அறிஞர்கள் கூறியுள்ள தமிழ் மொழியின் தகுதி நிலைப் பண்புகள் அனைத்தும் எட்டுத்தொகை அக இலக்கியங்களில் நிறைய பொதிந்து கிடைக்கின்றது. இப்பண்புகள் அனைத்தும் என்றென்றும் நிலைத்து நிற்கும் தன்மை உடையனவாக விளங்குகின்றது.

குறிப்புகள்

[1] புலியூர்க் கேசிகன். *எட்டுத்தொகை நூல்கள் மூலமும் உரைகள்.* சாரதா பதிப்பகம், 1996.
[2] சாரதாம்பாள், செ. *சங்கச் செவ்வியல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2015.
[3] இளம்பூரணர், உரையாசிரியர். *தொல். அகத்திணையியல்.* சாரதா பதிப்பகம், 2005.
[4] மலையமான். *செவ்வியல் மொழி.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2010.
[5] கதிரைவேற்பிள்ளை, நா. *தமிழ் மொழியகராதி.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2008.

[6] பேராசிரியர் உரை. *தொல்காப்பியம், பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், 2010.
[7] கவிஞர் கண்ணதாசன். *திரை இசைப் பாடல்கள்*. 1977

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Pastoral Life in Literature across the Ages

S. Kaliraj@Sivasakthivel, Research Scholar, Reg. No.: MKU22FFOL10759,
Department of Comparative Literature, School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai.
ORCiD: https://orcid.org/0009-0007-1984-1634
Dr. P. Sumathi, Associate Professor & Head, Senate Member,
Department of Comparative Literature, School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai.
ORCiD: https://orcid.org/0000-0001-9420-5063
DOI: 10.5281/zenodo.21790886

Abstract

The term Kidai stands out with a distinct identity, embodying the leadership role associated with the Geethari. It can be said that both Kidai and Geethari are deeply intertwined with the land, the unique culture of the people, and the local ecology.It must be noted that the entire wandering existence of these hardy herds roaming freely without distinction of gender and living a life centered on the herd serves as the very source of this land's fertility. The Kidai represent a way of life rooted in the steadfast principle of upholding righteousness and chastity even when one's herds cause damage to agricultural crops. This Kidai lifestyle, which has suffered a decline due to scientific advancements that run counter to nature, is in need of revival.

Keywords: Sangam literature, Mukkudpallu, Geetari, Khitai, Cow, Bull, Goat.

References

[1] Kathir Murugu. *Mukkoodarpallu*. Saratha Pathippagam, 2017.
[2] Subramaniyan, Sa.Ve., Arignar. *Pathinen Kilkkanakku Noolgal Mulamum Thelivuraiyum. Thirukkural*. Manivasagar Pathippagam, 2017.
[3] Selvarasu, A., Munaivar. *Purananooru*. New Century Book House, 2024.
[4] Thamizhchelvi, Su. *Geethari*. New Century Book House, 2021.
[5] Magilendhi, Ira., Munaivar. *Pathirruppaththu*. New Century Book House, 2024.
[6] Manickavasagan, Gna. *Paththuppattu (Mulamum Uraiyum)*. Uma Pathippagam.
[7] Muneesmoorthi, Mu., Munaivar. *Kalithogai*. New Century Book House, 2024.
[8] Rajanarayanan, Ki. *Kidai*. Annam Veliyitu, 2020.
[9] Vetriselvan Rajendran. *Kulambadi*. Yazhisai Pathippagam, 2023.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

இலக்கியங்களில் காலந்தோறும் கிடை வாழ்வியல்

ச. காளிராஜ்(எ)சிவசக்திவேல், முனைவர் பட்டஆய்வாளர், பதிவெண்: MKU22FFOL10759,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
ORCiD: https://orcid.org/0009-0007-1984-1634
முனைவர் பெ. சுமதி, இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
ORCiD: https://orcid.org/0000-0001-9420-5063
DOI: 10.5281/zenodo.21790886

ஆய்வுச் சுருக்கம்

கிடை என்ற சொல் கீதாரி எனும் தலைமைப் பண்பினைத் தாங்கினதாய்த் தனித்த அடையாளம் பெற்று விளங்குகின்றது. கிடை கீதாரி ஆகிய இரண்டு சொற்களும் மண்ணோடும் மாந்தரினத்தின் தனித்தப் பண்பாட்டுடனும் சூழலியலோடும் மிக நெருங்கியத் தொடர்புடையவை எனலாம். உரமேறிய கீதாரிகளின் அலைகின்ற வாழ்வெல்லாம் இம்மண்ணிற்கு உரமாக்கப்படுகின்றன என்றுதான் குறிப்பிட வேண்டும். ஆண்பெண் என்ற வேறுபாடற்று அலைந்து திரிந்து கிடைவாழ்வு வாழ்ந்துவரும் ஆநிரைக் குழுமம் இந்நிலப்பரப்பின் செழுமைக்கானத் தோற்றுவாய். கற்பெனும் நிலமடந்தையின் மகசூலுக்கான வித்து கிடை.தங்களது ஆநிரைகளினால் வேளாண் பயிர்களுக்கு அழிவுகள் உண்டாயினும் அறம் என்ற முறை தவறாதும் கற்பு எனுந் திண்மையுடன் இருத்தல் என்னும் கோட்பாட்டினின்று வழாது வாழ்ந்துவரும் வாழ்வியலினைக் கூறுகின்றது. கிடை வாழ்வியல்.இயற்கைக்கு ஒவ்வாத அறிவியல் வளர்ச்சியினால் வீழ்ச்சி கண்டுள்ள கிடை மீட்டுறுவாக்கம் பெற வேண்டியுள்ளது.

குறிப்புச்சொற்கள்: சங்க இலக்கியம், முக்கூடற்பள்ளு, கீதாரி, கிடை, மாடு, காளை, ஆடு.

முன்னுரை

அண்டத்தில் மாந்தரினம் தோன்றி பல்லாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்து வந்துள்ள மாந்தரினம் தங்ளின் உணவுத் வேவைக்காக அங்கு வாழும் விலங்குகளை வேட்டையாடத் தொடங்கினர். பின்னர் படிப்படியா அவற்றிலிருந்து பிரிந்து வந்த சில குழுக்கள் வேட்டையாடுவதிலிருந்து விலகி தாங்கள் சில விலங்குகளுடன் பழகத் தொடங்கினர். குறிப்பாக கால்நடைகளைத் தங்களுடன் நன்கு பழக்கப்படுத்திக் கொண்டனர். அதனை மேய்த்தும் வந்தனர். அவற்றிலிருந்தும் சில குழுக்கள் பிரிந்து வாழ்ந்து வந்து தங்களின் உணவுத் தேவைக்காக காடுகளைச் சீர்திருத்தி வன்புல வேளாண்மையில் ஈடுபட்டனர். இப்படியாக கால்நடைகளின் எண்ணிக்கைகளும் அதிகரித்தது. தங்களின் உணவுத் தேவையும் ஏற்பட்டது. அதிக கால்நடைகளைக் கொண்டு வயல்வெளிகளில் பயிர் வளர்ச்சிக்காகவும் உற்பத்திப் பெருக்கத்திற்காகவும் உரத்தின் தேவைக்காக இரவு நேரங்களில் பட்டியடைத்து கிடையமர்த்தி வாழ்ந்துதவந்த மாந்தரினம் இன்று இயற்கைக்கு மாறான அறிவியல் வளர்ச்சியினாலும், மேய்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிக்கப் பட்டதனாலும் வேளாண் விளைநிலங்கள் ஏனைய பயன்பாடுகளுக்காக விற்கப்பட்டு வேலியடைக்கப் பட்டமையாலும் கிடை வாழ்வியல் வீழ்ச்சியடைந்தும் வருகின்றன என்பதனையும், கிடைசார்ந்த வாழ்வியலினைப் பேசும் சங்க இலக்கியங்கள் மற்றும் புதினங்களோடு இலக்கியங்களில் காலந்தோறும் கிடை வாழ்வியல் எனும் பொருண்மையில் இக்கட்டுரை அமைகின்றது.

கிடை விளக்கம்

கிடை என்பது வேளாண் உற்பத்திக்காக ஆநிரைகளைக் கொண்டு வயல்வெளிகளில்

பட்டியமைத்து இரவில் அடைக்கப்படும் முறையாகும். கால்நடைகளின் கோமியம், சாணம் மண்ணை வளப்படுத்தும் தன்மை உடையதாதலால் இப்படிச் செய்வர். ஒவ்வொரு நாளும் மேய்ச்சலுக்குப் பின் இரவு நேரத்தில் அருகருகே இடத்தை மாற்றி மாற்றிப் பட்டியமைத்து கால்நடைகளை அமர்த்திச் செல்வர். இவை ஒவ்வொரு நாளிளும் தொடர்ச்சியான மாறாத செயல்பாடுளை உடையது. இத்தகைய கிடை என்பது இனக் குழுக்களிடையே ஓர் ஆளுமையின் கீழ் கண்காணிக்கப்படக் கூடியதுமாகும். மேலும், கிடை பற்றி கி.இராஜநாரயணன் தனது கிடை நாவலில்,

> **கிடை என்பது ஒரு தனி ராஜ்யம். அதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவன் உண்டு. அந்த தலைமை ஸ்தானாதிபதியின் பெயர் தான் கீதாரி என்பது, கிடைக்கு என்று ஏற்பட்ட பூர்வீக வழிவந்த சில சட்ட திட்டங்கள் உண்டு. அதை யாருமே கொஞ்சங்கூட மீறக்கூடாது. ஆட்டுக்குட்டிகளின் கூடுகளை வரிசைப்படுத்தி வைப்பதற்குக்கூட ஒரு முறை உண்டு. அதற்கு வட்டம் என்று பெயர். நிலச்சொந்தக்காரர்கள் கொடுக்கும் கிடைக்கூலியான தானியத்தை கிடைக்காரர்கள் இந்த வரிசை முறைப்படிதான் வாங்கிக்கொள்ள வேண்டும். (கி. ரா. கிடை, ப. 13)**

கிடைக்கூலியாக கிடைக்காரர்களுக்கு நிலத்தின் உரிமையாளர்கள் தானியத்தைக் கொடுக்கும் முறைகளையும் கிடை நாவல் எடுத்துரைத்துள்ளது. கீதாரி என்பவர் தனக்கெனத் தனித் தோற்றம் உடையவர், மடித்துப்போட்ட கம்மளியும் கையில் துரட்டியும் எனத் தனது வட்டார வழக்கினில் வர்ணிகின்றார் கி.ரா,

> **நிதமும் அவர் காலையில், கிடை எழுப்புகிற நேரத்துக்குக் கொஞ்சம் முன்னதாக, துக்கியம்மன் கோவிலைத்தாண்டிப் போவதைப் பார்க்கலாம். மடித்துப் போடப்பட்ட கம்பளி இடது தோளிலும், வலது கையில் துறட்டிக் கம்புடனும்உடம்புக்குள் ஏதோ ஒரு 'ஸ்பிரிங்' இருந்து இயங்குகிறதைப் போல, அவர் நடக்கும்போது கீழும் மேலும் எவ்வி நடந்து போவார… (கி. ரா. கிடை, ப. 11)**

சங்க இலக்கியத்தில் கிடைக்காவல்

உழவர்களின் நெல் விளைந்து அறுவடையான புற்கள் நிரம்பிய அகன்ற, வளம் மிக்க வயல் வெளியினில் ஆயர்கள் ஆக்கள் பலவற்றைப் பரப்பியோட்டி மேயச்செய்தனர் என பதிற்றுப்பத்து சான்று பகர்கின்றது,

> **புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பி**
> **வளனுடைச் செறுவின் விளைந்தவை யுதிர்ந்த (பதிற்., பா. 264)**

பகையாரை எதிர்த்து அவரது நாட்டில் புகுதல் என்பது எளிதல்ல, கிடைக்காவல் காக்கும் ஆநிரைகளையுடைய இடையனைக் குறித்து நாடும் காவல் செய்யப்படுகின்றது என்பதனை புறநானூற்று வழி,

> **பாசிலைத் தொடுத்த மடிவா யிடையன்**
> **மாசு ணுடுக்கை மடிவா யிடையன்**
> **சிறுதலை யாயமொடு குறுகல் செல்லாப்**
> **புலிதுஞ்சு வியன்புலத் தற்றே**
> **வலிதுஞ்சு தடக்கை யவனுடை நாடே. (புறம்., ப. 159)**

பசிய இலையாலான தழையாலான மாலையினை உடையவனும் அணிந்து, மாசுடைய ஆடையும் சீக்கையொலி எழுப்பிட மடித்த வாயினையுடையவன் இடையன். அவனது ஆட்டினத்தினோடு எவரும் நெருங்கிட எண்ணாது புலியும் பதுங்கித் தூங்கிடும் இடம், வலிமை தங்கிய தடக்கையுடையுடையவன் நாடு என்பதனைக் கொண்டு இடையர் தலைவன் (கீதாரி) கிடையை மடக்கிக் காத்தான் என்பது வெளிப்படைப் பொருள்.

கிடையின் தேவை

மண் வளம் பெற்றிடவும், வேளாண்மை செழித்திடவும், இயற்கையினைப் பாதுகாத்து,

சூழலியலின் தன்மையைத் தக்கவைத்துக் கொள்ளவும் ஆநிரைகளின் கழிவுகளாகியத் தொழுவுரங்கள் அடிப்படையானவை. இவை கிடைகளின் வாயிலாகத்தான் கிடைக்கப் பெருகின்றன, ஆகையால் கிடை பெரிதும் தேவையானவை. வள்ளுவர்கூட உழவு என்ற தொண்டு தொடர்ந்து நடந்தேறி வருவதனால்தான் இவ்வுலகம் தொடர்ந்து இயங்குகின்றது என்பதனைத் தனது உழவு அதிகாரத்தில் குறிப்பிடுவார். அவரே அத்தகைய உழவிற்கு தொழுவுமே தேவை என்பதனை,

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டப்பின்
நீரினும் நன்றதன் காப்பு. (திருக்குறள் - 1038)

எனும் திருக்குறளினால் வழு சேர்க்கின்றார்.

மாட்டின் வகைகள்

முக்கூடற் பள்ளு இல்கியத்தில் பள்ளன் தனது பண்ணைக்காரரிடம் மாட்டுவகைகளைப் பற்றி எடுத்துரைக்கையில்,

குடைக்கொம்பன் செம்மறையன் குத்துக்குளம்பன் மேழை
குடைச்செவியன் குற்றாலன் கூடுகொம்பன்
… விடர்த்தலைப் பூநிறத்தான் வெள்ளைக் காளையும்
இந்த விதத்திலுண் டாயிரமே மெய்கா ணாண்டே. (முக்கூடற்பள்ளு, பா. 109)

என்று மேற்குறிப்பிட்ட பாடலில் குடைக்கொம்பன், செம்மறையன், குத்துக்குளம்பன், மோழை, குடைச்செவியன், குற்றாலன், கூடுகொம்பன், வடப்புல்லை, கரும்போரான், மயிலை, கழற்சிக் கண்ணன், மட்டைக்கொம்பன், கறுப்பன், மஞ்சள் வாலன், படப்புப் பிடுங்கி, கொட்டைப் பாக்கன், கருமறையன் பசுக்காலன், அணிற்கலன், படலைக் கொம்பன், விடர்த்தலைப் பூ நிறத்தான், வெள்ளைக் காளை என இருபத்து மூன்று வகையான மாடுகளின் பெயர்களைக் கூறுகின்றார். இவைபேன்று இன்னும் ஆயிரக்கணக்கான வகை மாடுகள் இருப்பதாகப் பள்ளன் பண்ணைக்காரரிடம் எடுத்துரைப்பதனை முக்கூடற் பள்ளில் அறியலாகின்றயது.

காளைகளின் வகைகள்

ஏறுதழுவுதலின் போது தொழுவத்துள் என்னென்ன வகையில் காளைகள் இருந்தன என்பனவும், அதன் நிறம், தோற்றம் ஆகியன பற்றியும் கலித்தொகைப் பாடல்களில் கூறப்பட்டுள்ளன. காளை, எருது என்பது திமிலுடைய ஆண் மாடுகளாகும்.

சுரிநெற்றிக் காரி, நுண்பொறி வெள்ளை, வெண்காற் காரி, வான்பொறி படர்ந்த வெள்ளை, வளைந்த பிறைபோன்ற கொம்புடைய செவலை,புள்ளியுடைய வெண்நிறக்காளை, செம்மறு வெள்ளை,கருமையும் செம்மையுமுடைய கழுத்தும் உயர்ந்த திமிழுடையக் குராலும், கணங்கொள் பல்பொறி கடுஞ்சினப் புகர், வெண்நிறக் காலுடைய செவலை… (கலித்தொகை, பா. 101, 102, 103, 105)

இவைபோன்ற இன்னும் பிற காளையின வகைகளும் முல்லைக்கலியில் சுட்டப்பெற்றுள்ளன.

ஆட்டின் வகைகள்

கிடை நாவலில் கிட்ணக்கோனார் என்பார் தன்னுடைய ஆடுகளின் பெயர்களைத் துண்டம் பிரிக்கும் பொழுது தனக்குள் சொல்லிக் கொண்டதாகவும்,

ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அந்த மூலையில் அவருடைய துண்டத்தில் செம்மறி ஆடுகள் வந்து சேர்ந்த வண்ணமாக இருந்தன. ஒவ்வொரு ஆடு வந்து சேர்ந்ததும், அதன் பெயரை மனசுக்குள் சொல்லிக் கொண்டார் கிட்ணக்கோனார், செவ்வாடு, அரியாடு, கருங்காத்து வெள்ளை, செங்காத்து வெள்ளை, வெங்காலாடு, மறை, போர், கரும்போர், செம்போர், வெள்ளைப்போர், தவிட்டுப்போர், மூளி, தாலி, கூளி, கறுவி, ராயாடு, சென்றாயாடு, கரிசையாடு, கரிசைப்போர், கண்ணாடிப்போர், கம்பளியாடு, சுட்டி, வெண்தலை, கொப்பாடு, கிடா, மோளைக்கிடா… (கி. ரா. கிடை, பக். 14-16)

கோபால் நாயக்கர் தன் மகன் கந்தையா ஆடுகளை எழுப்பிக் கொண்டிருக்கையில் அவரது உருப்படிகளை சரிபார்த்துச் சொல்வதாக,

கருத்தாடு, மறை, போர், கோட்டை மறை சுட்டி, பூவால் தாலி, பூலி, கன்னி, பால்கன்னி, செவலைக் கன்னி, தவிட்டுப் போர், சாம்பல் போர், மொட்டை, குடைக் கொம்பு, உச்சிக் கொம்பு, ஒத்தைக் கொம்பு, மாடக் கொம்பு, மூஞ்சி வெள்ளை, நெத்திச் சுட்டி, செவலைப் போர், மச்சை, குரா, சுணக்கி, நரை ரோமம், குருட்டாடு, சொட்டைக்காது, துடை மறை, ஓங்கோல், புளியம்போர் (கி. ரா. கிடை, பக். 17-19)

என்று ஒவ்வொரு ஆட்டிற்கும் அதனதன் நிறம், வச்சம், இவற்றை வைத்து அதன் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் நிறப்பெயரினைச் சொன்னால் அது இன்ன துண்டத்தைச் சேர்ந்த ஆடு, இன்னாருடையது என்றும் அடையாளம் காண்பதனைக் கிடை நாவலின் வழியே தெரிந்துகொள்ள முடிகின்றது.

முக்கூடற்பள்ளில் இடையர்கள்

செவ்வியியல் இலக்கியங்களை அடுத்து பல்வகை இலக்கியங்கள் தமிழில் தோன்றிய வண்ணம் உள்ளன. அத்தகையச் சிறப்புமிக்கத் தமிழ் மொழிக்குச் சிற்றிலக்கியங்களின் வரவும் அதிகரித்தன. முக்கூடற் பள்ளு தமிழகத்தின் தென்கோடி மாந்தர்களையும் அவர்களின் வேணாண்மைத் தொழிலையும் விரித்துரைக்கின்றனவாக எழுதப்பெற்றுள்ளது. தங்களின் வேளாண் நிலங்களில் பயிர் செய்வதற்காக கிடையமர்த்திட ஆநிரைகளை வைத்திருக்கும் கோனார்களை அழைத்து கிடையமர்த்தியதாக மூத்த பள்ளி, இளைய பள்ளி, பள்ளன், பண்ணையார் ஆகியோரது உரையாடல் குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன.

வயலில் ஆட்டுக்கிடை வைத்து மேட்டு நிலங்களைச் சீரமைக்க வேண்டும் இடையனைக் கூட்டிவா என பள்ளனிடம் பண்ணையார் வேண்டுவனவாகவும்,

**ஆதி நாள்வயல் வீதிகண் ணாறெல்லாம்
ஆடுவைத் தின்னும் மேடுந் திருத்தக்
கோதி லானந்தன் சாதி இடையனைக்
கூட்டிவா பள்ளா கூட்டிவா என்றான். (முக்கூடற்பள்ளு, பா. 75: 5-8)**

பள்ளனின் வந்து அழைத்ததும் பார்ப்பவர் அச்சப்படத் தன் கைத்தடியைச் சிலம்புபோல் சுழற்றிக்கொண்டே கோனேரிக்கோன் வந்து பண்ணைக்காரனைக் கண்டு பேசியதை,

**கண்டார் பயப்படத்தன் கையில் சுழற்றுதடி
செண்டாடிக் கொண்டுபள்ளன் சென்றழைத்த சொற்படியே
தண்டாத சங்கத் தமிழழகர் முக்கூடல்
கொண்டாடுங் கோனேரிக் கோன்வந்து தோன்றினனே. (முக்கூடற்பள்ளு, பா. 81)**

முக்கூடலில் ஆலிலையின்மீது துயில்கொண்டுறையும் அழகர் கோவில் நிலங்கள் புழுதி உழவு செய்யப்பட்டுள்ளது. அவ்வயலில் ஆட்டுக்கிடை அமைப்பதற்காக ஒருகையில் கோலும் மறுகையில் மூங்கில் குழமயினால் செய்யப்பெற்ற பால்கறக்கும் கலத்துடனும் இடையன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்ததாக,

**கோலொருகைக் கொண்டு கடைக்காலுமொரு கைதுக்கிக்
கோனேரிக்கோன் ஆட்டுக்கிடை கொண்டு வந்தான் (முக்கூடற்பள்ளு, பா. 82: 13-16)**

பள்ளன் இடையர்களை வயல்களில் கிடையமர்த்திட ஏவல் செய்துவிட்டு, இளைய பள்ளியின் வீட்டிற்குச் சென்றான் என்பதனை மூத்த பள்ளி பண்ணையாரிடம் தெரிவிப்பனவாக,

**இடையரைக்கொண் டேவயலில் ஏவிஇளை யாள்குடிலிற்
கிடைநமக்கு நல்ல கிடையெனச்சென் றான்குடும்பன். (முக்கூடற்பள்ளு, பா. 84: 1-2)**

இவ்வாறாக இடையர்களது கிடை வாழ்வியலினை விரிவாக எடுத்துரைக்கும்மேலும் முக்கூடற் பள்ளு 83 ஆவது பாடல் வரிகளில் பூதக்கோன் வேதக்கோன் தாதக்கோன் நாதக்கோன் முக்கூடல் ஆதிக்கோன் ஆகியோரது பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன.

கிடையமர்த்தும் காலம்

பொதுவாக வயல்களில் பயிர்கள் அறுவடையானதும் கிடைகட்டுவது வழக்கம். தையில் அறுவடை முடிந்ததும் உழவர்கள் தற்களின் உழவு வயல்களில் கிடையமர்த்தி கோடை உழவு செய்து, நிலங்களை சீர்படுத்தி, அடுத்த வெள்ளாமைக்காக அணியமாகியிருப்பர். கீதாரி நாவலில் இராமநாதபுரத்திலிருந்து வந்து தங்கி கிடைகட்டி மேய்க்கும் ஆட்டுக்காரர்கள் தைமாதம் அருவடையானதும் பயணத்தைத் தொடங்குவர். வருகின்ற வழியெங்கும் மேய்ச்சலை மேற்கொண்டே பங்குனி மாத கோடைமழை காலத்தில் காவிரித் தென்படுகைப் பகுதியான கோட்டகத்தில் கிடை கட்டடிட ஆரம்பித்திடுவர். பங்குனியில் தொடங்கினால் தொடர்ந்து இரண்டு மூன்று மாதங்களுக்கு அங்குள்ளச் சுற்றுவட்டாரத்தில் இருக்கும் வயல்களில் கிடைகட்டிக் கொள்வார்கள் என்றும், அப்பருவங்களில் கிடைக்குத் தரப்படும் பணத்தைத் தவிற உளுந்து, பசலி, பச்சைப்பயறு எனத் தற்களுக்குக் கிடைக்கும் உணவுப் பொருட்களையும் ஓராண்டிற்குத் தேவையான அளவு சேர்த்தும் வைத்துக்கொள்வர் என்பதை கீதாரி நாவல் எடுத்துரைக்கின்றது.

> **பசலி அறுவடையான வயல்களில் செம்மறியாட்டுக் கிடை கட்டிக்கொண்டிருந்தார்கள். இராமநாதபுரத்திலிருந்து வந்து ஆடு மேய்க்கும் ஆட்டுக்காரர்கள். அறுவடையானால் எங்கிருந்துதான் வருவார்களோ தெரியவில்லை. மந்தை மந்தையாய் ஆடுகளை ஓட்டிக் கொண்டு வந்து விடுவார்கள்... (கீதாரி, ப. 15)**

கிடையின் வீழ்ச்சி

ஒருபோகம் விளைந்த நிலங்கள் தற்போது நவீன வளர்ச்சியின் பிடியில் எந்நேரமும் பயிர்களைச் சுமந்து கொண்டிருப்பதனையும், வேலியமைத்து வெள்ளாமை செய்வதனாலும், மகசூல் அதிகம் இருக்கனும் என்பதற்காக தொழுவுரங்களுக்குப் பதிலாக நிலங்களை மலடாக்கும் சாக்கு உரங்கள் வந்ததாலும் மேய்ச்சலுக்குத் தவித்துக்கொண்டு சிலர் ஆடுகளை விற்றுவிடுகின்றார்கள். வயல் வெளிகள்தான் இப்படியென்றால் காலங்காலமாக மேய்த்துவந்த மலங்காட்டுக்குள்ளும் சென்று மேய்ப்பதற்குத் தடையாக வேலிபோட்டு அடைக்கப்பட்டுவிட்டன என்று தன் வேதனைகளை கீதாரி சொல்லிக்கொண்டே வருகிறார் என்பதனை குளம்படி புதினம் கூறுகின்றது.

> **முன்ன ஒரு முந்நூறு நானூறு ஆடுகள் இருக்கிற ஒரு துண்டு ஆட்டை ஒரு ஆளாப் பத்திட்டு வருவோம். ஒரு போகம் வெள்ளாமை செஞ்சதோட காடும் கழனியும் அப்படியே கெடக்கும். இப்ப எங்க பார்த்தாலும் "வெள்ளாமையா இருக்கு" என்றார். சி எங்க பாத்தாலும் வேலிபோட்டு வெள்ளாமை போட ஆரம்பிச்சிட்டாக."ஆடுக ஊடாடாம காடு வெளையாதும்பா. என்னைக்கு இந்தப் பாழாப்போன ஒரமூட்டை வந்துச்சோ அன்னைக்கே மனுசனோட மனசுக்கும் நோவு வந்திடுச்சு. மாடு வச்சிருந்தா மடி பெரிசா இருக்கணும்னு நெனைக்கிறாங்க. காடு வச்சிருந்தா மகசூல் இருக்கணும்னு என்னபய ஒரத்தையெல்லாம் போட்டு இந்தக்காடு மலடாபோனதுதே மிச்சம். வயக்காடுதே இப்படி இருக்குனு போனா காலங்காலமாக மேயுற மலங்காட்டுக்குள்ள செம்மறியாட்டோட நாலைஞ்சு வெள்ளாடு இருந்தாலும் வேலி போட்டு வச்சிட்டு உள்ள விடமாட்டுறானுக என்று தன் வேதனையைக் கூறிக்கொண்டே வந்தார் கீதாரி. (குளம்படி, ப. 49)**

இவற்றை ஆராயும்பொழுது கிடை வாழ்வியல் என்பது வீழ்சியுற்று வருகின்றதனையும் ஆங்காங்கே அரிதாகவும் காணப்பட்டு வருகின்றன என்பதனையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள்வரை கிடை என்னும் முல்லை நில மாந்தர்களின் மேய்ச்சலிய வாழ்வானது பாடுபொருளாகத்தான் இருந்து வருகின்றன. இவ்வுலகினில் எந்தவொரு இயக்கமும் காரண காரியமின்றி இயங்காது என்பது இயங்கியல்

தத்துவம். இங்கு கிடையெனும் இயக்கமும் காரண காரியத்தோடுதான் இன்னும் அழியும் விழிம்பினில் அலைந்து கொண்டிருக்கின்றது. இவ்வையம் உயர்வுத் தாழ்வின்றி நேர்நிலையடைவதற்கு வேளாண்மையே முதன்மைத் தேவையாகவுள்ளன. அத்தகைய வேளாண்மைக்கு மூல ஆதாரமாக கிடை விளங்குகின்றன. இத்தகைய கிடைகளுக்குக் கால்நடைகள் இன்றியமையாதவை. நவீனமயம் மற்றும் தொழிற் வளர்ச்சியினால் நாட்டின மாடுகளும் ஆடுகளும் கிட்டத்தட்ட அழிந்துவிட்டன. இருக்கும் நாட்டினக் கால்நடைகளைப் பாதுகாத்தும் அதன் எண்ணிக்கையினை பெருக்கியும் தீங்கில்லா வேணாண்மைக்கு தொன்று தொட்டு அரிதாகி அழிவின் விழிம்பினில் இயங்கிவரும் கிடை வாழ்வியலினை மீட்டெடுக்க வேண்டும்.

தொகுப்புரை

கிடை என்பது நாள்தோறும் தொடர்ச்சியான மாறாத செயல்பாடுளையுடையதும், இனக் குழுக்களிடையே ஓர் ஆளுமையின் கீழ் கண்காணிக்கப்படக் கூடியதுமாகும். கிடைக்கூலியாக கிடைக்காரர்களுக்கு நிலத்தின் உரிமையாளர்கள் தானியத்தைக் கொடுக்கும் முறைகளை கிடை நாவல் எடுத்துரைத்துள்ளது. ஆட்டினத்தினோடு எவரும் நெருங்கிட எண்ணாது புலியும் பதுங்கித் தூங்கிடும் இடம், வலிமை தங்கிய தடக்கையுடையுடையவன் இடையன் தனது கிடையினைக் காத்து வந்தான் என்பதனை புறநானூறு எடுத்தியம்பியுள்ளது. மண் வளம்பெற்றிடவும் வேளாண்மை செழித்திடவும் இயற்கையினைப் பாதுகாத்து, சூழலியலின் தன்மையைத் தக்கவைத்துக் கொள்ளவும் ஆநிரைகளின் கழிவுகளாகிய கிடையின் தொழுவுரங்கள் தேவையானவை. கிடை வாழ்வியல் என்பது வீழ்சியுற்று வருகின்றதனையும் ஆங்காங்கே அரிதாகவும் காணப்பட்டு வருகின்றன என்பதனையும் தெளிவாகின்றது. தீங்கில்லா வேணாண்மைக்கு கிடை இன்னியமையாதவை.அவற்றினை மீட்டெடுத்து, நாட்டின கால்நடைகளையும் பாதுகாத்திடவும் வேண்டும் என்பதும் தெள்ளத் தெளிவாகின்றது.

குறிப்புகள்

[1] கதிர் முருகு. முக்கூடற்பள்ளு. சாரதா பதிப்பகம், சென்னை, 2017.
[2] சுப்பிரமணியன், ச.வே. அறிஞர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும். திருக்குறள். மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2017.
[3] செல்வராசு, அ., முனைவர். புறநானூறு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2024.
[4] தமிழ்ச்செல்வி.சு. கீதாரி. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2021.
[5] மகிழேந்தி, இரா. முனைவர். பதிற்றுப்பத்து. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2024.
[6] ஞா. மாணிக்கவாசகன். பத்துப்பாட்டு (மூலமும் உரையும்). உமா பதிப்பகம், சென்னை.
[7] முனீஸ்மூர்த்தி, மு., முனைவர். கலித்தொகை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2024.
[8] ராஜநாராயணன், கி. கிடை. அன்னம் வெளியீடு, தஞ்சாவூர், 2020.
[9] வெற்றிச்செல்வன் இராசேந்திரன். குளம்படி. யாழிசைப் பதிப்பகம், தஞ்சாவூர், 2023.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Explanation of the Structure of the Word Munneer

Dr. K.Kumarakurubaran, Assistant Professor of Tamil, Mannar Thirumalai Naicker College, Pasumalai, Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-1949-6168
DOI: 10.5281/zenodo.21791122

Abstract

Water is the foundation of life and an indispensable natural resource for the survival of all living beings. Human civilization has flourished along rivers, lakes, and seas, highlighting the intimate relationship between water and culture. Across ancient societies, water has been revered not merely as a physical necessity but also as a sacred entity possessing divine power. In Tamil tradition, water is worshipped as a life-giving deity and occupies a significant place in literature, religion, and social customs. The Tamil term 'Munneer' literally refers to the confluence of three bodies of water and is traditionally used to denote the vast ocean, symbolizing abundance, purity, and prosperity. Ancient Tamil society celebrated the sea through customs such as 'Munneer Vazhakkam' (the traditional practices associated with the sea) and 'Munneer Vizha' (festivals honouring the sea), which reflected gratitude for maritime wealth, fishing, trade, and ecological balance. These rituals also emphasized the harmonious coexistence of humans with nature, underscoring the cultural, spiritual, and environmental significance of water in sustaining life and preserving the heritage of the Tamil people.

Keywords: Three Waters, Three Bodies, Water, Confluence, Sea.

References

[1] Sri Acharya, Pi. *Nammalvar Thiruvaimozhi*. V.K. Book International, 2013.
[2] Ilampooranar. *Tholkappiyam Porulathikaram*. Saratha Pathippagam, 2005.
[3] Shanmugam, Ve., Munaivar. "Munnir Vazhakkam Magaduuvoedu Illai." *Senthamil DDE Valaipathivu*, 24 Sept. 2018.
[4] Saminathaiyar, U.Ve. *Kurunthogai (Mulamum Uraiyum)*. Kabir Achchukkoodam.
[5] Subramaniyam, Sa.Ve. *Sangga Ilakkiyam*. Manivasagar Pathippagam, 2013.
[6] Subbureddiyar, Na. *Tholkappiyam Kottum Vazhkkai*. Palaniyappa Brothers, 2011.
[7] Jeyapal, Ira., Munaivar. *Agananooru (Mulamum Uraiyum)*. New Century Book House.
[8] Thakshanamoorthi, A. *Aingurunooru (Thoguppu -1)*. New Century Book House.
[9] Parimelazhagar. *Thirukkural*. Thirumagal Nilaiyam, 1998.
[10] Balasubramaniyam. *Narrinai (Mulamum Uraiyum)*. New Century Book House.
[11] Manickavasagan, Gna. *Paththuppattu (Mulamum Uraiyum)*. Uma Pathippagam.
[12] Manickavasagan, Gna. *Purananooru (Mulamum Uraiyum)*. Uma Pathippagam.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481

எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

முந்நீர் சொல் கட்டமைப்பின் புலப்பாடு

முனைவர் க.குமரகுருபரன், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-1949-6168
DOI: 10.5281/zenodo.21791122

ஆய்வுச் சுருக்கம்

நீர் உயிர்களின் மூலாதாரம். மழை என்ற மாபெரும் கொடை வழங்கியது நீர். முன்+நீர்-முன்பே உள்ள நீர். பழங்கால முதற்கொண்டே நீர் இருத்தலின், முன்னீர் என்றார். முந்நீர் என்றும் வழங்குவர். இச்சொல்லுக்கு மூன்று தன்மையான குணமுண்டு என்று பொருளுரைப்பர். நீர் உயிர்களைக் காத்தல், படைத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களைச் செய்கின்றது. பல்வகைப் பொருள்களும் தன்னிடம் கொண்டு மக்கள் முதலிய எல்லாவுயிர்களையும் காக்கின்ற தொழிலைச் செய்கின்றது. எல்லாவகை உயிர்களையும் தன்னகத்துக் கொண்டுள்ளமையால் படைத்தல் தொழிலைச் செய்கின்றது. பள்ளத்தை மேடாகவும் மேட்டைப் பள்ளமாகவும் ஆக்கி அவ்விடங்களிலுள்ளவைகளையெல்லாம் அழித்தல் தொழிலைச் செய்கின்றது. முந்நீர் என்பதும் முன்னீர் என்பதும் பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய்க் காரணப் பெயராயிற்று. சிவன், விஷ்ணு, பிரம்மா என்று மூன்று தெய்வத்தின் செயலை நீர் செய்வதாகக் குறிப்பிடுகின்றனர். ஆற்று நீர், ஊற்றுநீர், மழைநீர் மூன்றும் இணைந்து கடற்கு முந்நீரென்று பெயராயிற்று என்பர். நிலத்திற்கு முன்னாகிய நீர் என்றும் உரைப்பர். இத்தகைய பொருள் புலப்பாட்டு தன்மையைக் கொண்டு முந்நீர் என்ற சொல் கட்டமைப்பு ஊடாக ஏற்படும் சில புரிதல்களை ஆய்வு பொருண்மையாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

குறிப்புச்சொற்கள்: முந்நீர், மூன்று நீர்நிலைகள், சங்கமித்தல், கடல்.

முன்னுரை

நீர் உயிர்களின் மூலாதாரம். நீர் உயிர்களைக் காத்தல், படைத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களைச் செய்கின்றது. பல்வகைப் பொருள்களும் தன்னிடம் கொண்டு மக்கள் முதலிய எல்லாவுயிர்களையும் காக்கின்ற தொழிலைச் செய்கின்றது. எல்லாவகை உயிர்களையும் தன்னகத்துக் கொண்டுள்ளமையால் படைத்தல் தொழிலைச் செய்கின்றது. பள்ளத்தை மேடாகவும் மேட்டைப் பள்ளமாகவும் ஆக்கி அவ்விடங்களில் உள்ளவைகளையெல்லாம் அழித்தல் தொழிலைச் செய்கின்றது. சிவன், விஷ்ணு, பிரம்மா என்று மூன்று தெய்வத்தின் செயலை நீர் செய்வதாகக் குறிப்பிடுகின்றனர். உலகில் உள்ள பல நாகரிகத்தின் தொடக்கம் நீர் நிலைகளின் கரையோரங்கள் என்பதை ஆய்வுலகம் அறிந்து வருகின்றது. இன்று கிடைக்கும் பல்வேறு உலகப்புகழ் பெற்ற அகழாய்வு இடங்கள் அனைத்தும் நீர் நிலகளை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது. நீர்நிலைகள் நன்னீர் உப்புநீர் என இருவகைப்படும். கடல் உப்பு நீர் நிலையாகும். நன்னீர் நிலைகள், அசையும் நீர்நிலைகள் மற்றும் அசையா நீர்நிலைகள் எனஇருவகைப் பகுக்கின்றனர். ஆறு, சுனை, அருவி அசையும் நன்னீர் நிலைகள். குளம், குட்டை, ஏரி அசையா நன்னீர் நிலைகளாகும். எனவே முந்நீர் என்பது அசையும் நன்னீர் நிலை, அசையா நன்னீர் நிலை மற்றும் உப்பு நீர் நிலையைக் குறிக்கிறது. பண்டைத் தமிழரின் நீரியல் அறிவு மகத்தானது. ஆற்று நீர், ஊற்றுநீர், மழைநீர் மூன்றும் இணைந்து கடற்கு முந்நீரென்று பெயராயிற்று என்பர். நிலத்திற்கு

முன்னாகிய நீர் என்றும் உரைப்பர். இத்தகைய பொருள் புலப்பாட்டு தன்மையைக் கொண்டு முந்நீர் என்ற சொல் கட்டமைப்பு ஊடாக ஏற்படும் சில புரிதல்களை ஆய்வு பொருண்மையாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

முந்நீர்

மழை என்ற மாபெரும் கொடை வழங்கியது நீர். முன்+நீர் - முன்பே உள்ள நீர். பழங்கால முதற்கொண்டே நீர் இருத்தலின், முன்னீர் என்றார். முந்நீர் என்றும் வழங்குவர்.

நளி இரு முந்நீர் ஏணி ஆக,
வளி இடை வழங்கா வானம் சூடிய
மண் திணி கிடக்கைத் தண் தமிழ்க் கிழவர்,
முரசு முழங்கு தானை மூவர் (புறநானூறு, பா. 35)

என்ற புறநானூறு பாடல் வரிகள் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை வெள்ளைக்குடி நாகனார் இடித்துரைப்பது போல அமைகின்றது. நாடுகெழுச் செல்வத்துப் பீடுகெழு வேந்தனே! நீர் செறிந்த பெரிய கடலை எல்லையாககாற்று நடுவே ஊடுருவிச் செல்ல முடியாத வானத்தால் சூழ்ந்த மண் செறிந்த இவ்வுலகில் குளிர்ந்த தமிழ்நாட்டிற்கு உரியவராகிய முரசு ஒலிக்கும் படையினை உடைய மூவேந்தருள்ளும் அரசு என்று சிறப்பித்துக் கூறப்படுவது உன்னுடைய அரசுதான்.சேர சோழ பாண்டியர் மூவேந்தர் ஆவர். அவர்களுள் பேரரசு எனப் போற்றப்படுவது நினதே. காவிரி பாயும் சோழ நாடே வளம் மிக்க நாடு என்று போற்றப்படுகிறது. காவிரி பாயும் சோழ நாட்டின் அரசனாகிய உனக்கு ஒன்று கூற விரும்புகிறேன்.முறை வேண்டுவோர்க்குக் காட்சிக்கு எளியனாக இருந்து அவர்கள் குறைகளைக் கேட்டு உதவுவது உன் கடமையாகும். மழை வேண்டும்போது பெய்தால் அது மிக்க பயன்தருவது ஆகும். அதுபோல முறை வேண்டும்போதே குறை தீர்ப்பது நன்மை தருவதாகும்.

நீ ஏந்திய வெண் கொற்றக்குடை வெய்யிலைத் தடுப்பதற்கு அன்று; குடிகளின் துயர்களைக் களைவதற்கு ஆகும்.மற்றும் நீ பெறும் போர் வெற்றிகளுக்கு எல்லாம் அடிப்படை உழவர்தம் உழைப்பும், அவர்கள் தரும் வளனும் ஆகும். உழவர்களைக் காத்து ஒம்புதல் உன் கடமை அன்றோ.மழை பெய்யாது பொய்த்தாலும், நீர் வெள்ளம் அற்றுவிட்டாலும், இயற்கைக்கு மாறாகக் கேடுகள் நிகழ்ந்தாலும் இவ் உலகம் அரசரைத்தான் பழித்துக் கூறும்.உன்பால் அக்கறை கொள்ளாது பொறுப்பில்லாமல் பேசுவாரது சொற்களைக் கொள்ளாது உழவர்களை மதித்து அவர்களுக்கு நன்மை செய்தால் நாடு வளம் பெறும்; பகைவர்களும் உன் அடிபணிந்து வழி மொழிவர்.

தீ நீரோடு உடன் விராஅய்
முந்நீர் உண்டு முந்நீர்ப் பாயுந்து
தாங்கா உறையுள் நல்லூர் கெழீஇய (புறநானூறு, பா. 24)

என்ற பாடலை மாங்குடி மருதனார் பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை பொதுவியல் திணையில் பொருண்மொழிக் காஞ்சித் துறையில் பாடியுள்ளார். முள்ளிப்பூ மாலை சூடிய பரதவர் மகளிர், பனைநுங்கின் நீரும் கருப்பஞ்சாறும் இளநீருடன் கலந்து உண்ட முந்நீர் என்று குறிப்பிடுகிறார். பின்பு கடல் நீரலே பாய்ந்து ஆடியும் மகிழ்வர். பல்வகை மக்கள் வாழும் கடற்கரை நாடு எவ்வியின் மிழலைக்கூற்றம் என்பதில் முந்நீர் என்ற சொல் முதலில் வேறு பெருளிலும் பின்னர் கடலையும் குறிப்பதாக அமைந்துள்ளது. அகநானூற்று பாடல்,

அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்
உணங்குதிறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார் (அகநானூறு, பா. 207)

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

அச்சம் தரும் கடல் நீர் பாய்ந்து, உப்பு வயல்களிலே காய்ந்து வெம்மையால் தம்மை மாறி உப்பாகிய வெண்கல்லான அமிழ்தினை, மேற்குத் திசைப் பகுதிகளுக்கு விற்பனைக்குக் கொண்டு செல்வார்கள். அக்காலத்தில் நிகழ்ந்த வணிகம் பண்டமாற்றம் என்ற முறையில் நிகழ்ந்துள்ளது. உமணர்கள் உப்பு ஏற்றிய வண்டிகளை ஓட்டி சென்றனர். இங்கு முந்நீர் என்பது அணங்கு குடிகொண்டுள்ள அச்சம் உடையது என்று குறிப்பிட்டுள்ளார். அகநானூற்றில் கடல் பிறக் கோட்டிய சேரன் செங்குட்டுவனைப் பரணர் பாடிய பாடல்,

படைநிலா இலங்கும் கடல்மருள் தானை
மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறாஅது விலங்குசினஞ் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பெளவம் நீங்க ஓட்டிய (அகநானூறு, பா. 212)

என்ற பாடல் வரிகள் கடல்போன்ற தன் பெருப் படையுடன் விளங்குபவன். அவன், மின்னலிட்டு வானைப்பிளந்து வலிமையுடன் விளங்கும் கார்மேகத்தைப் போலப் பகைத்து எழுந்தான். கூற்றத்தைப்போன்ற வலிமையுடன் புறப்பட்டான். பல மொழியாளர்களும் விரவியிருக்கும் தன்னுடைய போர்ப்பாசறையைத் தேவையான இடங்களிலே எல்லாம் அமைத்துக்கொண்டு எங்கும் சுற்றினான். அவனுடன் போரிடத் துணிந்த பகைவர்கள் எவரையும் பெறாமற்போக, அதனால் எழும் சினமும் அதிகமாகப், போர் செய்யும் வலிமையுடன் கடலையே வளைத்து முற்றுகையிட்டான்.உயர்ந்த அலைகளையுடைய கடலும் பிறக்கிட்டுப் செல்லுமாறு ஒட்டி வெற்றியும் பெற்றான் என்பதன் மூலம் மூன்று இடங்களில் கடல் என்ற பொருள் தரும் சொல்லைப் பயன்படுத்த பரணர் ஒரு இடத்தில் மட்டும் முந்நீர் என்றும் மற்ற இரண்டு இடங்களில் கடல், பெளவம் என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். சங்க இலக்கியத்தில் முந்நீர் பெரும்பாலும் கடல் என்ற தன்மையில் அமைந்துள்ளது.

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களிஇயல் யானைக் கரிகால் வளவ! (புறநானூறு, பா. 66)

என்ற புறநானூற்று பாடலில் காற்றின் இயல்பை அறிந்து, நீர் நிறைந்த பெரிய கடலில் மரக்கலத்தை ஓட்டிய வலியவர்களின் வழித்தோன்றலே! செருக்குடைய யானைகளையுடைய கரிகால் வளவனே! போருக்குச் சென்று உனது வலிமை தோன்றுமாறு வெற்றி கொண்டவனே! மிகுந்த அளவில் புதிய வருவாய் உள்ள வெண்ணி என்னும் ஊரில் நடைபெற்ற போரில், முதுகில் புண்பட்டதற்கு நாணி, வடக்கிருந்து மிக்க புகழுடன் விண்ணுலகம் எய்திய சேரமான் பெருஞ்சேரலாதன் உன்னைவிட நல்லவன் அல்லனோ? போரில் வெற்றி பெற்றவன் கரிகாலன் அவனை விடுத்து சொல்ல காரணம் தான் என்ன?

கரிகால் வளவன், வெண்ணி என்ற ஊரில் நடைபெற்ற போரில் சேரமான் பெருஞ்சேரலாதனையும், பாண்டிய மன்னன் ஒருவனையும், வேளிர்குலத்தைச் சார்ந்த பதினொரு சிற்றரசர்களையும் வென்றான். அப்போரில் சேரமான் பெருஞ்சேரலாதனின் மார்பில் பாய்ந்த வேல் அவன் மார்பைத் துளைத்து முதுகையும் புண்ணாக்கியது. தன் முதுகில் புண்பட்டதால் அவன் நாணமுற்று வடக்கிருந்து உயிர் துறந்தான். அதைக் கேள்வியுற்ற வெண்ணிக் குயத்தியார், இப்பாடலில், சேரமான் பெருஞ்சேரலாதனின் செயலை வியந்து, கரிகாலனை நோக்கி, “வேந்தே, போரில் வெற்றி பெற்றதால் நீ வெற்றிக்குரிய புகழ் மட்டுமே அடைந்தாய். ஆனால், சேரமான் பெருஞ்சேரலாதன் உனக்கு வெற்றியை அளித்தது மட்டுமல்லாமல், உன்னால் உண்டாகிய புண்ணுக்கு நாணி, அவன் வடக்கிருந்து பெரும்புகழ் பெற்றான். ஆகவே, அவன் உன்னைவிட நல்லவன் அல்லனா?” என்று வெண்ணிக்குயத்தியார் கேட்கிறார். காற்றைப் பயன்படுத்திக் கடலில் கப்பலைச் செலுத்தும் முறையைச் சங்க

காலத்திலேயே தமிழர்கள் அறிந்திருந்தார்கள் என்பது இப்பாடலிலிருந்து அறியமுடிகின்றது. முந்நீர் என்ற சொல் இடம் பெறும் புறநானூற்றுப் பாடல்,

இரு முந்நீர்க் குட்டமும்,
வியன் ஞாலத்து அகலமும்,
வளி வழங்கு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்றாங்கு
அவை அளந்து அறியினும், அளத்தற்கு அரியை (புறநானூறு, பா. 20)

என்ற பாடல் குறுங்கோழியூர்கிழார் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையை பாட்டுடைத் தலைவனாக கொண்டு பாடியுள்ளார். பெரிய கடலின் ஆழம், அகன்ற இவ்வுலகத்துப் பரப்பு, வானத்தில் காற்று செல்லும் திசை மற்றும் வடிவமில்லா நிலைபெற்ற ஆகாயம் என்று சொல்லப்படுபவற்றை அளந்து அறிந்து கொள்ள முடியும் என்றாலும், உனது அறிவும், அன்பு கொண்ட ஈர நெஞ்சமும், பரந்துபட்ட உனது கண்ணோட்டமும் இவ்வளவுதான் என்று வரையறை செய்து அளக்க முடியாத அரியவன் நீ! என குறிப்பிடுகிறது. பதிற்றுப்பத்தில் பெருங்குன்றூர்கிழார் இளஞ்சேரல் இரும்பொறையை பாடும் பொழுது, **“கொளக் குறைபடாமையின் முந்நீர் அனையை!” (பதிற்று., பா. 16)** என்ற பாடல் வரியில் முந்நீர் என குறிப்பிடுகிறார். முந்நீர்– தமிழகம் கிழக்கு தெற்கு மேற்கு ஆகிய மூன்று திசையானும் நீர்வளைவுண்டது. முந்நீர் என்னும் தமிழ்க்கிளவி இம்முப்புறக் கடலமைப்பைச் சுட்டுவது – வ. சுப. மாணிக்கனாரின் ‘தமிழ்க்காதல்’ நூல், ஆற்று நீரும், ஊற்று நீரும் மழை நீரும் உடைமையான் முந்நீர் – ஔவை துரைசாமி புறநானூறு 9 உரை, நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய நீர் – நச்சினார்க்கினியர் மதுரைக்காஞ்சி 75 உரை குறிப்பின் வழி அறியமுடிகின்றது. புறநானூற்று பாடல் .

உரைசால் சிறப்பின் வேந்தர் முன்னர்க்
கரைபொரு முந்நீர்த் திமிலின் போழ்ந்தவர்
கயந்தலை மடப்பிடி புலம்ப
இலங்கு மருப்பு யானை எறிந்த எற்கே (புறநானூறு, பா. 303)

நேற்று, புகழ் மிக்க வேந்தர்கள் கண்முன்னே, கரையை மோதும் கடலைப் பிளந்துகொண்டு செல்லும் படகைப்போல் பகைவர் படையைப் பிளந்து அவர்களுடைய பெரிய தலையையுடைய இளம் பெண்யனைகள் தனிமையுற்று வருந்துமாறு, விளங்கும் கொம்புகளையுடைய களிறுகளை (ஆண்யானைகளை) நான் கொன்றேன். என்று வீரனின் சிறப்பினை குறிப்பிடவும் கடலில் கப்பலை செலுத்திய திறன் போன்ற செய்திகள் காணப்படுகின்றது.

முந்நீர் வழக்கம்

தொல்காப்பியம் முந்நீர் குறித்து குறிப்பிடும் நூற்பா, “முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை” (தொல்.பொரு., நூ. 34) என்று நெறிமுறை சார்ந்த பதிவாக தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். பழந்தமிழ் மக்கள் யாவரும் அகம், புறம் ஆகிய இரண்டு நிலைகளிலும் அறம் சார்ந்த வாழ்வையலையே உயிரினும் மேலானதாகக் கொண்டு ஒழுகினர். அவர்களுள் ஆண்மகன் பொருளீட்டுவதையே தலையான கடமையாகக் கொண்டவன.; பெண்ணானவள், கணவன் அதாவது தலைவன் ஈட்டி வந்த செல்வத்தை தன் குடும்பத்தின் வருவாய்க்குத் தக்க வகையில் பயன்படுத்தி இன்பத்தையும் அறத்தையும் மேம்படுத்திக் குடியோம்பல் செய்வாள். இதனை,

வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்குஆடவர் உயிர் (குறுந்தொகை, பா. 135)

எனும் குறுந்தொகையின் பாடலடி தெளிவுபடுத்துகின்றது. இவ்வகையிலான கற்பு சார்ந்த, பண்பட்ட வாழ்வியல் நிலையில் தலைவன் மேற்கொள்ளும் ஆறு வகையானப் பிரிவுகளில்

தலைவன் எந்த வகையான பிரிவாயினும்,காலினும் கலத்தினும்சென்றாலும்; தலைவியின்; பாதுகாப்பு உள்ளிட்ட நலன்களைக்கருதி அவளை இல்லில் இருத்தித் தான் மட்டுமே பிரிவை மேற்கொள்வான். இங்குக் காலினும் என்பதற்கு நடந்தும், பறந்தும், காற்றுவெளி சார்ந்த வழியென்றும் கொள்ள இடமுள்ளது. ஆதலான் மண்ணுலகத்தவர், விண்ணுலகத்தவர் என்றப் பாகுபாடின்றித் தலைவன் எத்தகு தன்மையராக இருந்தாலும்;,முந்நீராகிய நீர் வழி (சீதை, புனிதவதி), நிலவழி (தமயந்தி), ஆகயம் சார்ந்த வழியாகிய எவ்வழியாயினும் (காயசண்டிகை),தலைவியைத் தன்னுடன் அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. முந்நீர் வழக்கம்' என்பதற்கு இளம்பூரணர் கப்பல் வழியாகக் கடலிற் செல்லும் பிரிவு என்று உரை கூறுவர். முந்நீர் என்பது கடல். ஆனால் நச்சினார்க் கினியர் 'ஓதல், தூது, பொருள்' ஆகியமூன்று நீர்மையால் செல்லும் பிரிவு என்று பொருள் கூறுவர். இளம்பூரணர் கருத்துப்படி கடல் வழியாக மகளிரைக் கூட்டிச் செல்லும் வழக்கம் இல்லாவிடினும், தரைவழியாகச் செல்லும் பிரிவில் தலைவியைக் கூட்டிச் செல்லும் வழக்கம் உண்டு என்று அருத்தாபத்தியால் பெறப்படுகின்றது. ஆனால், நச்சினார்க்கினியர் கூறுவது போல, தலைவியை உடன் கூட்டிச் செல்லும் புலனெறி வழக்காகச் சான்றோர் செய்யுட்களை இயற்றவில்லையாதலின், அவ்வழக்கம் தமிழர்களிடையே என்றும். இருந்ததில்லை என்று கருத வேண்டியுள்ளது. இன்றும் செட்டி நாடு போன்ற பகுதிகளில் வாழும் தனவணிகரும் அவரைச் சார்ந்த பிறரும் மலேயா போன்ற பிற நாடுகளுக்குச் செல்லும்பொழுது உரிமை மகளிரைக் கூட்டிச் செல்வதில்லை. முந்நீர் வழிபாடு குறித்து நற்றிணை,

ஒள் நுதல் மகளிர் ஓங்கு கழிக் குற்ற
கண் நேர் ஒப்பின கமழ் நறு நெய்தல்
அகல் வரிச் சிறு மனை அணியும் துறைவ!
வல்லோர் ஆய்ந்த தொல் கவின் தொலைய,
இன்னை ஆகுதல் தகுமோ ஓங்கு திரை
முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி,
ஏமுற விளங்கிய சுடரினும்,
வாய்மை சான்ற நின் சொல் நயந்தோர்க்கே? (நற்றிணை, பா. 283)

என்ற பாடல் வரிகளில் பகற்குறி வந்த தலைமகனைத் தோழி வரைவு கடாயது; கடிநகர் புக்க தோழி பிற்றை ஞான்று,வேறுபடாது ஆற்றினாய்'' என்று சொல்லியதூஉம் ஆம் என்ற வழி மதுரை மருதன் இளநாகனார் பாடியுள்ளார்.ஒள்ளிய நெற்றியையுடைய நுளைச்சியர் அகன்ற கழியின்கண்ணே பறித்துவந்த மகளிர் கண்ணை நேராக ஒத்தலையுடைய மணங்கமழ்கின்ற நறிய நெய்தன் மலர்; அகன்ற கையாலே கோலஞ்செய்த சிறிய மனையை அலங்கரிக்குந் துறையையுடைய தலைவனே!; உயர்ந்து வரும் அலையையுடைய கடலின்மீது பலருந் தொழுமாறு தோன்றி யாவரும் மகிழ விளங்கிய ஞாயிற்றினுங் காட்டில் வாய்மை விளங்கிய; நினது சொல்லை விரும்பிய எம்மிடத்துள்ள; அறிவுடையோரால் ஆராய்ந்து கண்ட பழைய அழகு கெடும்படியாக; நீ இத் தன்மையை உடையையாயிருத்தல் தகுதியுடையதொரு காரியமாகுமோ? ஆதலின் ஆராய்ந்து ஒன்றனைச் செய்வாயாக!; என்று முந்நீரில் தோன்றும் ஞாயிற்றினை வழிபட்டதாக குறிப்பிட்டுள்ளார். முந்நீர் நிறம் எப்படி இருக்கும் என்று பெரும்பாணாற்றுப்படை,

இரு நிலம் கடந்த திரு மறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை அ நீர் (பெரும்பாணாற்றுப்படை, பா. 30)

என்ற பாடல் வரிகளில் திரையன் திருமாலின் வலம்புரிச் சங்கம் போன்றவன். அவன் திரையர் குடியில் தோன்றிய திரையன். பலவகையான வேல்களைப் பல்வேறு விசைப் பாங்குகளில் வீசக்கூடியவன். அவன் திருமாலின் பிறங்கடை (வாரிசு). திருமால் நிலத்தைக் கடந்தவர். செல்வத் திருமகள் அமர்ந்து மணம் வீசும் மார்பினை உடையவர். கடல் நிறத்தில் காட்சி

தருபவர். கடலின் திரையில் (அலையில்) மிதந்து வந்து அரசுக்கட்டில் ஏறிய அரச மரபினரின் கால்வழியினர் திரையர் எனப்பட்டனர். அம்மரபில் வந்தவர்களில் உயர்ந்தோங்கிய யானை போன்றவன், இந்தத் தொண்டைமான் இளந்திரையன். உலகிலுள்ள உயிரினங்களைக் காக்கும் மூவேந்தர்களைச் சங்கு என்றால் இந்த இளந்திரையன் அச் சங்குகளிலே சிறந்து விளங்கும் வலம்புரிச் சங்கு போன்றவன். மறப்போரை விலக்கிவிட்டு அறத்தை மட்டுமே செய்யும் செங்கோல்தான் அவன் ஆட்சி. நீங்களும் அவனை நினைத்துக்கொண்டு செல்லுங்கள். முந்நீர் வண்ணம் திருமால் வண்ணமாக கருநீலக்கடல் என்ற குறிப்பு இடம்பெறுகின்றது. நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியில் முந்நீர் ஞாலம் என்ற பகுதி உண்டு.

முந்நீர் ஞாலம் படைத்த
எம் முகில் வண்ணனே ! (திரு.3.2.1)

என்ற பாடல் வரிகள் வழி முந்நீரால் சூழப்பட்ட உலகம் கார்முகில் வண்ணன் நிறத்தில் அமைந்துள்ளது. பிறவிப்பெருங்கடலை அறுத்து எந்நாள் நான் உன்னை வந்து சேர்வது என்று கூறும் வகையில் அமைந்துள்ளது. அரசன் குடிமக்களுக்கு நீதி வழங்கும் போது முந்நிரின் நடுவில் தோன்றும் ஞாயிறு போல் விளங்கினான் என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

முந்நீர் விழா

முந்நீர் விழா என்று பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி கொண்டாடிய குறிப்பு சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. நெட்டிமையார் புலவரின் பாடல்,

ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தில்
கொல்களிறு மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி; தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈந்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணிலினும் பலவே...(புறநானூறு, பா. 9)

என்ற பாடல் வரிகள் போர் அறத்தினை வலியுறுத்துகிறது.பசுக்களும், பசுக்களைப் போன்ற பார்ப்பன மக்களும், பெண்களும், நோயுற்றவர்களும், தாம் இறந்த பிறகு தமக்கு இறுதிச் சடங்குச் செய்ய தகுந்த புதல்வனைப் பெறாதோர்களும் (பிள்ளைப் பேறு இல்லாதவர்களும்). ஆகியோர்களிடமெல்லாம் "நாங்கள் அம்பை ஏவப்போகிறோம்..போர்மூளப் போகிறது.. உங்களுக்குப் பாதுகாப்பான இடத்தைச் சேருங்கள்" என அறநெறி கூறும் கொள்கையும் அதற்கேற்ற வீரமுமுடைய தலைவன் முதுகுடுமியாகிய நீ, கொலைவலிய யானையின் மேல் எடுக்கப்பட்ட கொடி வானில் நிழல் செய்யும் நிழல் போன்று வாழ்வாயாக..செம்பொன்னைக் கூத்தர்க்கு வழங்கிக் கடல் தெய்வத்திற்கு விழா எடுத்த உன்னுடைய முன்னோன் நெடியோனால் உண்டாக்கப்பட்ட பஃறுளியாற்றின் மணலிலும் மிக்கக்காலம் வாழ்வாயாக... என்று பொருள் வழி பாண்டியன் முன்னோர்களே முந்நீர் விழா கொண்டாடியுள்ளனர் என்பது தெளிவாகிறது. கி.வா.ஜகநாதன் முந்நீர் விழா என்று நூல் ஒன்றை எழுதியுள்ளார். வைகை நீராட்டு விழா முந்நீர் விழா போல் இருந்ததாக “கரை பொருது இரங்கும் முந்நீர் போல” என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. முந்நீர் முழக்கம் போல் கடல் ஓசை போல் மதுரையில் முரசு முழக்கம் கோட்டதாக “மா கால் எடுத்த முந்நீர் போல” என்று முரசு முழக்கத்தினை முந்நீர் முழக்கம் என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

முடிவுரை

முந்நீர் என்ற சொல் கடலை குறிப்பதாக சங்க இலக்கியம் பல இடங்களில் குறிப்பிடுகிறது. கடலுக்கு நீர் ஆதாரம் மூன்றின் மூலமாக கிடைத்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. எல்லாவற்றிற்கும் முதன்மைக் காரணம் மழை என்ற குறிப்பும் உள்ளது. பிற்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியத்தில் முக்கூடற் பள்ளு என்ற இலக்கியத்தில் மூன்று நதிகள் சங்கமிக்கும் இடம் என்ற குறிப்பு காணப்படுகிறது. பாண்டியன் கீழைக்கடல் மேலைக்கடல் என்று இரண்டு கடற்கரையில் கால் நனைத்து பின்பு தெற்கு கடற்கரை பிடிக்க எண்ணி, போர் தொடுத்து வெற்றி பெற்றதன் வழியாகவே முந்நீர் விழா எடுத்தான் என்று கி.வா.ஜகந்நாதன் குறிப்பிடுகிறார். கடல்கள் சங்கமிக்கும் இடத்தை முந்நீர் என்று குறிப்பிடவும் வாய்ப்புள்ளது. மகளிர் முந்நீர் வழக்கம் செல்வதில்லை என்ற விதி சங்க காலத்திற்கு உண்டு.

குறிப்புகள்

[1] பி.ஸ்ரீ ஆச்சாரியா. *நம்மாழ்வார் திருவாய்மொழி*. வி.கே. புக் இன்டர்நேஷனல், சென்னை, 2013.
[2] இளம்பூரணர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், சென்னை, 2005.
[3] முனைவர் வே.சண்முகம். “முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை” செந்தமிழ் டிடிஇ வலைப்பதிவு, 24.09.2018. https://shantamildde.blogspot.com/2018/09/blog-post_10.html
[4] உ. வே. சாமிநாதய்யர். *குறுந்தொகை (மூலமும் உரையும்)*. கபீர் அச்சுக்கூடம், சென்னை.
[5] ச.வே.சுப்பிரமணியம். *சங்க இலக்கியம்*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2013.
[6] ந.சுப்புரெட்டியார். *தொல்காப்பியம் கொட்டும் வாழ்க்கை*. பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2011.
[7] முனைவர் இரா. செயபால். *அகநானூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[8] அ. தட்சணாமூர்த்தி. *ஐங்குறுநூறு (தொகுப்பு -1)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[9] பரிமேலழகர். திருக்குறள். திருமகள் நிலையம்.சென்னை, 1998.
[10] பாலசுப்ரமணியம். *நற்றிணை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[11] ஞா. மாணிக்கவாசகன். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)*. உமா பதிப்பகம், சென்னை.
[12] ஞா. மாணிக்கவாசகன். *புறநானூறு (மூலமும் உரையும்)*. உமா பதிப்பகம், சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Food Culture of the Neithal Land Ethnic Groups

A. Sahaya Susi, Research Scholar of Tamil, Reg No: 241130601012, Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-7244-734X
Dr. S. Elamaran, Assistant Professor of Tamil, Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980
DOI: 10.5281/zenodo.21791148

Abstract

This study examines the lifestyle traditions of the ancient Tamil tribal communities, with particular reference to the Neithal tribal society. It explores the egalitarian social structure that prevailed before the Sangam period and analyzes the close relationship between the people and their natural environment. The study focuses on the livelihood practices, food traditions, and the cultural significance of material objects that shaped the everyday life of the Neithal community. It highlights how food habits served as cultural markers and reflected the customs, beliefs, and social organization of the people. The research also investigates the role of traditional material objects, such as household and occupational implements, in preserving cultural continuity while demonstrating the gradual impact of technological change. By examining these aspects, the study provides valuable insights into the socio-cultural life, indigenous knowledge, and environmental adaptation of the ancient Tamils. It concludes that the study of tribal communities, food culture, and material culture is essential for understanding the historical development, cultural heritage, and social identity of Tamil society, particularly in the context of the Neithal landscape.

Keywords: Neithal, Sangam Literature, Food Culture, Ethnic Communities, Cultural Anthropology

References

[1] Arangaraj, Je. *Pazhanthamizh Ilakkiyangalil Urthigalum Uppum Meengalum*. Semmozhith Thamizh Aivu Maththiya Niruvanam, 2024.
[2] Seyapal, Ira. *Agananooru*. New Century Book House, 2017.
[3] Thilagavathi, Mu. *Sangga Kala Magalir Vazhviyal*. Irayarul Pathippagam, 2001.
[4] Nagarasan, Vi. *Paththuppattu*. New Century Book House, 2017.
[5] Paramasivan, Tho. *Panpattu Vazhviyal*. New Century Book House, 2023.
[6] Bhaktavatsala Bharathi. *Thamizar Unavu*. Kalachuvadu Pathippagam, 2025.
[7] Balasubramaniyan, Ku.Ve. *Narrinai*. New Century Book House, 2017.
[8] Mohan, Ira., editor. *Paththuppattu*. New Century Book House, 2017.
[9] Rejithkumar, Tha. *Nattupura Iyal*. New Century Book House, 2023.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

நெய்தல் நில இனக்குழுக்களின் உணவுப் பண்பாடு

அ. சகாய சுசி, முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவெண் : 241130601012, தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-7244-734X
முனைவர் சு. இளமாறன், உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980
DOI: 10.5281/zenodo.21791148

ஆய்வுச்சுருக்கம்

தமிழர் தொன்மையான இனக்குழுச் சமூகத்தின் வாழ்வியல் மரபுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது. சங்க காலத்திற்கு முன் நிலவிய இனக்குழுச் சமுதாயத்தின் சமத்துவ வாழ்க்கை, இயற்கையைச் சார்ந்த வாழ்வாதார முறைகள், உணவுக் குறியீடுகள் மற்றும் புழங்குபொருட்களின் பண்பாட்டுப் பங்கு ஆகியவை இவ்வாய்வின் மையக் கருத்துகளாக அமைகின்றன. நெய்தல் இனக்குழுச் சமுதாயத்தில் குழு ஒற்றுமை, இயற்கையோடு இணைந்த வாழ்க்கை மற்றும் உணவு சார்ந்த மரபுகள் சமூகத்தின் அடையாளங்களாக விளங்கியமை விளக்கப்படுகிறது. மேலும் நெய்தல் சமூகத்தின் அடையாளங்கள் விளக்கப்படுகிறது. மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்திய புழங்குப் பொருட்கள் பண்பாட்டின் தொடர்ச்சி மற்றும் தொழில்நுட்ப மாற்றங்கள் ஆகியவற்றின் பிரதிபலிப்பு யாவும் தெளிவுப்படுத்தப்படுகிறது. இவ்வாய்வின் மூலம் நெய்தல் இனக்குழு உணவு மற்றும் புழங்குப் பொருட்கள் ஆகியவை தமிழர் வாழ்வியல், பண்பாடு மரபு மற்றும் சமூக வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கான முக்கியமான ஆய்வுக் கூறுகளாக விளங்குகின்றன.

குறிப்புச் சொற்கள்: சங்க இலக்கியம், நெய்தல் நிலம், இனக்குழுக்கள், உணவுப் பண்பாடு.

முன்னுரை

தமிழர் தொன்மையான வாழ்வியலைப் புரிந்துகொள்வதில் இனக்குழுச் சமூகங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. குறிப்பாக, நெய்தல் இனக்குழு மக்களின் இயற்கை சார்ந்த வாழ்க்கை, உணவுக் குறியீடுகள் மற்றும் பழங்குப்பொருட்கள் அவர்களின் பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்துகின்றன. இவ்வாய்வு, இக்கூறுகளின் வழியாக நெய்தல் மக்களின் வாழ்வியல் மரபுகளையும் சமூக வரலாற்றையம் ஆராய்கிறது.

இனக்குழு

சங்க காலத்திற்கு முன் தமிழகத்தில் நிலை கொண்டிருந்த சமுதாயம், இனவேறுபாடற்ற சமுதாயம் ஆகும். அச்சமுதாயம், இனக்குழுச் சமத்துவ வாழ்க்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. இனக்குழுகளாக வாழ்ந்த மக்கள் வேட்டையாடியும், உணவு சேகரித்தும் வாழ்க்கை நடத்தி வந்தனர். இனக்குழுச் சமுதாயத்தில் குழு ஒற்றுமையும், குல சமத்துவமும் வலிமையாக இருந்தன. இயற்கையோடு போராடுவதற்குத் தேவையான கருவித் தொகுதிகள் இவர்களிடம் இல்லை. இயற்கையை எதிர்த்துப் போராடி அவர்கள் தங்கள் உணவைப் பெற்றனர். இனக்குழுச் சமுதாயத்தில் கள் முக்கிய இடம் பெற்றிருந்தது. சங்க காலம், குடும்பம், சமுதாயம், அரசு என வளர்ச்சி அடைந்த ஒரு சமூக வாழ்க்கையைக் கொண்டு விளங்கியது. (சங்க கால மகளிர் வாழ்வியல், ப. 22)

உணவு

மனிதன் உயிர்வாழ மூன்று இன்றியமையாத பொருள்கள் தேவைப்படுகிறது. அவை. 1.

உணவு, 2. உடை, 3. உறைவிடம் இவற்றில் முதன்மையாக விளங்குவது உணவேயாகும். பசி வந்ததும் பத்தும் பறந்து போகும் என்பது பழமொழி. தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார் மகாகவி பாரதி. எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும். இல்லையேனில் இந்நாடு அழிய வேண்டும் என கவிஞர் கண்ணதாசன் தனது பாடல் வரிகளில் சுட்டுகிறார். உணவு என்பது பண்பாடு மட்டுமல்ல உயிர் வாழ தெம்பினைத் தரும் அருமருந்தாகும். தம்மை நாடி வருபவர்களுக்கு நெய்தல் நில மக்கள் இறைவனுக்குப் படைப்பது போன்று தேக்கிலையில் புல்லரிசிச் சோற்றைக் கருவாட்டோடு சேர்த்து தருவதை தம்முடைய மரபாகக் கொண்டிருந்தனர்.

தெய்வ மடையிற் றேக்கிலைக் குவைஇநும்
பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவிர் (பெரும்பாணாற்றுப்படை, பா. 104-105)

என்னும் பாடல் அடிகளில் மூலம் அறியமுடிகிறது.

உணவுக் குறியீடு

தண்ணீரும் உணவும் மனித உடலை வளர்ப்பன. உணவு என்பது இயற்கையும் செயற்கையும் ஆகிய பொருட்களால் ஆனது. மனிதகுலத்தில் மக்கள் இனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே உணவு நெறிகள் உண்டு, விதிக்கப்பட்டவற்றை உண்பது, விதிக்கப்பட்ட நேரத்தில் உண்பது, விதிக்கப்பட்ட முறையில் உண்பது, விதிக்கப்பட்ட சடங்கியல் அசைவுகளோடு உண்பது என மக்கள் திரள்களின் உணவுப் பழக்கவழக்கங்களைப் பல்வேறு வகையில் அணுகலாம். இதற்கு எதிர்நிலையாக விலக்கப்பட்ட முறை, உணவு, காலம், அளவு, பொருட்கள் என்றும் மனிதர்களின் உணவுப் பழக்கவழக்கங்களைப் பகுத்துக் காண முடியும். ஆனால், குறியீடுகள் அனைத்தும் இனக்குழுச் சமூகங்களில் அதிகாரச் சார்பின்றிப் பிறந்தவை என்பதே மனிதகுல வரலாறு காட்டும் உண்மையாகும். (பண்பாட்டின் வாழ்வியல், ப. 28)

புழங்குபொருளும் பண்பாடும்

பண்பாடும் புழங்குப்பொருட்களும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. ஏனெனில் புழங்குப்பொருட்கள் அனைத்தும் பண்பாட்டோடு ஒன்றிணைந்தே காணப்படுகின்றன.அவை பண்பாட்டு மாற்றத்திற்கு ஏற்ப மாறுபட்டுக் காணப்பட்டாலும் மக்களின் வாழ்வியலோடு ஒன்றியே காணப்படுகின்றன.பொருளும், பண்பாடும் நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை. மக்கள் முற்காலத்தில் மசாலாப் பொருட்களை அரைப்பதற்கு அம்மியும் குழவியும் பயன்படுத்தினர்.ஆனால் நவீன வளர்ச்சியின் காரணமாக 'மிக்ஸி' என்ற இயந்திர பொருள் பரவலாக மகக்ளின் பயன்பாட்டில் இருந்து வருகின்றமையை நாம் காணமுடிகிறது.மக்கள் தானியங்களை இடிப்பதற்கும்,பொடிப்பதற்கும் உரல், உலக்கைகளைப் பயன்படுத்தினர். உலக்கை என்னும் சொல்லிற்கு தமிழ் அகராதி தானியங்களை உரல்இட்டு இடிக்க அல்லது குத்தப் பயன்படும், முனையில் இரும்பு பூண் பொருத்தப்பட்ட உருண்டை வடிவ நீண்ட மரச்சாதனம் என்று பொருள் தருகிறது என்கிறார் டாக்டர் த. ரெஜித்குமார். (நாட்டுப்புற இயல், ப. 212)

நெய்தல் நில உணவு

நெய்தல் நிலத்தில் மீன் வகைகள், இறைச்சி, ஆமை ஆகியவை இன்றியமையாத உணவாக இருந்தன என்பதைப் புறநானூறு, நற்றிணை, அகநானூறு, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய சங்க நூற்கள் குறிப்பிடுகின்றன. மீனை உலர வைத்தல், இறைச்சிக்காகப் பன்றி வளர்த்தல் ஆகியன உணவு வகைகளின் புதுவரவுகளாக அமைகின்றன. சங்க காலச் சமூகத்தில் காணப்பெற்ற வேடர், எயினர், பரதவர், ஆயர், குறவர், உமணர் போன்ற இனக்குழுக்கள் தாம் சார்ந்திருந்த நிலைக்களன்களின் இயற்கை வளங்களிலிருந்து கிடைக்கும் உணவு வகைகளை அடையாளம் கண்டிருந்தனர். (தமிழர் உணவு, ப. 111)

நெய்தல் நில இயல்பு

முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்
அரம் போழ்ந்து அறுத்த கண்நேர் இலங்கு வளை
பரதர் தந்த பல்வேறு கூலம்
இருங்கழிச் செறுவின், தீம்புளி, வெள் உப்பு
பரந்து ஓங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழு மீன் குறைஇய துடிக்கண் துணியல்
விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்ம்மார் (மதுரை., பா. 315-321)

என்னும் பாடலில் நெய்தல் நிலத்தின் இயல்பு விளக்கப்பட்டுள்ளது. முழங்கு கடல், முத்து, சங்கு, பரதர்தரும் பொருட்கள், வெள்உப்பு, தீம்புளி, கானல் மீன், நாவாய் ஆகிய பொருட்களும், கடல் வாணிகம், முத்துக்குளித்தல், சங்கு அறுத்து வளையல் செய்தல், உப்பு எடுத்தல், மீன் பிடித்தல், மீன் வாணிகம், மேலைநாட்டுக் குதிரைகள் மரக்கலங்களில் வந்து இறங்குதல், இந்நாட்டு அணிகலன்கள் பிறநாடுகளுக்கு அனுப்பப்படுதல், முத்து, சங்கு, கூலம் ஆகியவற்றை ஏற்றிய மரக்கலங்கள் செல்லுதல் ஆகிய செயல்களும் குறிக்கப்பட்டுள்ளன.

கள்

கடல் நீரில் ஒதுக்கிய அகில் மர விறகால் தீயினை எரித்து, பெருந்தோளையும் மதிமுகத்தையும், வேல் பார்வையும் உடைய நுளைமகள் காய்ச்சி அரித்த கள்ளோடு குழல் மீனையும் வீட்டிற்கு வந்த பரதவர் உண்ணக் கொடுத்தாள் என்பதை,

வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்
கரும்புகைச் செந்தீ மாட்டி, பெருந்தோள்
மதியேக்கறூஉம் மாசுஅறு திருமுகத்து
நுதிவேல் நோக்கின், நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்ப
... வறற்குழற் சூட்டின், வயின்வயின் பெறுகுவிர் (சிறுபாணா., பா. 154-163)

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

பல்வகை மீன்கள்

கடற்கரையை ஒட்டிய நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பழந்தமிழர்கள் முதன்மைத் தொழிலாக மீன் பிடித் தொழிலைக் கொண்டிருந்தமையால் அவர்கள் பல்வகைப்பட்ட மீன் வகைகளை அறிந்திருந்தனர். கடல்வாழ் மீன்களாக அயிலை, குழல்மீன், கோட்டுமீன், சுறாமீன், வாள்சுறாமீன், பெருமீன் ஆகியனவாகும்.

மீன் (அயிலை)

உப்பு விற்று வாங்கி வந்த நெல்லாய் ஆக்கப்பட்ட முறுவல் போன்ற வெண் சோற்றோடு அயிலை மீனை இட்டு ஆக்கிய சுவை மிகுந்த புளிங்கறியை அதிலே ஊற்றிக் கொழுமீன் கருவாட்டுடன் தன் தந்தைக்கு அவனுடைய இளமை பொருந்திய மகள் உணவாகக் கொடுப்பாள் என்பதை,

நெடுந் திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு
உப்பு நொடை நெல்லின் மூரல் வெண் சோறு
அயிலை துழந்த அம் புளிச் சொரிந்து,
கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும் (அகம்., பா. 60 3-6)

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

மீன் (குழல்)

குழல்மீனைத் தற்காலத்தில் முரல் என்கின்றனர். இம்மீன் கடல்வாழ் மீன் வகையைச் சார்ந்தது. இதன் வாய்ப்பகுதி நீண்டு குழல்போல் காணப்படுவதால், குழல்மீன்

எனப்பட்டதாகக்கொள்ளலாம். உடல் குட்டையாக உள்ள மீன் ‘குழல்மீன்’ என்றும் உடல் நீண்டு உள்ள குழல்மீன் ‘ஊசிமுரல்’ என்றும் இக்காலத்தில் வழங்கப்படுகிறது.நன்னீரிலும் வெளிர்நிற முரல்மீன்கள் உள்ளன. இவை ‘ஊசிமீன்கள்’ என அழைக்கப்படுகின்றன. (பழந்தமிழ் இலக்கியங்களில் ஊர்திகளும் உப்பும் மீன்களும், ப.159)

கோட்டுமீன்

கோட்டுமீன் மிகுந்த பொருளைத் தரவல்லது. இம்மீன்களின் விலை மற்ற மீன்களைக்காட்டிலும் சற்றுக் கூடுதலாகவே காணப்படும்.இக்கோட்டுமீன்களை நிறையப் பிடித்த பரதவர்கள் பொருட் பற்றாக்குறை இன்றி இருப்பதால், மீண்டும் உடனே கடல்மேற்செல்லாமல் தங்கள் மனையகத்தே மகிழ்ந்திருப்பார்கள். இதனை,

கோட்டுமீன் எறிந்த உவகையர் வேட்டமடிந்
தேமரும் அல்கினர் ஏமார்ந் தனமெனன (நற்., பா. 49: 5-6)

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

வாள் சுறா

திமிலின்கண் கடல்மேற்சென்ற பரதவர்கள் அங்கு வாள்சுறாவும் பல பெரிய மீன்களையும் வேட்டம்செய்து அவை மிகப்பெரிதாக இருந்தமையாலும் அவற்றால் புண் ஏற்படும் என்பதாலும் அவற்றைத் துண்டித்துத் திமில் சிறியதாக இருப்பதால் தங்கள் திமில்களுடன் கொண்டுச் சென்ற தோணிகளில் அவற்றைப் போட்டுக் கரைக்குத் திரும்பினர். இதனை,

திமில்மேற் கொண்டு திரைசடசுரம் நீந்தி
வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி
நிணம்பெய் தோணியர் இகுமணல் இழித்தரும் (நற்., பா. 111: 6-8)

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

முடிவுரை

சங்க இலக்கியங்கள் தமிழரின் தொன்மையான வாழ்வியலைப் பதிவு செய்த இலக்கியச் சான்றுகளாக மட்டுமல்லாது, அவர்களின் பண்பாட்டு மானிடவியல் ஆவணங்களாகவும் திகழ்கின்றன.அவற்றுள் நெய்தல் நில இனக்குழுக்களின் உணவுப் பண்பாடு, கடல்சார் சூழலியல், தொழில்முறை அறிவு, சமூக உறவுகள் மற்றும் வாழ்வியல் நெறிகளோடு ஆழமாகப் பின்னிப் பிணைந்திருந்ததை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. மீன், உப்பு, கள், கருவாடு போன்ற உணவுப் பொருட்கள் வெறும் உணவுத் தேவையை நிறைவு செய்தவையாக அல்லாமல், இயற்கையை மையமாகக் கண்ட வாழ்க்கைமுறையின் பண்பாட்டு அடையாளங்களாக விளங்கியுள்ளன. மேலும், உணவுமுறைகளின் வழியாக இனக்குழு மக்களின் சுற்றுச்சூழல் அறிவு, வளங்களைப் பகிர்ந்துகொள்ளும் மனப்பாங்கு, விருந்தோம்பல், தொழில்சார் திறன் மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவை வெளிப்படுகின்றன. இதனால் உணவுப் பண்பாட்டை ஆராய்வது என்பது உணவு வகைகளைப் பட்டியலிடுவது மட்டுமல்ல, ஒரு சமூகத்தின் வரலாறு, பண்பாடு நினைவகம் மற்றும் வாழ்வியல் சிந்தனைகளை மீள்கட்டமைக்கும் அறிவியல் அணுகுமுறை என்பதும் தெளிவாகிறது.

குறிப்புகள்

[1] அரங்கராஜ், ஜெ. *பழந்தமிழ் இலக்கியங்களில் ஊர்திகளும் உப்பும் மீன்களும்.* செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 2024.
[2] செயபால், இரா. *அகநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2017.
[3] திலகவதி, மு. *சங்க கால மகளிர் வாழ்வியல்.* இறையருள் பதிப்பகம், 2001.
[4] நாகராசன், வி. *பத்துப்பாட்டு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2017.
[5] பரமசிவன், தொ. *பண்பாட்டு வாழ்வியல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2023.

[6] பக்தவத்சல பாரதி. *தமிழர் உணவு*. காலச்சுவடு பதிப்பகம், 2025.
[7] பாலசுப்பிரமணியன், கு. வெ. *நற்றிணை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2017.
[8] மோகன், இரா., (பதி.)*பத்துப்பாட்டு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2017.
[9] ரெஜித்குமார், த. *நாட்டுப்புற இயல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2023.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026
E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Values of Love Shown in the Periyapuranam and the Naladiyar from a Comparative Perspective

Mrs. M. Nagalakshmi, PhD Research Scholar (P6055), Mannar Thirumalai Nayakkar College, Pasumalai, Affiliated to Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-3133-8082
Dr. K. Devi Bhuma, Assistant Professor of Tamil, Mannar Thirumalai Nayakkar College, Pasumalai, Affiliated to Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-5708-1890
DOI: 10.5281/zenodo.21791204

Abstract

The objective of this study is to examine the similarities, differences and differences in the concepts of love in the two literatures of Periyapuranam and Naladiyar and how they are relevant to today's social life and human thought. Though Periyapuranam and Naladiyar differ in time and religious background, both consider love as the highest value of human life n Naladiyar, the values of love are studied in the form of compassion, charity, non-harm to others, discipline, gratitude, humanity, while in the Periya Puranam, the values of love are studied in terms of love for God, love shown to servants and love for living beings. In Naladiyar, the values of love are examined in the form of compassion, charity, non-harm to others, discipline, gratitude, humanity, while in the Periya Puranam, the values of love are expressed in the form of love for God, love shown to servants and love for living beings. Periyapuranam and Naladiyar are taken as the source of the article. Evidence is given in the form of footnotes.

Keywords: *Periyapuranam*, *Naladiyar*, Analogy, Love, Values.

References

[1] *Pathinen Kilkkanakku Noolgal Mulamum Uraiyum*. Varthamanan Pathippagam, 2022.
[2] Madurai Muthaliyar, Ku., commentator. *Naladiyar*. Monarch Graphics, 2009.
[3] Mohan, Ira. *Oppiyal Sinthanaigal*. Manivasagar Pathippagam, 2004.
[4] Sakunthalai, Sa. *Periya Puranam Eliya Vasanam*. Mangai Veliyitu, 2010.
[5] Thiru.Vi.Ka. *63 Nayanmar*. Manivasagar Noolagam, 2010.
[6] Arunachalam, Pa., Doctor. *Bhakthi Ilakkiyam*. Maheen Printers, 2014.
[7] Natarasan, Pi.Ra., Pulavar. *Thiruthondar Puranam Ennum Periya Puranam Mulamum Uraiyum Muthal Paguthi*. Uma Pathippagam, 2012.
[8] Natarasan, Pi.Ra., Pulavar. *Thiruthondar Puranam Ennum Periya Puranam Mulamum Uraiyum Irandam Paguthi*. Uma Pathippagam, 2012.
[9] Natarasan, Pi.Ra., Pulavar. *Thiruthondar Puranam Ennum Periya Puranam Mulamum Uraiyum Moonram Paguthi*. Uma Pathippagam, 2012.
[10] Natarasan, Pi.Ra., Pulavar. *Thiruthondar Puranam Ennum Periya Puranam Mulamum Uraiyum Nankam Paguthi*. Uma Pathippagam, 2012.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

ஒப்பியல் நோக்கில் பெரியபுராணமும் நாலடியாரும் காட்டும் அன்பின் விழுமியங்கள்

திருமதி மா. நாகலட்சுமி, முனைவர் பட்ட ஆய்வாளர் (P6055), மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றது, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-3133-8082
முனைவர் கோ.தேவி பூமா, உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றது, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-5708-1890
DOI: 10.5281/zenodo.21791204

ஆய்வுச் சுருக்கம்

மனித வாழ்வின் மிக முக்கிய பண்புகளில் தலையாயது அன்பு ஆகும். மனிதனை மனிதனாக்கும் உயரிய விழுமியங்களுள் முதன்மையானது அன்பு. பெரியபுராணமும் நாலடியாரும் காலத்தாலும் சமயப் பின்னணியாலும் வேறுபட்டிருந்தாலும், இரண்டும் அன்பை மனித வாழ்க்கையின் உயர்ந்த விழுமியமாகக் கருதுகின்றன. ஒப்பியல் ஆய்வு என்பது இரண்டு இலக்கியங்களில் இடம்பெறும் கருத்துகளை ஒப்பிட்டு, அவற்றின் ஒற்றுமை, வேற்றுமை மற்றும் தனித்துவங்களை ஆராய்வதாகும். நாலடியாரில் அன்பின் விழுமியங்களை இரக்கம், ஈகை, பிறர்க்குத் தீங்கு செய்யாமை, ஒழுக்கம், நன்றியுணர்வு, மனிதநேயம் என்ற வகையிலும் பெரியபுராணத்தில் அன்பின் விழுமியங்களை இறைவனிடத்தில் வைத்துள்ள அன்பு, அடியார்களிடத்தில் காட்டப்படும் அன்பு உயிர்களிடத்திலான அன்பு என்ற வகையிலும் ஆராய்ந்து கட்டுரை படைக்கப்பட்டுள்ளது. கட்டுரையின் மூல ஆதாரமாகப் பெரியபுராணமும், நாலடியாரும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விரு இலக்கியங்களில் காணப்படும் ஒப்பியல் செய்திகள் தொகுப்புரையாகவும் முடிவுரையாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. சான்றாதாரங்கள் அடிக்குறிப்புகளாக தரப்பட்டுள்ளன. பெரியபுராணம், நாலடியார் இரு இலக்கியங்களிலும் இடம்பெறும் அன்பின் கருத்துகள், இன்றைய சமூக வாழ்வுக்கும் மனிதநேய சிந்தனைக்கும் எவ்வாறு பொருந்துகின்றன என்றும் அன்பைப் பற்றி கூறும் கருத்துகளில் காணப்படும் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை ஒப்பியல் நோக்கில் ஆராய்வதும் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

குறிப்புச்சொற்கள்: *பெரியபுராணம்*, நாலடியார், ஒப்பியல், அன்பு, விழுமியங்கள்.

முன்னுரை

மனித வாழ்வின் மிக முக்கிய பண்புகளில் தலையாயது அன்பு ஆகும். மனிதனை மனிதனாக்கும் உயரிய விழுமியங்களுள் முதன்மையானது அன்பு. அன்பில்லாத வாழ்க்கை உயிரற்ற உடலைப் போன்றதாகும். இவ்வுலகில் வாழும் அனைத்து உயிருள்ள ஜீவன்களையும் இயங்கச் செய்வது அன்பேயாகும். அன்பானது மனிதர்களிடையே ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை வளர்க்கிறது. குடும்பம், சமூகம், நாடு ஆகிய அனைத்தும் அன்பின் அடிப்படையிலேயே இயங்குகின்றன. பெரியபுராணமும் நாலடியாரும் காலத்தாலும் சமயப் பின்னணியாலும் வேறுபட்டிருந்தாலும், இரண்டும் அன்பை மனித வாழ்க்கையின் உயர்ந்த விழுமியமாகக் கருதுகின்றன. பெரிய புராணம், நாலடியார் இரண்டிலும் அன்பின் வெளிப்பாடு எவ்வாறுள்ளது என்பதை ஒப்பியல் நோக்கில் இக்கட்டுரையில் காண்போம்.

அன்பின் வரையறை

அன்பு என்பது உணர்ச்சி மற்றும் மனநிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளையும் அனுபவத்தையும் குறிக்கிறது. மனிதநேயம் ,இரக்கம், பாசம் ஆகியவற்றை

குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது. மேலும், மற்றவர்களின் நலனுக்காக காட்டப்படும் தன்னலமற்ற தியாகம் கொண்ட ஒழுக்கமான மனநிலையையும் அன்பு என்று கூறலாம். சக மனிதர்களிடம் மட்டுமல்லாமல் உயிருள்ள மற்ற ஜீவன்களிடம் காட்டப்படும் கருணை மற்றும் பாச செயல்களையும் அன்பு என்று கூறலாம். தமிழ் இலக்கியங்கள் அன்பை அறத்தின் ஆணிவேராக கருதுகின்றன. திருவள்ளுவர்,

அன்பின் வழியது உயிர்நிலை அஃ திலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (திருக்குறள் -இல்லறவியல், 80)

அன்பே உயிர் வாழ்வின் அடிப்படையாகும். அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பாகும் அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பை தோல் போர்த்திய வெற்றுடம்பேயாகும் என்று வலியுறுத்துகின்றார். திருமூலர்,

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே (திருமந்திரம்-முதல் தந்திரம், பா. 270)

அன்பு, சிவம் இரண்டும் வேறு என்று கூறுபவர்கள், அறிவில்லாதவர்கள். அன்பு தான் சிவமாக மாறுகிறது என்ற உண்மையை அறியாதவர்கள், உலகில் எவரும் இல்லை. அன்பு தான் சிவம் என்று உணர்ந்து கொண்டவர்கள், இந்த உலகத்தில் அன்பே வடிவாகவும், சிவமயமாகவும் வாழ்ந்து இன்பம் அடைவார்கள் என்று அன்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார்.

அன்பின் நோக்கம்

மனித வாழ்க்கையில் ‘நான்’ என்ற நிலையைக் கடந்து ‘நாம்’ என்ற நிலையை அடைவதற்கும் தனக்கென மட்டும் வாழாமல் பிறர்க்கென வாழும் பக்குவத்தை ஏற்படுத்தி மனதை அறநெறியில் நிலைநிறுத்தி சமூகத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவே அன்பின் நோக்கமாகும் என்று நாலடியாரும், இறைவன் மீதான அன்பு, சிவனடியார் மீது கொண்ட பாசம், உயிர்கள் மீதான கருணை, இறைவனை அடைவதற்கான வழி, பக்தியின் உச்சநிலை என்று பெரியபுராணமும் எடுத்துரைக்கிறது. இவ்விரு நூல்களும் அன்பை மனித வாழ்வின் உயரிய விழுமியமாக கருதுகின்றன.

தமிழர் பண்பாட்டில் அன்பின் இடம்

தமிழர் பண்பாட்டில் அன்பானது அடித்தளமாகவும் மனித வாழ்க்கையின் அனைத்து உறவுகளையும் இணைக்கும் பாலமாகவும் குடும்பம், சமூகம், நாடு ஆகிய அனைத்தையும் இணைக்கும் உன்னத பண்பாகவும் முக்கியப் பங்கு வகிக்கிறது. அன்பு இல்லாத வாழ்க்கை அறமற்ற வாழ்க்கையாகக் கருதப்படுகிறது. சங்க இலக்கியங்கள் முதல் பக்தி இலக்கியங்கள் வரை அன்பு உயர்ந்த வாழ்க்கை நெறியாகப் போற்றப்படுகிறது. அக இலக்கியங்களில் காதல் வாழ்வின் மையமாகவும், புற இலக்கியங்களில் மனிதநேயம், ஈகை, விருந்தோம்பல், வீரம் போன்றவற்றின் அடிப்படையாகவும் அமைகிறது. புறநானூற்றில்,"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் சிந்தனை, எல்லா மனிதர்களையும் உறவினராகக் கருதும் தமிழர் பண்பாட்டின் உயர்ந்த மனிதநேயக் கொள்கையை வெளிப்படுத்துகிறது. பெரியபுராணத்தில் அன்பு இறைவன் மீதான பக்தியாகவும், சிவனடியார்கள் மீதான சேவையாகவும் வெளிப்படுகிறது. நாலடியார் அன்பை அறநெறி, ஈகை, இரக்கம், ஒழுக்கம் ஆகியவற்றின் வழியாக விளக்குகிறது. இதனால் அன்பு தமிழர் பண்பாட்டில் ஒரு தனிப்பட்ட உணர்வாக இல்லாமல், சமூக ஒற்றுமை, அறவாழ்வு, ஆன்மிக உயர்வு ஆகியவற்றின் அடிப்படையாக விளங்குகிறது.

வாழ்க்கையை உயர்த்தும் அறநெறி

நாலடியார் அன்பை மனிதனை அற நெறியில் நிலை நிறுத்தும் அடிப்படை பண்பாகக் கருதுகிறது. ஈகை,மனிதநேயம், இரக்கம், பிறர்க்குத் தீங்கு செய்யாமை, ஒழுக்கம், நன்றியுணர்வு

போன்றவை அன்பின் வெளிப்பாடுகளாகவும் வாழ்க்கையை உயர்த்தும் அறநெறியாகவும் சுட்டிக் காட்டுகிறது.

ஈகை

குற்றமற்ற அறவழியில் ஈட்டிய பொருளை பலருடன் பகிர்ந்து வாழ வேண்டும் என்பதை,

துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக் கால் தொட்டுப்
பகடு நடந்த கூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும். (நாலடியார்- செல்வம் நிலையாமை, பா. 2)

பெரும் பொருளை சேர்த்து வைத்திருப்பவர்கள் அதை பிறருக்கு கொடுத்து வாழ வேண்டும் என்பதை,

இழைத்தநாள் எல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றம் குதித்துயர்ந்தார் ஈங்கில்லை -ஆற்றப்
பெரும் பொருள் வைத்தீர்வழங்குமின் நாளைத்
தழீஇம் தழீஇம் தண்ணம் படும். (நாலடியார்- செல்வம் நிலையாமை, பா. 6)

நம்மை அழிக்கும் நோய்களும் முதுமைப் பருவமும் இறக்கும் நாளும் பின் தொடர்வதால் நாம் நல்வழியில் ஈட்டிய பொருளை இறுகப் பிடித்துக் கொண்டு வாழாமல் பலருக்கும் பகுத்துக் கொடுத்து உண்ணுங்கள் என்பதை "பற்றன்மின் பாத்துண்மின்" நாலடியார்- ஈகை 92 ஆவது பாடல் நாள்தோறும் உங்களால் இயன்ற அளவு பிறருக்கு கொடுத்து பின் உண்ணுங்கள் என்பதை "நும்மில் இயைவ கொடுத்துண்மின்" நாலடியார்- ஈகை 94வது பாடல் பிறருக்கு கொடுத்து வாழ்பவர்களை ஊரில் நடுவில் இருக்கும் பெண் பனை மரத்திற்கு ஒப்பாகவும் அவ்வாறு கொடுக்காதவர்கள் அனைவராலும் வெறுக்கத்தக்க சுடுகாட்டில் உள்ள ஆண் பனை மரத்திற்கு ஒப்பாகவும் கூறப்பட்டுள்ளது.

நடுவூருள் வேதிகை சுற்றுக் கோள் புக்க
படுபனை அன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை." (நாலடியார்- ஈகை, பா. 96)

மனித நேயம்

மனிதநேயம் என்பது சக மனிதரிடத்தில் செலுத்தக்கூடிய அன்பு, பரிவு, அக்கறை, உதவுதல் ஆகியவை ஆகும். பிற மனிதர்கள் துன்பப்படும் வேளையில் தக்க நேரத்தில் உதவி செய்தல் வேண்டும். பிற மனிதர்களின் துன்பம், மகிழ்ச்சி, உணர்வுகள் மற்றும் தேவைகளை புரிந்து கொண்டு அன்பு, கருணை, இரக்கம், மரியாதை மற்றும் உதவும் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதே மனித நேயமாகும். நாலடியாரில் பிற உயிர்களிடத்தில் மிகுதியாக அறம் செய்து அருளுடையவராக ஆகுங்கள் அவ்வாறு அறம் செய்யாதவர்கள் மக்களாகப் பிறந்தும் பிறவாதவரே ஆவாரென்று கூறுவதிலிருந்து மனித பிறவியைப் பெற்றவர்கள் பிறருக்கு உதவி அருள் உடையவராக ஆதல் அவசியம்.

தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்துநும் நாளுண்ணும் -ஆற்ற
அறஞ்செய்து அருளுடையீர் ஆகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதார் இல். (நாலடியார்- செல்வம் நிலையாமை, பா. 7)

பெருஞ்செல்வம் கிடைத்தவுடன் அதை தமக்காக மட்டும் வைத்துக் கொள்ளாமல் பலருடன் பகிர்ந்து உணவு உண்ண வேண்டும். ஏனெனில் செல்வம் நிலையானது அல்ல வண்டிச்சக்கரம் சுழல்வது போல் அது ஒருவரிடம் இருந்து மற்றொருவரிடம் மாறிக்கொண்டே இருக்கும். இந்த

பாடல் பசியால் வாடுபவர்களுக்கு உணவு அளிப்பதும், செல்வத்தை பகிர்ந்து வாழ்வதும் மனிதனின் உயர்ந்த அறம் ஆகும் என்பதை வலியுறுத்துகிறது.

இரக்கம்

அன்பின் உயிர்நாடியாகவும் மிக முக்கியமான வெளிப்பாடாக இரக்கம் கருதப்படுகிறது. பிறரின் துன்பத்தைக் கண்டு மனம் உருகுதல், இயன்றவரை உதவி செய்தல், உயிர்களை மதித்தல் ஆகியவை இரக்கத்தின் அடையாளங்களாகும். நாலடியார் மனிதன் கருணைமிக்கவனாக இருக்க வேண்டுமென்றும் கருணையற்ற செல்வமும் அறிவும் முழுமையான வாழ்க்கையை உருவாக்காது என்பதை எடுத்துரைக்கிறது.நம் கண்முன்னே துன்பப்படுபவர்களின் தேவையை அறிந்து தாமதமின்றி உதவி செய்பவர்கள் அடையும் புகழானது ஒன்றின் மேல் ஒன்றாக உள்ள மூவுலகங்களில் உள்ளாறும் கேட்பார்கள். இதனை,

கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பார்
அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படுஞ் சொல் (நாலடியார்- ஈகை, பா. 100)

நாம் பிறருக்கு தருவது மிகவும் சிறியது என்று கருதாது, இல்லை என்று சொல்லாமல் எப்போதும் தேவை உடையவருக்கு தாமதம் இன்றி உதவும் போது மெல்ல மெல்ல புண்ணிய பயன் விரைவில் வந்து சேரும். தேவை உடையவருக்கு கொடுத்து தானும் அனுபவித்தாலும் பொருள் சேரும் காலத்தில் சேரும் மற்றவர்களுக்கு கொடுக்காமல் பொருளை மட்டும் நம்மிடத்தில் சேர்த்தால் நல்வினை தொலைந்த போது அப்பொருளை எவ்வளவு தான் இறுக்கிப்பிடித்தாலும் நில்லாமல் நீங்கிவிடும். இதனை உணர்ந்து கொண்டவர்கள் வறுமையால் வாடுபவர்களின் துன்பத்தை இரக்கத்தோடு களைவர். இதனை

நடுகுற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்
கொடுத்துத் தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக்கால் (நாலடியார்-ஈகை, பா. 93)

பிறர்க்குத் தீங்கு செய்யாமை

நாலடியார் அறநெறியின் முக்கிய கூறாக பிறருக்குத் தீங்கு செய்யாமையை வலியுறுத்துகிறது. பிறருக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும், தீமை செய்யாமல் இருப்பதே உயர்ந்த அறமாகும். உண்மையான அன்பானது பிறரைப் புண்படுத்தாமல் மாறாக அவர்களின் நலனையே விரும்பும். உலகில் வாழும் எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாது வாழ வேண்டும். தீங்கு செய்பவர்கள் துன்பமடைவர் என்று கூறுவதிலிருந்து எல்லா உயிர்களிடத்திலும் அன்பு கொண்டு வாழ வேண்டும் என்பது தெரியலாகிறது.

ஒழுக்கம்

ஒழுக்கம் என்பது அன்பின் செயல்முறை வடிவமாகும். ஒழுக்கமுள்ள மனிதன் பிறரை மதித்து நடப்பான். சமுதாய ஒற்றுமையை நிலைநிறுத்தும் பண்பாக ஒழுக்கத்தை நாலடியார் போற்றுகிறது.அன்பு, பணிவு, பொறுமை, ஒழுக்கம் ஆகியவை ஒன்றோடொன்று இணைந்த பண்புகளாக நாலடியாரில் வெளிப்படுகின்றன.

அன்பின் மூன்று நிலைகள்

பெரியபுராணத்தில் அன்பின் விழுமியங்களை இறைவனிடத்தில் வைத்துள்ள அன்பு, அடியார்களிடத்தில் காட்டப்படும் அன்பு உயிர்களிடத்திலான அன்பு என மூன்று நிலைகளாக அறியலாம். பெரியபுராணத்தின் அடிப்படைக் கருத்து இறையன்பாகும். நாயன்மார்கள் தங்களது உடல், பொருள், உயிர் அனைத்தையும் இறைவனுக்காக அர்ப்பணித்தனர். இவ்வன்பு எதிர்பார்ப்பற்ற தூய அன்பாக விளங்குகிறது.

இறையன்பு

கண்ணப்ப நாயனார் கல்வியறிவு இல்லாத வேடராக இருந்தாலும், சிவபெருமானிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். வேட்டையாடி கிடைத்த இறைச்சியையும், தாம் வாயில் வைத்துத் தூய்மைப்படுத்திய நீரையும் இறைவனுக்குப் படைத்தார். சிவலிங்கத்தின் கண்களில் இரத்தம் வந்தபோது தமது ஒரு கண்ணையும், பின்னர் மற்றொரு கண்ணையும் அர்ப்பணிக்க முனைந்தார்.

உருகிய அன்பு ஒழிவு இன்றி
நிறைந்தஅவன் உரு என்னும்
பெருகியகொள் கலமுகத்தில் பிறங்கி
இனிது ஒழுகுதலால்
ஒருமுனிவன் செவி உமிழும்
உயர்கங்கை முதல்தீர்த்தப்
பொருபுனலின் எனக்கு அவன்தன்
வாய்உமிழும் புனல் புனிதம் (கண்ணப்ப நாயனார் புராணம்-பா. 159)

கண்ணப்பரின் வாழ்க்கை, பக்தி என்பது சடங்குகளை விட அன்பே உயர்ந்தது என்பதை உணர்த்துகிறது.

அடியாரன்பு

பசியால் வாடுபவர்களுக்கு உணவு அளிப்பதை பெரியபுராணம் பல நாயன்மார்களின் வாழ்க்கையின் மூலம் வலியுறுத்துகிறது. குறிப்பாக இளையான்குடி மாறநாயனார் அவர்களின் வரலாறு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நமக்கு முன்புஇங்கு உணவு இலை ஆயினும்
இமக் குலக்கொடி பாகர்க்கு இனியவர்
தமக்கு நாம் இன் அடிசில் தகவுஉற
அமைக்கு மாறு எங்ஙனே?அணங்கே என (இளையான் குடி மாற நாயனார் புராணம், பா. 11)

நமக்கு உணவு இல்லாவிட்டாலும் நம் இல்லத்திற்கு வந்துள்ள சிவனடியார்களுக்கு முதலில் உணவு படைப்பதே நமது கடமை எனவும் பசியோடு வந்தவருக்கு உணவளிப்பதே உயர்ந்த சிவத்தொண்டு வீட்டில் உணவு இல்லாத நேரத்திலும் விதைக்கு வைத்திருந்த நெல்லை எடுத்து அடியவர்களுக்கு அமுது படைத்தார். அப்பூதியடிகள் திருநாவுக்கரசரை நேரில் காணாத போதிலும், அவர்மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார். தன் இல்லம், மகன்கள், அறச்சாலைகள் அனைத்திற்கும் "திருநாவுக்கரசர்" என்ற பெயரையே சூட்டினார். மகன் பாம்பு கடித்து இறந்த நிலையிலும், முதலில் திருநாவுக்கரசருக்கு விருந்தளிக்கும் கடமையை நிறைவேற்றினார்.

கடிது வந்து அமுது செய்யக்
காலம் தாழ்கின்றது என்றே
அடிசிலும் கறியும் எல்லாம்
அழகுற அணைய வைத்துப்
படியில் சீர்த் தொண்டனார் முன் பணிந்து
எழுந்து அமுது செய்து எம்
குடிமுழுவதும் உய்யக் கொள்வீர்
என்று அவர் கூறக்கேட்டு (அப்பூதியடிகள் நாயனார் புராணம், பா. 31)

பெரியபுராணத்தில் சிவபெருமானின் அடியார்களைப் போற்றுவது இறைவனைப் போற்றுவதற்கு இணையாகக் கருதப்படுகிறது. அடியார் மீதான அன்பு தனிப்பட்ட துயரத்தையும் தாண்டிய உயர்ந்த பண்பாகச் சித்தரிக்கப்படுகிறது.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

உயிர்களிடத்தான அன்பு

பெரியபுராணம் மனிதர்களிடம் மட்டுமன்றி அனைத்து உயிர்களிடமும் கருணையுடன் நடக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. இறைவனை நேசிப்பவன் உயிர்களையும் நேசிக்க வேண்டும் என்ற சைவச் சித்தாந்தக் கருத்து பெரியபுராணம் முழுவதும் வெளிப்படுகிறது.

அன்பு வெளிப்படும் இடங்கள்

பெரியபுராணத்தில் அன்பு வெளிப்படும் இடங்களாக விருந்தோம்பல் தியாகம் ஒற்றுமை ஆகியவை அமைந்துள்ளன.விருந்தோம்பல் என்பது வெறும் மரபு அல்ல; அது அன்பின் செயல்பாடு என்பதை அமர் நீதியார் வாழ்க்கையின் மூலம் அறியலாம்.

விருந்தோம்பல்

“செல்வத்து பயனே ஈதல்” என்ற கொள்கையை கொண்டு சோழ நாட்டில் பழையறை என்னும் ஊரில் வணிக குலத்தில் பிறந்த அமர் நீதியார் தேவை உடையவர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் கந்தை, கீழுடை, கோவணம் முதலியவற்றை கொடுத்து வந்தார். திருவள்ளூரில் மடம் ஒன்று கட்டி அதில் சிவனடியார்களுக்கு உணவளித்தல் முதலிய தொண்டுகளையும் செய்து வந்தார்.சிவனடியாரின் கோவணம் தொலைந்துவிட அதற்கு பதிலாக மற்றொரு கோவணத்தின் எடைக்கு நிகராக தன்னையும் தன் குடும்பத்தினரையும் அர்ப்பணிக்கும் செயல் அன்பின் உச்சகட்டமாக அமைகிறது.

நிலைமை மற்றது நோக்கிய நிகர்
இலார் நேர் நின்று
உலைவில் பஃறனம் ஒன்று
ஒழியாமை உய்த்து ஒழிந்தேன்
தலைவ யானும் என்
மனைவியும் சிறுவனும் தகுமேல்
துலையில் ஏறிடப் பெறுவது உன்
அருள் எனத் தொழுதார் (அமர்நீதி நாயனார், பா. 40)

தியாகம்

சிவபெருமான் அடியார் வேடத்தில் வந்து மனித இறைச்சி கேட்டபோது, தன் மகனையே அர்ப்பணிக்கத் தயங்காதவர் சிறுத்தொண்டர்.

யாதும் அரியது இல்லை இனி
ஈண்ட அருளிச்செய்யும் என
நாதன் தானும் ஓர்குடிக்கு
நல்லசிறுவன் ஒரு மகனைத்
தாதை அரியத்தாய் பிடிக்கும்
பொழுதில் தம்மில் மனம் உவந்தே
ஏதம்இன்றி அமைத்த கறி
யாம்இட்டு உண்பது என மொழிந்தார் (சிறுத்தொண்டர் நாயனார் புராணம், பா. 51)

சோழநாட்டில் திருச்செங்கட்டாங்குடியில் மா மாத்திரர் குலத்தில் பிறந்தவர் சோழ மன்னனின் படைத்தளபதி பரஞ்சோதி. இவர் தினமும் ஒரு சிவனடியாரை உணவு உண்ணச் செய்து பின்பு தான் உண்ணுவார் சிவபெருமான் உத்திராபதியராக வேடம் பூண்டு சிறுத் தொண்டர் இல்லத்திற்கு வந்து ஒரு தாய்க்கு ஒரு மகனாக அங்கம் பழுதில்லா ஐந்தாண்டு நிரம்பிய மகனை அறுத்து கறி சமைத்து படைத்தாள் உண்பேன் என்ற நிபந்தனையை ஒப்புக்கொண்டு வந்திருந்தவரின் தேவை அறிந்து தாமதம் இன்றி தன் மகன் சீராளனை அறுத்து சமைத்து பரிமாறினார். இந்நிகழ்வு சாதாரண மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட பக்தியையும் தியாக

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

அன்பையும் எடுத்துரைக்கிறது.இறைவன் மீதான அன்பு தன்நலத்தை விட உயர்ந்தது என்பதை வலியுறுத்துகிறது.

ஒற்றுமை

பெரியபுராணத்தில் பல்வேறு சமூகப் பின்னணிகளைச் சேர்ந்த நாயன்மார்கள் இடம்பெறுகின்றனர். அரசர், வேளாளர், வேடர், வணிகர், குயவர், பாணர், பெண்கள் இவர்கள் அனைவரையும் சிவபெருமான் சமமாக ஏற்றுக்கொள்கிறார். உயர்வு–தாழ்வு பாராமல் அனைவரையும் சமமாகக் கருதும் மனப்பான்மை, சமூக ஒற்றுமையை உருவாக்கும் அன்பின் வெளிப்பாடாகும். பெரியபுராணத்தில் அன்பு என்பது பக்தி, தொண்டு, தியாகம், விருந்தோம்பல், ஒற்றுமை, கருணை ஆகிய வடிவங்களில் வெளிப்படுகிறது. இந்நூல் அன்பை உணர்வாக மட்டும் அல்லாமல், செயலாகவும் வாழ்க்கை முறையாகவும் சித்தரிக்கிறது.

ஒப்பியல் செய்திகள்

பெரியபுராணமும், நாலடியாரும் தமிழ் இலக்கிய மரபில் தனித்துவமான இடத்தைப் பெற்ற இரு சிறந்த நூல்களாகும். காலம், சமயம், நோக்கம் ஆகியவற்றில் வேறுபட்டிருந்தாலும், இரண்டும் அன்பை மனித வாழ்வின் உயர்ந்த விழுமியமாக எடுத்துரைக்கின்றன. நாலடியார், அன்பை அறநெறியின் அடிப்படையாகக் கொண்டு, ஈகை, இரக்கம், ஒழுக்கம், பொறுமை, மனிதநேயம் போன்ற பண்புகளின் வழியாக சமூக வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகிறது. மனிதன் பிறருடன் நல்லிணக்கமாக வாழ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. பெரியபுராணம், அன்பை இறையன்பு, அடியாரன்பு, உயிர்களிடத்தான அன்பு ஆகிய நிலைகளில் வெளிப்படுத்துகிறது. நாயன்மார்களின் வாழ்க்கை நிகழ்வுகள் மூலம் அன்பு என்பது உணர்வு மட்டுமல்ல; அது தியாகம், தொண்டு, பக்தி, விருந்தோம்பல் ஆகியவற்றின் வழியாக செயல்படுத்தப்பட வேண்டிய வாழ்க்கை நெறி என்பதைக் காட்டுகிறது.

முடிவுரை

பெரியபுராணம், நாலடியார் இரு நூல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாலடியார் உலகியல் அறத்தை மையமாகக் கொண்டது. பெரியபுராணம் சமய அறத்தை மையமாகக் கொண்டது. இருப்பினும், இரண்டின் அடிப்படைச் சிந்தனை அன்பே ஆகும். அன்பு மனிதனை உயர்த்துகிறது. சமூக ஒற்றுமையை உருவாக்குகிறது. இறைநெறிக்கும் அறநெறிக்கும் பாலமாக அமைகிறது. பெரியபுராணமும் நாலடியாரும் காட்டும் அன்பின் விழுமியங்கள். இவை இன்றைய சமூகத்திற்கு வழிகாட்டும் உயர்ந்த வாழ்க்கை நெறிகளாக விளங்குகின்றன.

குறிப்புகள்

[1] *பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2022.
[2] கு. மதுரை முதலியார் தெளிவுரை. *நாலடியார்.* மோனார்க் கிராபிக்ஸ், சென்னை, 2009.
[3] இரா.மோகன். *ஒப்பியல் சிந்தனைகள்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.
[4] ச. சகுந்தலை. பெரிய புராணம் எளிய வசனம். மங்கை வெளியீடு, சென்னை, 2010.
[5] திரு. வி. க. *63 நாயன்மார்.* மணிவாசகர் நூலகம், சென்னை, 2010.
[6] டாக்டர் ப. அருணாசலம். *பக்தி இலக்கியம்.* மாஹீன் பிரிண்டர்ஸ், சென்னை, 2014.
[7] புலவர் பி. ரா. நடராசன். *திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் மூலமும் உரையும் முதல் பகுதி.* உமா பதிப்பகம், சென்னை, 2012.
[8] புலவர் பி. ரா. நடராசன். *திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் மூலமும் உரையும் இரண்டாம் பகுதி.* உமா பதிப்பகம், சென்னை, 2012.
[9] புலவர் பி. ரா. நடராசன். *திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் மூலமும் உரையும் மூன்றாம்பகுதி.* உமா பதிப்பகம், சென்னை, 2012.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

[10] புலவர் பி. ரா. நடராசன். திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் மூலமும் உரையும் நான்காம் பகுதி. உமா பதிப்பகம், சென்னை, 2012.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026
E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Pinnakan in the Tirumurais

Mr. S. Balamanikandan, Assistant Professor of Tamil, Mannar Thirumalai Naicker College, Pasumalai, Madurai.
ORCiD: https://orcid.org/0000-0003-4934-8000
DOI: 10.5281/zenodo.21791243

Abstract

Every word found in literary manuscripts carries multiple layers of meaning, reflecting the linguistic, cultural, and philosophical richness of the period in which it was composed. Many words in ancient texts cannot be fully understood through their literal meanings alone; instead, they acquire greater clarity and depth through the detailed explanations offered by traditional commentators. These commentaries often differ because scholars interpret the contextual intention of the original author from varying literary, religious, and historical perspectives. Furthermore, semantic shifts that occur over time also influence the interpretation of individual words, resulting in diverse meanings across different periods. Such variations are especially evident in classical Tamil literature and devotional texts. In this context, the present article examines the semantic evolution and interpretative variations of the word "Pinnakan" as it appears in the Thirumurais, analysing how commentators have understood and explained its meaning in different contexts.

Keywords: Pinnakan, Tirumurai, Saiva Religion, Lord Shiva.

References

[1] Arunai Vadivelu Muthaliyar, Si. *Thirumoolar Thirumanthiram. Paththam Thirumurai Moonru Thoguthigal*. Gnanasanbandham Pathippagam, Tharumai Aadeenam, 1997.
[2] Arunachalam, Mu., editor. *Pinngagan*. Siddhantham Idazh, May 1962.
[3] Subramaniyan, Sa.Ve., editor. *Thamizh Nikandugal (Thoguthi -1)*. Meiyappan Pathippagam.
[4] Bhaktavachalam, A., editor. *Thirugnanasambandar Thevaram*. 43, Sannathi Veethi, Nallur Pettai, Kudiyatham, Vellore, 2017.
[5] Bhaktavachalam, A., editor. *Thirunavukkarasar Thevaram*. 43, Sannathi Veethi, Nallur Pettai, Kudiyatham, Vellore, 2017.
[6] Bhaktavachalam, A., editor. *Sundarar Thevaram*. 43, Sannathi Veethi, Nallur Pettai, Kudiyatham, Vellore, 2017.
[7] Bhaktavachalam, A., editor. *Manickavasagar Thevaram*. 43, Sannathi Veethi, Nallur Pettai, Kudiyatham, Vellore, 2017.
[8] Bhaktavachalam, A., editor. *Pathinoram Thirumurai*. 43, Sannathi Veethi, Nallur Pettai, Kudiyatham, Vellore, 2017.
[9] Bhaktavachalam, A., editor. *Thiruthondar Puranam*. 43, Sannathi Veethi, Nallur Pettai, Kudiyatham, Vellore, 2017.
[10] Nanjil Nadan. *Pinngagan*. Solvanam Minnithazh, 12 July 2020.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481

எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

திருமுறைகளில் பிஞ்ஞகன்

ச. பால மணிகண்டன், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை.

ORCiD: https://orcid.org/0000-0003-4934-8000

DOI: 10.5281/zenodo.21791243

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியப் பிரதிகளில் இடம்பெறும் சொற்கள் ஒவ்வொன்றும் நுட்பமுடையப் பல்பொருள்களை உணர்த்துபவை. மூலப்பிரதியின் வழி அறியலாகும் அச்சொற்கள் உரையாசிரியர்கள் கூறும் விளக்கங்கள் மூலம் காலம் கடந்து புத்துயிர் பெறுகின்றன. சில இடங்களில் மூலநூலாசிரியர்கள் கையாண்டுள்ள சூழல் பொருளை அறிந்து உரையாசிரியர்கள் சொற்பொருள் விளக்கம் வழங்குவதால் பொருள் வேறுபாடு ஏற்படுகிறது. அதுமட்டுமல்லால் கால மாற்றமும் அப்பொருள் வேறுபாட்டிற்கு காரணமாகின்றது. அவ்வகையில் இக்கட்டுரையானது திருமுறைகளில் இடம்பெறும் பிஞ்ஞகன் எனும் சொல் உணர்த்தும் பொருள் வேறுபாட்டை அடையாளம் காண முயல்கின்றது.

குறிப்புச்சொற்கள்: திருமுறை, பிஞ்ஞகன், மு. அருணாசலம், நாஞ்சில் நாடன், பொருள் வேறுபாடு.

அறிமுகம்

ஒரு பொருளாகியச் சிவத்தைப் பல்வேறு பெயர்களால் துதித்தலானது சங்ககாலந்தொட்டு வழக்கில் இருக்கின்றது. சங்கப் பனுவல்கள் சிவனின் நிறம், வடிவம், கையில் வைத்திருக்கும் கருவிகள், ஊர்திகள், கொடிகள் மற்றும் வீரச்செயல்கள் போன்றவற்றைக் குறிக்குமிடந்தோறும் பல்சிறப்பு பெயர்களைக் குறிப்பிடுகின்றன. ஆதியும் அந்தமுமில்லா அப்பெருமானின் திருநாமச்சிறப்பை 'பேரும் ஓராயிர மென்ப ரால்எம் பிரானுக்கே' என்று சுந்தரரும் போற்றுகிறார். அன்பால் அகங்குழைந்து நாமச் சிறப்பை உணர்ந்து மானதமாக வாசகமாக வழிபடுதல் அவசியமானது. சிவனின் திருநாமங்களுள் பெரும்பான்மை திருவடிவத்தைச் சிறப்பிப்பதாகவும், அவனது புகழ்பாடும் புகழ்மொழியாகவும் விளங்குபவை. பன்னிருத் திருமுறைகளில் காணலாகும் அத்திருநாமங்கள் எண்கணக்கீட்டில் அடங்காதவை. உணர்ந்து உணர்ந்து வழிபடத்தக்கவை.

பிஞ்ஞகன்

சிவத்தைக் குறிக்கும் சொற்கள் பலவற்றுள் பிஞ்ஞகன் எனும் சொல் திருமுறைகளில் எழுபத்தி நான்கு இடங்களில் வருகிறது. ஆதி நிகண்டாகிய சேந்தன் திவாகரம், பிங்கலநிகண்டு, கயாதரம், பாரதி தீபம், சூடாமணி, கைலாச நிகண்டு, ஆசிரிய நிகண்டு முதலானவை சிவனின் பல்பெயர்களைப் பட்டியலிடும் போது பிஞ்ஞகன் எனும் பெயரைக் குறிப்பிடுகின்றன. பிஞ்ஞகம் எனும் சொல்லுக்குத் தலைக்கோலம் என்பது பொருள். பிங்கல நிகண்டு, **"பங்குசம் பிஞ்ஞகம் பயிறலைக் கோலம்" (பிங்கல நிகண்டு, 1202)** என்று கூறுகிறது. பிஞ்ஞகம் – தலைக்கோலம். பிஞ்ஞகன் – தலைக்கோலம் உடையவன் (பாம்பு, பிறை, கங்கை கொன்றைமாலை முதலிய பலவற்றைத் தலையில் வைத்திருக்கும் சிவபெருமான்) சிவபிரானது தலைக்கோலம் மணிமுடியும், நறுமலர்க் கண்ணியும் முதலாய பிறர் தலைக்கோலங்கள் போலாது சடைமுடியும், பிறைக்கண்ணியும் கங்கையும் பாம்பும் முதலியனவாக வேறுபட்டு நிற்றலின் இப்பெயர் அவனுக்கே உரியதாயிற்று. பிஞ்ஞகம் பின்னகம் என்பதன் மரூஉ (திருமூலதேவ நாயனார் அருளிச் செய்த திருமந்திரமாலையாகிய திருமந்திரம், முதல் மூன்று தந்திரங்கள், முனைவர் சி. அருணைவடிவேலார்(உ.ஆ)).

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

மு. அருணாசலம்: பிஞ்ஞகன்

பிஞ்ஞகன் என்பதற்குத் தலைக்கோலமுடையவன், சங்காரம் செய்பவன் என்று பொருள் கூறப்படுகின்றது. இருபொருளும் சிவனையேக் குறித்தாலும் இரண்டிற்கும் வேறுபாடு இருக்கிறது. அவ்வேறுபாட்டை பாடலடிகளில் முன் பின் வரும் சொல்லைக் கொண்டு இனங்காணலாம். இருப்பினும் சில இடங்களில் உரையாசிரியர்களே முன் உரை கூறியோர் கூறிய பொருளையே கையாண்டுள்ளனர். இக்கருத்தை சித்தாந்தம் இதழில் மு. அருணாசலம் அவர்கள் ‘திருவாசகம் – பிஞ்ஞகன்’ எனும் கட்டுரையில் முன் வைக்கிறார். திருவாசகத்தில் பிஞ்ஞகன் என்ற சொல் வரும் நான்கு இடங்களையும் காட்டி அச்சொல் இருவேறு பொருள் தந்து நிற்பதை உரைக்கின்றார் .(திருவாசகம்-பிஞ்ஞகன், மு.அருணாசலம், சித்தாந்தம், மே 1962)

நாஞ்சில் நாடன்: பிஞ்ஞகன்

நாஞ்சில் நாடன் அவர்களின் பிஞ்ஞகன் எனும் சொல்லராய்ச்சிக் கட்டுரை சொல்வனம் மின்னிதழில் வெளிவந்துள்ளது. அதில் பிஞ்ஞகன் என்பதற்கு அகராதி தரும் விளக்கங்களும், திருவாசகத்தில் வரும் பிஞ்ஞகன் என்பதற்குரியப் பொருளும் கூறப்பட்டுள்ளது. மொழிக்கு முதலில் வரும் ‘ஞகர வரிசைச் சொற்கள், ‘ஞ்’ இரண்டாவது எழுத்தாக அமையும் சொற்கள்,’ஞ’ மூன்றாவது எழுத்தாக அமையும் சொற்கள் என்று ஞகர சொற்கள் சான்று காட்டப்பட்டுள்ளது. மேலும், ‘ஞ்’ எனும் எழுத்துக்குப் பிறகு பெரும்பான்மை ‘ச’ எழுத்து வருவதையும், ‘ச’ எழுத்தல்லாமல் ‘ஞ’ எனும் எழுத்தே வருவதையும் காட்டி நாம் இதுவரை அறியாத (ம) அறிய வேண்டிய ஞகர சொற்களின் பயன்பாட்டை நாஞ்சில் நாடன் காட்ட முனைகிறார். (பிஞ்ஞகன், நாஞ்சில்நாடன், சொல்வனம், ஜூலை 12 2020) பிஞ்ஞகன் குறித்தான இவ்விரு கட்டுரைகளும் திருவாசகத்தை முன் வைத்தே எழுதப்பட்டுள்ளன.

அட்டவணை 1: திருமுறை அடி

வ.எண்	திருமுறை அடி	பதிக எண்
1	பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்	தேவாரம். 1:52:1:2
2	பெண்ணாணாம் பெருமானெம் பிஞ்ஞ கனே	" 1:119:3:4
3	பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய பிஞ்ஞகன் மேயவிடம்	" 1:133:3:2
4	பின்னொரு தவஞ்செய்துழல் பிஞ்ஞகனு மங்கே	" 2:32:7:2
5	பெண்ணிதமா முருவத்தான் பிஞ்ஞகன்பேர் பலவுடையான்	" 2:40:5:2
6	பெண்ண மர்ந்தொரு பாக மாகிய பிஞ்ஞ காபிறை சேர்நு தலிடைக்	" 2:53:1:3
7	பின்பினாற்பிறங் குஞ்சடைப் பிஞ்ஞகன்பிறப் பிலியென்று	" 2:77:3:2
8	பித்தன் செஞ்சடைப் பிஞ்ஞகன் றன்னடி யார்கள்	" 2:82:4:2
9	பில்கு வார்சடைப் பிஞ்ஞ கனே	" 3:5:6:4
10	பெருக்கி நின்றஎம் பிஞ்ஞ கனே	" 3:5:8:4
11	பிறையணி செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணுமூர்	" 3:28:2:2
12	பிரமனூர்பிர மாபுரத்துறை பிஞ்ஞகன்னருள் பேணியே	" 3:37:1:4
13	பேயொடுங்குடி வாழ்வினான்பிர மாபுரத்துறை பிஞ்ஞகன்	" 3:37:5:3

14	பித்தனை பிரமாபுரத்துஉறை பிஞ்ஞகன் கழல்பேணியே	" 3:37:10:1
15	பிள்ளைத்திங்கள் சூடியோ ராடன்மேய பிஞ்ஞகன்	" 3:42:10:2
16	பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ	" 3:52:6:2
17	பெருமானார் பிஞ்ஞகனார் பெருவேளூர் பிரியாரே	" 3:64:2:4
18	பெண்ணமர் மேனியெம் பிஞ்ஞக னாரே	" 3:124:1:4
19	பெரும்பால னாகியொர் பிஞ்ஞக வேடத்த னென்கின் றாளால்	" 4:6:4:4
20	பிண்டமா யுலகுக்கோர் பெய்பொருளாம் பிஞ்ஞகனைத்	" 4:7:4:2
21	பிறைப்பெருஞ் சென்னி யானே பிஞ்ஞகா விவை யனைத்தும்	" 4:28:2:3
22	பேயொத்துக் கூகை யானேன் பிஞ்ஞகா பிறப்பொன் றில்லீ	" 4:31:7:2
23	பேயறாக் காட்டி லாடும் பிஞ்ஞக னெந்தை பெம்மான்	" 4:32:6:3
24	பேரிடர்ப் பிணிக டீர்க்கும் பிஞ்ஞக னெந்தை பெம்மான்	" 4:58:8:1
25	பிஞ்ஞகன் றன்னை யந்தண் பெருவேளூர் பேணி னானைப்	" 4:60:4:3
26	பிறையணி முடியி னானே பிஞ்ஞகா பெண்ணோர் பாகா	" 4:63:5:1
27	பிறைமல்கு செஞ்சடை தாழநின் றாடிய பிஞ்ஞகனே	" 4:97:8:4
28	பிறைத்துண்ட வார்சடை யாய்பெருங் காஞ்சியெம் பிஞ்ஞகனே	" 4:99:4:4
29	பிறப்பன் பிறந்தாற் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்	" 4:113:8:3
30	பிளவு சூடிய பிஞ்ஞக னெம்மிறை	" 5:29:2:2
31	பின்னு வார்சடைப் பிஞ்ஞகன் தன்பெயர்	" 5:73:6:2
32	பிறங்கு செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணுசீர்க்	" 5:74:2:1
33	பேரி லாய்பிறை சூடிய பிஞ்ஞகா	" 5:97:7:2
34	பிரிவறியாப் பிஞ்ஞகனார் தெண்ணீர்க் கங்கை	" 6:9:4:6
35	பிறநெறியாய்ப் பீடாகிப் பிஞ்ஞ கனுமாய்ப்	" 6:29:5:1
36	பிஞ்ஞகனே மைஞ்ஞவிலுங் கண்டா என்றும்	" 6:31:5:4
37	பிறைசூடும் பிஞ்ஞகனே யென்றேன் நானே	" 6:37:1:6
38	பிஞ்ஞகனைத் தெய்வநான் மறைகள் பூண்ட	" 6:63:4:6
39	பிடித்தவன்காண் பிஞ்ஞகனாம் வேடத் தான்காண்	" 6:64:8:3
40	பெருந்தவத்தெம் பிஞ்ஞகன்காண் பிறைசூ டிகாண்	" 6:65:5:1
41	பிஞ்ஞகன்காண் பேரெழிலார் காம வேளைச்	" 6:76:9:6
42	பெற்றானைப் பிஞ்ஞகனைப் பிறவா தானைப்	" 6:80:4:3
43	பெய்தானைப் பிஞ்ஞகனை மைஞ்ஞவிலுங் கண்டத்	" 7:38:7:3
44	பெண்ணவன் பெண்ணவன் மேனியொர் பாகமாம் பிஞ்ஞகன்	" 7:45:7:3
45	பேணி யபெரு மானைப் பிஞ்குகப்	" 7:48:10:2
46	பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்குகன்	" 7:81:9:1
47	பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க	திருவாசகம். 1:7
48	பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்	" 8:19:2

49	பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ	" 23:7:3
50	பிறவிவே றறுத்தென் குடிமுழு தாண்ட பிஞ்ஞகா பெரியஎம் பொருளே	" 37:6:2
51	பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்	திருமந்திரம். 60:1
52	பிறிவது செய்யாது பிஞ்ஞக னோடும்	" 1223:2
53	பெருங்கரை யாவது பிஞ்ஞகன் ஆணை	" 1478:2
54	பேர்ந்தறி யான்எங்கள் பிஞ்ஞகன் எம்மிறை	" 1772:2
55	பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்இறை	" 2997:3
56	பெற்றவ னேயென்றும் பிஞ்ஞக னேயென்றும் மன்மதனைச்	பொன்வண்ணத்தந்தாதி. 91:3
57	பிளிறு குரற்கங்கை தாங்கிய பிஞ்ஞகன் பூங்கழல் மாட்	திருவாரூர் மும்மணிக்கோவை. 9:3
58	பின்னும் மழைதவிர்த் தீரறு வேலிகொள் பிஞ்ஞகனே	கோயில் திருப்பண்ணியர் விருத்தம். 54:4
59	பேதித் தெழுந்தன காணென்று பிஞ்ஞகன் கேட்டுமவன்	திருத்தொண்டர் திருவந்தாதி. 31:3
60	பெற்றமேல் கொண்ட தம்பிரா னடியார் பிஞ்ஞகன் றன்னருள் பெறுவார்	பெரியபுராணம். 21:3-4
61	பிஞ்ஞகனு நாவலர் பெருந்தகையை நோக்கி	" 181:1
62	பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக வொளித்திருந்தார்	" 809:4
63	பிறையுரிஞ்சுந் திருவாயின் முன்னாகப் பிஞ்ஞகர்	" 1071:2
64	பேராத பாசப் பிணிப்பொழியப் பிஞ்ஞகன்பால்	" 1307:1
65	பேசவினி யானை யுல காளுடைய பிஞ்ஞகனை	" 1364:2
66	பிஞ்ஞகனைத் தொழுவதற்கு நினைந்துபோய் பெருமகிழ்ச்சி	" 1673:3
67	பின்னர்வெண் பிறையணி வேணிப் பிஞ்ஞகர்	" 2147:3
68	பெருவிருப் பாலணைந்தேத்திப் பிஞ்ஞகர் கோயில் பிறவும்	" 2183:2
69	பிஞ்ஞகர்தம் வெண்பாக்க முதலா யுள்ள	" 2911:3
70	பெருவாழ்வு பெற்றாராய்ப் பிஞ்ஞகனா ரரு ளென்றே	" 3058:3
71	பெருகார்வத் துடன்பாடப் பிஞ்ஞகனார் கண்டிரங்கி	" 3308:2
72	பெருமானைத் திருமூலட் டானஞ்சேர் பிஞ்ஞகனைப்	" 3462:2
73	பேணே வெனக்கு வேண்டுவன வடியேன் கொள்ளப் பிஞ்ஞகனார்	" 3783:3
74	பேண கோயிறொந் திருவமுதின் படிபெருக	" 4135:2

பிஞ்ஞகன் எனும் சொல் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பதினெட்டு, திருநாவுக்கரசர் தேவாரத்தில் இருபத்திநான்கு, சுந்தரர் தேவாரத்தில் நான்கு, திருவாசகத்தில் நான்கு, திருமந்திரத்தில் ஐந்து, பதினொன்றாம் திருமுறையில் ஐந்து, பெரியபுராணத்தில் பதினைந்து என்று மொத்தம் எழுபத்தி நான்கு இடங்களில் வந்துள்ளது.

பொருள் வேறுபாடு

பொதுவாக பிஞ்ஞகன் என்பது சிவன் எனவும் தலைக்கோலம் உடையவன், சங்காரம் செய்பவன் எனவும் பொருள் பெறுவதை நிகண்டுகள் மற்றும் அகராதிகளின் வழி அறியலாம்.

பன்னிருத் திருமுறைகளில் இப்பொருள் பெறும் நிலையில் பிஞ்ஞகன் எனும் சொல் அமைந்துள்ளது. அவற்றை இடம்நோக்கி புரிந்து கொள்ளுதல் நலம்சடையைக் குறிப்பிட்டு, பிறங்குஞ் சடை பிஞ்ஞகன் (7), செஞ்சடைப் பிஞ்ஞகன் (8), பில்குவார்சடைப் பிஞ்ஞகன் (9), பின்னுவார் சடைப் பிஞ்ஞகன் (31). பின்சடைப்பிஞ்ஞகன் (46) என்று வரும் இடங்களிலும், பிறை (ம) கங்கையைக் குறிப்பிட்டு பிறையுடையாய் பிஞ்ஞகனே (1) பிறைப்பெருஞ் சென்னியானே பிஞ்ஞகா (21). பிறையணி முடியினானே பிஞ்ஞகா (26) பிறைமல்கு செஞ்சடை தாழ நின்றாடிய பிஞ்ஞகனே (27) பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன் (29), பிளவு சூடிய பிஞ்ஞகன் (30), பிறை சூடும் பிஞ்ஞகன் (37), பிறை குலாஞ் சடைப் பிஞ்ஞகன் (49) வெண்பிறையணி வேணிப் பிஞ்ஞகர் (67) என்பன போன்று வரும் இடங்களிலும், மாதொருப் பாகனைக் குறிப்பிட்டு பெண்ணிதமா முருவத்தான் பிஞ்ஞகன் (5), பெண்ணமர்ந்தொரு பாகமாகிய பிஞ்ஞகா(6), பெண்ணமர் மேனியெம் பிஞ்ஞகனார் (18). பெண்ணவன் மேனியோர் பாகமாம் பிஞ்ஞகன் (44) என்பன போன்று வரும் இடங்களிலும் தலைக்கோலமுடையவன் என்று பொருள் கொள்வது பொருத்தமுடையதாகும். மற்றொருப் பொருளாகிய சங்காரம் செய்பவன் என்று வருவதை ‘இனி பிஞ்ஞகன் என்ற சொல்லுக்கு மற்றோர் ஆதாரமும் உண்டு. வடமொழியில் பிஞ்ஜ் என்ற வேர்சொல்லுக்கு அழித்தல் என்பது பொருள். இதிலிருந்து பிறந்த பிஞ்ஞகன் என்ற பெயர்ச்சொல் அழிப்பவன். சங்கரிப்பவன் என்ற பொருளுடையது. இச்சொல் தமிழில் பிஞ்ஞகன் என்றாகி சங்காரக் கடவுளாகிய ருத்திரன் சிவபெருமானைக் குறிப்பதாகிறது’ என்பார் மு. அருணாசலம். (திருவாசகம் – பிஞ்ஞகன், மு. அருணாசலம், சித்தாந்தம், மே 1962) இதற்கு திருவாசத்தில் பிஞ்ஞகன் என்று வரும் பின்னைய மூன்று இடங்களையும் சான்றும் காட்டுவார். பிறவியை அறுப்பதைக் குறிப்பிட்டு பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் (47) முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும் பின்னானைப் பிஞ்ஞகனை (48) பிறவிவேர் அறுத்தென் குடி முழுதாண்ட பிஞ்ஞகா (50) என்று வருமிடங்களில் சங்காரம் செய்பவன் என்று பொருள் கொள்வது பொருத்தமுடையதாக இருக்கும். இம்மூன்று இடங்களுக்கும் மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் அவர்கள் தலைக்கோலம் உடையவன் எனும் பொருளிலேயே உரை கூறியுள்ளது நோக்குதற்குரியது. இவ்விருப் பொருள் தவிர சிவனார் என்று பொருள் வருமிடங்களும் உள்ளன. (இங்கு அடைப்புக்குறியில் குறிப்பிடும் எண்கள் அட்டவணையில் உள்ள வரிசை எண்களைக் குறிக்கும்).

தொகுப்புரை

பிஞ்ஞகன் என்பதற்கு சிவனை மையமிட்டு பல்பொருள் கூறப்பட்டாலும் உரையாசிரியர்கள் தலைக்கோலம் உடையவன் என்பதையே மிகுதியாக மொழிந்துள்ளனர். பெருமானின் திருவடிவில் அமைந்துள்ள அத்தலைக்கோலம் தனிச்சிறப்புடையது. உயிர்களாகிய நம் மீது வைத்த கருணையால் உருவானது. பரந்து விரிந்த அவனின் திருச்சடை பேரறிவினையும், நிமிர்ந்து முடிந்த சடை முற்றறிவையும் உணர்த்துகிறது.எனவே திருமுறைகள் நிமிர்புன்சடை, ஒளிர்புன்சடை, புரிபுன்சடை, அவிர்சடை, நீள்சடை, விரிசடை, முதிர்சடை. படர்சடை, கற்றைசடை, தாழ்சடை என்றெல்லாம் போற்றும் திருச்சடையின் தத்துவம், பிஞ்ஞகன் எனும் சொல் உணர்த்தும் பொருளும் நுட்பமானது, ஆராய்வதற்கு உரியது.

குறிப்புகள்

[1] அருணை வடிவேலு முதலியார். சி. திருமூலர் *திருமந்திரம். பத்தாம் திருமுறை மூன்று தொகுதிகள்.* ஞனசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, 1997.
[2] அருணாசலம். மு., (க.ஆ). *பிஞ்ஞகன்.* சித்தாந்தம் இதழ், மே – 1962.
[3] சுப்பிரமணியன். ச.வே., (ப.ஆ), *தமிழ் நிகண்டுகள் (தொகுதி -1),* மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

[4] பக்தவச்சலம். ஆ., (ப.ஆ), *திருஞாணசம்பந்தர் தேவாரம்*, 43, சன்னதி வீதி, நல்லூர் பேட்டை, குடியாத்தம், வேலூர், 2017.
[5] பக்தவச்சலம். ஆ., (ப.ஆ), *திருநாவுக்கரசர் தேவாரம்*, 43, சன்னதி வீதி, நல்லூர் பேட்டை, குடியாத்தம், வேலூர், 2017.
[6] பக்தவச்சலம். ஆ., (ப.ஆ), *சுந்தரர் தேவாரம்*, 43, சன்னதி வீதி, நல்லூர் பேட்டை, குடியாத்தம், வேலூர், 2017.
[7] பக்தவச்சலம். ஆ., (ப.ஆ), *மாணிக்கவாசகர் தேவாரம்*, 43, சன்னதி வீதி, நல்லூர் பேட்டை, குடியாத்தம், வேலூர், 2017.
[8] பக்தவச்சலம். ஆ., (ப.ஆ), *பதினொன்றாம் திருமுறை*, 43, சன்னதி வீதி, நல்லூர் பேட்டை, குடியாத்தம், வேலூர், 2017.
[9] பக்தவச்சலம். ஆ., (ப.ஆ), *திருத்தொண்டர் புராணம்*, 43, சன்னதி வீதி, நல்லூர் பேட்டை, குடியாத்தம், வேலூர், 2017.
[10] நாஞ்சில் நாடன். *பிஞ்ஞகன்.* சொல்வனம் மின்னிதழ், ஜூலை 12, 2020.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Vayil Nerthal in Sangam Literature – Cultural Politics

Dr. A. Muthulakshmi, Assistant Professor of Tamil, Arul Anandar College, Karumathur, Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-3971-3840
DOI: 10.5281/zenodo.21791536

Abstract

The Akam poems of the Ettuthokai, one of the earliest corpora of classical Tamil literature, vividly portray various dimensions of love and domestic life. Among these, the poems associated with the Marutham landscape primarily depict the marital relationship between the hero (thalaivan) and heroine (thalaivi), where conjugal harmony is disrupted by the hero's involvement with a courtesan (parathai). These poems generally present the heroine as condemning her husband's infidelity; however, social norms and the patriarchal family structure ultimately compel her to accept him upon his return. Thus, Vayil Marutthal (refusal of reconciliation) becomes an expression of the heroine's emotional anguish, whereas Vayil Nerthal (acceptance of reconciliation) reflects the social pressures imposed upon her. The heroine is portrayed as the stabilising force of the household, whose conduct is constantly scrutinised, while the hero's behaviour remains largely unquestioned by society. Consequently, Vayil Nerthal symbolizes endurance, forgiveness, and accommodation rather than personal choice. This article examines the socio-cultural background and gendered implications underlying the concept of Vayil Nerthal in the Marutham poems.

Keywords: Sangam literature, Oral Tradition, Culture, Politics.

References

[1] Mathaiyan, Pe. *Sangga Ilakkiyathil Kudumbam*. New Century Book House, 2010.
[2] Vasagi, Si., and Si. Ayothi. *Panmuga Nokkil Penniya Pathivugal*. New Century Book House, 2007.
[3] Rajagouthaman. *Paattum Thogaiyum Tholkappiyamum Thamizh Samuga Uruvakkamum*. Thamizhini, 2004.
[4] Baluchami, E. *Maruthathil Makkal Vazhviyal*. Ulaga Thamilaraichi Nilaiyam, 2011.
[5] Subbureddiyar, Na. *Agathinai Kolkaigal*. Pari Nilaiyam, 1981.
[6] Seyapal, Ira., editor. *Agananooru Mulamum Uraiyum*. New Century Book House, 2011.
[7] Balasubramaniyan, Ku.Ve., editor. *Narrinai Mulamum Uraiyum*. New Century Book House, 2011.
[8] Thakshinamoorthi, A., editor. *Aingurunooru Mulamum Uraiyum*. New Century Book House, 2011.
[9] Nagarasan, Vi., editor. *Kurunthogai Mulamum Uraiyum*. New Century Book House, 2011.
[10] Manickavasagan, Gna. *Paththuppattu (Mulamum Uraiyum)*. Uma Pathippagam.
[11] Manickavasagan, Gna. *Purananooru (Mulamum Uraiyum)*. Uma Pathippagam.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

சங்க இலக்கியத்தில் வாயில் நேர்தல் – பண்பாட்டு அரசியல்

முனைவர் ஆ. முத்துலட்சுமி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அருள் ஆனந்தர் கல்லூரி,
கருமாத்தூர், மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0007-3971-3840
DOI: 10.5281/zenodo.21791536

ஆய்வுச் சுருக்கம்

பழந்தமிழ் இலக்கியங்களான எட்டுத் தொகையின் அகப்பாடல்களில் காதல் வாழ்வு குறித்த சித்திரங்கள் காணப்படுகின்றன. அதில் மருத நிலப் பாடல்கள் தலைவன், தலைவி இருவரும் மணம் முடித்து இல்லற வாழ்வில் இணைந்திருக்கும் போது அதற்கு இடையூறாக வருவது பரத்தையர் பிரிவாகும். தலைவியானவள் பரத்தமையொழுக்கத்தை கடிந்து கொள்ளும் வகையில்தான் பாடல்கள் அமைந்திருக்கின்றன. ஆனால் சமூகத்தின் நியதி, குடும்ப அமைப்பு ஆகியனவற்றைக் கருத்தில் கொண்டு தலைவி அப்பரத்தமையொழுக்கத்தினைக் கடிந்து கொள்ளும் அதே வேளை தலைவன் வாயில் நேரும் போது அதனை ஏற்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள். வாயில் மறுத்தல் என்பது தலைவியின் சினத்தை வெளிப்படுத்துவதாகவும் வாயில் நேர்தல் என்பது சமூகத்தின் நெருக்கடியாகவும் இங்கு வெளிப்படுகிறது. அதாவது குடும்பத்தில் பெண் என்பவள் அச்சாணியாக விளங்குகிறாள். ஆணைப் போல நடந்து கொள்ள முடியாதவளாக இருக்கிறாள். சமூகத்தின் பார்வையில் அவள் நடத்தை கண்காணிக்கப்படுகிறது. ஆனால் ஆணின் நடத்தையை சந்தேகிக்க மனைவிக்கு மட்டுமே வாய்ப்பிருக்கிறது. சமூகம் அதனைக் கண்டு கொள்ளாது. ஆணின் நடத்தையைப் பற்றிய அலர் தூற்றுதல் என்பது இல்லை. அது ஆணின் ஆளுமையைப் பறைசாற்றும் வகையினது. ஏனெனில் சங்க காலம் என்பது பெண் குடும்ப அமைப்பிற்காகத் தன்னை ஒப்புக் கொடுக்கும் வகையில் கருத்தியல் உருவாக்கம் பெற்ற உடைமைச் சமூகமாக மாற்றம் பெற்றிருந்தது. எனவே வாயில் நேர்தல் என்பது பொறுத்துப் போதல், மன்னித்தல், சகித்துக் கொள்ளுதல் என்பனவாக மாறுகின்றன. பெண்ணுக்கு மட்டுமே இத்தகைய அகப் புற நெருக்கடிகள் தரப்படுகின்றன. கணவனை விட்டு விலக முடியாத நிலையிலும் கணவனை நீண்ட நாட்கள் உடன் சேர்க்காமல் இருக்க முடியாத நிலையிலும்தான் ஆணியச் சமூகம் பெண்ணை வழிநடத்துகிறது. எனவே வாயில் மறுத்தல் மூலம் பெண் தன் சினத்தைக் காட்ட உரிமை பெறும் அதே வேளை வாயில் நேர்தல் மூலம் அதிலிருந்து பின்வாங்குதல்தான் அவளுக்குச் சமூகம் கொடுத்துள்ள நியதியாக இருக்கிறது. வாயில் நேர்தல் குறித்த பாடல்களின் பின்னணியை இக்கட்டுரை வெளிப்படுத்த விழைகிறது.

குறிப்புச் சொற்கள்: சங்க இலக்கியம், வாயில் நேர்தல், பண்பாட்டு, அரசியல்.

முன்னுரை

பழந்தமிழ் இலக்கியங்களான எட்டுத் தொகையின் அகப்பாடல்களில் காதல் வாழ்வு குறித்த சித்திரங்கள் காணப்படுகின்றன. அதில் மருத நிலப் பாடல்கள் தலைவன், தலைவி இருவரும் மணம் முடித்து இல்லற வாழ்வில் இணைந்திருக்கும் போது அதற்கு இடையூறாக வருவது பரத்தையர் பிரிவாகும். தலைவியானவள் பரத்தமையொழுக்கத்தை கடிந்து கொள்ளும் வகையில்தான் பாடல்கள் அமைந்திருக்கின்றன. ஆனால் சமூகத்தின் நியதி, குடும்ப அமைப்பு ஆகியனவற்றைக் கருத்தில் கொண்டு தலைவி அப்பரத்தமையொழுக்கத்தினைக் கடிந்து கொள்ளும் அதே வேளை தலைவன் வாயில் நேரும் போது அதனை ஏற்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள். வாயில் மறுத்தல் என்பது தலைவியின் சினத்தை வெளிப்படுத்துவதாகவும்

வாயில் நேர்தல் என்பது சமூகத்தின் நெருக்கடியாகவும் இங்கு வெளிப்படுகிறது. எனவே வாயில் நேர்தல் என்பது பொறுத்துப் போதல், மன்னித்தல், சகித்துக் கொள்ளுதல் என்பனவாக மாறுகின்றன. பெண்ணுக்கு மட்டுமே இத்தகைய அகப் புற நெருக்கடிகள் தரப்படுகின்றன. வாயில் மறுத்தல் மூலம் பெண் தன் சினத்தைக் காட்ட உரிமை பெறும் அதே வேளை வாயில் நேர்தல் மூலம் அதிலிருந்து பின்வாங்குதல்தான் அவளுக்குச் சமூகம் கொடுத்துள்ள நியதியாக இருக்கிறது. வாயில் நேர்தல் குறித்த பாடல்களின் பின்னணியை இக்கட்டுரை வெளிப்படுத்த விழைகிறது.

குடும்பத்தின் பண்பாட்டு அடையாளமாகப் பெண்

சமூகத்தில் செயல்படும் நிறுவனங்களில் புராதனமானது குடும்பம் ஆகும். குடும்பம் என்னும் நிறுவனம் திருமணத்தால் உருவாகிறது. மணமுறை என்பதில் பல வகை இருக்கின்றன. அதில் தமிழர் மணமுறை என்பது காதல் மணமாகவோ, உடன்போக்கு மணமாகவோ அமையும். அவ்வாறு மணமுடிந்த பின் ஆணும், பெண்ணும் சமூகத்தின் பார்வையில் ஒன்றிணைந்து வாழ்வதற்கான அங்கீகாரத்தைப் பெறுகின்றனர். குடும்பத்தின் முதன்மை நோக்கம் வாரிசைப் பெறுதல்தான்.

> **சங்க கால நிலவுடைமைக் கூறுகள் வேரூன்றத் தொடங்கிய காலம். எனவே உடைமைப் பாதுகாப்பிற்கான வாரிசுகளான ஆண்மக்களைப் பெறுவதே குடும்பத்தின் குறிப்பாக ஆணின் அடிப்படை நோக்கமாக இருந்துள்ளது. (சங்க இலக்கியத்தில் குடும்பம், ப.126)**

எனக் கூறப்படுகிறது. குடும்பத்திற்கான அதாவது ஆணின் வாரிசை பெற வேண்டியவள் பெண் எனவே அவள் நடத்தையானது சமூகத்தின் கண்காணிப்புக்கு உட்பட்டது. ஆனால் ஆண் குடும்ப அமைப்பில் தலைமையானவன். பெண்ணையும் அவள் பெறுகிற குழந்தைகளையும் கட்டிக் காப்பவன். அவனது செயல்பாடுகள் அதாவது பொருளீட்டுதல் போன்றவை குடும்பத்திற்கானவையாக இருக்கின்றன. எனவே வினையே ஆடவர்க்கு உயிரே எனக் குறுந்தொகை சுட்டுகிறது. மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என்றும் கூறுகிறது.

> **கற்பின் மேன்மையை மையமாகக் கொண்டே பெரும்பான்மை எண்ணிக்கையில் மகளிர்கள் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இலக்கியப் படைப்பாளர்கள் தாம் பாராட்டப் புகும் பெண்களைக் கற்புடைய மகளிராகச் சித்திரிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். (பன்முக நோக்கில் பெண்ணியப் பதிவுகள், ப. 161)**

என்று பெண்ணை புகழுவதற்கு அவர்கள் கற்புடன் இருத்தல் வேண்டும் என்பது சுட்டப்படுகிறது. மேலும்,

> **திருமணம் பெண்ணிற்குப் புதிய மதிப்பகளையும் புதிய நிலைகளையும் அளிக்கிறது. அதே நேரத்தில் அவளிடமிருந்து சமுதாயம் புதிய கடமைகளையும் எதிர்பார்க்கிறது. அத்துடன் அவளுக்கான சில குண நலன்களையும் அக்குணங்கள் இல்லாத நிலையில் அவளைச் சமுதாய இழிவுபடுத்துவதையும் சமுதாய வரலாற்று வழி நாம் காண முடிகிறது. (மருதத்தில் மக்கள் வாழ்வியல், ப. 36)**

என்ற கூற்றானது. பெண்ணின் நடத்தையில் எதிர்பார்க்கும் பல நடத்தைகளை ஆணிடம் எதிர்பார்ப்பதில்லை என்பது புலப்படுகிறது. குடும்பத்தின் இயங்குதலுக்கு பெண்ணே முதன்மையாக இருக்கிறாள். அதனால்தான் அவளுக்குக் கூடுதல் சுமையை ஏற்றும் பொருட்டு இல்லாள் என்னும் பெயர் சுட்டப்படுகிறது. இதற்கான ஆண்பால் பெயர் சுட்டப்படுவதில்லை. எனவேதான் ஆண் பரத்தமை மேற்கொண்டாலும் அது அறச் சொல்லாடலுக்குள்ளோ, நடத்தை மாறுபாட்டுக்குள்ளோ வருவதில்லை. செல்வ மிகுதியால் தலைவன் பரத்தையரை நாடிச் செல்கிறான் இவ்வாறு செல்வதால் குடும்பத்திற்கு யாதொரு பிரச்சினையுமில்லை என்பதால் சமூகம் அதைப் பற்றி கவலை கொள்வதில்லை.

> **சங்க கால சமூகத்தில் குடுப்த்தில் கணவனாயிருக்கும் ஆண் குடும்பத்துக்கு வெளியே காமக் கிழத்தி, காதற் பரத்தை முதலான பெயர்களில் பல பெண்களோடு பாலியல் சேர்க்கை கொள்ளுவதிலிருந்து அவனைத் தடுக்கும் வழக்கமோ சட்டமோ கிடையாது. இத்தகைய மீறல்களை அன்றைய சமூகம் பொருட்படுத்தவில்லை. (பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், ப. 15)**

என்ற கூற்றனால் இதனை விளங்கலாம். ஆயினும் அவனது செயல்களின் மீது கடிந்து கொள்ளும் உரிமை மனைவிக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. தன்னுணர்ச்சி பீறிட கணவனைக் கேள்வி கேட்கிறாள். பரத்தையோடே போய்விடுமாறு கோபிக்கிறாள். தலைவனுக்காகப் பேசும் தோழி, விறலி, பாணன் முதலிய வாயில்களை கடுஞ்சொற்களைப் பயன்படுத்தி ஏசுகிறாள். ஆயினும் அதுவரைதான் அவளுக்கு உரிமை தரப்பட்டுள்ளது. அதற்கு மேல் கணவனை நிராகரிக்க உரிமை தரப்படவில்லை.

> **தேரேறிப் பரத்தையர் சேரிகளை நாடிச் செல்லும் ஒழுக்கமும் மருதப் பாடல்களில் பேசப்படுகின்றன. இங்கு தலைவியானவர் தம் கணவனின் பரத்தையொழுக்கத்தை அறிந்தும் வெகுண்டெழாமல் ஊடுவதோடு அமைதியாகி விடுகிறாள். (மருதத்தில் மக்கள் வாழ்வியல், ப. 11)**

என்பதற்கிணங்க தலைவியானவள் குடும்பத்தின் நன்மை கருதி கணவனை எதிர்ப்பதில் இருந்து பின் வாங்குகிறாள் என்பதைக் காணமுடிகிறது. குடும்பத்தின் இயங்குவதற்கு கணவனின் செயல்களைப் பொருத்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறாள். அதை மீறி அவள் கணவனை விட்டுப் பிரிந்தால் அவள் கடும் துன்பத்திற்கு ஆளாக நேரிடும் என மிரட்டப்படுகிறாள்.

> **பரத்தமை தாங்கலோ இலன் என வறிதுநீ**
> **புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை**
> **அது புலந்து உறைதல் வல்லியோரே**
> **செய்யோன் நீங்க சில்பதம் கொழித்து**
> **தாம்அட்டு உண்டு தமிழர் ஆகி**
> **தேமொழிப் புதல்வர் திரங்கு முலை சுவைப்ப**
> **வைகுநர் ஆகுறல் அறிந்தும்**
> **அறியார் அம்ம அஃது உடலுமோரே (அகம்., பா. 316)**

என்னும் பாடலடிகளில் கணவன் என்பவன் தேரேறி பரத்தையரை நாடிச் செல்லத்தான் செய்வான். அவன் அந்தப் பெண்களை நாடிச் செல்வது இயல்புதான். அதற்கான அவனிடம் முரண்படாதே. அவ்வாறு கணவனை முரண்பட்டு பிரிந்தால் என்னாகும் என்பதைப் பற்றித் தோழி தலைவிக்கு அறிவுறுத்துகிறாள். கணவனிடம் பிணக்கு கொண்டாயானால் இல்லத்தில் திருமகள் விடைபெற்றுக் கொள்வாள். தான் சமைத்த உணவைத் தானே தனியாக உண்ண வேண்டும். மழலை மொழி பேசும் மகன் பால் வற்றிய முலையைச் சுவைத்துக் கொண்டிருப்பான். இப்படித்தான் வாழ வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே கணவனுடன் மாறுபட்டு நடந்து கொள்ளாதே என்பதாக அமைகிறது. எனவே, வாயில் மறுத்தவள். சினத்தின் பொருட்டு ஊடல் உவகை தரும் என்னும் சொல்லாடல் மூலம் வாயில் நேர்கிறாள். இப்படித்தான் பெண்ணின் முடக்கப்பட்ட தன்னிலை சங்க இலக்கியம் முழுவதும் மட்டுமின்றி இன்றைய சூழலிலும் காணப்படுகிறது. பரத்தையைக் கடுமையாகப் பேசும் தலைவி பின்னர் அவளைத் தன் மகனுக்குத் தாயென பாராட்டும் நிலைக்கு வருகிறாள் என்பதைக் காணமுடிகிறது.

> **தெருவில் சிறுதேர் ஓட்டி விளையாடிக் கொண்டிருந்த ஆசை மகனை அவன் தனியனாய் நிற்கும் நேரம் பார்த்து என் உயிரே வருக எனத் தூக்கித் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள் பரத்தை. காரணம் அவன் ஒப்பீட்டளவில் தன் கனவுக்**

> **காதலன் போலவே இருந்தான் என்பதர். இதைத் தூரத்தே நின்று கண்ணுற்ற தலைவி தலைவனின் மனைவி துணுக்குறவில்லை. கோபம் கொள்ளவில்லை. மாறாக பரத்தையை ஆரத் தழுவி அவள் பேசுகிறாள் குற்றமற்ற இளைய மகளே ஏன் மயங்கினை இவனுக்கு நீயும் ஒரு தாயில்லையோ என்று... (மருதத்தில் மக்கள் வாழ்வியல், ப. 69)**

என்று கூறுவதன் மூலம் தலைவி தன் கணவன் பரத்தையிடம் செல்வதைக் கண்டிக்க இயலாது. அதற்காக அவனை விட்டுப் பிரிய முடியாது. மேலும் அப்பரத்தையையே தன் மகனுக்கு தாயும் ஆவாள் எனக் கூறும் நிலைக்கு ஆளாகிறாள். இவ்வாறு தலைவி மாறுவதற்குக் காரணம் சமூக அமைப்பு ஆணின் வழி நிற்றலே ஆகும்.

சங்க இலக்கியத்தில் வாயில் நேர்தல் பாடல்களின் அரசியல்

கணவனின் பரத்தமைச் செயல்பாட்டை பரத்தையொழுக்கம் என்று கூறுவதே வன்மையானது ஆகும். பரத்தமை தீமையென்றால் அதை ஒழுங்கென்று கொள்வது இயலாது. ஒழுக்கத்தை மீறிய செயல்தானே பரத்தமை. பெண் பாலியல் நடத்தைகளில் குடும்பத்திற்கு அப்பாற்பட்ட பெண்ணைத்தான் பரத்தையர் என்று அழைக்கின்றனர். வாயில் என்பது வீட்டின் வாசற்படியைக் குறிக்கும் சொல்லாகும். வீட்டிற்குள் அனுமதித்தல்தான் வாயில் நேர்தல் என சொல்லாடல் பெறுகிறது. வீட்டிற்கு அனுமதிக்காத நிலை வாயில் மறுத்தல் எனப்படுகிறது. வாயில்களாக பன்னிருவர் தொல்காப்பியத்தில் சுட்டப்படுகின்றனர். இவர்களின் பணி தலைவியை தலைவனுக்கு இயைப வாழ்ச் செய்வதே என்றால் அது மிகையன்று.

> **வாயில்கள் கூற்று நிகழ்த்துவதில் சில வரையறைகள் உள்ளன. பெரும்பாலும் வாயில்கள் தலைவன் தலைவயரிருவரும் மனமகிழச் சொல் நிகழ்த்துதலையே நோக்கமுடையவராயிருப்பர். (அகத்திணைக் கொள்கைகள், ப. 236)**

என்று இதனைக் கூறுகிறார். நா.சுப்புரெட்டியார். அதாவது தலைவனையும் தலைவினையும் மகிழ்ச்சியாக வாழச் செய்வதற்காகவே கூற்று நிகழ்த்துவர் எனப்படுகிறது. இதில் தலைவியை ஆற்றுப்படுத்தி கணவன் இன்றி பெண் தனியாக வாழ முடியாது என்று கூறி வாயில் நேர்வதையே வலியுறுத்தும் பாடல்களே பெரும்பாலும் காணப்படுகின்றன.

பரத்தையுடன் தொடர்பாயிருந்த தலைவன் வீட்டிற்கு வராமல் இருந்தான். தேரில் ஒருமுறை செல்லும் போது அந்தப் பாதையில் அவனுடைய மகன் ஓடினான். அவனைக் கண்டதும் தேரை நிறுத்தி மகனை தூக்கிக் கொண்டு வீட்டிற்குச் சென்றான். தலைவி அவனைக் கண்டதும் மகன்தான் அவனைப் படாதபாடு படுத்திவிட்டான் என்று மகனை கோலெடுத்து அடிக்கப் போனாள். அவளை தலைவன் கட்டிக் கொண்டான். இனி பரத்தை வீட்டிற்குச் செல்லமாட்டேன் என்று உறுதி கொண்டான் என்று மகிழ்கிறாள். தலைவன் தன் மகனைக் கொண்டு தலைவியைச் சேர்ந்து விடுகிறான். பரத்தை நாடிச் செல்லாத தலைவனைப் புகழ்கிறாள் என்பதை,

> **பழங் கணோட்டமும் நலிய,**
> **அழுங்கினன்அல்லனோ, அயர்ந்த தன் மணனே. (அகம்., பா. 66)**

என்னும் பாடலடியில் தலைவியின் மகிழ்ச்சி கூறப்படுகிறது. தலைவன் தன் மகவைக் கொண்டு தலைவியின் வாயில் நேர்தலை சாதித்துக் கொண்டான் என்பதைக் காணமுடிகிறது. இதுதான் உடைமைப் பண்பின் விளைவு ஆகும்.

> **கூன் முள் முள்ளிக் குவிகுலைக் கழன்ற,**
> **மீன் முள் அன்ன, வெண் கால் மா மலர்**
> **பொய்தல் மகளிர் விழவு அணிக் கூட்டும்**
> **அவ் வயல் நண்ணிய வளம் கேழ் ஊரனைப்**
> **புலத்தல் கூடுமோ தோழி! அல்கல் (அகம்., பா. 26)**

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

என்னும் பாடலடிகளில் ஊரனின் நிலவளம் சுட்டப்பட்டு அங்கு பெண்கள் மலர்களை பிடுங்கி வைத்துக கொள்வர். அத்தகையவரோட ஊடல் கொள்ள இயலுமா என்று கூறுகிறாள் தலைவி. அதாவது கணவனோடு ஊடல் கொள்வது வீண் என்று கூறுவதாக அமைகிறது.

பழனப் பாகல் முயிறு மூசு குடம்பை,
கழனி எருமை, கதிரொடு மயக்கும்
பூக் கஞல் ஊரன் மகள், இவள்;
நோய்க்கு மருந்து ஆகிய பணைத் தோளோளே. (ஐங்., பா. 99)

என்ற ஐங்குறுநூற்றின் பாடலானது பழனப் பாகையைத் தின்னும் எருமை மாட்டிற்குத் தலைவன் ஒப்பிடப்படுகிறான். அவனது பரத்தமையிலிருந்து விலகி அவனது காம நோயைத் தீர்க்கும் தோளைக் கொண்டவள் என் தலைவி என்று கூறுவதாக அமைகிறது. தலைவியுடன் ஊடல் தீர்ந்து வாயில் நேர்ந்த தன்மை இங்கு கூறப்படுகிறது.

அம்ம வாழி, தோழி! யான் இன்று,
அறனிலாளற் கண்ட பொழுதில்,
சினவுவென் தகைக்குவென் சென்றனென்
பின் நினைந்து இரங்கிப்பெயர்தந்தேனே (ஐங்., பா. 118)

என்ற பாடலில் அறமற்று பரத்தையர் வீட்டிற்குச் சென்ற தலைவனைப் பார்த்து கோபத்து பேசப் போனதாகவும் ஆனால் அவனைப் பார்த்ததும் பழைய நினைவுகளால் அவன் மேல் இரங்கி பேசாமல் வந்ததாகவும் கூறுகிறாள் தலைவி.

அது நீர்வளம் மிக்க ஊர்.
அந்த ஊர் போலத் தழைத்த என் கூந்தலில்
சூடிய பூக்களை வாடச்செய்த பகைவன் நீ.
அதனை நான் மறக்கமாட்டேன் (நற்., பா. 260)

என்னும் பாடலடிகளில் தலைவி தன் தலையில் கூடிய பூவினை வாடச் செய்த பகைவன் நீ என்று பரத்தையிடம் சென்று வந்த தலைவனோடு ஊடுகிறாள் எனக் கூறப்படுகிறது.

அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே. (குறுந்., பா. 33)

என்னும் பாடலில் தலைவனுக்காகத் தலைவியிடம் வாயிலாக வந்த பாணன் சொல் வன்மையில் தேர்ச்சி மிக்கவன். அவனது சொற்களை ஏற்று தலைவனை வாயில் நேர்கிறாள். வாயிலாக வந்த பாணனுக்கு விருந்து வைக்க வேண்டும் என்றும் கூறுகிறாள்.

வாயில் நேர்தல் என்பது தலைவியை சமாதானப்படுத்தும் முயற்சியை அடிப்படையாகக் கொண்டது என்பதால் சங்க காலச் சமூகத்தில் ஆணின் நடத்தைகளுக்கு எவ்வித அறத் தடையும் விதிப்பதில்லை. குடும்பத்தின் அச்சாணியாக பெண்ணை வைத்திருப்பதன் பொருட்டு ஆணுக்குக் கட்டற்ற சதந்திரத்தையும் பெண்ணுக்கு வரையறுக்கப்பட்ட வாழ்க்கையையும் கொடுப்பதாகவே அமைகிறது. இதனை,

> **தலைவனின் பரத்தமையைப் பொறுத்துக் கொள்ளம் நிலையே சங்கப் பாடல்களில் பெரிதும் காட்டப்பட்டுள்ளது. ஆணை நம்பியே வாழ வேண்டிய பெண்டிரின் பொருளாதாரச் சார்பு நிலையை வெளிப்படுத்துவதோடு ஆண் இன்னாதன பலவற்றைச் செய்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டியதே பெண்டிர் கடமையும் மனப்பாங்கும் என்பதை வலியுறுத்தவும் செய்கிறது. (சங்க இலக்கியத்தில் குடும்பம், ப. 138)**

என்ற கூற்றினால் இதனை நன்குணரலாம். பெண்கள் சங்க காலத்திலும் தற்காலத்திலும் கூட ஆணின் தயவை நாடியே வாழ வேண்டியவர்கள் ஆதலால் உடைமைச் சமூகத்திற்கான

விழுமியங்களைக் கடைபிடிக்க வேண்டியவர்களாகவும் ஆணின் செயல்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைக் கண்டுணர முடிகிறது.

முடிவுரை

சங்க காலத்தியச் சூழல் என்பது உடைமையின்பாற்பட்ட விழுமியங்களைக் கொண்டதாகச் சுட்டப்படுகிறது. ஆணின் நடத்தை கண்டு கொள்ளப்படாத நிலையில் பெண்ணின் நடத்தை கண்காணிக்கப்படுகிறது. இல்லால் என்ற சொல்லால் ஒரு பெண் குடும்பத்திற்குரியவளாக அடையாளப்படுத்தப்படுகிறாள். ஆனால் ஓர் ஆண் அவ்வாற அடையாளம் பெறுவதில்லை. எனென்றால் அவன் குடும்பத்தைக் கடந்தும் உறவுகளை மேற்கொள்கிறான். என்றாலும் குடும்பத்தின் ஆதார சுருதியாக ஆண் இருக்கிறான். அவனது வாரிசுரிமையே குடும்பத்தில் தொடர்கிறது. எனவே பெண் மட்டுமே கண்காணிப்பு வளையத்திற்குள் இருக்கிறாள். பரத்தயர் நாட்டம் கொண்ட தலைவன் மேல் சமூகம் எவ்வித அறத் தடைகளையும் விதிப்பதில்லை. மனைவியான தலைவி மட்டும் அவன் மேல் சிறிது கோபம் கொள்ள முடியும். அதற்க மேல் அவள் அவனை எதவும் செய்ய முடியாது. வாயில் மறுத்தல் என்பது பெண்ணின் சினமாகக் கருதப்படுவது போல வாயில் நேர்தல் என்பது சமூகத்தின் பார்வையில் பெண் குடும்பத்தினை நடத்த வேண்டியவள். கணவனின்றி வாழும் வகை அறியாதவள். அப்படி கணவனை தவிர்த்தால் அவள் உணவுக்குக் கூட மிகுந்த சிரமங்களை அடைய நேரிடும் தற்சார்பற்றவள் என்பதால் ஆணின் பரத்தையர் நாட்டத்தை சகித்துக் கொள்ளவே சமூகம் நிர்பந்திக்கிறது. தோழி முதலான வாயில்களின் அறிவுறுத்தல்கள் கணவனைப் பகைத்துக் கொள்ளாதே என்பதாக இருக்கிறது.

குறிப்புகள்

[1] பெ.மாதையன். *சங்க இலக்கியத்தில் குடும்பம்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.
[2] சி.வாசகி, சி.அயோத்தி. *பன்முக நோக்கில் பெண்ணியப் பதிவுகள்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
[3] ராஜ்கௌதமன். *பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்.* தமிழினி, சென்னை, 2004.
[4] எ.பாலுச்சாமி. *மருதத்தில் மக்கள் வாழ்வியல்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2011.
[5] ந.சுப்புரெட்டியார். *அகத்திணைக் கொள்கைகள்.* பாரி நிலையம், சென்னை, 1981.
[6] இரா.செயபால் (உ.ஆ). *அகநானூறு மூலமும் உரையும்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.
[7] கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ). *நற்றிணை மூலமும் உரையும்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.
[8] அ.தட்சிணாமூர்த்தி (உ.ஆ). *ஐங்குறுநூறு மூலமும் உரையும்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.
[9] வி.நாகராசன் (உ.ஆ). *குறுந்தொகை மூலமும் உரையும்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.
[10] ஞா. மாணிக்கவாசகன். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்).* உமா பதிப்பகம், சென்னை.
[11] ஞா. மாணிக்கவாசகன். *புறநானூறு (மூலமும் உரையும்).* உமா பதிப்பகம், சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Folk Deity Worship in the Novels of Cho. Dharman

K. Murugalakshmi, Ph.D. Research Scholar in Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-0206-2320
Dr. S. Bharani, Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7736–1205
DOI: 10.5281/zenodo.21791631

Abstract

Cho. Dharman has accurately documented the lives of marginalized people in the southern districts of Tamil Nadu and the unique culture of the Karisal region. His novels, such as Sool, Kookai, and Doorvai, serve as historical archives of the Karisal land. The daily lives, occupations, and worship practices of these people are deeply interconnected. Rather than prioritizing major deities, the worship of minor deities who safeguard their livelihoods serves as their true lifeblood. Minor deity worship is neither a superstition nor a formal spiritual doctrine; instead, it emphasizes the importance of human labor, water management, nature conservation, and social relationships. Dressed in simple attire and free from rigid ritualistic laws, these deities graciously accept and bless the humble offerings and homegrown produce of the people. This article examines in detail the minor deity worship practices and their socio-cultural background as revealed in So. Dharman's novels.

Keywords: Cho. Dharman, Myths, Deities, Worship.

References

[1] Ramachandran, Pu. *Karisaal Panpadum Sirutheivangalum*. New Century Book House, 2008.
[2] Saminathaiyar, U.Ve. *Purananooru Mulamum Pazhaiya Uraiyum*. U.Ve. Saminathaiyar Nool Nilaiyam, 1971.
[3] Tharman, So. *Thurvai*. Annam – Akaram, 1996.
[4] Tharman, So. *Kugai*. Kalachuvadu Pathippagam, 2005.
[5] Tharman, So. *Sool*. Adaiyalam Pathippagam, 2016.
[6] Paramasivan, Tho. *Ariyapadatha Thamizhagam*. Kalachuvadu Pathippagam, 2001.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

சோ. தர்மனின் புதினங்களில் சிறுதெய்வ வழிபாடுகள்

கி. முருகலட்சுமி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-0206-2320
முனைவர் சு. பரணி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7736–1205
DOI: 10.5281/zenodo.21791631

ஆய்வுச்சுருக்கம்

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் உள்ள விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலையும், கரிசல் நிலப் பண்பாட்டையும் துல்லியமாகப் பதிவு செய்தவர் எழுத்தாளர் சோ. தர்மன் ஆவார். இவரது நாவல்களான சூல், கூகை, தூர்வை போன்றவை கரிசல் நிலத்தின் வரலாற்று ஆவணங்களாகத் திகழ்கின்றன. இம்மக்களின் அன்றாட வாழ்க்கையும், தொழிலும், வழிபாட்டு முறைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாகும். பெருந்தெய்வ வழிபாடுகளை விடவும் வாழ்வாதாரத்தைக் காக்கும் சிறு தெய்வ வழிபாடுகளே இவர்களின் உயிர்நாடியாகும். சிறுதெய்வ வழிபாடு என்பது மூடநம்பிக்கையோ அல்லது ஆன்மீகக் கோட்பாடோ அல்லதது; அது மக்களின் தொழில், நீர்நிலை மேலாண்மை, இயற்கை பாதுகாப்பு மற்றும் சமூக உறவுகளின் முக்கியத்துவத்தைஉணர்த்துகிறது. இத்தெய்வங்கள் எளிய உடைகளுடன், சடங்குச் சட்டங்களின்றி, மக்களின் எளிய காணிக்கைகளையும் மக்கள்தங்களால் முடிந்த உணவை படைத்தாலும் அதனையும் ஏற்றுக்கொண்டு அருள்செய்கின்றன என்பதனையும் இக்கட்டுரை சோ. தர்மனின் புதினங்களில் வெளிப்படும் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளையும் அவற்றின் சமூகப் பண்பாட்டுப் பின்னணியையும் விரிவாகஆராய்கிறது.

குறிப்புச் சொற்கள்: சோ. தர்மன், புதினங்கள், சிறுதெய்வங்கள், வழிபாடுகள்.

முன்னுரை

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் உள்ள விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலையும் அவர்களின் பண்பாட்டையும் துல்லியமாக தன் படைப்புகளில் பதிவு செய்தவர் கரிசல் எழுத்தாளர் சோ. தர்மன் ஆவார். இவரது நாவல்களான சூல், கூகை, தூர்வை போன்றவை வெறும் கதைகள் மட்டுமல்ல அவை கரிசல் நிலத்தின் வரலாற்று ஆவணங்களாகும். கரிசல் நில மக்களின் அன்றாட வாழ்க்கையும், அவர்களின் தொழிலும், வழிபாட்டு முறைகளும் வெவ்வேறானவை அல்ல அவை ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை. குறிப்பாக பெருந்தெய்வ வழிபாடுகளை விடவும் தங்களின் வாழ்வாதாரத்தைக்காக்கும் சிறு தெய்வ வழிபாடுகளே இம்மக்களின் உயிர்நாடியாக விளங்குகின்றன. இக்கட்டுரையானது சோ. தர்மனின் புதினங்களில் வெளிப்படும் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளையும் அவற்றின் சமூகப்பண்பாட்டுப் பின்னணியையும் விரிவாக ஆராய்கிறது.

சிறுதெய்வங்களின் தோற்றமும் கரிசல் நிலப் பின்னணியும்

தொடக்க காலத்தில் இயற்கை மனிதனுக்குப்புதிராகவும் அச்சமூட்டுவதாகவும் இருந்தது. இருள், சூரியன், பெருமழை, காடுகளின் வனவிலங்குகள், நச்சுப் பாம்புகள் போன்றவை மனிதனுக்குப்பயத்தை உண்டாக்கின. அதே நேரத்தில், இயற்கைதான் தங்களுக்கு உணவையும் வாழ்வையும் தருகிறது என்பதையும் மனிதன் உணர்ந்தான். இந்த அச்சமும் நன்றியுணர்ச்சியுமே சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றப்புள்ளிகளாகும். சோ தர்மனின் நாவல்களில் வரும் தெய்வங்கள் சொர்க்கத்திலோ அல்லது வானத்திலோ வாழ்பவை அல்ல.

அவை மக்களின் நிலப்பரப்பிலேயே வாழ்பவை. காவல் காக்கும் வயல்களின் ஓரத்திலும், கண்மாய் கரையிலும், ஊர் மந்தையிலும், ஊர் எல்லைகளிலும் இத்தெய்வங்கள் உறங்காமல் கண்விழித்து நின்று காவல் காக்கின்றன. மக்கள் இத்தெய்வங்களைத்தங்களின் குடும்பத்தில் ஒருவராகவே கருதி தங்களின் இன்பத் துன்பங்களைப்பகிர்ந்து கொள்கின்றனர்.

> **கரிசல்காட்டுத்தெய்வங்கள் வானத்தில் இல்லை; அவை மண்ணில் விளைபவை; வரப்போரத்திலும் கண்மை கரையிலும் நின்று மக்களின் வியர்வை வாசத்தை சுவாசிப்பவை. (கரிசல் பண்பாடும் சிறுதெய்வங்களும், ப. 115)**

சிறு தெய்வங்கள் கரிசல் நில மக்களோடு பின்னிப் பிணைந்தவையாகக் கருதப்படுகின்றது.

தூர்வை புதினத்தில் நீர் மேலாண்மையும் அய்யனார் வழிபாடும்

சோ தர்மனின் புகழ்பெற்ற புதினமான தூர்வை, கரிசல் நிலத்தின் நீர் மேலாண்மையையும், கண்மாய்களைச் சுற்றி வாழும் மக்களின் வாழ்வியலையும் பேசுகிறது. இப்புதினத்தில் கண்மாய்க் கரையில் வீற்றிருக்கும் அய்யனார் மற்றும் செங்குளத்து அய்யனார், கொக்குளத்து அய்யனார் வழிபாடுகள் மிக முக்கிய இடம் பெறுகின்றன.

> **கண்மாய் நீர் நிறைந்து உடைப்பு ஏற்பட்டு ஊரை அழிக்கும் நிலையில் அய்யனாரப்பன் தோன்றி கருப்பசாமி என்ற நீர்பாய்ச்சியிடம் நானும் சுத்திப் பார்த்துட்டுத்தாண்டா வாரேன், போ, போயிஆட்களை கூட்டிட்டு ஓடியா, நீ வர வரைக்கும் தண்ணி பனஒசரம் போனாலும் கவலைப்படாத நான் பார்த்துக்கிறேன், ஓடுடா ஊருக்கு... (தூர்வை, ப. 16)**

என்று கூறியவுடன் கருப்புசாமி ஊருக்குள் ஓடி வந்து நடந்ததைக்கூறி அனைவரையும் அழைக்கிறான். கண்மாய் என்பது வெறும் நீர்நிலை அல்ல அது மக்களின் உயிர். பெருமழை பெய்யும் காலங்களில் கண்மாய்க் கரையில் நின்று இச்சிறுதெய்வங்கள் நீரை காப்பதாக மக்கள் நம்புகின்றனர். ஊருக்கு உடைப்பாய்ந்த நீர் மடைகளைத் தடையின்றி, மிகத்திறமையாகக் கவனிக்கும் மடைக்குடும்பன் துயருறும் போதெல்லாம் அய்யனார் தெய்வம் அவனுக்கு அருள்வாக்காகவும் அசரீரியாகவும் வந்து வழிகாட்டுவது இம்மக்களின் ஆழமான நம்பிக்கையாகக் காட்டப்பட்டுள்ளது

கூகை புதினத்தில் செங்கமடையான் வழிபாடு

கூகை புதினத்தில் இடம் பெறும் கதாபாத்திரம் ஆடு மேய்க்கும் அம்மாச்சி தன் மனைவியின் பிரசவவலியைக் கண்டு மருத்துவச்சியை அழைத்து வருவதற்காக சிறுவனான தன் மகனிடம் ஆடுகளைப் பத்திரமாக மேய்க்கச் சொல்லிச் சென்றான். மருத்துவச்சியைக் காணாமல் திரும்பி வந்து பார்க்கும்போது அனைத்து ஆடுகளும் இறந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான். அவன் மருத்துவச்சியை அழைக்க சென்றவுடன் ஆடுகள் கண்மாயில் இறங்கி விஷப்புல்லை மேய்ந்தன. ஒரு துளி புல் வாயில் மென்றவுடன் அடுத்த நிமிடமே தண்ணீரை தேடித்தான் ஆடுகள் ஓடும். விஷப்புல் உண்டவுடன் தண்ணீர் தரக்கூடாது. இது தெரியாத சிறுவன், தெலாக் கிணற்றில் கால் தொட்டியில் உள்ள தண்ணீரை அத்தனை ஆடுகளுக்கும் குடிக்கக் கொடுத்தான். ஆடுகள் குடித்து துள்ளித் துள்ளி இறந்தன. இதை அறிந்த அம்மாச்சி தன் மகனை சேர்த்து பிடித்துக் கொண்டும், ஆடுகளை பார்த்தும் கதறி அழுதான்.

ஜமீன், ஆடுகளைக் கொன்றதற்காக தன் மகனுக்கு தண்டனை தருவது உறுதி என நம்பினான். பிரசவ வலியால் துடித்த தன் மனைவி பற்றி சிந்திக்காமல் மகனைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் முனைப்பாக செயல்பட்டான். மகனின் கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு கண்மாய்க்கரை வழியே ஓடி, மடையின் ஊர் வாகரையில் இறங்கி மடைக்குழிக்குள் மகனை ஒளித்து வைத்தான். அவன் மெதுவாக ஊர்ந்து தவழ்ந்துச் சென்று படுத்துக் கொண்டான். அம்மாச்சி மகன் இருந்த மடக்குழியை இரண்டு பக்கமும் பெரிய பாராங்கல்லைத் தூக்கி அடைத்தார். உடனே வேகமாக ஜமீன் வீட்டிற்குச் சென்று புரண்டு அழுதான். ஆடுகள் இறந்ததை அறிந்து அம்மாச்சியைக் கட்டி வைத்து கட்டையால் அடிக்க தொடங்கினான் ஜமீன். இதனால் உடல் முழுவதும் கன்னிப் போய் இரத்தக் கோடுகளாக

காட்சியளித்தன. நா வறண்டு தண்ணீர் தண்ணீர் என்று கதறி அழுதான். அம்மாச்சி அவனின் குரல் சத்தம் வெளிவராததால் முணங்கிக் கொண்டே தலைக்கவிழ்ந்து கிடந்தான். கோபத்துடன் ஜமீன் வீச்சரிவாளைக் கொண்டு வந்து, குனிந்து துவண்டு கிடந்த அம்மாச்சியின் தலையைப் பிடித்து தூக்கி நிறுத்தி அவன் மகன் இருக்கும் இடத்தை கேட்டு நின்றான்.

அம்மாச்சி தன் மகன் மடக்குழிக்குள் இருப்பதைக் கூறியவுடன் அங்கு நின்ற கூட்டம் முழுவதும் ஓட்டமாக ஓடியது. அம்மாச்சி அடைத்து வைத்திருந்த கல்லை உருட்டி தூரப்போட்டு தரையோடு குனிந்து பார்த்தான். ஒருவன், அங்கு அவன் பார்த்த காட்சியானது

> **கூகை மூஞ்சியுடன், சிங்கத்தின் பிடறி மயிர்களோடு, வட்டமுகமாய் ஏதோ ஒன்று கண்களை உருட்டியபடி எட்டிப் பார்த்தது. கூட்டம் பின்வாங்கி ஓடியது. ஆலமரத்தடியில் ஆடுகள் கூப்பாடு போடும் சத்தம். ஆச்சரியமாய் எல்லோரும் பார்த்தார்கள் செத்துக்கிடந்த எல்லா ஆடுகளும் எழுந்து நின்று கூப்பாடு போட்டன. எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கூகை மூஞ்சியுடன் சிங்கத்தின் பிடறி மயிர்த் தொங்க இறக்கையடித்துப் பறந்து ஆலமரத்தின் அடர்ந்த கிளைகளுக்குள் அமர்ந்து யார் கண்ணுக்கும் தெரியாமல் மறைந்து போனது (கூகை, ப. 173)**

என அக்குழியில் இருந்த சிறுவனாக மாறியதைக் கண்டு அச்சமுற்றனர். சிங்க முகத்துடன் சென்ற அத்தெய்வம் போனவுடன் அம்மாச்சியின் மகன் தூங்கி எழுந்தவனைப் போல் வெளியில் வந்தான். பின் அம்மாச்சியை ஜமீன் அவிழ்த்து விட்டான். அம்மாச்சி உடனே வீட்டிற்கு ஓடினான் பிறந்த குழந்தையின் உயிரோட்டக் குரல் கேட்டு மகிழ்ந்தான். அக்குழந்தைக்கு சிங்கமுகன் என்று பெயர் வைத்து பொங்கல் செய்து படைத்து குழந்தைக்கு மொட்டைப் போட்டான். ஆடுகளை உயிர்பித்து கொடுத்த, **'செங்கமுடையார்'** என்பது சிறு தெய்வமாக ஆடு மேய்ப்பவர்களின் கோயிலாக வளர்ந்து பின் அனைவராலும் வணங்கப்படும் துடியான தெய்வமாக, சிங்கமுடையாராக, செங்கமுடையாராக ஆடுகளைக் காத்தவராக மாறிப் போனதை கூகை நாவல் பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது. மக்களுக்காகவும், ஆடு மாடுகளுக்காகவும் உயிர் துறந்தவர்களையும், அபூர்வமாக உருவெடுத்தவர்களையும் நடுகல் நட்டு தெய்வமாக வழிபடும் மரபைச் சங்க இலக்கியம் புறநானூறில் குறிப்பிடுகிறது.

> **இல்லா ஆகி ஆகுலப் படூஉம்**
> **நடுகல் பீடுடையக் கடவுள் என்ப மரபே (புறநானூறு, பா. 263)**

என்ற வரிகளின் மூலம் ஆபத்து காலத்தில் ஆநிரைகளைக் காப்பாற்றி மறைந்த வீரனை நடுகல்லாக நட்டு, கிராமப்புற தெய்வமாக வழிபடுவது பழந்தமிழர் மரபாகும்.

சூல் புதினத்தில் கருப்பன் வழிபாடு

மடைக்கருப்பன் ஊரின் நீர்ப்பாச்சியாக இருக்கின்றான். அவன் பரம்பரை பரம்பரையாக அவன் குடும்பமே இவ்வேளையைச் செய்து வருகிறது. கண்மாய் பாதுகாப்பது விவசாயத்திற்கு நீர் பங்கிட்டு அளிப்பது, காவல் காப்பது என பொறுப்புடன் இவ்வேளைகளை செய்வான். இந்நிலையில் ஒருமுறை கண்மாயின் மடையில் அடைப்பு ஏற்படுகிறது. இதனால் அவன் மேல் ஊரார் பழி சுமத்தி ஏசுகின்றனர். இப்பழியை போக்க அவனே நீரில் இறங்கி அடைப்பை எடுக்க முயற்சி செய்கின்றான். அடைப்பு இருக்கும் இடத்தை கண்டு அதில் யாரோ போட்ட தலைச்சுமை ஆவாரங்குழைக் கட்டையை எடுக்க முற்படும் போது நீரில் மூழ்கி இறக்கின்றான். அவனின் உயிர் தியாகத்திற்காக அவ்வூர் மக்கள் அவனை அய்யனார் சாமிக்கு அருகில் வைத்து வழிப்படத் தொடங்கியதாகவும் அன்று முதல் மடைக்கருப்பன் கண்மாயின் காவல் தெய்வமாக இருந்து காப்பதாகவும் கதை வழி நம்பிக்கையை விதைக்கும் நிலையைக் காணமுடிகிறது. கண்மாய் கரை அடைப்பை எடுக்க நீருக்குள் மூழ்கி மூச்சை அடக்கி தண்ணீரை திறந்து வைத்தால் இத்தகைய கருப்பனின் பெருமையைக்,

> **கண்மாய் தண்ணீர், கரும்பு, நெல், கடலை, வெற்றிலை, காய்கறிகள், பயிர்கள் என மாறி மாறி மக்களை காத்தான் அதனால் மடைக்கருப்பன் அய்யனாரப்பனின்**

அருகிலேயே சிலையாகி போனான். கருப்பனின் முன்னால் வருடம் தவறாமல் பொங்கல் பானைகள் பொங்கி வருகின்றன. இடப்பக்கம் கண்மாய், வலப்பக்கம் வயல்கள், தண்ணீரின் சலசலப்பும் பறவைகளின் ஒலிகளும் அய்யனாரப்பனின் அருகாமையும் கருப்பன் காவல் தெய்வமாக மாறிப்போனால் கையெடுத்துக் கும்பிடாத ஜனங்கள் இல்லை (சூல், ப. 61)

என மடைக்குடும்பன் கதையையும் அவ்வூர் மக்களின் நம்பிக்கையையும் கானமுடிகின்றது.

தமிழகத்தின் பெரும்பாலான கண்மாய்க்கரைகளிலும், மடைகளின் ஓரங்களிலும் கருப்பசாமியோ அல்லது பிற காவல் தெய்வங்களோ வீற்றிருப்பார்கள். இவர்கள் வெறும் கற்பனைத் தெய்வங்கள் அல்ல; அந்தந்தக் கண்மாயைக் காப்பதற்காகவும், நீர்ப் பங்கீட்டின் போது ஏற்பட்ட பூசல்களினாலும், மடை அடைப்பை நீக்க முயன்று நீருக்குள் பலியான மனிதர்களின் வரலாற்று நினைவுகளே இத்தெய்வங்கள். (அறியப்படாத தமிழகம், ப. 35)

தொ. பரமசிவன் .அறியப்படாத தமிழகம் என்ற கட்டுரை நூலில் சிறுதெய்வ வழிபாட்டின் முக்கியத்துவத்தைக் காணமுடிகிறது.

முடிவுரை

சோ. தர்மனின் புதினங்களில் வெளிப்படும் சிறுதெய்வ வழிபாடு என்பது வெறும் மூடநம்பிக்கையோ அல்லது ஆன்மீகக் கோட்பாடோ அல்ல. அது மக்களின் தொழில், இயற்கை பாதுகாப்பு, நீர்நிலை மேலாண்மை மற்றும் சமூக உறவுகளின் அச்சாணியாகும். இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கும், எளிய கிராமத்துச் சமூக அமைப்பைப் பாதுகாப்பதற்கும் நம் முன்னோர்கள் உருவாக்கிய இந்த வாழ்வியல் முறைகள் இன்றும் தமிழ் பண்பாட்டின் உயிர்நாடியாகத் திகழ்கின்றன என்பதை சோ. தர்மன் தனது படைப்புகள் மூலம் உலகிற்கு உணர்த்தியுள்ளார். சோ. தர்மனின் புதினங்கள் காட்டும் சிறுதெய்வ வழிபாட்டு முறைகள், சாதி மற்றும் மதக் கட்டுப்பாடுகளைக் கடந்து ஒட்டுமொத்த கிராமத்து மக்களையும் ஒன்று சேர்க்கும் உன்னதக் கருவியாகச் செயல்படுகின்றன. பெருந்தெய்வக் கோவில்களில் இருப்பது போன்ற தீண்டாமையோ, கடுமையான ஆகம விதிகளோ இங்கில்லை. இத்தெய்வங்கள் முறுக்கிய மீசையுடனும், எளிய வேட்டியுடனும், சடங்குச் சட்டங்கள் இன்றி, மக்களின் எளிய காணிக்கைகளையும், கல்லும் கறியும் கலந்த உணவையும் ஏற்றுக்கொண்டு அருள்பாலிக்கின்றன.

குறிப்புகள்

[1] இராமச்சந்திரன், பூ. *கரிசல் பண்பாடும் சிறுதெய்வங்களும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2008.
[2] சாமிநாதையர், உ. வே. *புறநானூறு மூலமும் பழைய உரையும்.* உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1971.
[3] தர்மன், சோ. *தூர்வை.* அன்னம் – அகரம், சிவகங்கை, 1996.
[4] தர்மன், சோ. *கூகை.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2005.
[5] தர்மன், சோ. *சூல்.* அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், 2016.
[6] பரமசிவன், தொ. *அறியப்படாத தமிழகம்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2001.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Kurunthogai as a Didactic Treatise

R. Vignesh, Assistant Professor, Department of Tamil, Madurai College, Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0003-4881-445X
DOI: 10.5281/zenodo.21791699

Abstract

Among the Sangam corpus, Kuruntokai occupies a distinguished position as one of the finest anthologies portraying the subtleties of akam (interior or love) life. As one of the Eight Anthologies (Ettuthokai), it vividly records the emotional experiences, social relationships, cultural values, and ethical principles of the Sangam people in close harmony with the natural environment. Through the voices of the hero, heroine, friend, nurse, and other characters, the poems reveal the psychological depth of human emotions alongside the responsibilities associated with family and society. This study emphasizes that Kuruntokai is not merely a historical or literary document depicting the lifestyle of the Sangam age, but also an ethical text that conveys timeless principles of life relevant to every generation. Values such as love, trust, patience, honesty, unity, sacrifice, and mutual respect are presented as the foundations of harmonious social living. Furthermore, by illustrating the inseparable relationship between humans and nature, Kuruntokai reflects the ecological wisdom and cultural philosophy of the ancient Tamils. The study concludes that the ethical ideals embodied in Kuruntokai continue to serve as enduring guidelines for nurturing human relationships, strengthening moral character, and fostering a just and value-based society..

Keywords: Sangam Literature, Kurunthokai, Aram, Marital Ethics.

References

1. Ilampuranar. *Tolkappiyam Porulathikaram*. Mullai Nilaiyam, Chennai.
2. Gna. Manikkavasagan. *Pattuppattu (Moolamum Uraiyum).* Uma Pathippagam, Chennai.
3. Balasubramaniyam. *Natrinai (Moolamum Uraiyum).* New Century Book House, Chennai.
4. U. Ve. Saminathaiyar. *Kurunthogai (Moolamum Uraiyum).* Kabir Achchukoodam, Chennai.
5. Gna. Manikkavasagan. *Purananuru (Moolamum Uraiyum).* Uma Pathippagam, Chennai.
6. Dakshanamoorthy. *Ainkurunuru (Thoguppu 1).* New Century Book House, Chennai.
7. Ira. Jeyapal. *Aganaruru (Moolamum Uraiyum).* New Century Book House, Chennai.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil

The content of the article is licensed under https://creativecommons. org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

குறுந்தொகை ஓர் அற நூல்

இரா. விக்னேஷ், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மதுரைக்கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0003-4881-445X
DOI: 10.5281/zenodo.21791699

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்களில் அகவாழ்வை நுட்பமாகப் பதிவு செய்துள்ள நூல்களுள் குறுந்தொகை சிறப்புமிக்க இடத்தைப் பெறுகிறது. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான இந்நூல், சங்ககால மக்களின் காதல் வாழ்க்கை, சமூக உறவுகள், பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் ஒழுக்கநெறிகளை இயற்கைச் சூழலோடு இயைந்த நிலையில் வெளிப்படுத்துகிறது. தலைவன், தலைவி, தோழி, செவிலி போன்ற மாந்தர்களின் கூற்றுகள் வழியாக மனித உணர்வுகளின் உளவியல் நுட்பங்களும், குடும்ப மற்றும் சமூகப் பொறுப்புணர்வும் தெளிவாகப் பதிவாகியுள்ளன. இவ்வாய்வு, குறுந்தொகை வரலாற்று அல்லது இலக்கியச் சான்றாக மட்டுமல்லாமல், காலம் கடந்தும் பொருந்தக்கூடிய வாழ்வியல் அறங்களை எடுத்துரைக்கும் சிறந்த அற இலக்கியமாகவும் விளங்குகிறது என்பதை வலியுறுத்துகிறது. அன்பு, நம்பிக்கை, பொறுமை, நேர்மை, ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல் போன்ற மனிதநேயப் பண்புகள் சமூக வாழ்வை நெறிப்படுத்தும் அடிப்படை விழுமியங்களாக இந்நூலில் வலியுறுத்தப்படுகின்றன. மேலும், மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான இயைபை எடுத்துரைப்பதன் மூலம் தமிழரின் வாழ்வியல் சிந்தனையும் பண்பாட்டு மரபும் வெளிப்படுகின்றன. இதன் அடிப்படையில், மனித உறவுகளைப் பேணுவதற்கும் ஒழுக்கமிக்க சமூகத்தை உருவாக்குவதற்கும் குறுந்தொகை வழங்கும் வாழ்வியல் அறங்கள் இன்றைய சமூகத்திற்கும் நிலையான வழிகாட்டுதலாக அமைகின்றன என்பதே இவ்வாய்வின் முக்கியக் கருத்தாகும்.

குறிப்புச்சொற்கள்: சங்க இலக்கியம், *குறுந்தொகை*, அறம், காதலறம்.

நோக்கவுரை

சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படுவன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவ்விலக்கிய நூல்கள் பழந்தமிழரின் நற்பண்புகளையும் சமூக வாழ்வியலையும் எடுத்தியம்புகின்றன. மொழிக்கு இலக்கணம் வகுத்த நம் முன்னோர்கள் வாழ்வியல் நெறியை வகுத்தும் பகுத்தும் செம்மையாக வாழ்ந்துள்ளதைச் சங்கத் தமிழ் நூல்கள் மூலம் அறிய முடிகின்றது. எட்டுத்தொகை நூல்களில் முதன் முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகவும் நல்ல எனும் அடைமொழி பெற்றுச் சிறந்து விளங்கும் நூலாகவும் உள்ளது குறுந்தொகை. இந்நூல் தமிழர்களின் வாழ்வியலை உவமையழகுடன் சேர்த்து இன்பம் பயக்கும் வகையில் அமைந்துள்ளது. பூரிக்கோ தொகுத்த குறுந்தொகை வழியே சங்ககால தமிழர்களின் வாழ்வியல் அறங்களைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

குறுந்தொகையில் வாழ்வியல் அறங்கள்

குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகும். இதில் பெரும்பாலும் அகவியல் பாடல்கள் இடம்பெற்று இருப்பினும் மனிதனின் காதல் உணர்வுகள், நெஞ்சின் நிலைப்பாடுகள், வாழ்க்கைச் சூழல் போன்றவற்றை இயற்கையுடன் இணைத்து அழகாகப் பாடியிருக்கின்றார்கள். உரையாசிரியர்களால் அதிகம் கையாளப்பட்டுள்ள நூல் குறுந்தொகை. இந்நூல் பெயரளவில் குறுந்தொகையாக இருந்தாலும் வாழ்வியல் அறங்களை எடுத்துக் கூறுவதில் பெருந்தொகையாக உள்ளது எனலாம் . அவ்வகையில், காதலறம், இல்லறம் எனும் அறங்களை இந்நூலில் விளக்கமாக அறிய முடிகிறது.

குறுந்தொகையில் காதலறம்

'களவு' என்ற சொல்லால் நம் முன்னோர் காதல் ஒழுக்கத்தைச் சுட்டியிருப்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. உலகியலில் 'களவு' என்றால் திருட்டு; ஐம்பெருங்குற்றங்களில் ஒன்று. ஆயின், களவு என்ற சொல்லால் காதல் ஒழுக்கத்தை நம் முன்னோர் குறித்ததிலே ஒரு நுட்பம் உள்ளது.

> **ஒத்தார்க்கும் மிக்காருக்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது, கன்னியர் தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்து பின்னும் அறநிலை வழாமல் நிற்றலால் இஃது அறமெனப்படும். (தொல், பொருள்., ப. 155)**

என்பார் உரையாசிரியர் இளம்பூரணர்

> **யாயும் ஞாயும் யாரா கியரோ**
> **எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
> **யானும் நீயும் எவ்வழி அறிதும்**
> **செம்புலப் பெயல்நீர்ப் போல**
> **அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே (குறுந்., பா. 40)**

எனும் புகழ்பெற்ற பாடல் களவொழுக்கத்தின் இயல்பினைப் படம்பிடித்துக் காட்டும். இங்ஙனம் 'ஒத்தார் இருவரும் தாமே கூடும் கூட்டம்' களவு எனப்படும். "இருவேம் ஆய்ந்த மன்றல்" கபிலர், குறிஞ்சிப்பாட்டு, பா. அ – 21. என குறிஞ்சிப்பாட்டு இதனைச் சுட்டும். காதலர் இருவர் தனிமையில் மறைவாக ஒழிகி வந்த உறவு, நாளடைவில் கற்பாகும். களவு கற்பிலே முடிவது தான் தமிழ்ப் பண்பாடு; மரபு. 'களவின் வழிவந்த கற்பு' என இதனைச் சுட்டுவர். "தமிழ்க்காதல்" குறித்து ஆராய்ந்த மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் இதனை தம் நூலில் விளக்கியுள்ளார். மேலும், குறிஞ்சி நிலத் தலைவனின் அன்பைப் போற்றும் தலைவி,

> **"நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று,**
> **நீரினும் ஆரள வின்றே, (குறுந். 3)**

எனும் பாடல் வண்டுகள் தேனைச் செய்தற்கு ஏற்ற இடமாகிய நாட்டை உடைய தலைவனுடன் எனக்குடைய நட்பு, பூமியைக் காட்டிலும் பெரியது; ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தது; கடலைக் காட்டிலும் அளத்தற்கரிய ஆழம் உடையது என்று சொல்வது ஆகச் சிறந்த அறமாக கருதப்படுகிறது. மேலும் இதே நயத்துடன் மற்றோர் பாடலும் உண்டு,

> **"பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன**
> **நீருறை மகன்றிற் புணர்ச்சி போல" (குறுந். 57)**

நீர்வாழும் மகன்றில் பறவைகளின் புணர்ச்சி (ஒன்றாய் கூடி வாழ்தல்) போன்றது எங்கள் காதல். பிரியவே முடியாத, குறையாத காதலுடன், தலைவன் பிரிந்தால் உயிர் வாழ முடியாது என்று தலைவி வருந்துகிறாள். காதல் என்பது பிரிவைச் சிறிதும் தாங்காது, மிகச்சிறிய தடையும் பெரிய துன்பத்தைத் தரும் என்பதை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதனை, திருவாசகத்தில், **"இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" (மாணிக்கவாசகர், திருவாசகம்,. பா. அ. 2)** எனும் சிவபுராண பாடலடியின் மூலம், சிவபெருமான் தன்னை எப்போதும் பிரியாமல், தன் நினைவிலும் அகத்திலும் நீக்கமற நிறைந்து இருக்கிறான் என்பதைப் போற்றி, அவனது திருவடிகளை வாழ்த்துவதாக இப்பகுதி அமைந்துள்ளதனை அறிய முடிகிறது.

குறுந்தொகையில் இல்லறம்

இல்லறம் (இல்+அறம்) என்பது கணவன், மனைவி இணைந்து அன்புடன் வாழும் குடும்ப வாழ்க்கையாகும். இது சமுதாயத்தின் அடிப்படை அலகாகவும், அறநெறிகளைப் பின்பற்றி வாழும் சிறந்த வழியாகவும் கருதப்படுகிறது. விருந்தோம்பல், சுற்றம் பேணல், நன்மக்களைப் பெறுதல், அறப்பணிகள் செய்தல் மற்றும் துறவிகளுக்கு உதவுதல் ஆகியவை

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

இல்லறத்தின் முக்கிய கடமைகளாக தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இவ்வகை அறங்களில் சில,

விருந்தோம்பல் அறம்

இல்லறத்தில் மிக முக்கியமான பண்புகளில் ஒன்று விருந்தோம்பல். விருந்தோம்பும் பெருவாழ்க்கையினை மகளிர் விரும்பினர். விருந்தோம்பற் பண்பு சிறந்த இல்லற அறமாக மேற்கொள்ளப்பட்டது. விருந்தோம்பலைத் தலைமக்களுக்குரிய சிறந்த கடமைகளுள் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

"விருந்து புறந்த ருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோர் மாண்புகள் தொல்காப்பியர், தொல்காப்பியம், கற்பியல்" 11.

எனும் நூற்பா விருந்தோம்பலைத் தலைசிறந்த விழுமியமாக எடுத்துரைப்பதைக் காணலாம். குறுந்தொகைத் தலைவி,

"பலர்புகழ் வாயி லடைப்பக் கடவுநர்
வருவீ ருளீரோ வெனவும்
வாரார் தோழிநங் காதலோரே" (குறுந்.118)

நள்ளிரவில் வாயில் காப்போர் விருந்தினரை வரவேற்கும் சங்க கால விருந்தோம்பல் பண்பை இப்பாடல் விவரிக்கிறது. தலைவன் வரும் வழியில் மாலையில் கதவை அடைக்க, வழிப்போக்கர்களை அழைத்து உணவளித்து தங்க வைக்கும், அன்றைய இல்லற அறத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. மேலும்,

"பல் ஆ பயந்த நெய்யின், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழு கலத்து ஏந்தினும் சிறிது என் தோழி...
விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" (குறுந். 210)

அவரை நினைத்து என் தோள்வளம் நெகிழ்ந்த துன்பத்தைப் போக்கும் வகையில் விருந்து வரும்போது கரையும் காக்கை கரைகிறது. (அவர் வருகிறார் போலும்) தோழி! அந்தக் காக்கைக்கு நள்ளி வள்ளல் கானத்தில் மேயும் பல பசுக்கள் கறந்த பாலில் எடுக்கப்பட்ட நெய்யில் தொண்டி ஊர்ப்பகுதியில் விளைந்த நெல்லரிசியில் சமைத்த சோற்றில் கலந்து உண்ணக் கொடுத்தாலும் அது சிறிய கைம்மாறுதான் என்று தலைவி கூறுகிறாள். இதன் மூலம், காக்கைக்கு விருந்து வைக்கும் பண்பினை அறிய முடிகிறது.

பொருளீட்டல் அறம்

பொருளீட்டுதல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான பணம், செல்வம் அல்லது சொத்துக்களை நல்வழியில் சம்பாதிப்பதாகும். இது 'பொருள் + ஈட்டு' எனப் பிரியும். அறநெறி வழுவாமல், உழைப்பின் மூலம் செல்வத்தைப் பெருக்குவதைக் குறிக்கிறது.

பழந்தமிழ் மக்கள் யாவரும் அகம், புறம் ஆகிய இரண்டு நிலைகளிலும் அறம் சார்ந்த வாழ்வியலையே உயிரினும் மேலானதாகக் கொண்டு ஒழுகினர். அவர்களுள் ஆண்மகன் பொருளீட்டுவதையே தலையான கடமையாகக் கொண்டவன் என்பதனை, "வினையே ஆடவர்க்கு உயிர்" (குறுந். 135) என்ற குறுந்தொகைப் பாடலடி தெரிவிக்கின்றது. இக்கருத்தை நற்றிணை பாடலடிகளுடன் ஒப்பிடத்தக்கது. "பொருள்வயின் பிரியல் ஆடவர்க்கு இயல்பு" (நற்றிணை, பா. எ – 243) மேலும், பண்டைய காலம் தொட்டு மூதாதையர் வழி வந்த செல்வத்தை நுகர்தல் என்பது தலைமக்களுக்கு உரிய ஒழுக்கம் அன்று. அவரவர் வருவாய் வழி நின்று, இல்லறமாகிய நல்லறத்தை மேற்கொள்ள வேண்டும். மூதாதையர் சேர்த்து வைத்த செல்வத்திற்கு இளைய தலைமுறையினர் பாதுகாப்பாளர் தாமே தவிர, செலவு செய்வதற்கு உரியவர் அல்லர். அவ்வாறு இன்றி உயர்ந்தோர் வைத்த செல்வங்களை அதாவது சந்ததிக்கு உரிய செல்வங்களைத் தானே உண்பார்களாயின், அவர்கள் உயிரோடு இருப்பினும்

இறந்தவர்களாகவே கருதப்படுவார்கள். இதனை, "உள்ளது சிதைப்போர் உளர் எனப்படாஅர்" (குறுந். 283) என்ற குறுந்தொகைப் பாடலடி தெரிவிக்கின்றது.

மன அறம் (தலைவி)

பெண் எனப்பட்டவள் சுற்றத்தைப் பேணிக்காக்க படைக்கப்பட்டவள். தலைவனின் இன்ப துன்பங்களில் தலைவி இரண்டறக் கலத்தல் இயல்பு. எங்கு எப்போது பிறந்தாலும் உன்னைத் தவிர வேறு ஏதும் வேண்டாம் என்று சொல்லும் பாங்கு தலைவிக்கு உரியது என்பதனை,

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே" (குறுந்.49)

இப்பிறவி நீங்கி அடுத்த பிறவி எடுத்தாலும், நீயே என் கணவனாகவும், உன் நெஞ்சில் நிறைந்தவள் நானாகவும் இருக்க வேண்டும் என்று தலைவி தலைவனிடம் கூறுவதாக இப்பாடல் அமைகிறது. இக்கருத்தை,

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உன் தன்னோடு உற்றோமே ஆவோம் ஆண்டாள், திருப்பாவை, பாசு. எ. 29

எனும் திருப்பாவை பாடலுடன் ஒப்பிடத்தக்கது.

நடுவுநிலைமை தவறாமை

குற்றத்திற்குத் தீர்ப்பு வழங்குவோர் நடுநிலைமையோடு நின்று தீர்ப்பு வழங்க வேண்டும். தராசு முள்போல் யார் பக்கமும் சாய்ந்திடாமல் இவர் வேண்டியவர், வேண்டாதவர், உற்றார், உறவினர், நண்பர் என்று பாராமல் உண்மையை ஆய்ந்து தீர்ப்பு வழங்கிட வேண்டும். இந்நடுநிலைமையை உணர்த்தும் பாடல்கள் குறுந்தொகையில் காணப்பெறுகின்றன. இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் தலைவியின் கூந்தல் இயற்கை மணம் உடையது என நலம்பாராட்டுகிறான் தலைவன். மேலும், தும்பியினை அழைத்து நீ அறியும் மலர்களில் இதனைப் போன்று நறுமணம் உள்ள மலர்களும் உள்ளனவோ? எனவும் கேட்கிறான். அவ்விடத்து, தனக்கு இன்பத்தைத் தருவதைப் பதிலாகக் கூறாமல் உண்மையை ஆய்ந்து அறிந்த ஒன்றினை விடையாகக் கூறு என்கிறான். இதனை, "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ? (குறுந்.2) எனும் பாடலடி உரைக்கிறது. வழக்குகளை விசாரிக்க அக்காலத்தில் அறங்கூறும் அவையமும் இருந்தது என்பதனை, "முறையுடை யரசன் செங்கோ லவையத்து" (குறுந்.276) எனும் பாடல் புலப்படுத்துகிறது. இதன் மூலம், குறுந்தொகை பாடல்கள் இல்லற மாண்புகளை அதிகம் தருகிறது என்பதை அறிய முடிகிறது.

நிறைவுரை

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்பே தோன்றியவர்கள் தமிழர்கள். அவர்களே உலக மக்களின் வாழ்வியல் நாகரிக முன்னோடிகளாக தங்கள் வாழ்க்கையை வாழ்ந்திருக்கின்றனர். நாகரிக முன்னோடிகளாக திகழும் தமிழர்களின் வாழ்வியல் அறங்களைக் குறுந்தொகைப் பாடல்கள் பறைசாற்றுகின்றன என்பதற்கு சான்றாதாரமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. மேலும், குறுந்தொகை பாடலின் திறனறிந்தே நல்ல எனும் அடைமொழியைத் தமிழர்கள் வழங்கியுள்ளனர் என்பது திண்ணம்.

குறிப்புகள்

1. இளம்பூரணர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. முல்லை நிலையம், சென்னை.
2. மாணிக்கவாசகன், ஞா. *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)*. உமா பதிப்பகம், சென்னை.
3. பாலசுப்ரமணியம். *நற்றிணை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. சாமிநாதையர், உ. வே. *குறுந்தொகை (மூலமும் உரையும்)*. கபீர் அச்சுக்கூடம், சென்னை.
5. மாணிக்கவாசகன், ஞா. *புறநானூறு (மூலமும் உரையும்)*. உமா பதிப்பகம், சென்னை.

6. தட்சணாமூர்த்தி, அ. *ஐங்குறுநூறு (தொகுப்பு 1)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
7. செயபால், இரா. *அகநானூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 **E-ISSN: 2583-0481**
MLA, DOAJ Indexed

Social Oppression and the Vigilante Population in Jaffna in the 20th Century - A Sociological Study

S. Vevoka, Researcher, Department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
ORCiD: https://orcid.org/0009-0004-9890-4098
Dr. (Mrs) S. Kesavan, Head & Hindu Civilization, Senior Lecturer Gr-1,
Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
ORCiD: https://orcid.org/0000-0001-9959-6219
10.5281/zenodo.21791776

Abstract

Social inequalities are fundamentally shaped by the production relations that exist within a society. Nevertheless, there are also non-economic forms of social stratification based on birth, wherein individuals are hierarchically differentiated through caste. The origins of such inequalities can be understood in relation to the historical evolution of slave and feudal modes of production. Throughout history, transformations in class relations have emerged through class struggles, leading to the rise, development, and decline of successive classes. Accordingly, social formations have witnessed the emergence of classes such as master and slave, landlord and serf, and capitalist and worker. The twentieth century further demonstrated the possibility of constructing an egalitarian society through struggles aimed at abolishing class divisions. Unlike class structures, however, the caste system has persisted for centuries with remarkable continuity, despite sustained resistance and social conflicts. Understanding this enduring social order requires an examination of the lived experiences of marginalized communities striving for social emancipation. In this context, the present study explores the social inequalities, caste-based restrictions, and the struggles undertaken by oppressed communities against discrimination and social exclusion in the Jaffna region of northern Sri Lanka.

Keywords: Twentieth Century, Jaffna Social Order, Caste-based Restrictions, Struggles against Oppression, People's Movements, Marginalized Communities.

References

[1] Sengaiyazhiyan. *Panangkudal*. Naval, Kamalam Pathippagam, 2015.
[2] Theniyan. *Nenjil Pathinthulla Ninaivugalil Perasiriyar Ka.Sivathambi*. Kumaran Puthaka Illam, 2012.
[3] Theniyan. *Panaiyin Nizhal*. Mahendiraraja Mayuran Ninaivu Veliyitu, 2006.
[4] Theniyan. *Maththu Vetti*. Naval, Mallikaipanthal Veliyitu, 1996.
[5] Theniyan. *Venthu Thaninthathu Kadu*. Kurunaval, Jeevanathi Veliyitu, 2017.
[6] Daniel, Ke. *Aaru Navalgal Thoguthi – 1*. Adaiyalam Pathippagam, 2005.
[7] Yogaratnam. *Theendamai Kodumaigalum Thee Moonda Naatkalum*. Ilangai Dalith Samuga Mempattu Munnani, 2011.
[8] Yogarasa, Se. *Eezhathu Vaimozhip Paadal Marapu*. Va.Ki.Ma. Panpattu Thinaikkalam, Kalvi, Vilaiyattu Thurai, Ilaignar Vivakara Amachchu, 2002.
[9] Vanamamalai, Na. *Thamizar Naattu Paadalgal*. New Century Book House, 1976.
[10] Vegujanan Ravana. *Ilangaiyil Sathiyamum Atharketirana Porattangalum*. Vavuth Vishan Gopalapuram, 2007.

[11] Raveendran, Na. *Ilangai Thinai Arasiyal Varkkaporattam – October 21 Ezhuchiyin Ninaivaga*. Samuga Vilipunarvirkana Amaippu, Akaram Printers, 2019.
[12] Raveendran, Na. *Sathi Desam Panpadu*. Aiyar Manai Pirivu Singanallur, Kovai, 2014.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

20 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண சமூக ஒடுக்குமுறைகளும் விளிம்பு நிலை மக்களும் - ஓர் சமூகவியல் ஆய்வு

செ. வேவோகா, முதுதத்துவமானி ஆய்வாளர், இந்துநாகரிகத் துறை,
பட்டப்படிப்புகள் பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
ORCiD: https://orcid.org/0009-0004-9890-4098
பேரா. கலாநிதி, S.கேசவன், இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
ORCiD: https://orcid.org/0000-0001-9959-6219
DOI: 10.5281/zenodo.21791776

ஆய்வுச் சுருக்கம்

சமூக ஏற்றத்தாழ்வுகள் ஒரு சமூகத்தின் உற்பத்தி உறவுகளின் அடிப்படையிலேயே முடிவாகின்றன. இருப்பினும் பிறப்பால் மனிதரை வேறுபடுத்தி அந்த வேறுபாடுகளுக்குள் ஏற்றத் தாழ்வுகள் கொண்ட உற்பத்தி சாரா சமூக ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. இவற்றின் தோற்றம் அடிமைச் சமுதாய நிலவுடமைச் சமுதாய உற்பத்தி உறவுகளின் ஊடாக அறியமுடிகிறது. வர்க்கங்களிடையேயான போராட்டங்கள் ஊடாக வர்க்க உறவுகளில் மாற்றங்கள் ஏற்படுவதாயும் புதிய வர்க்கங்களின் தோற்றம், வளர்ச்சி, அழிவு என்பனவற்றின் ஊடாக உலகின் எழுதப்பட்ட வரலாறு இயங்கி வருகின்றது. இந்த வகையில் ஆண்டான் - அடிமை, நிலவடைமையாளன் - பண்ணையடிமை, முதலாளி - தொழிலாளி எனப் பலவேறு வர்க்கங்கள் உருவாகியுள்ளதனையும் காணலாம். வர்க்கங்களிடையேயான இந்தப் போராட்ட வரலாற்று அனுபவங்களின் தொடர்ச்சியாக வர்க்கங்களை ஒழித்துக்கட்டிச் சமத்துவ சமூகம் படைக்கும் போராட்டத்தை உலகு இருபதாம் நூற்றாண்டில் வெற்றிகரமாக நடாத்திக்காட்டியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் சாதியச் சமூகம் ஒன்றும் சாதிகளிடையே போராட்டம் நிலவிவந்த வரலாற்றுச் செல்நெறியில் சாதிகளை ஒழித்துக் கட்டும் போர்ப்பரணியைத் தொடக்கிப் பழைய வர்க்கங்கள் ஒழிந்து புதியவர்க்கங்கள் தோன்றி வளருதல் போலவன்றிப் பலநூறு வருடங்கள் ஒரே வகைச் சாதிகள் நீடித்துத் தொடர்கின்ற சாதியச் சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களிடம் அடக்கப்பட்டு எழுச்சிபெற முயற்சிக்கும் விழிம்பு நிலை சமூகத்தினைப் புரிந்து கொள்வதற்கும் இக்கட்டுரை வழிகாட்டுவதாகவும் அமைந்துள்ளது. அந்தவகையில் இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாண பகுதியில் சமூகத்தின் மத்தியில் காணப்பட்ட சமூக வேற்றுமைகள், கட்டுப்பாடுகள், அதனை எதிர்த்து அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட மக்கள் மேற்கொண்ட போராட்டங்கள் பற்றிய விடயங்களை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

குறிப்புச்சொற்கள்: 20 ஆம் நூற்றாண்டு, யாழ்ப்பாண சமூகக் கட்டுப்பாடு, ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்கள், மக்கள் போராட்டம், விளிம்பு நிலை மக்களின் எழுச்சி.

அறிமுகம்

இலங்கையின் நிலவுடமை ஆதிக்கத்திற்குரியவர்களாக கொவிகம, வேளாளர் என்னும் சமூகத்தினர் கலப்படைந்ததன் வாயிலாக பெரும்பாண்மை பெற்றதில் இருந்து வேறுபட்ட வடிவில் கர்னாடகத்தின் பெரும்பாண்மை சாதியான லிங்காயத்துக்களின் உருவாக்கம் அமைந்துள்ளது. இன்று ஒரு சாதியாக உள்ள லிங்காயத்துக்கள் ஏறத்தாள ஆயிரம் ஆண்டுகளின் முன்னர் பசவர் என்பவரால் அமைக்கப்பட்ட போது சாதி முறைக்கு எதிரான

கலகப் பண்போடு உருவாக்கியிருந்தார். அனைத்து சாதியினரையும் இணைத்து வீர சைவம் எனத் தனியொரு மதப்பிரிவாகத் தொடங்கியிருந்தார். இவ்வகையில் இந்து சமயத்தின் அடிப்படையில் நிராகரித்து உருவான வேறுபட்ட வீரசைவமும் காலப்போக்கில் இந்து மதப் பிரிவாக்கப்பட்டுவிட்டது. இலங்கையின் யாழ்ப்பாணத்தில் 1966 ஒக்டோபர் 21ன் எழுச்சி “சாதி அமைப்புக் காட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்” என விண்ணைச் சாடும் முழக்கத்துடன் அந்தப் போர்ப்பரணியைத் தொடக்கி அதற்கெதிரான போராட்டங்களும் முன்வைக்கப்பட்டது. (இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும், ப. 183) இவ்வாறு இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட சாதியத்தின் பரம்பல் மற்றும் விரிவாக்கம், அவற்றின் சமூக ரீதியிலான தாக்கம் என்பன பற்றியும் கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் சமூக ஏற்றத் தாழ்வுகள் மற்றும் ஒடுக்குமுறைகள் என்பன காணப்பட்டன. இருப்பினும் வட இலங்கையின் யாழ்ப்பாணப் பகுதியில் காணப்பட்டது போன்ற இறுக்கம் எங்கும் காணப்படவில்லை என்றே கூறலாம். இலங்கைத் தமிழர்களிடையே குறிப்பாக வடபுலத்து தமிழர்களிடையே, அமைந்திருந்த சாதியப் படிநிலையினை இந்தியச் சூழலில் காணப்படுவது போன்ற ஒரு கூர்ங்கோண வடிவில் வைத்து நோக்கலாம். உச்ச நிலையில் ஆதிக்க உயர் வேளாளர்களும், அவர்களுக்கு அடுத்ததாக எண்ணிக்கையில் குறைவான பிராமணர்களும், அடுத்தடுத்த படி நிலையில் பலதர நிலை வேளாளர்கள் எனப்படுவோரும் அவர்களை ஒத்தவர்களும் காணப்பட்டனர். உடல் உழைப்பில் ஈடுபடும் சிறு நிலக்குத்தகை விவசாயிகளான வேளாளர்கள் கணிசமானவர்களாவர் ஆனால் சாதிய ரீதியில் அவர்கள் உயர்வானவர்களாகவே கொள்ளப்பட்டனர். இவர்கள் அனைவரையும் உயர் சாதியினர் என்ற வகைக்குள் உள்ளடக்கிக் கொள்ளலாம். இவர்களுடைய எண்ணிக்கையைத் தமிழர் சனத்தொகையில் சுமார் முப்பந்தைந்து வீதமானவர்களாகக் கொள்ளமுடியும். அடுத்த படிநிலை கைவினைச் சாதிகளாக இருந்து சேவைகள் வழங்குவோராகக் காணப்படுகின்றனர். இவர்களே இடைநிலைச் சாதியினர் என்று கூறப்படுவோராவர், (இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும், ப. 62) உலோக, மர, மண் மற்றும் கட்டட வேலை செய்வோர், சுயமாகத் தொழில் செய்வோர், கோவில் தொண்டு புரிவோர் போன்றவர்கள் இடை நிலைச் சாதிகளாகக் கொள்ளக் கூடியவர்களாவர்.

ஆரம்பத்தில் கோவியர் சாதியானது அடிமைச் சாதியாக விளங்கிய போதிலும் காலப்போக்கில் அச்சாதி இடை நிலைச் சாதிய வரம்பிற்குள் இணைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவ் இடைநிலைச் சாதிகள் யாவும் படிநிலையில் ஒன்றன் கீழ் ஒன்றாக இருந்து வருமாறு வகுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் உயர்வேளாள ஆதிக்கத்திற்கான தொண்டூழியச் சாதிகளாகவே கொள்ளப்பட்டனர். இவர்களிற்கு அடுத்த நிலையில் அதாவது அடி நிலைச் சாதிகளாக தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்களைக் காணலாம். “பஞ்சமர்” என்பதன் அர்த்தம் நான்கு வர்ணங்களுக்கு வெளியே உள்ள ஐந்தாவது பிரிவினரான தாழ்த்தப்பட்ட தீண்டப்படாத சாதிகளைச் சேர்ந்த பள்ளர், நளவர், பறையர், வண்ணார், அம்பட்டர், துரும்பர். சக்கிலியப் பறையர் என்போர் பஞ்சமராகக் கருதப்பட்டனர். ஆனால் உயர் வேளாள ஆதிக்க சக்திகளின் நேரடிக் குடிமைகளாக இருக்க வேண்டிய தேவையின் பொருட்டு வண்ணார், அம்பட்டர் சாதியினர் சில சலுகைகளும் உரிமைகளும் கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இறுதியில் அவர்களும் தாழ்த்தப்பட்டோர் என்ற வரையறைக்குள்ளேயே உள்ளடக்கப்படுகின்றனர். (சாதி தேசம் பண்பாடு, ப. 78) இவ்வாறான தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை சுமார் முப்பது வீதத்தை உள்ளடக்குவதாகும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரம், அரசியல், கல்வி, தொழில் வாய்ப்புகள் என்பன மறுக்கப்பட்டு பண்பாட்டம்சங்கள் சமத்துவமாகப் பின்பற்றப்படுவது நிராகரிக்கப்பட்ட

சூழலிலே, தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது பஞ்சமர்கள் என்ற புனை நாமத்துடன் ஆண்டாண்டு காலமாக சாதியத்தால் ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர் என்பதும் கண்கூடு. இன்றும் கூட அவற்றின் நேரடி, மறைமுகத் தாக்கங்களிலும் பாதிப்புகளிலும் இருந்து விடுபட முடியாத நிலை தொடர்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஆய்வாளர்) அந்தவகையில் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் வழக்கில் இருந்த விழிம்புநிலை மக்களுக்கு வகுக்கப்பட்ட அடக்குமுறைகள் பற்றி நோக்குவோம்.

சமூக ஒடுக்குமுறைகள்

20ஆம் நூற்றாண்டில் மட்டுமன்றி அதற்கு முற்பட்ட காலங்களிலும் சாதியம் ரீதியான பாகுபாடுகளும் அவர்களிற்கு எதிராக நியாயமான அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டதுடன், மேட்டுக்குடி மக்களின் அடிமைகள் போல் நடாத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையிலே 20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களான பஞ்சமர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் பற்றி நோக்கின், பெயர் வைத்தல் தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த ஒருவருக்கு உயர் சாதியினரின் பெயர்களை போல் வைக்கக் கூடாது. அதனையும் மீறி வைக்க முயற்சித்தால் அவர்களுக்குத் தண்டனைகள் வழங்கப்படுவதுடன் அவர்களின் அத்தியாவசிய உரிமைகளும் மறுக்கப்பட்டன. அத்துடன் இவர்களது பெயர்கள் எவ்வாறு அமையவேண்டும் என ஆசைப்படினும் பிறப்பினைப் பதிவு செய்யும் போது பதிவாளரின் விருப்பத்திற்கிணங்க பதிவுகள் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. சான்றாக, கந்தையாபிள்ளை - கந்தன், வேலுப்பிள்ளை - வேலன், பொன்னாச்சிப்பிள்ளை - பொன்னி, பார்வதியம்மா - பாறி என்று அழைக்கப்பட்டுள்ளமையினைக் குறிப்பிடலாம். (சாதி தேசம் பண்பாடு, ப. 124)

ஆடை அணிகலன்கள்

தாழ்தப்பட்ட மக்களில் ஆண்கள் மேற் சட்டை அணியவோ வேட்டியால் முழுமையாக உடலைச் சுற்றி மறைக்கவோ தோளில் துண்டு போடவோ அனுமதிக்கப்படாது துண்டு வேட்டி மட்டுமே அரையில் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அது போல் பெண்கள் மேல் சட்டை அணியக்கூடாது, பருவமடைந்த பெண்கள் புடவைக்கு சட்டை அணியக் கூடாது போன்ற நடைமுறகள் விதிக்கப்பட்டிருந்தன. இவை மீறப்படுமிடத்து தண்டனைகளுக்கும் உள்ளாகினர். விசேட தினங்களில் வெள்ளை கட்டுதல் ஆபரணங்கள் (காதணி, தங்க ஆபரணங்கள், தாலி) அணிவதற்கு தடை விதிக்கப்படிருந்தன. 1830 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தின் உயர்சாதியினர் தம்மிலும் தாழ்ந்தவர் எனக் கருதியோரின் பெண்கள் காதணிகள் போன்ற ஆபரணங்களை அணியக்கூடாதென எதிர்ப்பு வெளியிட்டனர். அது மட்டுமன்றி கிராம மட்ட அதிகாரிகள் குறிப்பிட்ட சாதியினரை காதணி போன்ற அணிகலன்களை அணியவேண்டாம் எனப் பணித்ததோடு பணிப்புரையை மீறியவர்களைத் தண்டம் விதித்துத் தண்டித்தனர். (குடிமைகள், ப. 39) இவ்வாறு அணிகலன்களை அணியவிடாது தடுக்கப்பட்டோர் நிலமற்ற கூலித் தொழிலாளர்களாவர். சமத்துவக் கொள்கையில் நம்பிக்கையுடைய அரசாங்கத்தால் இவ்வாறு மக்களிடையே காட்டப்படும் பாராபட்சத்தை அனுமதித்தல் இயலாது. இக்காரணத்தால் அரசாங்கம் தண்டம்விதித்து தண்டிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய அடக்குமுறைக்குட்பட்ட மக்களிற்கு பிரித்தானியர்கள் ஊடாக, வெவ்வேறு சாதிகளும் உடையணிந்த முறையிலும், திருமணம், மரணம் முதலிய சடங்குகளை நடத்திய முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

தாழ்ந்த சாதியினர் தமது மரண ஊர்வலத்தில் மேளம் அடித்தல், பிணத்தை எரித்தல் ஆகிய வழங்கங்களைப் புகுத்தினர். இது உயர்சாதியினருக்கு எரிச்சலை ஊட்டியது. அவர்கள் மூர்க்கத்தனமான எதிர்ப்பில் ஈடுபட்டபொழுது, கலவரங்கள் வெடித்தன. அமைதி குலைந்தது. இத்தகைய நிலையில் மதம் மாறியவர்களிற்கு ஆடை, அலங்கார, அணிகலச் சுதந்திரம் வழங்கப்பட்டதுடன், தம்மைப் பாதுகாத்துக் கொள்ள பாதணிகள் அணியவும் முடிந்தன.

சான்றாக, 1933 ஆம் ஆண்டில் பறையர் சாதியைச் சேர்ந்த உரோமன் கத்தோலிக்கர் ஒருவர் சப்பாத்து அணிந்து கொண்டபோது கலவரம் மூண்டது. இக்கலவரத்தின் போது பலர் கொல்லப்பட்டனர். புங்குடுதீவு என்ற இடத்தில் உயர் சாதியினர் பறையர் சாதியினரின் வீடுகளுக்கு தீவைத்துக் கொழுத்திய சம்பவமும் குறிப்பிடத்தக்கது. (மேலது)

போக்குவரத்து

ஒடுக்கப்பட்ட மக்கள் வீதிகளிலும் பொது இடங்களிலும் தமது விருப்பத்திற்கு ஏற்றால் போல் நடமாடக்கூடாது என விதிக்கப்பட்டது மட்டுமன்றிக், குறிப்பிட்ட வீதிகளில் முற்றாகவே நடமாடுதல் தடைசெய்யப்பட்டது. அத்துடன் ஏனைய வீதிகளில் செல்ல வேண்டும் எனில் தமது வருகையை உணர்த்தும் வகையில் காவோலையை இழுத்துச் செல்ல வேண்டும். அத்துடன் தமது சாதியின் பெயரை உரக்கச் சொல்லிக்கொண்டே போக வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இம் மக்கள் சைக்கிள் மோட்டார் கார் போன்ற வாகனங்களில் பிரயாணம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டதுடன் நடந்தோ அல்லது மாட்டு வண்டிகளிலோ தான் பயணம் செய்ய முடியும். அத்துடன் சைக்கிள், மோட்டார் கார் என்பவற்றை அவற்றை செலுத்தவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. அது போன்று பொது பேரூந்துகளில் பயணம் செய்யும் போது ஆசனங்களில் இருந்து பயணம் செய்ய முடியாது. அவர்கள் பேரூந்தின் மக்காட்டுகல் இருந்து பணயம் செய்யவே அனுமதிக்கப்பட்டனர். (சூரன் சுயசரிதை, ப. 198)

குடிசைகள் அமைத்தல்

வேளாளர்களின் குடிமைகளாகக் காணப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் குடிசைகள் அமைப்பதில் உள்ள கட்டுப்பாடுகளை அனுசரித்தே தமது குடிசைகளை அமைக்கவேண்டும். அதனை மீறி அமையும் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டது. அத்துடன் கல்லாலான பெரிய வீடுகள் கட்டுவதற்கும் இவர்களுக்கு அனுமதி இல்லை. இதில் இருந்து எழுச்சி பெறும் நோக்கில் சிறுப்பிட்டி பகுதியில் வீடு கட்டுவதற்கான எவ்வித அனுமதியும் பெறாமல் தனது வளவில் பெரிய கல் வீடு ஒன்றைக் கட்ட முயற்சித்த பெண்மணியின் வீட்டை தீ வைத்து எரிக்கச் சென்ற வேளாளரை அப் பெண்மணி கத்தி கொண்டு அவர்களை வெட்டுவதற்கு விரட்டிய செய்தியும் (இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும், ப. 80) குறிப்பிடத்தக்கது.

கல்வி

வடக்கில் நாவலர் வழிவந்த சைவ வேளாளக் கல்வி ஆதிக்கம் நிலை பெற்றதுடன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான கல்வி மறுப்பும் காணப்பட்டன. அவர்கள் தமக்கான கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு இன்னல்களை சந்திக்கவேண்டியும் இருந்தது. உயர் சாதியினரின் கிண்டல், கேலி, வன்முறைச் செயல்களையும் தாண்டியே பெற முடிந்தது என்றும் குறிப்பிடலாம். இதனாலேயே அரிதாகக் கிடைத்த வாய்ப்பைக்கூட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விட்டு விலகும் நிலைக்கும் தள்ளப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஆய்வாளர்) தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாடசாலைக் கல்வி மறுக்கப்பட்டு வந்தாலும் அவர்களுடைய உழைப்பு, அனுபவத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட கேள்வி ஞானம் மூலமாகவும் தமது அறிவை வளர்த்தவர்களும் இருந்து வந்துள்ளனர். பிற்காலங்களில் பாடசாலைகளில் அனுமதியிருந்த போதும் ஆசனங்களில் உட்காரக் கூடாது, சமபோசனம் செய்யக் கூடாது என போராட்டங்கள், பகிஸ்கரிப்புக்கள் நடைபெற்றமையினையும் காணலாம். (சூரன் சுயசரிதை, ப. 168)

சடங்குகளின் போது வெள்ளை கட்டுதல்

உயர் சாதி வேளாளர்களின் குடிமைகளாகக் காணப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் தமது வீடுகளில் நடைபெறும் விசேட சடங்குகளின் போது வீட்டில் வெள்ளை கட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்துது. மீறி கட்டுபவர்களுக்கு தண்டனைகள் கடுமையாக வழங்கப்பட்டன. (இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும், ப. 88) தாழ்த்தப்பட்ட மக்கள்

தமது உரிமைகளைப் பெறும்பொருட்டு எதிர்த்துப் போராடியும் வந்துள்ளனர். அவர்களிற்கு உயர்சாதியினரால் தண்டனைகளும் வழங்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே சுழிபுரத்தில் தாழ்த்தப்பட்ட ஒருவரது வீட்டில் திருமண வைபவத்திற்கு வெள்ளை கட்டியதற்காக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக ஒரு பெரும் வன்முறையே இடம் பெற்றிருப்பதைச் செவிவழித் தகவலாக அறியமுடிகிறது. அதில் வைரவன், செல்லன் ஆகிய இரு தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் இணைந்து சாதி வெறியர்களுக்கு எதிராகப் போராடி அவர்களைப் பின்வாங்கச் செய்தார்கள், அதேபோல தெல்லிப்பளையில் சாதி வெறியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவ்வூர்த் தாழ்த்தப்பட்ட மக்கள் சித்தன் என்பவரின் தலைமையில் அவ்வவ்வேளைகளிற் போராடி வந்துள்ளனர். இச் சித்தன் என்பவர் உயர்சாதியினரின் கோவிலில் சென்று தானே தேங்காய் அடித்து சாதி வழக்கத்தை மீறிய சம்பவமும் இடம்பெற்றது. (இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும், ப. 154)

உயர் சாதியினரின் மரணவீட்டில் இத் தாழ்த்தப்பட்ட சித்தனைப் பற்றி உயர்சாதிப் பெண்கள் ஒப்பாரி இயற்றிப் பாடிய பாடலை தெல்லிப்பளையில் உள்ள வயது சென்ற தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றும் ஞாபகம் கொள்வர். “நரி புகுந்து உலாவாத நந்தவனச் சோலையிலே நளச் சித்தன் வந்து நகரை அழித்துவிட்டான் புலி புகுந்து உலாவாத பூங்காவனச் சோலையிலே பொல்லாத சித்தன் வந்து பொல்லாங்கு செய்துவிட்டான்” (மேலது) இவ்வாறு ஒவ்வொரு இடங்களிலும் இத்தகைய எதிர்ப்பாளர்கள் இருந்து வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய தனிநபர் எதிர்ப்பாளர்களது எதிர்ப்பானது மேற்கூறப்பட்ட பண்பாட்டு நடைமுறைகளைத் தாமும் சுதந்திரமாகப் பின்பற்ற முயன்ற வேளைகளிலேயே முனைப்புப் பெற்றுக் கலவரங்களாக வடிவம் பெற்றிருக்கின்றன. மேலும் உயர் வேளாளச் சாதிவெறியர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குமிடையிலான மோதல்கள் வடபுலத்தில் ஆங்காங்கே இடம் பெற்றுவந்துள்ளன.

திருமணம்

திருமணத்தினைப் பற்றி நோக்கின் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து ஒரு ஆணோ அன்றி பெண்ணோ உயர்சாதி மக்கள் மத்தியில் திருமணம் செய்வதை முற்றாக மறுக்கப்பட்டது. அத்துடன் தெரிந்தோ தெரியாமலோ தாழ்த்தப்பட்டவர்கள் யாராவது உயர்சாதியினர் மத்தியில் காதலித்துவிட்டால் அல்லது ஆணோ பெண்ணோ சோரம் போவது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் அதுவே தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகள் எரிவதற்கும் தொழில்கள் நாசமாக்கப்படுவதற்கும் இரகசிய பரகசியக் கொலைகள் இடம் பெறுவதற்கும் காரணமாக அமைந்தன. (செங்கை ஆழியான், பனங்கூடல், 2015, பக்.46) இத்தகைய கலப்புத் திருமணங்கள், காதல் என்பன ஏற்பட்டுவிடின் தாழ்த்தப்பட்ட மக்களின் குடும்பங்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் அக் குடும்பத்தினர் பல்வேறு இன்னல்களுக்குட் படுத்தப்படுவதுடன் சம்மந்தப்பட்ட தாழ்த்தப்பட்ட ஆணோ பெண்ணோ மர்மமாகக் கொலை செய்யப்படும் வழக்கமும் காணப்படுகின்றது. (தண்ணீர், ப. 115) அத்துடன் உயர்சாதிப் பெண்கள் சோரம் போயிருப்பின் மர்மக்கொலைகள் நடைபெறும். இல்லையெனின் உடனடித் திருமணங்கள் அதிரடியாக நடந்தேறுவதும் குறிப்பிடத்தக்து.

தாழ்த்தப்பட்ட மக்களது திருமணத்தின் போது உயர் சாதியினரைப் போன்று தாலி அணிவிக்கப்படவில்லை. மாறாகத் தாலிக்குப் பதிலாக சிவப்புக் கழிநூல் அணிவிக்கப்பட்டதுடன் சடங்கு சம்பிரதாயங்கள் பின்பற்றித் திருமணம் நடத்தப்படுவதும் இல்லை. இரவு வேளையில் உற்றார் உறவினர்கள் கூடி மணக்களுக்கு உருண்டைச் சோறு கொடுத்து திருமணம் செய்து வைப்பர். இது சோற்று கல்யாணம் என்றும் அழைக்கப்படுகின்றது. (நீண்ட பணயம், ப. 85)

இறுதிச் சடங்கு

தாழ்த்தப்பட்ட மக்கள் பிரேதங்களை எரிக்கவோ, உயர் சாதியினருடைய ஈமக்காடுகளில் அடக்கம் செய்ய தடைவிதிக்கப்பட்டிருந்ததடன், அவர்களிற்காக தனியாக ஈமக்காடுகளும் அமைக்கப்பட்டன. இவர்கள் பிணத்தை எரிக்காது புதைக்கவேண்டும் என்றும் மீறி பிரேதங்களை எரித்தால் கலவரங்களும் உயர் சாதியினரால் நடாத்தப்பட்டு கௌரவக் கொலைகளும் இடம்பெற்றன. 1914இல் பள்ளர் - நளவர் வரணியிலும், தச்சர் பண்டத்தரிப்பிலும், தட்டார் தனக்காரக்குறிச்சியிலும் பள்ளர் கெருடாவிலிலும் வேளாளரை எதிர்த்து மோதல்களில் ஈடுபட்டுள்ளனர். 1922இல் பள்ளர் உரும்பிராயிலும், வண்ணார் - சிவியார் தெருவிலும், வேளாள சாதி வெறியர்களுடன் மோதியுள்ளனர். 1926இல் நளவர் மூளாயிலும் வேளாளரை எதிர்த்துப் போராடியுள்ளனர். இவற்றில் பெரும்பாலானவை பிரேதங்களை ஒரே சுடலையில் சமத்துவமாக எரிக்க முற்பட்டதன் விளைவானவையாகும். (தீண்டாமைக் கொடுமைகளும் தீ மூண்ட நாட்களும், ப. 45)

சாதி அமைப்பின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்ற தாக்கங்களில் மேற்கூறிய அம்சங்களும் இருந்தே வந்துள்ளன. இச் சம்பவங்கள் பற்றி நாவலராசிரியர் கே. டானியல் தனது முதலாவது நாவலான பஞ்சமரிலும் அவ் வரிசையில் வந்த பிற நாவல்களிலும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளமையினைக் காணலாம். எது எவ்வாறிருப்பினும் சகலதரப்பு இலங்கையர்களிடமும் அடிமை குடிமை முறையின் பாதிப்பு இருந்து வந்தது என்பதும், அதற்கெதிரான போராட்டங்கள் நடைபெற்றது என்பதும், சாதிய பாகுபாடு இன்றும் இருந்து வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வார்த்தியப் பாவனை

தாழ்த்தப்பட்ட மக்கள் தமது வீடுகளில் நடைபெறும் நன்மை, தீமை நிகழ்வுகளில் வாத்தியங்கள் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதாவது வேளாளரின் மரணச் சடங்குகளில் பறை அடிக்கும் பறையர் அவர்களது மரணச் சடங்கிற்குப் பறை வாசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்ததுடன் மங்கலகரமான விடயங்களின் போதும் இவர்கள் வார்த்தியங்கள் வாசிக்கவோ அவர்கள் ஆடம்பரமாக செயற்படவோ தடை விதிக்கப்பட்டிருந்ததுடன் மீறுபவர்களுக்கு அடியும், உதையும், தண்ணீர் எடுக்கத் தடையும் என பல்வேறு விதமான தண்டனைகள் விதிக்கப்பட்டதனையும் அறியமுடிகின்றது. (இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும், ப. 165)

நீர் பெற்றுக்கொள்ளல்

20 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் விழிம்பு நிலை மக்கள் மத்தியில் அவர்களது அத்தியாவசியத் தேவையான தண்ணீர் கிடைப்பது கூட பெரு இன்னல்களுக்கு மத்தியிலேயே ஆகும். தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்சாதியினரின் குளங்களைப் பாவிக்கக்கூடாது, குடிநீர் கிணறுகளில் சுதந்திரமாக நீர் எடுப்பதற்குத் தடை, பொதுக்கிணறுகளில் தண்ணீர் அள்ளக்கூடாது போன்ற விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. அத்துடன் அவ்வாறு நீர் எடுக்கவேண்டும் எனில் உயர்ந்த சாதியினரின் தயவினை நாடவேண்டிய அவசியம் காணப்பட்டது. அவர்களது அனுமதி இன்றி கிணற்றில் நீர் எடுக்கவும் முடியாது என்பது மட்டுமன்றி நேரடியாக நீரும் எடுக்கமுடியாது. அதற்கென நியமிக்கப்பட்ட கோவியர் அல்லது வேளாளர் வந்து நீர் இறைத்துக் கொடுத்தால் மட்டுமே நீரினைப் பெற்றுக்கொள்ள முடியும். மீறினால் தண்டனைகளும் நீர் எடுப்பதற்குத் தடையும் விதிக்கப்பட்டது. (தண்ணீர், ப. 4) இதனால் விழிம்பு நிலை மக்கள் குடிப்பதற்கும் நீர் இன்றி இன்னலுக்குள்ளானமையினையும் காணமுடிகின்றது.

கோயில்களும் வழிபாடுகளும்

பண்பாட்டினையும் பாரம்பரியத்தினையும் எடுத்துக்காட்டும் ஆலய வழிபாட்டில் கூட விழிம்பு நிலை மக்களுக்கு சுதந்திரம் இல்லை என்றே கூறவேண்டும். உயர்சாதியினரின்

 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

தெய்வங்களை தமது கோயில்களில் பிரதிஷ்டை செய்யக்கூடாது, உயர்சாதியினரின் கோயிலுக்குள் செல்லக்கூடாது அவர்களுக்கென ஒதுக்கிய பகுதிக்குள்ளேயே அவர்கள் பிரவேசிக்கலாம், கோயிலுக்கு தேங்காய் அடிக்கக்கூடாது போன்ற விதிகள் விதிக்கப்பட்டன. அதாவது கோயிலினைக் கட்டிக் கொடுத்தவனும், கருவறைக்குச் சிலை செய்தவனும் வெளியே தீண்டத்தகாதவன் ஆகிவிடுகிறான். எல்லாம் காலம் செய்த கோலம். இம்முறை கிறிஸ்தவத்திற்கு மதம் மாறிய விழிம்புநிலை மக்களுக்கும் மாற்றமின்றித் தொடர்ந்துது என்றே கூறவேண்டும். தேவாலயங்களிலும் இருக்கைகள் பாராபட்சம் பார்த்தே வளங்கப்பட்டன. இதனால் விழிம்பு நிலை மக்களுக்கென தனியாகத் தேவாலயங்கள் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

20 ஆம் நூற்றாண்டு யாழ்ப்பாண சமூக ஒடுக்குமுறையை ஆராயும் போது சாதியம், தீண்டாமை, அடிமை, குடிமை என்பன அறியப்படுகின்றன. இத்தகைய ஒரு சூழலில் வழிம்பு நிலை மக்களுக்கு விதிக்கப்பட்ட ஒடுக்குமுறைகள், அடிப்படை மனித உரிமைகள் மறுப்பாகவும், மனித உரிமைகள் மீறல்களுமாகவே காணப்படுகின்றன. இத்தகைய ஒடுக்குமுறையில் இருந்து வெளிவர வேண்டும் எனும் எண்ணமும், தொழில் முயற்சியாண்மையும், இவ் விழிம்பு நிலை மக்கள் மத்தியில் விழிப்புணர்வும் வரக்கூடாது என்பதற்காகவே அவர்களுக்கு உரிமையான கல்வியைக் கூட பெற விடாது செய்தமை, கோயில் கட்டிக் கொடுத்தவர்களும், கருவறைக்குச் சிற்பம் செய்து கொடுத்தவனும் ஆலயத்திற்குள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டதும், பொது இடங்களில் ஒதுங்கி செல்லவும், ஆடை அணிவதிலும், காலுக்குப் பாதுகாப்பிற்கு பாதணி அணிவதிலும் கூட அடக்குமுறை காணப்பட்டதனைக் காணமுடிகின்றது. உழைப்பவனுக்கு நிலம் சொந்தமில்லை பொருளை உற்பத்தி செய்பவனுக்கு அனுபவிக்கும் உரிமை இல்லை என்பதே இங்கு காணப்படும் சட்டம் என்றும் குறிப்பிடலாம்.

20 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியரின் சில சலுகைகள் காரணமாக கல்வி, அரச தொழில் என்பன கிடைக்கப்பெற்றதுடன், அரசாங்கத்தின் சில நடைமுறைகளினாலும் இவ் விழிம்பு நிலை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டு தாம் இப்படியே அடிமைப்பட்டு ஒடுங்கக் கூடாது தாமும் சமூகத்தில் வளர்ச்சியைக் காணவேண்டும் எனும் முனைப்புடன் தீவிர முயற்சிகள் செய்தனர். இதன் பயனாக ஆதிக்க சாதியினரிடம் அடியும், உதையும், அவமானமும், உயிர் பலியும் சன்மானமாக வழங்கப்பட்டன என்பதும் கண்கூடு. எது எவ்வாறு இருப்பினும் எஞ்சியவர்களாவது அமைதியான வாழ்வு தமது சொந்தக் கால்களில் நிற்கவேண்டும் எனப் போராட்டங்களை 20 ஆம் கூற்றாண்டில் மேற்கொண்டனர். சான்றாக, தேனீர்க்கடைப் போராட்டம், ஆலயப் பிரவேசம் என்பவற்றைக் குறிப்பிடலாம். அதனைத் தொடர்ந்து அடிப்படை உரிமைகள் மறுப்பாக அதுவரை காலமும் காணப்பட்ட நீர் பிரச்சினை, பொது இடங்களில் தேனீர்க் கடைகள் உணவகங்களின் பாவனை, நேர்த்தியான ஆடை அணிதல், பாதணி அணிதல், அணிகலன்கள் அணிதல், பாடசாலைகள் அமைத்தல், ஆலயங்கள் அமைத்தல், சமஸ்கிருதமயமாக்கலிற்குட்படல் என இன்னோரன்ன விடயங்களில் போராடி தமது உரிமைகளை விழிம்பு நிலை மக்கள் மீட்டெடுத்தனர் என்றே குறிப்பிடவேண்டும். தமக்கான பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்காக, தமது பரம்பரைத் தொழிலினை மட்டும் நம்பியிருக்காது தோட்டி வேலை, சப்பாத்து தைத்தல், மரவேலை, பணை எறல், செய்யும் கூலி வேலைக்கு உரிய சன்மானமும் மரியாதையுடனும் நடத்த வேண்டும் என்றும் இல்லை எனில் வேலைக்கு செல்ல மாட்டோம் என பகிஸ்கரிப்புச் செய்தல் என பல்வேறு வகைகளிலும் தமது உரிமைகளை கேட்டு பெற்றுக்கொள்ள போராடி 20 ஆம் நூற்றாண்டில் வெற்றியும் கண்டனர் என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

தற்காலச் சமூகத்தில் எந்தளவிற்கு விழிம்பு நிலை மக்கள் போராடி வளர்ச்சி கண்டிருப்பினும், பொருளாதாரத்தில் வெற்றியீட்டியிருப்பினும், உயர் பதவிகள் வகித்திருப்பினும், கல்வியில் மேம்பட்டிருப்பினும் இன்றும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சாதியம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றதும் குறிப்பிடத்தக்கது. சான்றாக, திருமணம், தொழில் செய்யும் நிறுவனங்கள், சடங்குகள் என்பவற்றில் இன்றும் இந்நிலை நிலைத்திருப்பதனையும் காணலாம். இருப்பினும் 20 ஆம் நூற்றாண்டு காலத்தில் காணப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மீட்கப்பட்டுவிட்டன என்றே கூறலாம். தமிழர்கள் வாழும் பகுதியான யாழ்ப்பாணத்தில் தேசவழமைச்சட்டம் எனும் எழுதப்படாத வாய்மொழியாக வழக்கில் இருந்த சட்டம் இங்கு வாழும் மக்களின் தலையெழுத்தைத் தீர்மானித்தது எனக் குறிப்பிடலாம். இவற்றின் மூலம் வகுக்கப்பட்ட சமூக அமைப்பு முறை, சாதிய படிமுறை, அவர்களுக்கு விதிக்கப்பட்ட வேலைகள், ஆண்டான் அடிமை முறை, குடிமை முறை, விழிம்புநிலை மக்களுக்கு விதிக்கப்பட்ட ஒமுக்குமுறைகள் என்பன பற்றி அறியமுடிகின்றது. இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கும் போது, அடக்குமுறை அல்லது ஒடுக்குமுறை என்பது மனித அராஜகத்தின் மனிதநேயம் அற்ற தன்மையினை எடுத்துக்காட்டுகின்றது. எம்மோடு சமூகத்தில் வாழும் ஏனையவர்களும் சமமானவர்கள் எனும் சமத்துவமும், ஒற்றுமையும், பேதமை அற்ற தன்மை என்பன நம் மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் பதியவேண்டியவை. ஆனால் அதற்கு சாத்தியங்கள் குறைவே. இன்றும் மக்கள் மத்தில் இத்தகைய பண்புகளைக் காண்பதும் அரிதாகவே உள்ளன.

20 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணச் சமூகத்தில் காணப்பட்டதும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டதுமான சாதிய ஒடுக்குமுறைகள் மனிதநேயமற்ற செயற்பாடுகளாகவே காணப்படுகின்றன. இத்தகைய சூழலினைப் பயன்படுத்தி மேலைத்தேயத்தவர்கள் தமது சமயத்தினை விழிம்புநிலை மக்கள் மத்தியில் பரப்பியது மற்றொரு கதை. அவ்வாறு கிறிஸ்தவ மதத்தினைத் தழுவியும் சாதியம் அங்கும் தலைதூக்கி சாதிக்கொரு தேவாலயம் அமைத்ததும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஒடுக்குமுறைக்குள் இருந்து விழிம்பு நிலை மக்கள் தம் சமூகத்தை எழுச்சி பெறச் செய்வதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இதற்காக அவர்கள் உடைமைகளை இழந்து, மானத்தினை இழந்து, பல உயிர்களைத் தியாகம் செய்து என எத்தனையோ இன்னல்களைத் தாண்டியே தமக்கான உரிமைகளைப் பெற்று எழுச்சி பெற்றனர் என்பதும் கண்கூடு. மனிதம் உள்ள இடத்தில் எழுச்சி என்பதனை விட மனிதம் செத்த இடத்தில் எழுச்சி என்பது கரடி பிறை காண்பது போல எனக் குறிப்பிடுவதானது மிகையாகாது.

குறிப்புகள்

[1] செங்கையாழியான். *பனங்கூடல்*. நாவல், கமலம் பதிப்பகம், 2015.
[2] தெணியான். *நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா.சிவத்தம்பி*. குமரன் புத்தக இல்லம், 2012.
[3] தெணியான். *பனையின் நிழல்*. மகேந்திரராசா மயூரன் நினைவு வெளியீடு, 2006.
[4] தெணியான். *மாத்து வேட்டி*. நாவல், மல்லிகைப் பந்தல் வெளியீடு, 1996.
[5] தெணியான். *வெந்து தணிந்தது காடு*. குறுநாவல், ஜீவநதி வெளியீடு, 2017.
[6] டானியல், கே. *ஆறு நாவல்கள் தொகுதி – 1*. அடையாளம் பதிப்பகம், 2005.
[7] யோகரட்ணம். *தீண்டாமைக் கொடுமைகளும் தீ மூண்ட நாட்களும்*. இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி, 2011.
[8] யோகராசா, செ. *ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு*. வ.கி.மா பண்பாட்டுத் திணைக்களம், கல்வி, விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சு, 2002.
[9] வானமாமலை, நா. *தமிழர் நாட்டுப் பாடல்கள்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1976.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது
[10] வெகுஜனன் ராவணா. *இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்.* வவுத் விஷன் கோபாலபுரம், 2007.

[11] ராவீந்திரன், ந. *இலங்கைத் திணை அரசியல் வர்க்கப் போராட்டம் – ஒக்டோபர் 21 எழுச்சியின் நினைவாக.* சமூக விழிப்புணர்விற்கான அமைப்பு, அகரம் பிரிண்டர்ஸ், 2019.

[12] ராவீந்திரன், ந. *சாதி தேசம் பண்பாடு.* ஐயர் மனைப் பிரிவு சிங்கநல்லூர், 2014.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Cultural Elements in the Novel *Marupakkam*

T. Shini, Researcher, Registration No. 241130101017,
Centre for Tamil Studies, Annai Velankanni College, Kanniyakumari,
Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0006-8987-6747
K.Aji, Assistant Professor, Centre for Tamil Studies, Annai Velankanni College, Kanniyakumari,
Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
DOI: 10.5281/zenodo.21791831

Abstract

The novel Marupakkam by Ponneelan serves as an important literary source for understanding the cultural life of the people of Kanyakumari district. This study examines the cultural elements reflected in the novel from a socio-cultural perspective. It analyses various aspects of culture such as food habits, clothing, habitation, festivals, ornaments, folk arts, hospitality, charity, and the use of traditional weapons. The study reveals that these cultural practices portray the everyday life, beliefs, customs, values, and social relationships of the people. It further highlights how the novel documents the transformation of traditional culture while preserving the identity and heritage of the Tamil community. Thus, Marupakkam stands as a valuable literary text that records the cultural history and lived experiences of Tamil society.

Keywords: Culture, Cultural Elements, Tamil Society, Folk Tradition, Lifestyle, Hospitality, Folk Arts, Kanyakumari.

References

[1] *Kalaik Kalanjiyam*. Thoguthi 1, Thamizh Valarchchi Kazhagam, 1963.
[2] *Kalaik Kalanjiyam*. Thoguthi 6, Thamizh Valarchchi Kazhagam, 1963.
[3] Sakthivel, Su. *Nattupuraviyal Ayvu*. Manivasagar Pathippagam, 2012.
[4] Natarasan, Thi.Su. *Thamizhan Panpattu Veligal*. New Century Book House, 2005.
[5] Namakkal Kavignar. *Thirukkural*. Palaniyappa Brothers, 2010.
[6] Thirunavukkarasu, Ka.Tha. *Thamizar Panpadu*. Ulaga Thamilaraichi Nilaiyam, 2009.
[7] *Tholkappiyam: Porulathikaram*. Thanjavur Thamizh Palkalaikazhagam, 2008.
[8] Bhaktavatsala Bharathi. *Panpattu Manidaviyal*. Adaiyalam Pathippagam, 2019.
[9] Ponneelan. *Marupakkam*. New Century Book House, 2010.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

மறுபக்கம் நாவலில் பண்பாட்டுக் கூறுகள்

த. ஷைனி, முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவெண்: 241130101017,
தமிழாய்வு மையம், அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, கன்னியாகுமரி,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0006-8987-6747
முனைவர் க. அஜி, உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம், அன்னை வேளாங்கண்ணி கல்லூரி,
கன்னியாகுமரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
DOI: 10.5281/zenodo.21791831

ஆய்வுச்சுருக்கம்

பொன்னீலனின் மறுபக்கம் நாவல் கன்னியாகுமரி மாவட்ட மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டை ஆழமாகப் பதிவு செய்துள்ள முக்கியமான படைப்பாகும். இவ்வாய்வு, நாவலில் இடம்பெற்றுள்ள பண்பாட்டுக் கூறுகளை மானிடவியல் மற்றும் சமூகப் பண்பாட்டு நோக்கில் ஆராய்கிறது. உணவு, ஆடை, இருப்பிடம், விழாக்கள், அணிகலன்கள், நாட்டுப்புறக் கலைகள், விருந்தோம்பல், கொடை, ஆயுதங்கள் போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் நாவலில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் அவை மக்களின் வாழ்க்கைமுறை, நம்பிக்கைகள், மரபுகள், சமூக உறவுகள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதையும் இவ்வாய்வு விளக்குகிறது. மேலும், காலமாற்றத்தால் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களையும், தமிழர் மரபு மற்றும் வாழ்வியல் கூறுகளைப் பாதுகாக்கும் இலக்கிய ஆவணமாக மறுபக்கம் நாவல் திகழ்கின்றது என்பதையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

குறிப்புச்சொற்கள்: பண்பாடு, பண்பாட்டுக் கூறுகள், தமிழர் வாழ்வியல், நாட்டுப்புறக் கலைகள், விருந்தோம்பல், கொடை, கன்னியாகுமரி, சமூகப் பண்பாடு.

முன்னுரை

மானிடரின் வாழ்வியல் கூறுகளும் படிமங்களும் பண்பாடு எனப்படுகிறது.பண்பாடு என்ற சொல் மனிதர்களுக்கு மட்டுமே சொந்தமானது.பண்பாடு இல்லாத எந்த உயிரியையும் விலங்காகத்தான் பார்க்க முடியும். மனிதனுடைய பழக்கவழக்கங்கள் உணவு, உடை, உறைவிடம், ஆடை, அணிகலன்கள், கலை முதலியன பண்பாட்டில் அடங்கியுள்ளன. பண்பாட்டின் மூலம் மக்களிடையே காலம் காலமாக ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும், மாற்றங்களையும், அறிந்துக் கொள்ளலாம். இடத்தால் மொழியால், சூழல்களால் மக்கள் வேறுபடுகின்றனர்.அவர்கள் வாழும் சமுதாயத்திற்கு ஏற்ப பழக்கவழக்கங்கள், தனித் தனியே உருப்பெறுகின்றன. பண்பாடு என்பது ஒரு தலைமுறையினர் மற்ற தலைமுறையினருக்கு விட்டுச் சென்ற வாழ்க்கைமுறையாகும்.அவ்வாறு விட்டுச் சென்ற பண்பாட்டினுள் அவர்கள் பயன்படுத்திய ஒவ்வொரு பொருட்களும் அடங்கும். இவை அச்சமுதாயத்தைக் காலங்காலமாக வழிநடத்துகின்றன.மனிதனை பக்குவப்படுத்தி, மேம்படச் செய்யத்தக்க நெறிகளைப் பின்பற்றி வாழச் செய்வது பண்பாடாகும் இவ்வாறு மனித வாழ்வில் காணப்படும் பண்பாட்டு கூறுகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பண்பாடு விளக்கம்

பண்பாடு என்பது மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினர் என்ற நிலைமையில் அறிவு, நம்பிக்கை, அறவாழ்க்கை, சட்டம், பழக்கவழக்கங்கள் முதலியன பற்றிய வாழ்க்கை முறையாகும். பண்பாடு என்ற சொல் மனித குலத்தோடு மட்டும் தொடர்புடையது.

இப்பண்பாடு மட்டும்தான் மற்ற உயிர்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகின்றது. ஆங்கிலத்தில் 'culture' என்று சுட்டுவதையே தமிழில் பண்பாடு என்று கூறப்படுகிறது. இச்சொல்லை இப்பொருளில் முதன்முதலில் ஆண்ட பெருமை அறிஞர் டி.கே. சிதம்பரநாத முதலியாருக்கே உரியது என்பர்.

> **மனிதன் சமுதாயத்தின் உறுப்பினர் என்ற நிலையில் அவனிடம் காணப்படும் அறிவு, நம்பிக்கை, அறவாழ்க்கை, சட்டம், வழக்காறுகள் முதலியவை பற்றிய ஒரு வித வாழ்க்கை முறையே பண்பாடாகும். இது சமூகக்குழுக்கள், இனங்கள் என்ற நிலையில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட உறவுகள், கலை,அழகியல் வெளிப்பாடுகள், சடங்குகள், வழிபாடுகள், சடங்குகள், வழிபாடுகள் என்ற இவற்றைக் குறிப்பது பண்பாடு. (தமிழன் பண்பாட்டு வெளிகள் ப.எண் 11)**

என்று தி.சு.நடராசன் விளக்கம் தருகிறார். பண்பாடு என்ற சொல் ஆழமான பரந்த விரிந்த பொருளை கொண்டது.பண்பு என்பது தனிமனிதப் பண்பையும் பண்பாடு என்பது சமூதாயத்தின் பண்பையும் குறிக்கிறது.பண்டைத் தமிழ் இலக்கியங்களில் 'பண்பாடு' என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளனர். கலித்தொகை 133 -ஆம் பாடலில் 'பண்பு' என்பது பாடறிந்து ஒழுகுதல் என்று கூறுகிறது.

பண்பாட்டின் அமைப்பு

பண்பாட்டின் அமைப்பு என்பது அதன் இயக்கத்தில் அறியக்கூடியது. அதனுள் உள்ள ஆயிரமாயிரம் கூறுகள் அந்தந்தப் பண்பாட்டு உறுப்பினர்களால் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பண்பாட்டோடு பொருத்தப்படுகின்றன. அவை இணைந்து செயல்படும் முறை பண்பாட்டிற்குப் பண்பாடு வேறுபடுகிறது. இப்பண்பாட்டை பொருள் சார் பண்பாடு, பொருள்சாரா பண்பாடு என இரு வகையாக மானுடவியலாளர்கள் வகைப்படுத்துகின்றனர்.

பண்பாடு சொல்லாய்வு

பண்பாடு என்னும் சொல்லை பண்பாடு எனவும் பண் பாடு எனவும் இலக்கணிகள் பிரிக்கின்றன.பண்பாடு என்னும் சொல் பண்படு என்னும் வினையாகப் பிறந்து. ஏற்படு என்பது ஏற்பாடு எனவும் கட்டுப்பட்டு என்பது கட்டுப்பாடு எனவும் மாறியுள்ளது. பண்பாடு மனிதனின் வளர்ந்த நிலையை மட்டுமல்லாமல் சமுதாயத்தின் படிந்த நிலையையும் எடுத்துக்காட்டுகிறது.ஒவ்வொரு காலத்தின் மாந்தர்கள் ஏற்றுக்கொண்ட கருவிகள் அவர்கள் சமயங்கள் பற்றிய கொள்ளைகள் முதலியன அச்சொல்லில் அடங்கும். இது தனிமனிதத்திறனுக்கும், செயல்பாட்டிற்கும், ஈழ்ந்த அறிவிற்கும். பரந்த மனப்பான்மைக்கும், விளக்கமாக அமைகிறது என்பார் மாலினோ வஸ்கி.

பண்பாட்டுக் கூறுகள்

பண்பாட்டின் மிகச் சிறிய அலகே "பண்பாட்டுக்கூறு"எனப்படும். பண்பாட்டுக் கூறுகள் என்பவை ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் அல்லது இனத்தின் தனித்துவமான பழக்கவழக்கங்கள் மரபுகள், விழுமியங்கள், கலைகள், வாழ்க்கைமுறைகள் நம்பிக்கைகள் மற்றும் நடத்தை ஆகியவற்றின் தொகுப்பாகும். ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆயிரக்கணக்கான கூறுகள் உள்ளன. அவற்றுள் பல கூறுகள் அனைத்தும் பண்பாட்டிற்கும் பொதுவானதாக இருக்கின்றன.சில கூறுகள் மட்டும் அந்தந்தப் பண்பாட்டிற்கு மட்டும் உரியனவாக இருக்கின்றன.

உணவு

உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆதாரங்களில் ஒன்று உணவு. அது இல்லையெனில் மனிதன் மடிந்து விடுவான். உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆற்றல் உணவிலிருந்து பெறப்படுகிறது. மக்களின் வாழ்க்கைக்கான ஆதாரங்களை அறிந்து கொள்ளவும் உணவு ஒரு கருவியாக பயன்படுகிறது

எனலாம். “ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவு இயக்கங்களை உணர அவர் தம் உணவு பழக்க வழக்கங்களைக் கூர்ந்து நோக்க வேண்டும்.

உலகில் முதன் முதலில் உணவை நாகரிகமாய் சமைத்து உண்டவர் தமிழரே என்பதில் ஐயமில்லை. திட உணவு வகைகளான தானிய வகைகளில் நெல்லரிசி தலைசிறந்த உணவாகக் காணப்பட்டது என்பதை, ‘இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த அவைப்பு மான் அரிசி அமலை வெண்சோறு’ என்ற சிறுபாணாற்றுப்படை வரிகளில் அறியலாம். பொன்னீலனின் மறுபக்க நாவலில் குமரி மாவட்ட மக்கள் காலை உணவாக குழாய் புட்டு, அவித்த பயிறு, முந்திரிப் பருப்பு, பப்படம், வாழைப்பழம் ஆகியவற்றைப் பிசைந்து உண்டனர். என்பதை “உங்களுக்கு வேண்டியதைத் தட்டில் எடுத்துப் போட்டுப் பினைஞ்சி சாப்பிடுங்க” என்று கூறுவதிலிருந்து அறிய முடிகிறது, (மறுபக்கம் 48).

பயனியக் குறுகக் காய்ச்சி பாகுப் பருவத்தில் இறக்கி அண்டிப்பருப்பு, சிறு பயித்தம் பருப்பும் போட்டு ஆறுமாதம் ஊறவச்சது தான் கூப்பனா. இதனை ஓலைத் துண்டால் உடுத்து உண்டனர். சுவைக்க சுவைக்க ருசி மிகுந்த உணவாகும். பழக்கவழக்கங்களால் மிக முக்கிய உணவாகக் காணப்பட்டது இது மாதிரியானப் பண்டங்கள் பனை ஏற்றுத் தொழில் அழிந்து வருவதில்லை இன்று இது அரிதாக மாறி விட்ட ஒன்றாகும், (மறுபக்கம் 94)

நாவலில் மீன் ஒரு முக்கிய உணவுப் பொருளாகக் காணப்படுகிறது. சோறுடன் மீன் குழப்பையும் வறுத்த மீன் துண்டுகளையும் சேர்த்து உண்டனர். “தட்டில் சோற்றின் மேலே மீன் குழம்பை விட்டப்படி, அதனை ஆசையோடு பார்க்கிறார்”.வறுத்த மீன் துண்டுகளைக் கரண்டியில் எடுத்து சோற்றின் மேல் வைத்து உபசரித்தாள் சேதுவின் சித்தி. சைவ உணவை விரும்பியோர் சோறுடன் ரசம், மோரும் சேர்ந்து உண்டனர். தேநீருடன் பொரித்த மீன் துண்டையும், ஏற்றங்காய் வறுவலையும், சேர்த்து உண்ணும் பழக்கமும் காணப்பட்டது.

ஆடை

“ஆள் பாதி ஆடை பாதி” என்பது முதுமொழி இம்மொழிக்கேற்ப ஆடையானது பண்பாட்டின் சின்னமாகத் திகழ்கிறது. பழந்தமிழ் மக்கள் ஆடைகளாக வேட்டி, சேலைகளை அணிந்து வந்தனர். என்பதனை, ‘இந்திய நாட்டின் பொதுவான உடை அமைப்பாக வேட்டியும் சேலையும் காட்சித் தருகின்றன. என்ற வரிகள் மூலம் அறியலாம்.இவ்வுடைமைகள் பேரளவிற் திராவிடருடைய பண்பாட்டின் கொடையாகும். ஆண்கள் உடுப்பவை இரண்டு.ஒன்று இடுப்பினைச் சுற்றி அணிந்த ஆடை மற்றென்று அதற்கு மேல் தோளைச் சுற்றி அணிந்த ஆடை ஆகும். மகளிர் சேலையொடு கச்சிகளை அணிந்தனர் என க.த.திருநாவுக்கரசு குறிப்பிட்டுள்ளார்.

மறுபக்கம் நாவல் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வசதி படைத்தவர் ஏழைகள் அணியும் ஆடைகளைச் சுட்டிக் காட்டுகிறது. பெண்கள் சேலை அணியும் பழக்கம் உடையவர்கள். ஏதாவது வேலை செய்யும் போது தங்கள் வசதிக்காக சேலையைத் தூக்கிச் சொருகும் பழக்கமும் காணப்பட்டது. பிச்சிப்பூ என்ற பெண் பாவாடையும், ரவிக்கையும் தைத்து அணிவதோடு பிறருக்கும் தைத்துக் கொடுத்தாள். பாவாடையை இடுப்பில் எப்படிக் கட்டுவது ரவிக்கையை எப்படிக் கச்சிதமாக அணிவது எப்படி முடிச்சுப் போடுவது அதன் மேலே சேலையை எப்படிச் சொருகிச் சுற்றுவது என்றெல்லாம் கற்றுக் கொடுத்தாள் பிச்சிப்பூ. (மறுபக்கம் 271)

ரவிக்கை போட்டு, சேலை கட்டிய பெண்கள் சந்தைக்குள் சென்று பொருட்களை விற்க சந்தை வாயிலில் நிற்கும் சேவகர்கள் அனுமதிப்பது இல்லை. **“தன் கொக்கியால் பிச்சிப்பூ போட்டிருந்த தோள் சேலையை இழுத்தார். கொக்கி இவள் முந்தானையையும், அதன் அடியில் இருந்த ரவிக்கையையும், கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த தாலியையும் சேர்த்து இழித்தது.**

முந்தானை விலகி ரவிக்கை கிழிந்து தாலி அறுந்து விழுந்தது" (மறுபக்கம் 282). இந்த கொடுமைகளை அறிந்த விக்டோரியா மகாராணி **"எல்லாச் சாணாத்திமாரும் ரவிக்கை அணியலாம் அல்லது முக்குவத்தி போல் முரட்டு துணியால் உடம்பை மூடிக்கொண்டு திரியலாம்"** என ஆணையிட்டார். (மறுபக்கம் 283)

இருப்பிடம்

மனிதன் தோன்றிய காலத்தில் பிற உயிர்களிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஓர் இருப்பிடத்தைத் தேடினான். ஆதிமனிதன் மரக் கிளைகளையும், குன்றத்தின் குகைகளையும் தன்னுடைய வாழ்வாதார இடங்களாகப் பயன்படுத்தினான். மறுபக்க நாவல் பலவகைப்பட்ட வீடுகளில் மக்கள் வாழ்ந்ததாகக் கூறுகிறது. தாழ்ந்த ஓட்டுக்கூரையுள்ள வீட்டில் நீண்ட திண்ணையும் இரண்டு வாசல்களும் காணப்பட்டன. தாழ்வாரத்தைத் தாங்கியப்படி நான்கு மரத்தூண்கள் வைக்கப்பட்டிருந்தன. வீட்டினுள் சிறிய நாலுகட்டு முற்றமும் உண்டு. கடலை நம்பி வாழும் மீனவத் தெருவில் ஓலைக்குடில்களும், ஓட்டு வீடுகளும் அதிகமாகக் காணப்பட்டது. இடையிடையயே நாகரிக மாளிகையும் காணப்பட்டது. ஆரல்வாய்மொழியில் உள்ள தியாகி சண்முகனின் வீடு தாழ்ந்த ஓட்டுக்கூரையைக் கொண்டது. வெள்ளிமலைச் சரிவில் அமைந்துள்ள மாதவனின் வீடு பளபளப்பான வெள்ளை ஓடுகள் பதித்த சுவர்களைக் கொண்டது. தரைக்கு கிரானைட் போடப்பட்டிருந்தது. சன்னல்களில் திரைச்சீலைகள் தொங்கின. வீட்டில் உட்காருவதற்கு பெரிய ஈட்டி மர நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மறுபக்கம் நாவலில் பெரும்பாலும் மக்கள் ஏழ்மை நிலையிலேயே வாழ்ந்ததாக சுட்டப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் ஏழைகளை ஒடுக்கி வாழும் எஜமான்களான பண்ணையார்கள் வீடுகளில் அடிமைகளான இருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

விழாக்கள்

மனிதர்கள் தங்கள் உழைப்பின் களைப்பைப் போக்கவும், மனமகிழ்ச்சியுடன் வாழ்வதற்கும் விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். முற்கால மனிதர்கள் முதல் தற்கால மனிதர்கள் வரை காலத்திற்கு ஏற்ப பல்வேறு விழாக்களை நடத்தி வருகின்றனர். மறுபக்கம் நாவலும் மக்கள் கோயில் விழாக்கள் சமுதாய விழாக்கள், தேசிய விழாக்கள் நடத்தி ஒற்றுமையை வளர்த்திக் கொண்டதையும் இணைந்து செயல்பட்டதையும் காண முடிகிறது. "மண்டைக்காட்டு அம்மன் கொடையில் கடைசி நாள் ஒடுக்கு பூசை இரவு ஒரு மணியளவில் நடைபெறும்." பூசைக்கு வேண்டிய சோறும், கறியும் பக்கத்து பள்ளிக்கூடத்தில் சமைத்து ஏழு பனையோலைக்கடவங்களில் வைத்த ஏழு பேர் தலையில் ஏத்தி ஒரே வெள்ளைத் துணியால் மூடி கோயிலைச் சுற்றி வந்து இறக்கி வைப்பர். மஞ்சளும் சுண்ணாம்பும் தடவின் கும்பளங்காயை வெட்டும் போது சுவரில் ரத்தம் தெறிக்கும் அதோடு பூசை நிறைவுபெறுகிறது. திருக்கார்த்திகை விழாவை பனைவிளை ஊரார் மிகச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் உயிர்ப்பு நாள்வரை சிலுவைப்பாதை நடத்தும் வழக்கம் உடையவர்கள் என்பதை மறுபக்கம் நாவலின் மூலம் அறிய முடிகிறது. (மறுபக்கம் 75)

அணிகலன்கள்

நாகரிக வளர்ச்சியை மனிதன் அடையும் காலந்தொட்டு தன்னை அலங்காரப்படுத்திக் கொள்வதில் மக்கள் தனிக்கவனம் செலுத்தி வந்தனர். என்பதனை இலக்கியங்களால் அறியலாம்.அழகு இன்னதென்பதில் மக்களுக்குள் பரந்த மாறுபட்ட கருத்துகள் இருந்த போதிலும் இயற்கையாயமைந்த வனப்புகளை உடையாலும் அணிகளாலும் மேலும் அலங்கரிக்க வேண்டுமென்ற எண்ணம் எல்லா சமூகத்திலும் இருக்கிறது. என கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. இந்நாவலிலும் பெண்களும் ஆண்களும் நகைகளை அணிந்து தங்களை அழகுப்படுத்திக் குறிப்பாக பணக்காரர்கள் தங்கள் செல்வச் செழிப்பை பிறருக்குக் காண்பிக்கும் வகையில் அதிக அளவிலான அணிகலன்களை அணிந்தனர். ஏழைகளோ அணிவதற்கு அணிகலன் இன்றி இருந்ததையும் காணமுடிகிறது.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

ஊர்த்தலைவர்கள் பெரும்பாலும் பணக்காரர்களாக இருந்தனர். அவர்கள் எப்பொழுதும் தங்கள் கழுத்தில் தங்கத்தாலான பெரிய வடத்தை அணிந்திருப்பர்.பெண்கள் காதுகளை வடித்து வடிகாதில் பெரிய பாம்படத்தை அணிந்தனர். சிலர் பாம்படத்துடன் தண்டட்டிமுடிச்சும் சேர்த்து அணிந்தனர். குழந்தைகளும் ஆண்களும் இடுப்பில் அரைஞாண் கொடியைக் கட்டியிருந்தனர். திருமணமான பெண்களுக்கு அடையாளமாகக கழுத்தில் தாலி தொங்கிக் கொண்டிருக்கும்.

பிள்ளைப் பேறு வரி கட்டாத பெண்களின் காதுகளில் 'காது பூட்டு' போட்டு வெயிலில் நிற்க வைப்பர். வலி தாங்க முடியாத பெண்கள் இறந்து போவர். அவர்களின் தாலியையும் பாம்படத்தையும் கழற்றியெடுத்துச் சென்று அதிகாரியாருக்கு கொடுக்கும் கோர நிகழ்வுகளும் நடந்துள்ளன.இதனால் அன்றும் பணத்திற்கு நிகரான மதிப்பு தங்கத்திற்கு இருந்ததை அறியமுடிகிறது.

ஆண்களின் காதுகளில் கடுக்கண் போடுவதற்குரிய துளைகள் இருந்தாகவும் ஆனால் கடுக்கண் போடுவதற்குரிய வசதி வாய்ப்புகள் இல்லை என்பதையும் மறுபக்கம் நாவல் மூலம் அறியலாம். புருஷனை இழந்த பெண்கள் தாலியையும் பாம்படத்தையும் கூட சேர்த்தே இழந்தனர். அய்யாவைகுண்டர் இதற்கு எதிராகப் போராடினார். 'பொன்னு மக்கா எத்தனை தடவை சொல்லியிருக்கேன்.தாலி அறுக்காதே, கோலங்குலைக்காதே என்று அவன் செத்ததுக்கு நீயா பொறுப்பு. 'எல்லாரும் கேட்டுக்கிடுங்க புருஷனப் பறி கொடுத்தது சங்கடந்தான். அதுக்காகப் பொம்பளைய அலங்கோலப்படுத்திக் காலம் பூரா சங்கடப்படுத்துவது கடவுகளுக்கு ஏற்காத கொடுமை- பூட்டின் தாலிய நீக்கப்படாது கேக்குவு, புருஷன் உயிருடன் இருக்கும். பொழுது அணிகலன்கள் அணிந்து அழகுபடுத்திக் கொள்ளும் பெண்கள் புருஷனை இழந்தாலும் அழகுடன் இருக்க வேண்டும் அலங்கோலமாய் மூளியாய் திரியக்கூடாது என்பதை மறுபக்கம் நாவல் மூலம் பதிவு செய்துள்ளார்.

கலை

மனித நாகரிகத்தின் வளர்ச்சி நிலையே கலைகளின் வெளிப்பாடு. தமிழர் தம் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்திக் கலைகள் ஒரு நாட்டின் பன்முகப் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்கின்றன. மக்களின் பழக்கவழக்கம், வாழ்வியல் முறை மற்றும் பொருளாதார நிலையை வெளிப்படுத்தும் விதமாகக் கலைகள் அமைக்கின்றன. மனித நாகரிகத்தின் வளர்ச்சி நிலையே கலைகளின் வெளிப்பாடுகள் கலைகளைக் கவின்தரு கலை என்றும் பயன்தரும் கலை வகுத்துக் கூறுவர். இயற்கையோடியைந்த கலைகள் சமயத்துடனும் பின்னர் சமூகத்துடன் இணைந்து காணப்படுகின்றன.

சிலம்புக்கலை

கம்புகளைக் கொண்டு ஒலியெழுப்பும் விளையாட்டுச் சிலம்பம் என்று பெயர். சிலம்புதல் என்பதற்கு ஒலித்தல் என்ற பெயர் உண்டு. இது ஒரு வீரக்கலையாகும். இக்கலை தற்போது கலைவிழா நிகழ்ச்சிகள், கோயில் திருவிழாக்களில் நடைபெறுகிறது. "கம்பு வீசுத்திறன் காலடி எடுத்து வைக்கும் முறை வேகமாக வீசும் திறன் ஆகியவை சிலம்பாட்டத்தின் அடையாளமாகும்". என சு.சக்திவேல் கூறுகின்றார் (நாட்டுப்புறவியல் ஆய்வு). போராட்டக் காலங்களில் உயிரை பாதுகாக்க கம்பு வீசும் கலை பயன்படுகிறது. **"ஆண்டிச் சாமியார் குமாரகோயில் முருகன் கோயிலுக்கு அக்கினிக் காவடி தூக்கிச் செல்லும் போது உயர்சாதி மக்களால் தக்கப்பட்டார் இவரை சர்வேயர் மாமா என்பவர் சிலம்பக்கலையை பயன்படுத்தி காப்பாற்றி விடுகிறார்." (மறுபக்கம் 368)** இதன் மூலம் போராட்டக் காலங்களில் உயிரைப் பாதுகாக்க கம்பு வீசும் கலை பயன்பட்டது என்பதை மறுபக்கம் நாவலின் மூலம் அறிய முடிகிறது.

மரைக்காப்பிள்ளை

மரைக்காப்பிள்ளை என்பது பனை ஓலையினால் செய்யப்படும் பொம்மை ஆகும். குழந்தைகளுக்கு விளையாடுவதற்கு ஏற்ற வகையில் விதவிதமாய் பொம்மைச் செய்வதில்

பாட்டாமார் தேறினவர்களாய் "எங்க பாட்டா பனை ஓலையில் பின்னித் தந்தாரு. இது குதிரை, இது வண்டி, இது" என ஜெயா அடுக்குவதிலிருந்து அனைத்து வகையான விளையாட்டு பொருட்களும் பனை ஓலையினால் செய்யப்பட்டிருந்தது. முன் காலங்களில் அனைத்து வீடுகளிலும் இந்த மாதிரியான பொம்மைகளே இடம் பெற்றிருந்தன. தொண்ணூறு வயதான பாட்டா கூட பனையோலையில் பெட்டி, செருப்பு மரைக்காப்பிளை என விதவிதமாய் செய்யும் திறமை வாய்ந்தவர் (மறுபக்கம் 439) என்பதை நாவல் மூலம் அறிய முடிகிறது. பனை ஊற்றுத் தொழில் நலிவடைந்தாலும், பனை மரங்கள் அழிக்கப்பட்டதாலும் இன்று மரைக்காப்பிள்ளை பொருட்களின் இடத்தைப் பிளாஸ்டிக் பொம்மைகள் நிரப்பி வருகின்றன.

வர்மக்கலை

உடலில் உள்ள உயிரானது இரத்த ஓட்டத்தின் போது உடலின் பல்வேறு இடங்களில் தங்கிச் செல்கிறது. அப்போது அவ்விடங்கிளில் அடியோ, தட்டோ ஏற்பட்டால் மயக்கம் ஏற்படும். அதனை வர்மம் கொள்ளுதல் என்பர்.

மூர்த்தியார் வர்மக்கலையில் சிறந்தவராக விளங்கினார் பனையிலிருந்து விழும் ஏற்றக்காரர்களை இவரிடம் கொண்டு வருவர். இவர் பனையிலிருந்து விழுந்தவனுக்கு முதலில் நினைவு இருக்கிறதா என்றுதான் பார்ப்பார். மயங்கிய நிலையில் வரம் ஏற்றக்காரர்களை நினைவிற்குக் கொண்டு வந்த பின்னரே வைத்தியம் செய்வார்.

குஞ்சன் காட்டில் ஆசாத்தி ஒருவர் இருந்தார்.அவர் மிகப் பெரிய வர்மாணி அவருடைய அய்யாவும், அம்மையும் பெரிய வர்மாணிகள். கதவை உடைத்து உள்ளே பாய்ந்து தன்னைத் தாக்க முயன்ற ஒருவனைக் கம்பால் விலாவில் தட்டி மயக்கமடையச் செய்தார். சண்டைக்கு வந்தவர்கள் ஆசாத்தி காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர். உடனே கால் விரலால் அவனை மிதித்து எழுப்பி விட்டார். எதிரிகளைத் தாக்குவதற்கு இக்கலை பயன்பட்டது (மறுபக்கம் 261) என்பதை நாவலின் மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

விருந்தோம்பல்

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளாரின் கூற்றுக்கிணங்கிக பசியோடு வருபவர்க்கு விருந்தளித்தில் என்பதை,

மேப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து – (90)

என *திருக்குறள்* கூறுகிறது. முகம் மலர்ந்து விருந்தளிப்பது என்பது பார்வையிலேயே விருந்தினரை வரவேற்பதாய் நம் உள்ளம் இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

பெரியவர்களைக் கண்டால் எழுந்து நின்று வணங்குவது தமிழ் மரபு நாவலில் மண்டைக்காடு கலவரம் ஆய்வு செய்ய வந்த சேது மாதவனைக் கண்டதும் செல்வராகவும், தங்கமுத்தும் மரியாதை நிமித்தம் எழுந்து நின்று வணங்கினர்.சாதி சமய வேறுபாடின்றி விருந்தினர்களை உபசரிக்கும் பண்பு கடற்கரை மக்களிடம் காணப்பட்டது.அலெக்ஸின் வீட்டில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.கூடவே நான்கு பீங்கான் தட்டுகளில் வறுத்த மீன் துண்டுகளும், வறுவலும் பீங்கான் தட்டில் குவளைகளும் கொண்டு வந்து கொடுத்தார் அலெக்ஸின் மனைவி விருந்தினர்களை வாசல் வரை சென்று வரவேற்கும் பண்பையும் நாவலில் காண முடிகிறது. "வைகுண்ட பெருமாள் வீட்டிற்குச் சென்ற வெங்கடெசனையும் கூடவே சென்ற சேது மாதவனையும், கடபுறத்து பையன்களையும் கண்ட வைகுண்ட பெருமாள் வாசலில் வந்து வெங்கடேசனின் கைகளைப் பிடித்து அன்போடு வரவேற்றார். மற்றவர்களையும் வாருங்க… வாருங்க… எல்லாரும் என்று இன் முகத்தோடு வரவேற்று உட்காரவைத்தார்." அதனைப் போன்ற சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த முதியவர் விருந்தினர்களைக் கண்டதும் சிரமப்பட்டு எழுந்து நின்று வணங்குவதும். அவர் மனைவி முறுக்கு கொடுத்து உபசரிப்பதையும் ஒருவன் இல்லறம் மேற்கொள்வதன் நோக்கமே விருந்தினரை உபசரிப்பதற்காகும் என்ற வள்ளுவரின் கூற்றுக்கிணங்கி குமரி மாவட்ட

மக்களிடமும் இப்பண்பு நிரம்பி பெற்றிருந்ததையும் பொன்னீலனின் மறுபக்கம் நாவல் மூலம் நாம் அறிய முடிகிறது. வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்பதையும் தேநீர்க் கொடுத்து உபசரிப்பதையும் ஆசிரியர் அழகாக விளக்கியுள்ளார். (மறுபக்கம் 47)

கொடை

பிறருக்குக் கொடுத்து வாழும் பண்பினைத் தமிழர் வாழ்வியலின் தலைமைப்பண்பு எனலாம்.

ஈதல் இசைப்பட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு – (231)

என்பது உயிர் வாழ்வின் உயிர் பண்பு கொடுத்தலும் கொடுத்தலினால் புகழ் வந்து சேரும் என்பதையும் உணர்த்துகிறது.செல்வத்துப் பயன் செழுங்கினை தாங்குதல் என்பது பிறருக்குக் கொடுத்து வாழ்தலின் சிறப்பைக் கூறுகிறது. இதையே நாவலில் ஆசிரியர்,

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து நான்கு கன்னியாஸ்திரிமார் தோப்பு வழியாக நடந்து ராசய்யர் என்ற பெரியவரிடம் வந்து மடத்துல அரிசி, தேங்காய் எதுவுமில்ல என கேட்க அவர் அவர்கள் கேட்டதையெல்லாம் ஒரு வேலைக்காரரிடம் கொடுத்து அவர்களுடன் அனுப்பி வைத்தார் என்று கூறுவதிலிருந்து அறிய முடிகிறது.அவரின் கொடை பண்பை அறியமுடிகிறது.புஷ்பம் என்பவரின் வீட்டிற்கு வந்து "தாயி கொஞ்சம் அரியும் தேங்காயும் தருவியா மூணு நாளா தண்ணியே சாப்பிடல்ல, புள்ளையளெல்லாம் பட்டினி என்று தன் நிலையை விளங்குகிறார். (மறுபக்கம் 547)

உடனே அப்பெண்மணி அவரை வீட்டிற்குள் அழைத்து அவரை அமரவைத்து அவருக்கு சோறு போட்டு கறியும் விட்டு கொடுத்தார். அப்பெண்மணி சோறை உண்ணாமல் அவரை பார்க்க அவர் அரிசியும், தேங்காயும் தாறேன் சாப்பிடு என்று கூற அவளும் உணவினை உண்ணுகிறாள். பின்னர் அவருக்கு "மூணு தேங்கா. பத்துரூவா இதுகள ஒரு பையில் போட்டு அவர் கையில் கொடுத்து விடுகிறார் புஷ்பம். இவ்வாறு புஷ்பத்தின் கொடைப் பண்பை நாவலின் மூலம் அறிய முடிகிறது.

ஆயுதங்கள்

முற்காலத் தமிழ் ஆண்மக்கள் தங்கள் வாழ்க்கையில் பெரிதாக நினைத்தது வீரமும் பெருமையும் "பெருமையும் உரனும் ஆடுஉமேன" (தொல்.களவியல் 95) என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். வலிமை மிக்க ஆண்மக்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கத்தோடு பல போர்களைக் கையாண்டு உள்ளனர். அப்போர்களில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் பிறரை அழிக்கவும் ஆயுதங்களைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்தது.

பொன்னீலனின் நாவலில் ஆயுதங்கள் குறித்த செய்திகள் விரவிக் காணப்படுகின்றன. முதலாளிக்கு எதிராக, அதிகார வார்க்கத்தினருக்கு எதிராக அதிகார அடக்குமுறைகளுக்கு எதிராக போராடும் இடங்களில் ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் மதக் கலவரங்கள் நடந்த பொழுதும் மக்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர். மக்கள் தங்கள் தொழிலின் விரைவிற்காகவும் தொழில் சார்ந்த ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளதை நாவல் மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

மண்டைக்காட்டில் மீனவர்களுக்கும், இந்துக்களுக்கும் கலவரம் ஏற்பட்ட பொழுது கலவரத்தை அடக்குவதற்காக போலீஸ்காரர்கள் துப்பாக்கியைப் பயன்படுத்தினர். ராஜாக்கமங்கலம், பெரியகாட்டுத்துறை மீனவர்களுக்கும், ஈத்தமொழி இந்துக்களுக்கும் நடந்த கலவரத்தில் மீனவக்கும்பல் ஒன்று வேளாமுள், திரைச்சிவால், தொளவைக் கம்பு, உலக்கை, கோடாலிக்கம்பு போன்றவற்றை ஆயுதங்களாக எடுத்துக் கொண்டு வந்தனர் என்றும், பள்ளம் கடற்கரையோர மீனவ மக்களிடம் சண்டைக்குச் சென்ற மேலகிருஷ்ணன் புதூர் மக்கள் குத்துவாள், வெட்டுக்கத்தி, கோடாலி, உலக்கை, தீப்பந்தம், மண்ணெண்ணெய், பெட்ரோல்

போன்ற ஆயுதங்களைக் கொண்டு இருந்தனர் என்பதை மறுபக்கம் நாவல் கூறுவதிலிருந்து தமிழர்கள் வீரத்திற்கு கொடுத்த முக்கியத்துவம் தெளிவாகிறது.

முடிவுரை

ஒரு சமூகத்தின் வாழ்வியல், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், பயன்படுத்தும் பொருட்கள் கலைகள் ஆகியவற்றின் மூலம் மனித வாழ்வைப் பக்குவப்படுத்துவதே பண்பாடு ஆகும்.மக்களின் வாழ்க்கைக்கான ஆதாரங்களை அறிந்து கொள்ளவும் உணவு ஒரு கருவியாக பயன்படுகிறது. பனையேற்றுத் தொழிலைச் செய்யும் மக்கள் பனையிலிருந்து எடுக்கும் பொருட்களைச் சுவைக்க ருசி மிகுந்த ஒன்றாக காணப்படுகின்றது. ஏழைகள் கந்தல் அடைகளையும். பணக்காரர்கள் விலையுயர்ந்த பட்டுகளையும் அணிந்தனர். உழைப்பின் களைப்பைப் போக்கவும் மனமகிழ்ச்சியுடன் வாழவும் விழாக்கள் கொண்டாடப்பட்டன. கணவனை இழந்த பெண்கள் தவிர திருமணமான பெண்கள் அத்தனைபேரும் தாலி அணிந்திருந்தனர். நாட்டுப்புறக்கலைகள், திருவிழாக்களில் இடம் பெற்றன. குழந்தைகளுக்கு விளையாடுவதற்குத் தேவையான பொம்மைகள் அனைத்தும் பனையோலைகளால் தயாரிக்கப்பட்டன. விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கும் பண்பு மக்களிடம் மேலோங்கி இருந்தது. வறுமையும், பட்டினியும் வாட்டிய நேரங்களில் தங்களிடம் இருந்ததை இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவிய மக்களின் காடைப்பண்பு வேலையை விரைவாகச் செய்யவும் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நுரங்களிலும் ஆயுதங்ளைப் பயன்படத்தினர்.மறுபக்கம் நாவலில் பண்பாட்டுக் கூறுகள் என்ற ஆய்வு மூலம் தமிழர்கள் வாழ்வில் கையாண்ட பண்பாடுகள் அனைத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது.

குறிப்புச்சொற்கள்

[1] *கலைக் களஞ்சியம். தொகுதி 1*. தமிழ் வளர்ச்சிக் கழகம், 1963.
[2] *கலைக் களஞ்சியம். தொகுதி 6*. தமிழ் வளர்ச்சிக் கழகம், 1963.
[3] சக்திவேல்.சு. *நாட்டுப்புறவியல் ஆய்வு*. மணிவாசகர் பதிப்பகம், 2012.
[4] நடராசன், தி.சு. *தமிழன் பண்பாட்டு வெளிகள்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2005.
[5] நாமக்கல் கவிஞர். *திருக்குறள்*. பழனியப்பா பிரதர்ஸ், 2010.
[6] திருநாவுக்கரசு, க. த. *தமிழர் பண்பாடு*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2009.
[7] *தொல்காப்பியம்: பொருளதிகாரம்*. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், 2008.
[8] பக்தவத்சல பாரதி. *பண்பாட்டு மானிடவியல்*.அடையாளம் பதிப்பகம், 2019.
[9] பொன்னீலன். *மறுபக்கம்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2010.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.